4-00

சிவாசி வரலாறு

சிவாஜி மஹாராஜா

(கவுண்ட் லியோ டால்ஸ்டாய், இந்திய மாதர்
களின் நிலைமை, இந்தியாவின் கல்வி
முதலிய நூல்களின் ஆசிரியரான)

கிருஷ்ணஸ்வாமி சர்மா எழுதியது

(3-ம் பதிப்பு.)

சென்னை
சுதேசமித்திரன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1923
விலை ரூ. 4.

முன்னுரை.

இந்தியாவின் பூர்வ சரித்திரம் கங்குல் குவிந்த வெளியரங்கம். ஆப்கன் ஜாதியார் இந்தியாவிற்கு வந்தது முதல் இந்திய சரித்திரம் அரையுங் குறையுமாகச் சில செய்திகளை அறிவதன்றி, முற்று முடிய அறிதலான சரித்திரம் கிடையாது. ஆப்கன் சாதியார்கள் இந்தியாவிற்கு வருமுன் விக்ரமாதித்தன், அசோகன், சந்திரகுப்தன், போஜன், சாலிவாஹனன், ஹர்ஷன், கிருஷ்ண தேவராயன், குலோத்துங்கன் முதலானவர்களுடைய வரலாறுகள் சரியான சரித்திர முகாந்தரங்களினால் அறிந்தனவல்ல. அரசியலுக்குச் சரித்திர பூர்வமான உதாரணமாகச் சில ஐரோப்பிய சரித்திரக்காரர்கள எடுத்துக் காட்டியும், அவைகள் தற்காலத்திற்குச் சரியானதாகக் காணப்படாமல் ஒரு சார்பாக யிருப்பதென்பதே பலர் கொண்ட அபிப்பிராயம். இந்தியர்களிற் சிலர் வரவர சரித்திர ஆராய்ச்சி கொண்டு அநேக வரலாறுகளைச் சாங்கோபாங்கமாக விரித்துரைத்து வருகின்றனர். இந்தியர்களிற் பலர் தக்க சரித்திர முகாந்தர மின்றி அங்கு மிங்குமாகப் பாவோடும் குழல்போல உழன்று கொண்டிருந்தனர். நிற்க, மகாராஷ்டிர சரித்திரம் முதல் முதல் கிராண்ட் டப் என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப் பெற்றது. கையெழுத்தாக விருந்த அநேக வரலாறுகளை இவர் கொளுத்தினார் என்னும் வதந்தி இன்னும் உசாவி வருகின்றது. மகாராஷ்டிர சுயராஜ்யத்திற்கு அடிகோலின சிவாஜி மகாராஜாவின் சரிதை அக்காலத்தில் முகம்மதீய சரித்திரக்காரனான காபீகான் என்பவனின் முகாந்தரத்தைக் கொண்டே பல ஆங்கிலேயர் சிவாஜி மகாராஜாவின் சரித்திரம் எழுதப் புகுந்தனர். இந்துக்களும் சிவாஜி மகாராஜாவின் சரித்திர வரலாறுகளை அக்காலத்திலேயே எழுதி யிருக்கின்றனர். இங்ஙனம் இவ்விரண்டு சரித்திர வுரையாணிகளும் விவித அபிப்பிராயத்தைக் கொண்டதாகும். சமீபத்தில் சிற்சில இந்தியர்கள் மகாராஷ்டிர சரித்திரத்தை ஆராயப் புகுந்தனர். அவர்

களின் ஆச்சரியத்திற் கேற்ப இதுவரை வெளியாகாமல் இருந்த அநேக முகாந்தரங்கள் தோன்றின. இந்தியர்களின் ஆராய்ச்சிக்கு முன் ஆங்கிலேயர்களின் ஆராய்ச்சி இரவி முன் மதியமே ஆகும். சிவாஜி மகாராஜாவைச் சில ஆங்கிலேய சரித்திரக்காரர்கள் உண் மைக்கு மாறுபாடாகக் கூறி யிருக்கின்றனர். சிவாஜி மகாராஜவின் வீரம், நடுவுநிலைமை முதலிய குணங்கள் வேறெந்த அரசனிடத்தும் ஒருங்கே அமைந்திரா. சிவாஜி மகாராஜாவின் இராஜ்யாபி விர்த்தியும்' அரச முறைகளும் உயர்வு நவிற்சியேயாகும். இதுகாரணம் பற்றியே சிவாஜியின் சரிதை தற்காலம் நம் நாட்டினர்களுக்கு நலம் புரியும் என்பதைப்பற்றி அநேக புத்தகங்களை ஆதாரமாகக் கொண்டு எழுத லானேன். இதுகாறும் அருந்தமிழ்ப் பாஷையில் சிவாஜியின் சரி தை ஒருவராலும் எழுதாதது பற்றி இதை யான் எழுதப் புகுந் தேன். சிவாஜியின் சரித்திரத்தில் அறியவேண்டிய அம்சங்கள் பல உள. இவை யாவும் தற்காலத்திற்கு ஒரு முகமாகப் பொருந்தும். இந்நூல் எழுதுவதற்கு அநேக முகாந்தரங்களைக் கொடுத்துத வின ஜாடுநாத ஸிர்க்கார், ஆப்டே இவர்களுக்கு யான் என்றும் நன்றியுள்ளவனுயினேன். இந்நூல் பிரசுரிப்பதற்குப் பொருள் உதவி ஈன்ற என் அருமை நண்பர்களுக்கும், அச்சுக்கூடத் தலை வருக்கும் நான் கடமைப்பட்டவனு யிருக்கிறேன். இதல்லாமல், சென்னை கவர்ன்மெண்டார் இந்திய பாதுகாப்புச் சட்டத்தை என் மீது முதல் முதல் 1917-ம் வருடத்தில் பிரயோகித்த நாள் தொடங்கிப் போதுமான சுதந்தர மின்றி எத்தகைய விஷயங் களையும் பிரசுரிக்கத் தடங்கலாக விருந்தும், தற்பொழுது சென்னை போலீஸ் கமிஷனர், மிஸ்டர். ஆர்மிடேஜ் இந்நூலைப் பிரசுரிக்க உத்தரவு அளித்த பேருதவியை யாம் என்றும் மறவோம் என்பது திண்ணம். ஆகவே, இந்நூலை எம் தமிழ் உலகினர் அங்கீகரிப் பாராக!

சென்னை
10—3—19. }

கிருஷ்ணஸ்வாமி சர்மன்.

பொருள் அடக்கம்

INTRODUCTION.

THE Life and Character of Sivaji, one of the greatest of the Nation-builders of India, as taught in our Schools and Colleges has been presented to us with an amount of misunderstanding if not of perversion on the part of most of the Historians who have followed the accounts written by Mahomedan and Persian authors. These authors owing to their natural prejudice and religious bias, have depicted Sivaji as the veritable incarnation of the Devil and most of our English authors have swallowed the account wholesale. Thanks to modern researches, these prejudices have been removed and the real character and mission of the Great Saintly King has now been understood and the present volume is but a product of that research now made available by the author to the Tamil knowing public.

If the life of Sivaji were properly understood one cannot fail to see that He was one of the natural products of his times. His was the spirit of a national deliverer incarnating when autocracy and oppression were rampant, in obedience to that great spiritual Law given out to the world by that Greatest of Teachers, Sir Krishna *viz.*,

"Whenever there is decay of Dharma and *Adharma* gets rampant I myself take birth O! Bharata."

Mr. H. A. Ackworth in his Introduction to the Ballads of the Marathas says:—"For three hundred and fifty years or more the Mahrattas had to bear the yoke of the Mahomedan Invader. Mahomedan dynasties independent of Delhi, were established in the heart of the Maharashtra, the Nizam Shahi at Ahmednagar, the Adil Shahi at BiJapur, and it was to these princes that the Maharashtra was mostly subordinate. The Mogul Emperors at Delhi, eager to extend their authority in any direction, and wholly ignorant of any force in the Deccan other than Mahomedan, which it was needful to take into account, did the Maharashtras the service of subverting and destroying these dynasties of their own faith and when they had done so, found that they had supplanted the only powers which might have had a chance of keeping the Maharattas in restraint." This

folly was the result of the purblindness of autocratic government and says Mr. Ackworth too truly :—" After all, autocracy is a bad school of political vision and hence these Mogul rulers failed to appreciate the volume and energy of the forces which lay slumbering among the despised mild Hindus of the Deccan. At all events, when Sivaji, the first and by far the greatest of Modern Maharatha princes, was born, nothing could be more certain than that the hour and the man had both come."

It is not possible to give any continuous sketch of a career so remarkable in many respects and yet so little known. To quote a few incidents. Shaji the father of Sivaji, of the house of Bhonsla, was an enterprising partisan captain, who served the king of Bijapur with honour and profit to both of them. He was married—a connexion considerably beyond his pretensions by birth—to Jeejabai, daughter of Lukhiji Yadavrao, a descendant of the old royal house of Devagiri. Their second son, Sivaji was born in the year 1627 at the Fort of Shivnar. He was the favourite of his mother, a woman of strong character and high ambition and he was brought up by her at Poona under the general superintendence of Dadaji Kondev; an able Brahmin adherent of his father. He never learned to read and write but was proficient in horsemanship, the use of arms, and all other manly exercises and was particularly fond of legendary history of the Hindus, set forth in the Mahabharatha and Ramayana and of the dramatic entertainment called Kathas. His devotion to his mother and her influence over him have passed into proverbs and during her life-time she was his counsellor in every enterprise of importance. Just to understand the magnitude of that influence, it may not be out of place to remark, that, whereas at the date of his first exploit, the capture of the Fort of Torna in 1646, there was not in the whole of the Maharashtra one yard of ground in the independent possession of a Maratha, far less any independent Maratha prince, at his death he had raised himself to the position, as well actual as titular, of Maharajah Chatrapati and possessed, by the strongest as the enthusiastic devotion of his subjects a large part of the Konkan, in Maharashtra much of the Baglana and Kandesh, and extensive areas of the Carnatic and Tanjore. The introduction to the Ballads of the Maharathas so beautifully written by Mr. Ackworth states: " But his mere acquisitions constitute an altogether imperfect measure of the power he exercised and evoked. No man perhaps then living had a keener and juster appreciation of his own strength and the weak points of his opponents. He alone among

his countrymen thoroughly gauged the sources and the direction of both He saw that the time had come when the Maharatha Nation might be made anew and he made it. He saw that, with all its swelling pretensions, its enormous wealth, the vast members of its subjects, nothing but the shell of its old energy and power was left to the Mahomedan dominion, that the vices, the jealousies and the blinded vision of autocratic rule had eaten away the heart of it. From the first day of his negotiation with the killedar of Torna he kept his eye steadily fixed on the vast project of Hindu re-conquest and both as a captain and a statesman, in each of which capacities he was pre-eminently great, his conduct shows an unwavering adherence, not to the exigencies of the passing moment, not to the projects of personal ambition, but to certain leading principles of action and adminis tration which he had prescribed to himself as the adequate and necessary means to his grand end."

Many English Historians, particularly Grant Duff, have misunderstood Sivaji's greatness, criticising him by the much boasted ethics of the present century—the utter hollowness of which has been so barefacedly manifested in the breaking out of the now closing struggle of European Nations—but Mr. Ackworth has a juster and a more generous appreciation of the claims of Sivaji to universal greatness.

Grant Duff says that superstition, cruelty and treachery are not only justly alleged against Sivaji but he always preferred deceit to open force when both were in his power; but says Mr. Ackworth: "The charge of superstition may be passed by, but as regards that of cruelty it is not. Elphinstone—certainly a more discriminating judge—says that" during his whole career Sivaji, though he inflicted death and torture to force confession of concealed treasure, was never personally guilty of any "useless cruelty" and this statement is assuredly correct. Elphinstone also says of him that, though a predatory war, such as he conducted must necessarily inflict extensive misery, the enemies bear witness to his anxiety to mitigate the evils of it by human regulations, which were strictly enforced. The truth seems to be that, though Sivaji was ruthless in attaining his object, he was completely free from the detestable passion for gratuitous cruelty, as well as from any disposition to indulge in it as a gratification of temper, and there are few other oriental conquerors, if any, of whom both these things can be said. To contest the accusations of deceit and treachery

would be childish, and the best that can be said is that every one of Sivaji's enemies was just as treacherous as he was, only not so acute. The idea that deceit to a foe was morally wrong probably never occurred to a single man on either side. The whole career of Sivaji was one of struggle and of stress. In his earlier days, the resources of the Kingdom of Bijapur were such as it might well have appeared madness to contend against, and the whole power of the Mogul Emperor was brought to bear upon him as soon as he became conspicuous. It was essential to him to push his projects as secretly, as unostentatiously, and in such a way as to attract as little notice as possible; and though no doubt he was not very scrupulous in his choice of means, his circumstances were such as would have furnished much excuse even in an age of higher morality. But he ought not to be condemned for not being in these particulars better than his age and that he was no worse, a study of Aurangzeb's history sufficiently establishes."

Such is the real and fair opinion of an unbiassed English author who has collected his information from the Bakhars, recently made available by the labours of modern research workers in the field of Mahratha History. But even such a writer as Mr. Ackworth has not grasped the real character of the situation that led to the death of Afzul Khan, for which one act Sivaji's name has been blackened in the pages of all histories. The author of this Tamil work, has taken great pains to throw all available light on the mysterious question, but even he, I am of opinion, has failed to take note of the internal evidence afforded showing the aggressively treacherous intentions and acts of Afzal Khan and how Sivaji only acted in self-defence. In estimating the guilt of either party, the following points ought to be clearly borne in mind.

(1) Afzul Khan in open Durbar boastingly undertook to catch Sivaji dead or alive and bring him to the Court of Bijapur.

(2) Afzul Khan, finding how difficult it would be to catch Sivaji in his mountain fasts, decided to coax him to go down and meet him and sent his Envoy.

(3) It was arranged that both Afzul Khan and Sivaji should meet in a place for a friendly talk—*unarmed*.

(4) While Sivaji at the inspiration of his Goddess Bhavani and advice of his mother, was armed in self-defence, Afzul Khan on the other hand carried a heavy sword in the capacious folds of his trousers and dealt such a heavy blow on the head of Sivaji as to break the thick steel helmet into two pieces, when his original design to squeeze his neck underneath his axilla, which was to be the first act of friendly embrace, Failed owing to Sivaji piercingthe pit of Afzul Khan's stomach with his wagnak-worn on the fingers of his left hand—this being the only act of self-defence possible for him when Afzul Khan gripped his neck so tightly.

(5) The whole event took place with such lightning rapidity that eye-witnesses differed very much in their accounts.

(6) The only reliable account of the incident was what was given by Sivaji himself to his Guru, Ramdoss, on this matter which completely shows how Afzul Khan came to the meeting with well-formed treacherous intentions and how Sivaji by the grace of his Goddess Bhavani was able to conquer his enemy by baffling his intentions, more in self-defence rather in actual offence. In the light of the above facts let the readers judge, Sivaji's conduct.

Mr. Ackworth: further says. "In considering the life of Sivaji, while his genius as a Commander and Captain is universally. recognised, scant justice, as a rule is done to his constructive and administrative abilities and to the permanence of his ideas both of conquest and government; yet the whole history of Maratha power, both in its acquisition and its retentive elements, is deducible from the systems established by him and it would have been well for his successors if they could have emulated his personal disinterestedness and adapted their views of fiscal administration as he did to the good of the state instead of themselves."

Very little notice is also taken of his intensely religious life in the midst of his multifarious all absorbing activities, his love of his Guru the great Samartha Ramadoss, to whose inspiration he owed not a little of his conquests. His solicitude for the welfare of women in general whom he

looked upon as images of his own mother, the Brahmins and cows, the aged and the decrepit, has become proverbial.

Altogether, the book is a contribution to historical literature in Tamil, based on careful study and historic research, full of patriotic appreciation and biographical excellence. The style of the work is simple but chaste and ought to afford not only delightful but highly instructive reading to all Tamil knowing readers both in Schools and among the general public.

SASI VILAS
MYLAPORE,
26—3—19.

M. C. NANJUNDA RAO.

இப்புத்தகத்திற்கு ஆதாரமான நூல்கள்.

1. மகாதேவ கோவிந்த ராணடேயின் மகாராஷ்டிர அப்யுதயம்.

2. ராலின்ஸன் துரைமகனார் எழுதிய சிவாஜி சரிதை.

3. கிராண்ட் டப் எழுதிய மகாராஷ்டிர சரித்திரம்.

4. கின்கெயிட்-பராஸ்நிஸ் எழுதிய மகாராஷ்டிர சரித்திரம் பாகம்—1.

5. வின்ஸெண்ட் ஸ்மித் எழுதிய இந்து தேசசரித்திரம்.

6. ஸிட்னி. ஜே. ஓவன் எழுதிய மகாராஷ்டிர அழிவு.

7. ஸர். எட்வர்ட். ஸலிவன் எழுதிய இந்திய மன்னர்கள்.

8. ராவ் பகதூர் பராஸ்னிஸ் எழுதிய மகாபலேஸ்வர்.

9. ஜாடுநாத ஸிர்க்கார் மாடர்ன் ரிவியூவிற்கு எழுதிய வியாசங்கள்.

10. தாஸ்போதம்.

11. சிவ திக்கு விஜயம்.

12. திலாங்கரின் உபந்நியாசம்.

13. ஜாடுநாத ஸிர்க்கார் எழுதிய ஔரங்கசிப் சரித்திரம்.



சிவாஜி மஹாராஜா.

சிவாஜி மஹாராஜா.

முதல் அத்தியாயம்.

* தக்ஷிணத்தின் தோன்மை

பூர்வம் இந்தியாவில் சற்றேறக்குறைய ஐம்பத்தாறு தேசங்கள் இருந்தனவென்பது இந்துபுராணிகர்களின் துணிபு. இவர்கள் விந்திய பர்வதத்தை ஆதாரமாகக்கொண்டு தேசங்களின் திசைகளையமைப்பது வழக்கம். விந்திய பர்வதத்திற்கு வடக்கிலுள்ள தேசங்களுக்கு † உத்தர தேசங்களெனவும் விந்திய பர்வதத்திற்குத் தெற்கிலுள்ள தேசங்களுக்குத் தட்சிண தேசங்களெனவும் வழங்கிவருதல் காண்க. தட்சிண தேசங்களில்ஆந்தரம், திராவிடம், கர்ணாடகம், மகாராஷ்டிரமாகிய இவைகளே முக்கியமானவை. தக்ஷிணமானது கற்பாறைகள்கொண்ட அகண்ட பீடபூமி. இதன் பள்ளத்தாக்குகள் செங்குத்தாய் அடர்ந்த காடுகளினால் மூடப்பட்டிருந்தமையால் பகைவர்கள் எளிதில் படையெடுத்துவர முடியாமலிருந்தன. ஒருகாலத்தில் தட்சிணம் ஆந்திரர்களுக் குட்பட்டிருந்தது. இவர்கள் கிறிஸ்துபிறந்த மூன்றாவது நூற்றாண்டின் இடைகாலம்வரை அரசுபுரிந்து வந்தார்கள். அக்காலத்தில் தட்சிணம் வெகு வளமைபெற்றிருந்தது. யவன (கிரீக்) தேசத்திலிருந்து கணக்கற்ற வியாபாரிகள் சாராயம், கண்ணாடி முதலிய எண்ணிறந்த சரக்குகளைத் தட்சிணத்திற்குக் கொண்டுவருவது வழக்கம். இதல்லாமல், அவர்கள் அரண்மனையைச் சேர்ந்த கன்னியாமடத்திற்குக் கணக்கற்ற கன்னிகைகளையுங் கொண்டு வருவதுண்டு. அவர்கள் இதற்குப் பதிலாகத் தட்சிணத்திலிருந்து இரத்தினக் கற்கள், மஸ்லின் துணிகள், வாசனைத்திரவியங்கள் முதலிய சாமான்களும்

---

* இதற்கு தக்ஷிணபதம் என்று பெயர். † ஆரியாவர்த்தமென்றும் பிரம்மாவர்த்தம் என்றுங் கூறுவர்.

உரோம புரியிலுள்ள நாரீமணிகள் மிகவும் விரும்பிய தைலவர்க்கங் களும் கொண்டுபோவது வழக்கம். புரோச் பட்டினமே அக்கா லத்தில் தட்சிணத்திற்குச் சிறந்த துறைமுகமா யிருந்தது. உள் நாட்டில் சுப்பரா, * பைடன், † நாஸிக், ‡ கல்யாண், டாகரா முத லிய பல பட்டணங்கள் குடகடலுக்கணித்தாகலின் கடல்வளங்களும் மலைவளங்களும் குறைவறப் பெற்றிருந்தன. மகாராஷ்டிர தேசத் திற்குத் திலகம்போன்ற பைடன் நகரம் அற்றை நாள் அரசாண்ட மன்னர்களுக்குப் பழமையான இராஜதானி. இவ்விராஜதானியில் நிலாமணிமுற்றம் அமைந்த மாடங்களும், சரக்கறைகளும், அழகிய கோயில்களும், அமைந்து விளங்கியிருந்தன.

மூன்றுவது நூற்றுண்டில் தட்சிணத்தையாண்ட ஆந்திர வம்சத்தினர்களின் பெருமையும் வளமையும் கிருஷ்ணபட்சத்துச் சந்திரன்போல் வரவரக் குறைந்தன. இரண்டு நூற்றுண்டுகளுக்குப் பிறகு சாளுக்கிய வம்சத்தார் தட்சிணத்தை யாண்டுவந்தனர். அவர்களுடைய குலதீபம்போன்ற புலிகேஸி ராஜன் அரசாண்ட காலத்தில் கட்டிய கல்வெட்டுக் கட்டடங்கள் பல இன்றும் உரத் துடன் அதி விமரிசையா யிருக்கின்றன. புலிகேஸரின் மரணத்திற் கப்புறம் பத்தாவது நூற்றுண்டின் இறுதியில் மகாராஷ்டிர வம்சத் தினர்களின் பூர்வ குலத்தினர்களான இராஷ்டிர கூடர்கள் அரசாண்டு வந்தனர். சாளுக்கிய வம்சத்தினர்கள் ஆண்டகாலத்தில் அசோகர் பௌத்தமதத்தைப் பரவச் செய்வதற்குப் பல அருக்கர் பள்ளியும்புத்தர் கோயிலுங் கட்டிவைத்தார். இராஷ்டிர கூடர் கள் தட்சிணத்தை யாளவந்ததும் இந்துமதத்தைப் பரவச்செய் தார்கள். அவர்கள் காலத்தில் எல்லூரா என்னுமிடத்தில் கட்டின கைலாசநாதரின் கோயில் இன்றைக்கும் அழகுற அமைந்திருக் கின்றது. சாளுக்கிய வம்சத்திற் கப்புறம்ஹாய்ஸால வம்சத்தினர் களும் யாதவ வம்சத்தினர்களும் தட்சிணத்தை யாண்டுவந்தனர். யாதவ வம்சத்தினர்களுள் மிக்க கீர்த்திபெற்றவர் இராமதேவர். அவர் கல்வியில் மிக்க விருப்புடையராகிப் பாவலர் பலர்க்கும் ஏற்ற வாறு பரிசளித்துப் பாராட்டிவந்தார். இவர் காலத்திருந்தவர்கள்

* பிரதிஷ்டானம். † பஞ்சவடி. ‡ கல்யாணபுரம்.

ஆஸ்தான பண்டிதர் ஹேமாதிரி பண்டாவும் அவரது சீடர் போப தேவருமாவர். மராடிபாஷையில் பகவத்கீதைக்கு வியாக்கியானஞ் செய்த ஞானதேவரும் இவர் காலத்தவர்.

இங்ஙனம், தட்சிணப் பிராந்தியம் இந்து மன்னர்களால் மாறி மாறி ஆண்டுவந்தும் 1294-ம் ஆண்டில் டில்லிமாநகரத்து முகம்மதீய சுல்தானுன அலாவுதீன் நருமதையாற்றைக் கடந்து வெகுதூரம்வரை தட்சிணத்திற் பிரவேசித்தான். அதுமுதற் கொண்டே முகம்மதீய சுல்தான்கள் பலர் தட்சிணத்தின்மேல் படையெடுக்கலானுர்கள். இப்படி படையெடுத்த முகம்மதீய சுல்தான்களில் மகம்மத் தோக்ளாக் என்பான் கொடுங்கோன் முறை கொண்டு குடிகளைத் துன்பப்படுத்தி, இராஜதானியை மாற்றி, பொக்கிஷத்தை வீண் செலவுசெய்து, பஞ்சத்தையும் அதிருப்தியையும் உண்டாக்கினதின் பயனுக, அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சிலர் கலகமுண்டாக்கவே, இதுவே தருணமென இலவு காத்த கிளிபோல் காத்திருந்த அடிமையொருவன் பாமினி இராஜ்யத்தை ஸ்தாபித்தான். ஆனுல் அவ்விராஜ்ஜியம் 1526-ம் வருடம் வரை நிலைபெற்றிருந்தது. 1398-ம் வருடத்தில் டைமூர் மொகலாயர்களுடன் அந்நகரில் புகுந்து பிணமலை குவிய, இரத்தவெள்ளம் பெருக ஊரைச் சூரையாடினுன். இது ஒருவாறு இருந்தும், தட்சிணத்தில் துங்கபத்திரா நதிக்கரையில் விஜயநகரம் என்னும் மாநகரொன்று ஸ்தாபிக்கப்பட்டது. பாமினி இராஜ்யம் சிதைபடவே அதினின்றும் பஞ்ச சமஸ்தானங்கள் உண்டாயின. அவைகளில் முக்கியமானவை பீஜாபூர் - கோல்கோண்டா - ஆமத்நகரம். துருக்கியைச் சேர்ந்த இரண்டாவது அமுரத் என்பவனின் குமாரனொருவனுல் 1489-ம் வருடத்தில் பீஜாபூர் சமஸ்தானம் ஸ்தாபிக்கப்பட்டு அடில்ஷாவினுல் பாதுகாக்கப்பட்டு வந்தது. அதே காலத்தில் மாலிக் ஆமத் என்பவனுல் ஆமத் நகரம் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாறு தக்ஷிணத்தில் சிறிய சிறிய இராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வந்ததுடன் 1510-ம் ஆண்டில் போர்த்துகல் தேசத்தவனுன அல்பகர்க் என்பவன் குடகடலிலுள்ள தீவொன்றில் கோயா என்னும் நகரத்தை ஸ்தாபித்தான். ஐரோப்பிய சாதியார் முதல்முதல் இந்தியாவிற்கு வந்து குடிபுகுந்ததும் அக்காலத்தே தான். பிறி

னேழாம் நூற்றுண்டு வரை தக்ஷிணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இராஜ்ஜியங்கள் எண்ணிறந்தன. இவையாவும் சிவாஜி மகாராஜா காலத்தில் முற்றுகையில் சம்பந்தப்பட்டவை. பீஜாபூர் இராஜ்யத்திற்கும் விஜயநகரத்திற்கும் உண்டான கொடியபோரினுல் விஜயநகரம் சிதைபடவே, பீஜாபூர் நகரம் முன்னிலும் பன்மடங் கதிகமான சிறப்பையும் நாகரிக நிலைமையையுங் கொண்டது. ஆமத் நகரத்தில் நாளுக்கு நாள் உண்டான உட்கலகத்தினுல் மொகலாயர்கள் உட் பிரவேசிக்கலானுர்கள். மொகலாய இராஜ்யம் ஏற்கனவே, அக்பர் சக்கரவர்த்தியின் நல்லரசினுல் குமரிமுனை முதல் பனிமலை வரை கீர்த்திபெற்றது. மாலிக் அம்பர் நகரத்தைச் சீர்திருத்தினுர். இவர், பகைவரைப் பழிதூற்றுவதல்லது குடிகளைப் பழிதூற்றுவரல்லர். இவருடைய ஆட்சியில் மராடியர்கள் திருப்தியற்றிருந்தாகக் காணப்படவில்லை. இந்து முகம்மதியர்களுக்குள் இருந்த மனஸ்தாபம் மிகக் குறைவே. முகம்மதீய அரசாட்சியில் மராடியர்கள் பலர் ஜமீன்தாரர்களானுர்கள். அவர்கள் சுல்தான்களுக்கு வருடந்தோறும் ஆள்படை சேர்த்து அனுப்பவேண்டுவது ஒப்பந்தம். மோர்ஸ், நிம்பள்கார், கோரபடே, தேபிலர்கள் ஆகிய இம்மராடி வம்சத்தினர்கள் பீஜாபூர் சமஸ்தானத்தில் உத்தியோகஞ் செய்திருந்தார்கள். யாதவ வம்சத்தினர்களும் போன்ஸலே வம்சத்தினர்களும் ஆமத்நகர சமஸ்தானத்தில் மந்திரிகளாகவும், புரோகிதர்களாகவும், சேனுதிபதிகளாகவும், தூதர்களாகவும், சாரணர்களாகவு மிருந்து வந்தனர். இவ்விரு வம்சத்தினர்களும் ஆமத்நகர சமஸ்தானத்தில் பெருமையும் மதிப்பும் பெற்றிருந்தனர். பீஜாபூர் சமஸ்தானத்தில் இருந்த மராடி வீரர்களுள் சந்தரராவ் மோரே, ராவ்நாயக் நிம்பள்கார், ஜுஜார்ராவ் கட்கே, மணையராவ், ஷாவந்த பகதூர் ஆகிய இவர்களே பேர்போனவர்கள். ஆமத்நகர சமஸ்தானத்தின் கண்ணிருந்த மராடிய வீரர்களுள் ராஜா யாதவராவ், ராஜா போன்ஸலே ஆகிய இவர்களே மிக்க கீர்த்தி பெற்றவர்கள். இங்ஙனம் பத்துத் தலைமுறைகளில் பற்பல மகாராஷ்டிர பிரமுகர்கள் தோன்றினதினுல், மகாராஷ்டிர தேசம் பெருமைபெற்றது. முகம்மதீயர்கள் தட்சிணத்தின் மீது படையெடுத்தும் அவர்களுடைய ஜாதீய ஆதரிசங்கள் மட்டும் மகாராஷ்டிரத்தில் பரவவில்லை. ஆனுல், தட்சிணத்தில்

மகாராஷ்டிரர்களுக்கும் முகம்மதீயர்களுக்கும் ஜாதிக்கலப்பு உண்டா யிருப்பதாக மட்டும் தெரியவருகிறது. முகம்மதீய சுல்தான்களிற் சிலர், இந்து தளகர்த்தர்களின் ஸ்திரீகளை விவாகஞ்செய்துகொண்ட தாகவும் தெரிகிறது. பாமினி சமஸ்தானத்தின் ஏழாவது சுல்தான் விஜயநகரத்தை யாண்டுவந்த இராஜவம்சத்துடன் சம்பந்தஞ் செய்த தாகவும், ஒன்பதாவது பாமினி சுல்தான் ஸோன்காட் இராஜ னுடைய புத்திரியைக் கலியாணஞ் செய்து கொண்டதாகவுஞ் சரித் திர வாயிலாக நாம் அறிகிறோம். பீஜாபூர் சுல்தானன யுஸப் அதில்ஷா என்பவன் பிராமண குலத்திற் றோன்றிய முகந்தராவ் என்பவனின் சகோதரியை மணந்து கொள்ள, அவள் பட்டமகிஷி யாகி பாபுஜீகானம் என்னும் பெயர் கொண்டு நல்ல மக்களையும் பெற்றாள். அவளுடைய பிள்ளைகளும் பீஜாபூர் சமஸ்தானத்தை யாண்டு வந்தனர். பேடார் ஜில்லாவை யாண்டுவந்த பாரித்வம் சத்தின் முதலாவது அரசன் ஸபாஜீ மராடாவின் புத்திரி யைத் தன் இரண்டாவது குமாரனுக்கு மணஞ் செய்து கொண் டான். ஆகவே, இத்தகைய விவாகங்களினல் மராடியர்களுட் சிலர், சிறுபான்மை முகம்மதீய நாகரிகத்தைத் தழுவினர்க ளென் பதும் வெளிப்படை. இங்ஙனம் முகம்மதீய படையெழுச்சி தட் சிணத்தில் ஆங்காங்கு உண்டாகியும், முகம்மதீயர்கள் வட இந்தியா வில் இந்துக்களின் கோயில்களைத் தரையோடு தரையாய் மட்டந் தட்டுவதும், விக்கிரகங்களை உடைப்பதும், சாஸ்திர புத்தகங்களை தீக்கிரையாக்குவதுமான பயங்கரச் செயல்களை அவ்வளவு மும்முர மாகச் செய்ததில்லை. முகம்மதீயர்களின் செயல்கள் சிலவிடத்து அதிக்கிரமித்திருப்பினும், பொதுவாக இந்துக்கள், அதிலும் மராடி யர்கள் வெகுவாக முகம்மதீயர்களினல் நன்மை யடைந்திருக்கின்ற னர். கூறுமிடத்து மராடியர்கள் பதினேழாவது நூற்றாண்டில் அடைந்த கீர்த்தி, வெற்றி, ஆண்மை, ஆகிய இவைகள்யாவும் முகம் மதீயர்களின் பிரவேசத்தினலேயே உண்டாயின.

பதினைந்தாமாண்டிலும் பதினாறும் ஆண்டிலும் தட்சிணத்தை யாண்டுவந்த முகம்மதீய சுல்தான்கள் யாவரும் மதவெறிபிடித்த முரடர்களல்ல. ஔரங்கசீப், மதவெறிபிடித்தவனா யிருந்ததினா

லேயே அவன் காலத்து மராடியர்களின் எழுச்சி சாலவும் மெச்சத் தக்கது. தட்சணத்தில் அக்காலத்தில் முகம்மதீயர்கள் அரசாண்டிருந்தபோதிலும் அவர்களின் இராஜீய விஷயங்களை மராடியர்களே பார்வையிட்டு வந்தனர். சுறுங்கச் சொல்லின் இராஜ்யபாரமனைத்தும் அரசிறை கணக்குகள் யாவும் மராடியர்கள் வசமே யிருந்தன. சுல்தான்கள் இச்சமஸ்தானங்களில் ஒப்புக்கு இருந்தனர். மராடியர்கள் பொதுவாக தட்சிண முகம்மதியர்கள் கீழ் இருந்த போதிலும் உத்தரதேசத்தில் இருக்கும் மொகலாய முகம்மதீயர்களுக்குக் கீழ்ப்பட்டிருக்க எக்காலத்தும் சம்மதிக்கவில்லை. நிற்க, பதினாறும் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பிரோடஸ்டண்ட் மதத்தினர்களுள் உண்டான மாறுதலைப்போலவே, இந்தியாவிலும், விசேஷமாக மதவழியிலும், ஜனாசார வழியிலும் பாஷா சீர்திருத்த வழியிலும் பெருத்த மாறுதல்களுண்டாயின. தட்சிணத்தில் மத சம்பந்தமாக உண்டான மாறுதல்கள் கேவலம் வர்ணாச்சிரம முறைகளைத் தழுவினவையல்ல. அவை சமரஸானுபவ குணத்தை யொட்டிய பக்தி, சிரத்தை, தியானம் முதலியவைளுடன் கூடிய ஞானத்தைப் பற்றியவை. மதவழியிலுண்டான மாறுதல்களுக்குப் படித்தவர்களும் உயர்ந்த ஜாதியாருமே காரணமெனக் கூறுதல் ஒரு தலை. தட்சிணத்தில் உண்டான இம் மாறுதல்கள் முக்கியமாகத் தாழ்ந்த வகுப்பினர்களைச் சேர்ந்தவை. இம்மாறுதல்களுக்குத் தலைமையாயிருந்த பல ஞானிகளும், யோகிகளும், கவிகளும், தத்துவதரிசிகளும் சாமானிய வகுப்பினரேயன்றி உயர்ந்த வர்ணத்தினராக மாட்டார்கள். கம்மாளன், நாவிதன், தோட்டக்காரன், கடைக்காரன், குயவன் முதலிய பல ஜாதிகளினின்றுமே புருஷோத்தமர்கள் பலர் பிறந்தனர்.

* துக்காராம், † இராமதாஸ், வாமன்பண்டிதர், ஏகநாதர் முதலிய புண்ணிய புருஷர்களை இற்றைக்கும் மகாராஷ்டிரர்கள் தங்கள் இல்லுறை தெய்வங்களாகத் தொழுது வருகின்றனர். குடிகளுக்குரிய சுதந்திர ஆதரிசத்தைப் பிரோடஸ்டண்ட் மதம் எப்படி மேற்கு ஐரோப்பாவில் பரவச் செய்ததோ, அப்படியே மேற்கு இந்

* † இவ்விருவர்களும் சிவாஜி மகாராஜாவின் குருமூர்த்திகள்.

தியாவிலும் மகாராஷ்டிர அப்புதயத்தால் சுதந்தர ஆதர்சமுண்டாகி, கல்வி, கைத்தொழில், வியாபாரம்,நாகரிகம் முதலியவைகள் பெருகின. ஜனங்கள் தன்மதிப்பு கொண்டனர். குடிகள் தங்கள் ஜாதீய மரியாதையைப் பெரிதும் போற்றினர். இராஜீய விஷயங்கள் நாடெங்கும் பரவின.

மகாராஷ்டிரத்தில் பத்துதலை முறையாக இடை விடாமல் பெரிய இராஜதந்திரிகளும் சிறந்த இரணதீரர்களும் தோன்றிக் கொண்டே யிருந்தனர். மகாராஷ்டிரத்தில் உண்டான அன்னியப் படையெழுச்சிகளினாலேயே மராடியர்கள் வெகுவாய்த் தங்கள் ஜாதீய விஷயங்களை உணரலானார்கள். பாஷா வித்தியாசமில்லாமையாலும், மதாசார வேறுபாடுக ளில்லாமையாலும், ஜாதி பேதங்க ளில்லாமையாலுமே மகாராஷ்டிரம் ஒரே உணர்ச்சியுடன் பிரபல யுத்தம் பலபுரிந்து முன்னேற்றமடைந்தது. பிரிட்டிஷ் துரைத்தனத்தார் இந்தியாவை யரசாள்வதற்கு முன்னர், இந்தியா, மராடியர்கள் வசமேயிருந்ததென்பார் ஒரு தலையார்; மற்றும் முகம்மதியர்கள் வசமே யிருந்ததென்பார் ஒரு சாரார். ஆனால், சரித்திர ஆராய்ச்சிவல்லோர் பலர் பலவிதமாகக்கூறினும், சமீபத்தே யுண்டான புதிய ஆராய்ச்சிகளினாலும், * கிராண்ட் டப் என்னும் ஆங்கிலேய ரொருவர் தாம் எழுதிய மகாராஷ்டிர சரித்திரம் என்னும் நூலின் வாயிலாக விடுத்த அபிப்பிராயத்தினாலும், ஆங்கிலேய அரசாட்சிக்கு முன்னர் மகாராஷ்டிரர்களே இவ்விந்தியாவைப் பல துறைகளிலும் ஆண்டுவந்தனர் என்பது உண்மை.

ஆங்கிலேய துரைத்தனத்திற்கு முன்பு இந்தியாவில் மத்திய தட்சிணம், கர்னாடகம், † மைசூர், தென்னிந்தியாவில் தஞ்சை வரையிலும் —வடதிசையில் கூர்ச்சரநாடு, கத்தியவாடு, ‡ பேரார், மாளவம், புந்தேலகண்டம், இராஜபுதனம், § டெல்லி, || ஆக்ரா, | ரோஹில் கண்டம், மத்திய மாகாணத்தில் கடக்ம் வரையிலும் மகாராஷ்டிரர்களுக்குச் சொந்தமானவை. அவர்கள் வங்காளத்தின்

* இவர் சென்னை மாகாண கவர்னராகவுஞ் சிலகாலமிருந்தார்.
† மஹீசூரபுரம்-இதைத் தமிழர் எருமைநாடு என்பர்.
‡ விதர்ப்பதேசம் § ஹஸ்தினாபுரம் || அக்ரவணம் | ஸ்ரீகண்டம்.

மீதும் அஸ்தினபுரத்தின்மீதும் படையெடுத்தனர். ஆனால், பிரிட்டிஷ் இராணுவத்தின் உதவியாலும் இதர காரணங்களாலும் மராடியர்கள் படையெடுக்காதபடி தடுக்கப்பட்டனர். மேற்கூறிய இராஜ்யங்களிற் சில மகாராஷ்டிர ஆளுகைக்குட்பட்ட சுதேசமன்னர்களால் பரிபாலிக்கப்பட்டும் வந்தன. பெருத்த ஜனத்தொகையையும் பரந்த பூமியையுங் கொண்ட ஐதராபாத், மைசூர் ஆகிய இவ்விரண்டு முகம்மதிய இராஜ்யங்களும் மகாராஷ்டிரர்களைக்கண்டு பயப்பட்டிருந்தன. சற்றேறக்குறைய நூறு வருட காலம் மகாராஷ்டிரர்கள் விசாலமான பிரதேசத்தை யாண்டுவந்தனர். மகாராஷ்டிரர்களின் வெற்றிக்குக் காரணம் அவர்களின் தன்மதிப்பேயாகும். அன்னியர்கள் தங்கள் ஜன்ம பூமியை யாள்கிறார்களென்னும் உணர்ச்சி உண்டானவுடனே மகாராஷ்டிரர்களில் தோட்டி முதல் தொண்டமான் வரை சகல ஜாதிகளும் ஒருமித்து முன் நிற்கலானார்கள். பொதுவாக இந்தியர்களுக்கு ஜாதீய உணர்ச்சி கிடையாதென்னும் நம்பிக்கை பலநாளாக ஐரோப்பியர்கள் மனதில் குடிகொண்டிருந்தது. ஆனால் மகாராஷ்டிர இரஜபுத்ர ஸீக்கியர்களைக் கண்ட மாத்திரத்தில் இந்நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. இரஜபுத்திரர்களுக்குள் சில உயர்ந்த வம்சத்தினர்களே ஜாதீய உணர்ச்சியைக் கொண்டிருந்தனர். ஸீக்கியர்களுக்குள் சிறிய தொகையாளர்களான 'காலாஸா' படைமட்டுமே ஜாதீய உணர்ச்சியைக் கொண்டது. ஆனால், மகாராஷ்டிரர்களுக்குள் ஒவ்வொரு ஜாதியார்களும் ஏற்றத்தாழ்வின்றி ஜாதீய உணர்ச்சியைக் கொண்டிருந்தனர். மகாராஷ்டிரர்களிற் பெரும்பாலார் வருடத்தில் பின்பனி, இளவேனில், முதிர்வேனில் ஆகிய இம்மூன்று பருவங்களில் சேனையில் சேர்ந்து தேசபாதுகாப்புத் தொழில் புரிவர். கார், கூதிர், முன்பனி பருவங்களில் விவசாயத்தை மேற்கொண்டு உழுதுண்டு வாழ்வர். மகாராஷ்டிர வம்சத்தினர் பலர் யுத்த வீரர்களாகவும், விவசாயிகளாகவும் முறையே யிருந்து வந்ததின்பயனாக அநேக ஜாகீர்தார்கள், பட்ட வர்த்தனர்கள் தட்சிணத்தில் தோன்றினார்கள்.

மகாராஷ்டிரத்தில் தோன்றின பலவம்சங்கள் பிற்காலத்தில் ஒவ்வொரு சமஸ்தானத்திற்கு அதிபதியானார்கள். இண்டோர்,

குவாலியர், தாராநகர், பரோடா, நாகபுரி, கோலாபுரி முதலிய பல சமஸ்தானங்கள் உண்டாயின. மகாராஷ்டிரர்கள் ஆண்டகாலத்தில் இராய்கடா, ஸடாரா, விஷல்கடா, செஞ்சி நகரம், புனநகரம் முதலிய பட்டணங்கள் இராஜதானிகளாக யிருந்தன. பேஷ்வா இராஜாங்க முறைமை நானுபத்னுவிஸ் என்பவரால் நடத்தப்பட்ட காலத்தில் முகம்மதியர்கள் இம்முறையைப் 'பாராபாய்' கவர்ன் மெண்டு எனப்பரிகாசஞ் செய்வது வழக்கம். பன்னிரு பிரபுக்க ளால் இராஜாங்க முறைமை பரிபாலிக்கப்பட்டு வந்தமையால் இது 'பாராபாய்' கவர்ன்மெண் டெனப்பெயர் கொண்டது. இத்தகைய மாட்சிமை பெற்ற மராடியர்களை இங்கிலாந்தில் நேல்ஸன் என் னும் ஆங்கிலேய கம்பெனியாரால் பிரசுரப்படுத்தப்பட்டுவரும் 'என் ஸைக்ளோ பீடியா' என்கிற அகராதியில் 'மராடா' என்னும் பதத் திற்குக் கொள்ளைக்காரன் அல்லது கலகக்காரன் எனப்பொருள் படுத்தி எழுதியிருக்கிறது. ஆனால், சில முகம்மதிய சரித்திரக்காரர் கள் 'மராடா' என்னுஞ் சொல்லுக்குப் போரில் முதுகு காட்டி ஓடாமல் யுத்தரங்கத்திலேயே பிராணனை விடுபவன் எனப்பொருள் படுத்தி யிருக்கின்றனர். மராடா என்னும் பதத்திற்கு 'மலைவாசி' யென்பார் வேறு சிலர். மராடியர்கள் தங்கள் வாழ்க்கையில் நல்ல கண்ணியமும் பெருந்தன்மையுங் கொண்டவர்கள். இவர்களுடைய வாழ்க்கை டாம்பீக மற்றது. மராடியர்களிடத்தில் நாம் கண்டு வியக்கத்தக்க சில நற்குணங்கள் உண்டு. அவைகளாவன:—இடை விடா முயற்சி, பொறுமை, பெரியோர்களிடத்தில் அதிக மரியாதை, உற்றார் உறவினரிடம் அன்புடைமை முதலானவைகளாம். மராடி யர்கள் மிக்க சூட்சும புத்தியும் மகா சாமர்த்தியமும் உடையவர் கள். காலத்தே செய்யும் உதவியை இவர்கள் எஞ்ஞான்றும் மறப் பதில்லை. காலத்தே செய்யுந் தீங்கையும் இவர்கள் எக்காலத்தும் மறப்பதில்லை. யாதாமொருவன் இவர்களுக்கு இடர் விளைப்பின் ஆண்டுகள் பல கழியினும் பழிக்குப்பழி தீர்த்தே வருவர். இவர் களுக்கு நன்றி புரிபவரை உள்ள காலம்வரை மறக்காமல் தொண்டு புரிவர். இவர்கள் இந்தியாவில் தற்பொழுது மூன்றுகோடி ஜனத் தொகையைக் கொண்டிருக்கின்றனர்.

மகாராஷ்டிர நாடு நான்கு பக்கங்களிலும் உயர்ந்த பர்வதங் களால் சூழப்பட்டிருக்கின்றது. * வடக்கிலிருந்து தெற்கு திசை

* இதற்கு சதபுரமலை என்பார்கள்.

யாக ஓடும் சய்யாத்திரி மலைத் தொடர்ச்சியும் கிழக்கிலிருந்து மேற்கு திசையாகவோடும் விந்திய, ஸாத்பூர மலைகளும் மகாராஷ்டிர நாட்டிற்கு எல்லைகளாகும். தவிர, அநேக சிறிய மலைகளும், குன்றுகளும் இடையிடையே யிருப்பதால் இவைகள் மகாராஷ்டிரத்திற்குப் பெருத்த அரண் போலிருக்கும். கோதாவரியும் கிருஷ்ணாவும் பாய்தலால் மகாராஷ்டிர நாடு பல வளங்கள் பெருகி விளங்கியிருக்கும்.

மகாராஷ்டிரத்தைப் பலர் தண்டகவனம் அல்லது தண்டகாரண்யம் எனக் கூறுகின்றனர். இதல்லாமல் தற்பொழுது மராடி பிராமணர்கள் சங்கல்பம் சொல்லுங் காலத்திலும் இம்மகாராஷ்டிரத்தைத் 'தண்டகாரண்ய க்ஷேத்திரே' என்கின்றனர்.

மகாராஷ்டிரர்களிற் பெரும்பாலார் ஆரியர்களேயாவர். திராவிட சம்பந்தமு முண்டு. இவ்விரு சம்பந்தங்களினால் மகாராஷ்டிரர்கள் சிவப்பும் கறுமையும் சேர்ந்த கபில நிறத்தவர்களானார்கள். இவர்கள் சரித்திரம், பதினேழாம் நூற்றாண்டில் மிக்க சிறப்புடன் விளங்கி உன்னத பதவியை யடைந்த பின்னர், அழிவுற்றது விசனிக்கற்பாலது.

இரண்டாவது அத்தியாயம்.

* போன்ஸலே வமிசம்.

பண்டை காலத்தே உதயபுரியம்பதியில் ஸிஸோதியா வம்சத்திலே பிறந்த ராணுபீமராஜன் என்பான் ஒருவன் நற்குண நற்செய்கைகள் கொண்டு அறனும் ஆற்றலும் மிக்கோனாய் மேருமலை வரையிற் சென்று, இடையிலுள்ள அரசர்களை வென்று, தட்சிணபரியந்தம் இணையற்றவனாய் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே அரசாட்சி செய்திருந்தான். நாட்டரசர்கள் பலரும் குறுநில மன்னர்கள் சிலரும் அடிபணிந்து கட்டியங்கூறி நிற்பர்.

* இதற்குப் போஸலே என்பாருமுண்டு.

பொன்னாலியன்ற தொரு பூங்கொடி போல் விளங்கும் மகளிர்ப் பலர் மன்னனுக்குப் பெண்டிராக இருந்து வந்தனர். இவர்களில் ஒருத்தி உருவால் இலக்குமியும் கற்பால் அருந்ததியையும் ஒத்து, அரசன் விருப்பினை உடையவளாயினாள். இவளிடத்தே அரசனுக்கு இராம்ஸிங், பாபாஸிங் என இரு புத்திரர்கள் பிறந்தனர். புத்திரர்கள் பருவமடைந்தவுடன் பீமராஜன் ஆவி துறந்தான். மற்றைநாள், இராம்ஸிங் சிம்மாதன மெய்தினன். இளையோனான பாபாஸிங் தம்முன் பிறந்தோனிடத்தே ஊழியஞ் செய்ய மனமில்லாதவனாய்க் காட்டகத்தே சென்று வேட்டையாடும் பாவனையாக நகரைவிட்டுத் தட்சிணத்தை யொட்டிய நருமதை யாற்றங் கரையில் வாசஞ்செய்யும் இராஜா ஆலி மோஹன் பால் வசிக்கலானான். இராஜா ஆலி மோஹன் இறந்த பிறகு பட்டத்திற்குரிய மைந்தன் பால்மணம் மாறாச் சிறு பிராயமாயிருப்பது கொண்டு பாபாஸிங் இராஜ்ய விஷயங்கள் யாவையும் செவ்வனே நடத்தி வந்தான். சிலகாலம் ஆனபின் இராஜ்யபாரத்தை வகிக்கும் வயது வந்தவுடன் இளவரசனுக்குப் பட்டங்கட்டி, நன்மொழி கூறி ஆசீர்வதித்துப் பிறகு பாபாஸிங் தட்சிணத்தை நாடிச் செல்லலானான். இவன், ஆலிமோகனின் இராஜ்யத்தை நடத்திவருந் நாளில் தீவினையாளர் பலரையும், மிக்க துயரிழைப்போரனேகரையும் அடக்கி, நீதியை நிலைபெறச் செய்தனன். குடிகள் இவனை பாபா போன்ஸலே எனப் பெயரிட் டழைப்பாராயினர். 'போன்ஸலே' என்னும் பதத்திற்குத் துஷ்ட நிக்கிரஹி எனப் பொருள் உண்டு.

போன்ஸலே வமிசம் இவனிட மிருந்தே தோன்றியது. இவ்வம்சத்தினர்கள் பரம்பரையாகவே நல்ல தீரர்கள். பாபா போன்ஸலே என்பவனுக்கு நான்கு புத்திரர்கள். அவர்களில் மாலோஜீ மூத்தவன், விடோஜீ இளையவன். மாலோஜீக்கு ஷஹாஜி, ஷரபோஜி என இரு மைந்தர்களும் இருந்தார்கள். விடோஜிக்கு மைந்தர்கள் எண்மர் இருந்தனர். அவர்களில் கேளோஜி, மனஜீ முதலானோர் பீஜாபூர் அரசனான கேல்காரரிடம் கொத்துவாலாக அமர்ந்து வருங்நாளில் ஒருநாள் ஔரங்கசீப் பகதூர் யாது காரணம் பற்றியோ இவர்களைக் கழுவேற்றினான். கழுவேற்

றின காரணம் நாளது வரையில் சரித்திரக்காரர்களுக்குப் புலப்பட வில்லை. நிற்க, மாலோஜீயும் விடோஜியும் குடும்பத்தொல்லையால் மனங்கசிந்து ஜனன ஸ்தானத்தை விட்டு தேவகிரியிலுள்ள வீரல் என்னுங் கிராமத்தை வந்தடைந்து பயிர் ஜீவனஞ் செய்து வந் தார்கள். சின்னாள் கழிந்த பின்னர், இவ்விரு சகோதரர்களும் மனக் கிலேசத்தினால் விட்டுவந்த மனைவி மக்களை அழைத்துவந்து ஸ்திர மான குடித்தனக்காரர்களானார்கள். முதல் முதல் இவ்விருவர்க ளும் தாங்களே தேவகிரி மாகாணத்தைச் சேர்ந்த சிங்கேடு என்னுங் கிராமத்தில் பேரீகையாளரான லக்கோஜி யாதவ ராவ் என் பவரை அடுத்தனர். லக்கோஜி யாதவராவ் ஆமத் நகர சுல்தானுக் குப் பிரதம தளகர்த்தராகப் பன்னீராயிரம் அசுவப்படையைத் தன்கீழ் வைத்திருந்தனர். இவர், மாலோஜீயையும், விடோஜியை யும் தன்பால் இருத்தி, அவர்களுக்குச் சாமானிய கொத்துவால் உத் தியோகத்தையுந் தந்தருளினார். யாதவராவ் சுபாவத்தில் பருத்த தேகத்தைக்கொண்டு குதிரைச் சவாரி செய்யச் சாலவும் கஷ்டப் படுவாராதலால், அவர் தன் இருக்கையிலேயே தங்கி, அவ்விரு சகோதரர்களையும் தன்னுடனே புசிக்கச் செய்வார். அவர்கள் மாதந் தோறும் இருபது ரூபாய் மதிப்புள்ள சம்பளம் பெற்று வந்தார்கள்.

மாலோஜீக்குப் பிள்ளை கிடையாது. இக்குறையே பெருங் குறையாகக் கொண்ட மாலோஜீயின் மனைவி தீபாபாய், தவத்தினர் ஒருவர் அருளிய பிரசாதத்தினால் கருவுயிர்த்தாள். கருவுயிர்த்த பதினோராம் நாளில் மாலோஜீயின் மக்களுக்கு நாமகரணம் பண்ணு வோமென்று மாநகரார் வந்து கூடினர். அப்போது மாலோஜீ "முற் பிறப்பில் இவள் புண்ணிய தானம் புரிந்தவளாதலின், மண்டலங்கள் யாவையும் மறந்த மாதவத்தோர் ஒருவர் அவள் முன் தோன்றி 'எம் தவப்பெருமையால் மக்கள் பெறச் செய்வித்து உன் துயரை ஒழிப்பேன், என் பெயர் * ஷாஷரீப் ஆனால், நின் வயிற்றிற் பிறக் கும் மக்களுக்கு என் பெயரை இடுமின். இனி அஞ்சற்க' என்று சொல்லி மறைந்தார். ஆகவே, அப்பெயரை இக்குழந்தைகளுக்கு இடுங்கள்" என்று சொன்னான். அவ்வளவிலே மாநகரார் பலரும்

* இது முகம்மதிய பக்கிரியின் பெயர்.

மாலோஜீ மக்களுக்கு ஷஹாஜி, ஷரபோஜி என்று பெயர் கூறி தம் பதிகளிருவரையும் வாழ்த்தினர். ஷஹாஜி நல்ல அழகுவாய்ந்த வன். யாதவராவ் ஷஹாஜியைப் பார்க்குந்தோறும் அன்பு பெருகி, புளகாங்கிதனாய் அவனை அடிக்கடி தன் கேளிக்கை அறைக்கு அழைத்துச் செல்வது வழக்கம். யாதவ்ராவுக்குப் பிள்ளை கிடை யாது. ஆனால் வெகுகாலங் கழிந்தபிறகு மிக்க சௌந்தரியமுள்ள ஒரு பெண் பிறந்தது. இப்பெண் பெயர் ஜீஜாபாய். ஷஹாஜி பிறந் தது 1594-ம் வருடம்.

மாலோஜீ போன்ஸலே, லக்கோஜி யாதவராவிடம் வந்த நாள் தொடங்கி, அரிய பெரிய காரியங்களைச் செய்து வந்தநால் லக்கோ ஜிக்கு அன்பு பெருகி, இவரை வெகு மரியாதையுடன் நடத்த லானார். இங்ஙனம் நடந்து வருந்நாளில் மகாராஷ்டிரத்தில் பிர பலமான * ஹோளிபண்டிகை வந்தது. பண்டிகை காலங்களில் சாதாரணமாகச் சிறிய வர்களும் பெரியவர்களும் ஒருங்கேகூடி பிர புக்களைக் காண்பது வழக்கம். இது தொன்றுதொட்டு நடந்து வந்தது. இவ்வழக்கத்தை யனுசரித்து மாலோஜீ ஐந்து வய துள்ள ஷஹாஜியையும் அழைத்துக் கொண்டு லக்கோஜி யாதவ ராவைப் பேட்டி காணவந்தார். ஷஹாஜியின் முகம் அழகுவடிந்து அவ்வழகுக் கேற்ற புத்தியும், புத்திக்கேற்ற சுறுசுறுப்பு மிருந்தமை யால் லக்கோஜி யாதவராவ் ஷஹாஜியைத் தன்னருகே யழைத்து மடிமீது உட்கார்ந்திருக்கும் மூன்று வயதுள்ள ஜீஜாபாயிக்குச் சுட் டிக்காட்டினார். அவ்வளவிலே குழந்தைகளிருவரும் ஒருவரோ டொருவர் கூடிக்குலாவிக் கொஞ்சி விளையாடுவதைக் கண் கொட் டாமற் பார்த்து ஆநந்தங்கொண்டு தன் பெண்குழந்தையை அருகே யழைத்துக் "குழந்தாய் ! உன்னுடன் விளையாடும் இச்சிறுவனைக் கலியாணஞ் செய்து கொள்ளுகிறாயா ?' என வேடிக்கையாகச் சொல்லிப் பக்கத்திலிருப்பவர்களைப் பார்த்து, "ஆகா ! 'பாலனுக் கேற்ற பேதை" கிருஷ்ணனும் இராதையுமாகக் காண்கிறார்கள். இவர்களிருவரையும் மணஞ் செய்வித்தால் என் மனங்குளிரும்" என மெய்ம்மறந்து கூறினர். இவர் கூறினதை ஒரு வியாஜ

* இப்பண்டிகைக்கு 'ரங்கபஞ்சமி' என்பாருமுளர்.

மாகக்கொண்டு மாலோஜீ போன்ஸலே, மழலைச் சொற்களால் குழந்தைகள் விளையாடுவதையும் பார்க்காமல், தன்னிருப்பையு மறியாமல், திடீரென்று முன்வந்து அங்கு கூடியிருக்கும் சபையோர்களை விளித்து, "நண்பர்களே! இன்று முதற்கொண்டு யாதவராவ் என் குமாரனுக்கு மாமனாகி எனக்குச் சம்மந்தியுமானார்" என உரக்கக்கூவினார். இதைக்கேட்ட சிலர், மாலோஜீ பக்கமாக 'ஆம் ஆம்' என சம்மதங் கூறினர். இதைக் கண்ட யாதவராவ் ஒன்றுஞ் சொல்ல நாவெழாமல் இடி விழுந்த நாகம்போலாயினர். என்றாலும் மாலோஜீ பரிகாசமாகச் சொன்னான் எனக்கொண்டு, யாதவராவ் மற்றையநாள் மாலோஜீயை உண்ண அழைத்தனர். மாலோஜீ, தன்னை யாதவராவ் சம்மந்தியாகக்கொண்டு தன் மகளை மருமகனாக வரித்தாலன்றி ஜலபானஞ் செய்யேன் எனப் பதில் விடுத்தனன். ஆனால், யாதவராவ் இதற்குச் சம்மதிக்கவில்லை. யாதவராவ் மனைவி சுபாவமாகவே இறுமாப்புடையவளானதினால் இச் செய்தியைக் கேள்விப்பட்டவுடனே, 'குலங் கோத்திரம் இன்னதெனச் சரிவர ஏற்படாதவர்களுடன் யாம் சம்பந்தஞ் செய்வது முறைமையோ' எனக் கடுமொழி பகர்ந்தாள்.

நிற்க, மாலோஜீயோ ஷஹாஜிக்கு எப்பாடு பட்டாகிலும் ஜீஜாபாயியை மணஞ்செய்து வைக்கவேண்டுமென்னும் நோக்கமே கொண்டு யாதவராவை விட்டகன்று தன்னூர் போய்ச் சேர்ந்தான். சின்னாள் கழிந்த பிறகு, மாலோஜீ உலகம் ஆச்சரியப்படும்படி பெரியநிதிக்குவியலைப் பெற்றான். வைகறை யாமத்தில் நதிக்கரை யடைந்து நீராடி, வேதவிதியைக் கடைப்பிடித்து மகாராஷ்டிரர்களின் குலதெய்வமான அம்பா பவானியைத் தொழுது, அவள் அருளினால் மாலோஜீ பெருஞ்செல்வ மடைந்தான் என்பார் சிலர். ஆமத்நகர சமஸ்தானம் அக்காலத்தில் அலங்கோலமாயிருந்ததினால் மாலோஜீயும் அவன் தம்பி விடோஜியும் இப்பெருஞ் செல்வமடையக் கொள்ளையடித்தார்களென்பார் * வேறு சிலர். இங்ஙனம், பலர் பல்வேறுமாதிரி அவர்களின் செல்வத்தைப்பற்றிக் கூறினும், மாலோஜீயும் விடோஜியும் தங்கள் அதிர்ஷ்ட வசத்தினால் யாதவராவை யொத்த பிரபுவானார்கள்.

---

* இவ்வபிப்பிராயம் பொதுவாக ஆங்கில சரித்திரக்காரர்களைப் பொறுத்தது.

மாலோஜீயும் விடோஜியும் திரவிய சம்பன்னர்களானதற்கு மற்றொரு காரணமுங் கூறுவர்.

யாதவராவை விட்டகன்ற பிறகு, இவர்கள் இரண்டு மூன்று வருடகாலம் பழையபடி உழுதுண்டு வாழ்ந்து வந்தார் இவர்கள் வெகு பயபக்தியுடனும் சிரத்தையுடனும் ஸ்ரீதேவியை நித்தம் பூஜை செய்து வந்தனர், ஏகாதசி தினங்கள், சோமவாரம், பௌர்ணமி தினங்கள் இன்னும் முக்கிய நாள்களிலும் பட்டினி கிடந்து விரதம் அநுஷ்டிப்பர். இப்படி இவர்கள் அநுஷ்டித்து வருநாளில், மாசி மாதம் மகத்தன்று இரவு புலத்தின் நடுவே கட்டிய சிறிய காவற் பரண்மீது படுத்திருக்கையில் சகல ஆபரணங்களைப் பூண்டு, படிகநிறத்துடன் வெள்ளைக் கலையுடுத்து ஸ்ரீதேவி மாலோஜீமுன் தோன்றி அவனை வாழ்த்தினள். உடனே, மாலோஜீ கண் விழித்து நடந்ததை தம்பியுடன்கூறினன். ஆனல், விடோஜி இதை நம்பாமல் 'விசாரத்துடன் நீ இருப்பதால் இத்தகைய கனக் கண்டாய். விசாரமற்று நித்திரை செய்' என்றுகூறித் தமையனும் தானுமாக நித்திரை செய்தனர். மறுபடியும் இரவு இடையாமத்தில் முன்போல் ஸ்ரீதேவி தோன்றி, மாலோஜீயை யழைத்து 'வாராய் மகனே! உனது துயரத்தின் காரணத்தை அறிந்துளேன். யான் உங்கள்குலதெய்வமான பவானி என்பேன். உங்கள் திறத்தில் மிக்க கவற்சியுடையேன். இனி நீ குறைவற்ற செல்வமடைவாய். உன் கண்முன் தோன்றும் பிலத்தினடியில் ஏழு பெரிய கங்காளத்தில் பொன்னணங்கள் இருக்கின்றன. அவை உனக்கும் உன் சந்ததியார்க்கும் இனி சொந்தமானவை. பிலத்திற்குள்ளிருக்கும் பாம்புக்குத் தீங்கொன்று மிழைக்காமல் தனத்தை எடுத்துக்கொள்வாய். மற்றுங்கேளாய். உன் வயிற்றிற் பிறந்த மகனுக்குப் பாலன் தோன்றி பாராள்வான். அவனுக்கு என்பெயர் இடுமின். அற்றை நாள் தொடங்கி உன் சந்ததியார் இனி இருபத்தேழு தலைமுறை இம் மகாராஷ்டிரத்தை யாள்வர். ஆதலால் உனக்குண்டாகும் இடரினின்றும் காப்பாற்றுவேன்" எனக்கூறி மறைந்தாள். * மாலோஜீ இரவில் கண்ட கனவை விடோஜிக்குச் சொல்லி, குறித்த விடத்

* இது பெரும்பான்மை மகாராஷ்டிர சரித்திரகாரர்களின் அபிப்பிராயம்.

தைத் தோண்ட வாரம்பித்தனர்' அம்பாள் கூறினபடி யிருந்ததைக்கண்டு ஆச்சரியமுற்று, அவைகளை வண்டியிலேற்றி வீட்டிற்குக் கொண்டுபோய் புறங்கடையில் புதைத்துவைத்தனர். இரண்டொரு மாதங்கள் கழிந்த பின்னர், மாலோஜீ சாமளகுண்டாவில் இருக்கும் ஆருயிர்த் தோழனை சேஷாவநாயக் என்னும் பெரிய சாவகாரியிடம் நடந்தனவற்றைக் கூறித் தன்பாலுள்ள திரவியத்தைப் பாதுகாக்கும்படி வேண்டினன். நண்பனும் அவ்வேண்டுகோளுக் கிணங்கி, "தெய்வ அருளால் கிடைக்கப்பெற்ற இத்திரவியத்தைக் காற்பாற்றுமலிருப்பேனுயின் தெய்வ மிகழ்ந்தவனுவேன். ஆதலால் நீர் அஞ்சற்க," எனக்கூறி மாலோஜீக்கு விடைதந்தருளினன். பின்னர், மாலோஜீயும் விடோஜியும் அந்நகரிடைச் சென்று பலவகைப் பண்டங்களைக் குவித்த மறுகில் வேண்டுவனயாவும் பெற்று, வழியில் அலைவாயிருப்பில் கப்பலில் வந்த பரதேசிகளிடம் பருத்தபரிகள் பலபெற்று ஊரையடைந்தனர். இப்பொழுது மாலோஜீ ஓராயிரம் குதிரைப்படையும் பல போர்வீரர்களுங் கொண்ட பிரபுவானுன். இப்படியிருக்க, பல்டான் இராஜ்யத்தைச் சேர்ந்த நிம்பள்கார் என்பான் ஒருவன் பன்னீராயிரம் படையுடன் கொள்ளையடிக்க ஊரூராய் வருவதைக் கேள்வியுற்ற மாலோஜீ நிம்பள்கார் பால் அணுகி, தனக்குற்ற குறையைக் கூறி யாதவராவிடஞ்சென்று அவன் புத்திரியைத் தன் மகனுக்கு மணமுடிக்க இரண்டாயிரம்படை வேண்டுமெனக் கேட்டான். நிம்பள்கார் உடனே, மாலோஜீக்குத் தன்னிடத்தேயுள்ள படைகளில் இரண்டாயிரம் கொடுத்து அனுப்பினன். மாலோஜீ யாதவராவிடம் நேரே செல்லாமல், நைஜாம் ஷாவுக்குத் தன்குறையைக் கடித மூலமாய்த் தெரிவித்து இதை முடிக்கவேண்டினன். நைஜாம் இக்கடிதத்தில் ஈடுபட்டு, உடனே யாதவராவைக் கொண்டுவர ஆக்ஞாபித்தார். யாதவராவ் நவாபின் உத்திரவைச் சிரமேற்கொண்டு நைஜாம் சபைமுன்னே வந்துநின்றான். நைஜாம் உடனே எழுந்திருந்து யாதவராவைச்சுட்டி "நீ உன் மகளை மாலோஜீ மகனுக்குக் கொடுக்காதிருப்பின் நாட்டில் வருவதோர் உற்பாதமுண்டு. ஆதலால் கடுக மணமுடிப்பாய்' என முனிந்தான். யாதவராவ் துணுக்குற்று 'இறைவ! யான் நின் அடைக்கலம். அப்படியே யாகுக'

என மொழிந்து விவாகத்திற்கு வேண்டிய சாமக் கிரியைகளைச் சேர்க்கலானான். இச் செய்தியைக் கேள்வியுற்ற மாலோஜியும் விடோஜியும் தம் நகர் விட்டுத் தேவகிரிக்குக் குடும்ப சமேதராய் வந்து சேர்ந்தார்கள். யாதவராவ் தம் மகளுக்கு மணமென்று மாநகரார்க்கு அறிவித்தார். நைஜாமும் கலியாணத்திற்கு வந்திருந்து ஷஹாஜிக்கு நன்கொடையாகச் சில படைகளும் தந்தான். நல்ல அழகு பொருந்திய மண்டபத்தில், நீலவிதானத்தின் கீழ், உற்றார் உறவினர் நெருங்கியிருக்க, பல வாத்தியங்கள் முழங்க ஷஹாஜிஜாயும் ஜீஜீயும் தீவலம் வந்து மண முடித்தனர். மாலோஜி எவ்விதத்திலும் தனக்குநிகர் ஒருவருமில்லை யெனக்கொண்டு களிப்புற்றுத் தேவகிரியைச் சேர்ந்த வீரல் நகரத்தைப் பெருமை படுத்தப்பல குளங்களும், சத்திரங்களும், சோலைகளும் ஏற்படுத்தி அனேக தானதர்மங்களை நடத்தி வந்தான். இங்ஙனம் மாலோஜி பல புண்ணியங்களை இழைத்து இல்லறம் நடத்தி வந்தான்.

சிவாஜி மகாராஜாவின் வம்சாவளி.

இராஜா சூரசேனன்

|

மஹீபதி

|

தேவராஜர்

|

பார்த்திபராஜா

|

[இவர் பிள்ளை இந்திரசேனன். இவருக்கு கிருஷ்ண ராஜர் பிறந்தார். கிருஷ்ண ராஜருக்கு இரவிராஜர் பிறந்தார். இவருக்கு மாதவராஜர் பிறந்தார். மாதவராஜருக்கு]

|

கபாஜீ

|

காராஜீ

|

கேளோஜீ

|

ரங்கோஜீ

|

பாபாஜீ

- மாலோஜீ
  - ஷஹாஜி
    - ஸாம்பாஜீ
    - சிவாஜி (மஹாராஜா)

      (இவ்விருவர்களும் ஜீஜாபாயின் மைந்தர்கள்)
    - வெங்கோஜி (ஷஹாஜியின் இரண்டாந் தாரத்தின் புதல்வன்)
  - ஷரபோஜீ
- விடோஜீ (இவருக்கு எண்மர் புத்திரர்கள்) (சிறுவயதிலேயே மாண்டார்)

மூன்றாவது அத்தியாயம்.

ஷஹாஜியின் இராஜ்யாவஸ்தை.

விவாகச் சடங்கு அதிவிமரிசையாய் நடந்தேறின பிறகு, மணமகனும் மணமகளும் அகன்றிலும் அன்றிலும் போல இன்புற்றுச் சிறிது காலம் வாழ்ந்திருந்தனர். இவர்கள் இல்லறம் நடத்தி உயர்ச்சி பெறுதலைக் காணும் பாக்கியம் பெறாமல் ஷஹாஜியின் இருபதாம் ஆண்டில் மாலோஜீயும் விடோஜியும் ஆவி துறந்தனர். ஷஹாஜி சர்வாதிகாரம் பெற்றான். யாதவராவும் ஷஹாஜியும் ஆமத் நகர சுல்தானிடம் முக்கியஸ்தர்களாகயிருந்தனர். ஜீஜாபாய் ஓர் ஆண் மகனைப் பெற்றாள். இவன் பெயர் ஸாம்பாஜீ. இத்தருணத்தில் ஆமத் நகர சுல்தானான நைஜாம் ஷாவும் மரணமடைந்தார். ஆமத் நகர சுல்தான் குமாரர்கள் இருவரும் இளம்பிராயத்தவர்களானதினால் அவர்களைத் தாயே வளர்த்து வந்தாள். இப்பாலர்களைச் சரிவர மேல் பார்வையிட்டு நடத்தி வர, நம்பிக்கையுள்ள காரியஸ்தர்களொருவரும் இல்லாததினால், சுல்தான் மனைவியார் அரண்மனை உத்தியோகத்திலிருந்த ஸாபோஜீ அநந்தனென்னும் அந்தணனொருவனை அழைத்து இரகஸியமாய், வரவர மகாராஷ்டிரர்கள் பல முற்றவர்களாய்த் தோன்றுகிறார்கள். நாம் அவர்களுடன் எதிர்க்கலாகாது. அவர்களுடன் நாம் நட்பு பாராட்டி இராஜ்ய காரியங்களைச் செவ்வனே நடத்தவேண்டும் எனக் கூறினள். ஸாபோஜீ அநந்தன் உடனே இராஜ்ய விஷயங்களில் மிக்க அனுபவம் பெற்று, போன்ஸலே வமிசத்தைச் சேர்ந்த ஷஹாஜி இருக்கிறார் என மறுமொழி கூறினான். இராணியார் அநந்தன் வார்த்தையைக் கொண்டு ஷஹாஜியைக் கொலு மண்டபத்திற்கு வரவழைத்து, திவான் பதவியையும் அதிகாரத்தையுங் கொடுத்துத் தன் இரு மக்களையும் ஒப்புவித்தாள். ஷஹாஜியோ புதிய அதிகாரம் வந்த நாள் தொடங்கி, சுல்தான் மக்களிருவரையும் மடிமேல் வைத்து இராஜ்ய விஷயங்களை நடத்தி வந்தார். இராஜ்ய விஷயங்கள் சரிவர நடந்தன. குடிகள் சகலரும் திருப்தியுடன் வாழ்ந்து வந்தனர். ஆனால்

ஜீஜாபாய் தகப்பனுர் யாதவராவ் மட்டும் மருமகன் அனுபவிக்கும் அதிகாரத்தைக் கண்டு சகியாதவனுயிருந்தான். ஏன்? பல ஆண்டு களாகத் தான் ஆமத் நகரில் முக்கியஸ்தனுக யிருந்தும் இப்பதவி தனக்குக் கிடையாமல் ஷஜாஜிக்குக் கிடைத்த காரணமேயாம். யாதவராவுக்கு மேன்மேலும் அதிக பொருமை உண்டாயிற்று. பழைய ஞாபகமும் வந்தது. ஷஹாஜியின் தகப்பனுர் மாலோஜிக் கும் தனக்கு முண்டான வேறுபாடுகள் தோன்றின. குலங் கோத் திரம் அறியாத ஷஹாஜி இவ்வளவு பெருத்த அதிகாரம் பெறவும், யாம் அவன் கீழ்ப்படிந்து நடக்கவும் ஆயிற்றென்னும் உணர்ச்சி யாதவராவுக்கு உண்டாயிற்று. உடனே, யாதவராவ் ஆமத்நகரின் மேல் படையெடுக்கும்படி தனக்கு நம்பிக்கையுள்ள ஒருவனை டில்லி பாதுஷாவிடம் அனுப்பினுன். பாதுஷா தன் சேனுதிபதிகளிலொரு வனுன மீர்ஜம்லா என்பவனைத் தேவகிரிக்கு சுபேதாராக (கவர்னர் என்னும் பதவி) நியமித்து ஆமத் நகரின்மேல் படையெடுக்க அறு பதினுயிரம் படைவீரர்களையும் அனுப்பினுன். யாதவராவும் ஆமத் நகரில் தனக்குரிய போர் வீரர்களையழைத்துக் கொண்டு மீர்ஜம் லாவை எதிர்கொண்டழைக்க, நருமதையாற்றங்கரையில் காத்துக் கொண்டிருந்தான். இவ்வாறு யாதராவ் துரோக சிந்தனையால் அன்னியனிடஞ் சேர்ந்து, ஆமத் நகரை எதிர்க்கப் போவதை யுணர்ந்த ஷஹாஜி, சுல்தான் மக்களையும் இராணியாரையும், ஆமத் நகர பிராந்தியத்தினுள்ள மாஹுலி, கலியாணி, பீமரி, கோகன், ஆகிய இந்நான்கு துருக்கங் (மலைமேற் கோட்டை) களில் யாதாவ தொன்றில் தக்க பந்தோபத்துடன் இருத்திப் பிறகு, சத்துருக்களை எதிர்க்க முன்வந்தான். ஷஹாஜி கடைசியாக இவர்களை இருத்தின இடம் மாஹுலி கோட்டை யாதவராவ் மீர்ஜம்லா சேனையுடனும் தன்னுடைய வீரர்களுடனும் மாஹுலி கோட்டையை முற்றுகை யிட்டான். ஆறு மாதகாலம் விடாமல் கொடியபோர் நடந்தது. எதிரிகளுடைய பலம் தன்னிலும் மிக்கதாயிருப்பது கண்டு ஷஹாஜி உடனே, தனக்கு நம்பிக்கையுள்ள தூதுவனெருவனை பீஜாபூருக்கு அனுப்பித் தனக்கு உதவிசெய்யுமாறு வேண்டினுன். பீஜாபூர் சுல் தான் தன் திவான் மோராரிஜகதேவரை ஷஹாஜிக்கு உதவி புரியுமாறு அனுப்பினுர். ஷஹாஜி இரவோடிரவாய், ஐயாயிரம்

படைவீரர்களுடன் யாதவராவின் முற்றுகை அணியைப் பிளந்து தன் குடும்பத்துடன் பீஜாபூருக்குப் பிரயாணமானுன். இத்தருணத்தில் ஷஹாஜியின் மனைவி ஜீஜாபாய் ஏழுமாத கருப்பிணியாயிருந்தாள். இவள் குதிரைச் சவாரிசெய்து வந்ததினுல் தேகநோய்ப் பொறுக்கமுடியாமல் மூர்ச்சையாளுள். இதைக் கண்ட ஷஹாஜி மனைவியைத் தேற்றி 'இதோ எனக்குப் பின்னுல் உன் தகப்பன் பெரிய சேனையுடன் என்னைப் பிடிக்கத் தொடர்ந்து வருகிறுன். நீயோ கருப்பவேதனையிலிருக்கிறுய். என்னுடன் நீ கூடவருவது அசாத்தியமான காரியம். உன்னை இவ்விடத்தே விட்டுப்போகிறேன். உன் தகப்பன் உன்னைக் கண்டவுடன் பிறந்தகத்திற்கு அழைத்துச் செல்வான். ஆதலால் நீ இவ்விடமே இரு' என்றுகூறி மனைவியைத் தன்னந்தனியே விட்டுப் பீஜாபூரை நாடிச்சென்றுன். ஷஹாஜீயைத் தொடர்ந்து வந்த யாதவராவ், வழியில் ஸ்திரீயின் குரல் கேட்கவே, அருகிற் சென்று தன் அருமைப் புத்திரியாயிருக்கக்கண்டு நடந்தவை யாவையும் அவள்பால் உணர்ந்தான். உடனே யாதவராவ், மீர்ஜம்லாவுக்குத் தெரியாமல் தன்பாலுள்ள படைவீரர்களில் ஐந்நூறு பேர்களை அனுப்பி ஜீஜாபாயியை ஷஹாஜிக்குச் சொந்தமாயுள்ள சிவநேரிக் கோட்டையில் கொண்டுவிடும்படி உத்திரவு அளித்தான். சிவநேரி துருக்கத்தில் அம்பா பவானி வெகு சக்தியுடன் பிரசன்னமாயிருக்கிறுள். ஜீஜாபாய் சுபாவமாகவே தெய்வபக்தி மிகுந்தவளாதலால் நித்தம் அம்பாளைத் தொழுது தன் வயிற்றிலுள்ள கருவு ஆண்மகவாயிருப்பின் அதற்கு சிவ என்னும் பெயரிடுகிறேன். என்று பிரார்த்தனை செலுத்தினுள். சிலநாள் கழிந்தபிறகு, ஜீஜாபாய், கி. பி. 1627-ம் வருடத்திற்குச் சமமான சாலிவாகன சகாப்தம் 1549ஆன ஜயவருடம் வைகாசிமாதம் சுக்கிலபட்சப்பஞ்சமியில் பவானியின் வரப்பிரசாதம்பெற்று சிவாஜி பிறந்தார். இதே வருடத்தில் மொகலாயர்களுக்குப் பாதுஷாவாய் டில்லியில் ஆண்டுவந்த 'ஜிஹான்கிர்' காலகதியை யடைந்தான். ஷஹாஜியைப் பின்தொடர்ந்து யாதவராவ் ஆமத்நகரம் வரை சென்றும் ஷஹாஜீயைப் பிடிக்கமுடியவில்லை. ஷஹாஜி பீஜாபூர் வந்து சேர்ந்தான். பீஜாபூர் சுல்தானுன அடில்ஷாவையும் திவான் மோரார் ஜகதேவரையுங் கண்டு, அவர்களிடம் அநேக வெகுமதியும் பெற்று கர்ணுடகத்தில் ஒரு ஜாகீரும் பதினுயிரம் படைக்கு

அதிபதியாக நாயக் என்னும் பதவியும் ஷஹாஜி பெற்றான். நிற்க மாஹுலி கோட்டையில் ஷஹாஜி விட்டுவந்த நைஜாம் ஷாவின் இரு மைந்தர்களும் இராணியும் முற்றுகை நீங்கினவுடன் ஸாபாஜி அநந்தர் அவர்களை அழைத்துக்கொண்டு தேவகிரிக்கு வந்து சேர்ந்தார். ஷஹாஜி ஆமத்நகரைவிட்டுப் பீஜாபூருக்குப் போனதால், ஆமத்நகரம் திவான் பதவியின்றி யிருந்தது. ஆனால், கொஞ்ச காலத்திற்குள்ளாக ஸாபாஜியின் முயற்சியால் பூர்வம் செங்கல்கானிடம் அத்யந்த பக்தியுடன் ஊழியஞ்செய்து, இராஜாங்க விஷயத்திலும் இராணுவப் பயிற்சியிலும் மிக்க தேர்ச்சிபெற்ற மாலிக் அம்பர் திவானாக நியமிக்கப்பட்டார். இது இவ்வாறிருக்க, ஷஹாஜியைப் பிடிக்கவேண்டி, மீர்ஜும்லா மறுபடியும் தட்சிணத்தின் மீதே தண்டெடுத்து வந்தான். மீர்ஜும்லா பரஹம்பூருக்குச் சமீபத்தேயுள்ள அஸிர் துருக்கத்தில் ஆத்மநகர் திவான் மாலிக் அம்பருடன் கொடிய யுத்தம் புரிந்தான். இந்த யுத்தத்தில் மாலிக் அம்பர் அதிக காயமடைந்த போதிலும் கடைசியாக வெற்றி பெற்று மொகலாயர்களைத் தட்சிணத்தை விட்டுத் துரத்தினான். மாலிக் அம்பர் அதிகாரம் வரவர பெருக்கமடைந்தது. மாலிக் அம்பர் வரவர இராணுவத்தைப் பலப்படுத்திச் சுற்றுப் பக்கங்களில் கொள்ளையடிக்கப் புறப்பட்டான். இவன் கொஞ்சங் கொஞ்சமாக பீஜாபூர் பிராந்தியத்தின்மீது படையெடுக்கலானான். பீஜாபூர் பிராந்தியம் ஆமத்நகர் திவான் மாலிக் அம்பரால் சூறையாடப்பட்ட செய்தி கேள்வியுற்றதும் மோராரி ஜகதேவர், ஷஹாஜி, ஸர்ஜாகான், ஆகிய இம்மூவர்களும் எண்பதினாயிரம் மராடிய படைவீரர்களுடன் மாலிக் அம்பரைத்தாக்கினார்கள். மாலிக் அம்பர் சேனை முறியடிக்கப்பட்டன. சைன்னியங்கள் மூலைக்கு மூலை ஓடின. கடைசியாக மாலிக் அம்பர் பீமாநதியைத் தாண்டிப் புறங்காட்டி ஓடினான். மோராரி ஜகதேவரும் ஷஹாஜியும் பீஜாபூருக்குத் திரும்பினார்கள். வீரர்கள் வெற்றி யடைந்ததைக் கேள்வியுற்ற ஆடில்ஷா வெகு ஆனந்தங் கொண்டு படைத்தலைவர்களுக்கும் படைவீரர்களுக்கும் வெகுமதி கொடுத்தான். இவ்வெற்றிக்கு முக்கிய காரணம் ஷஹாஜி எனக் கேள்விப்பட்ட சுல்தான் அவனுக்குக் கர்னாடகத்தில் சில ஜாகீர் கொடுத்து 'இராஜா' என்னும் பட்டமுந் தந்தான். பீஜாபூரில்

ஷஹாஜி அமர்ந்த நாள் தொடங்கி இச்சமஸ்தானம் மொகலாயர்களுடன் மாறுப்போர் நடத்தி வந்தது. ஷஹாஜி இராணுவ தந்திரங்களில் மிக்க கவற்சி கொண்டவராதலால், மகம்மது அடில்ஷாவைத் தேவகிரிமீது படையெடுக்கும்படி வற்புறுத்தினர். பாதுஷாவும் ஷஹாஜி கூறின வார்த்தைக்கு இணங்கி, உடனே பெரிய சேனையை ஷஹாஜியிடமே ஒப்புவித்துத் தேவகிரியைத் தாக்க உத்திரவளித்தான். சேனைப் பெருக்கத்தைக் கண்ட படேகான் மொகலாயர் படைத் தலைவரான மகபத்கானுக்கு ஓலை விடுத்து உடனே தனக்கு உதவி புரியும்படி மன்றாடினான். தனக்குதவி புரிவதற்குக் கைம்மாருகத் தேவகிரியை மகபத் கானுக்குக் கொடுத்து மிகுதி இடங்களை மொகலாய சக்கரவர்த்தியின் ஏகாதிபத்தியத்திற்குக் கீழ்ப்பட்டுக் கப்பங் கட்டி வருவதாக உடன்படிக்கை செய்து கொண்டான். மகபத்கான் அவன் உடன்படிக்கைக்கு ஒத்துக் கொண்டு நல்ல திடமான வீரர்களைத் தன் குமாரன் கான் ஜமான் மூலமாய்த் தேவகிரிக்கு அனுப்பினான். மொகலாயர் சேனை ஊரை விட்டுப் பிரயாணமானவுடனே ஷஹாஜி பீஜாபூர் சைன்னியத்தைத் தேவகிரிக்கு வெகு வேகமாய்த் துரத்தினான். கான்ஜமான் தேவகிரி வருவதற்கு முன்னரே ஷஹாஜி படேகானைக்கண்டு, தட்சிணத்தின்பால் ஓயாமல் படையெடுக்கும் மொகலாயர்களைத் தட்சிணத்தை விட்டுத் துரத்தவேண்டு மென்பதே பீஜாபூர் சமஸ்தானத்தின் நோக்கமே யன்றி தேவகிரிமீது படை யெடுக்க வேண்டு மென்பது ஒரு நாளுங் கிடையாது. ஆதலால், நீ கவலையற்று க்ஷேமமாயிரும் என்று நயவஞ்சகமாய்க் கூறி அவனைப் போர் செய்யா வண்ணம் தடுத்தார். இதைக் கேள்வியுற்ற கான்ஜமான் படேகான்மீது சீறி, தேவகிரியிலிருக்கும் பீஜாபூர் சேனையையும் ஷஹாஜியையும் முறியடித்துத் துரத்தினன். தேவகிரியைச் சூறையாடிக் கொள்ளை கொண்ட வஸ்துக்களைப் பாதுஷாவுக்குக் கொண்டுபோக டில்லிக்குத் திரும்பினவுடனே, ஷஹாஜி மறுபடியும் தேவகிரிபால் சென்று, நகர் காப்பிற்கு வைத்து விட்டுப்போன மகபத்கான் சேனையை முறியடித்து அவ்வூரை ஸ்வாதீனப் படுத்திக் கொண்டார். இதைக் கேள்விப்பட்ட மகபத்கான் மறுபடியும் ஷஹாஜியைத் தாக்கித் தேவகிரியையும் கைப்பற்றினன். இது

கழிந்த சில தினங்களுக் கப்புறம் ஷஹாஜி மறுபடியும் மொகலாயர் களை வெகு பலமாய்த் தாக்கிச் சேனைகளைச் சின்னாபின்னப்படுத்தித் துரத்தினர்.

பீஜா பூரையும், ஆமத் நகரையும் அடியுடன் களைத்துக் கீழ்ப் படுத்தினாலன்றி மொகலாய சாம்பிராச்சியம் இந்தியாவில் சரிவர நிலை பெற்றிராதென்னும் உணர்ச்சியை யறிந்த ஷாஜிஹான் இவ் விரு சமஸ்தானங்களையும் ஷஹாஜியையும் தலையெடுக்காதபடி செய்ய நாற்பதினாயிரம் படைவீரர்களை முதல் முதல் பீஜாபூர்மீது படை யெடுக்க அனுப்பினான். இதைக் கண்ட ஷஹாஜி மொகலாய சேனைப் பெருக்கை எதிர்த்துப் போர்புரிதல் அசாத்தியமென நம்பி, வெகு தந்திரமாய்ச் சூழ்ச்சியுடன் வளைந்து வளைந்து போர் புரிய லானான். மொகலாய சேனைகள் பிரயாணத்தினால் களைப்படைந்து கஷ்டப்படுகிறார்களெனக் கண்ட ஷாஜிஹான் இனி ஷஹாஜியைப் பின் தொடர்ந்து செல்வது அசாத்தியமென்று கொண்டு பீஜாபூர் சுல்தான் வழியாக ஷஹாஜியை மடக்குவதே காரியமென்று தீர் மானித்துப் பீஜாபூர் சுல்தானிடம் உடன்படிக்கை யொன்று செய்துகொண்டான். அதில், பீஜாபூர் சுல்தான் இனி, ஷஹாஜியை சமஸ்தானத்தில் வைத்துக் கொள்ளக் கூடாதென்பது ஒன்று. பீமா நதிக்கும் நீராநதிக்கும் இடையிலுள்ள பிராந்தியங்களைப் பீஜபூர் சமஸ்தானமே பரிபாலித்து வர வேண்டுமென்பது மற் றொன்று. இவ்வுடன்படிக்கை கி. பி. 1636-ம் வருடம் மே மாதம் 6-ந்தேதி யன்று நடந்தது.

நிற்க, ஷஹாஜிக்கு இப்பொழுது இருபுறமும் ஆபத்து உண் டாயிற்று. ஒரு பக்கம் மொகலாயர்களுடன் எதிர்க்க வேண்டும். மற்றொரு பக்கம் பீஜாபூர் சமஸ்தானத்தை வெகு சாக்கிரதையுடன் கவனித்து வர வேண்டும். என்றாலும் ஷஹாஜி வெகு தைரியமா கவே யிருந்தார். ஷஹாஜியை யடக்க இதுவே தருணமெனக் கொண்டு மொகலாய சேனைகள் எதிர்க்க வாரம்பித்தன. ஷஹாஜி பின் வாங்கினர். சேனைகள் மேலும் மேலும் வெகு பலமாய் ஷஹா ஜியைத் துரத்தின. இவர் இனி யாம் நிற்க வொண்ணாதெனக் கண்டு, சய்யாகிரி பர்வதத்தின் வழியாய்க் கொங்கணத்திற்குச்

சென்றார். மொகலாய சேனைகள் துரத்திக்கொண்டே வந்தன. கடைசியாக கலியாண் துருக்கத்துக்குச் சமீபமாயுள்ள மாஹுலி என்னுமிடத்தில் ஷஹாஜி மொகலாயசேனைத் தலைவர்களிடம் சிக்கிக் கொண்டார். உடனே ஷஹாஜி உடன்படிக்கைக்கு வந்தார். ஷஹாஜி வசமிருக்கும் துருக்கங்கள் ஆறையும் மொகலாயர்களுக்குக் கொடுத்துவிட்டு முன்போல் பீஜாபூர் சமஸ்தானத்தில் அமர்ந்து பழைய ஜாகீர் கிராமங்களைப் பெற்றுக் கொள்வதே உடன் படிக்கையின் ஏற்பாடு. இவ்வுடன்படிக்கையால் ஷஹாஜிக்குச் சொந்தமான இரு ஜாகீர்கள் புனாவும் ஸுபாவுமே கடைசியாக நின்றன. இவ் வேற்பாட்டினால் மொகலாயர்களுக்குத் தட்சிணத்தில் இருந்த பயம் அநேகமாய் ஒழிந்தது. ஆமத் நகரம் நிலை குலைந்தது. இது ஒருவாறிருக்க, ஷஹாஜிக்குக் குடும்ப விசாரம் அதிகரித்தது. இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் ஷஹாஜியும் ஜீஜாபாயும் விவாகமானவுடன் வெகு இன்பமாய் வாழ்ந்து வந்தார்களெனக் கூறினோம். ஆனால், இவ்வின்ப வாழ்க்கை வெகு காலம் நீடித்திருந்ததாகத் தெரியவில்லை. ஜீஜாபாய் பிறந்தது முதற்கொண்டே தன் மதிப்புடனும், சுதந்தரத்துடனும் இருந்தவளாதலால் ஷஹாஜி துருக்கர்களுடன் கலந்து அவர்கள் கீழ் உத்தியோகம் புரிவது ஜீஜாபாயிக்குக் கொஞ்சங்கூட இஷ்டமில்லை. இதுவுமல்லாமல் யாதவராவுக்கும் ஷஹாஜிக்கு முண்டான மனஸ்தாபத்தில் மொகலாயர்கள் உட்புகுந்து ஷஹாஜியைத் துரத்தினதுமல்லாமல் ஜீஜாபாயிக்கு இடைவழியில் உண்டான கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் மொகலாயர்களே காரணமெனக்கொண்டு அவர்கள்பால் அத்தியந்த வெறுப்பும் பகையும் இவள் கொண்டிருந்தாள். நிற்க, ஷஹாஜியைப் பிடிக்க ஊரூராய்ப் படையெடுத்துவந்த மொகலாய சேனைகள் தங்கள் எண்ணம் ஈடேறாமலிருப்பதைக் கண்டு, கடைசியாக ஷஹாஜியின் மனைவி ஜீஜாபாயியையும் சிவாஜியையுங் காவற்படுத்தினால் மனைவிபால் கொண்ட மயக்கத்தால் ஷஹாஜி அகப்படுவாரென்று ஜீஜாபாயியைக் காவற்படுத்தினார்கள். என்றாலும் ஜீஜாபாய் மொகலாயர்களின் கொடிய எண்ணத்தைப் பலமுறை அறிந்தவளாகையால் அவர்களால் பாலன் சிவாஜிக்கு ஆபத்து விளையக்கூடுமென்பதைத் தெரிந்து, சிவாஜியை மறைத்துவைத்தாள். ஜீஜாபாயியை மணந்து

கொண்ட நாள் முதற்கொண்டு, தான் வெகு கஷ்டங்கள் அனுபவித்து வருவதையறிந்த ஷஹாஜி 1630-ம் ஆண்டில் மோஹத் வம்சத்திற் பிறந்த துக்காபாய் என்னும் ஒரு மாதைப் புனர் விவாகஞ் செய்து கொண்டார். இவ்வம்சம் மகாராஷ்டிரத்தில் தொன்மை வாய்ந்ததென்றாலும் ஜீஜாபாய் வம்சத்திற்கு இது குறைந்தது. இக்காரணத்தால் ஜீஜாபாயிக்குக் கனவருத்தமுண்டாயிற்று. இவள் தகப்பனர் யாதவராவும் 1629-ம் ஆண்டில் தேவகிரியில் துராக்கிரதமாய்க் கொல்லப்பட்டார். இத்தகைய ஆபத்தினால் ஷஹாஜி 1636-ம் வருடம்வரை சிவாஜியைப் பார்க்கவேயில்லை. மொகலாயர்களிடம் உண்டான உடன்படிக்கையால் பீஜாபூர் அதிகாரத்திற்கு விடப்பட்ட பீமாநதி நீராநதி இடைப் பிராந்தியங்களில் மோரார் பண்ட் என்பவர் சுல்தான் பிரதிநிதியாக அதிகாரஞ் செலுத்தி வந்தார். ஷஹாஜியின் நிலைமையை யறிந்த இவர், சுல்தானுக்குத் தெரியப்படுத்தி மறுபடியும் அவரைத் தளகர்த்தராக நியமனஞ் செய்து வைத்தார். ஷஹாஜி பீஜாபூர் சமஸ்தானத்திற்கு வந்தவுடனே, சுல்தான் பெரிய சேனையைக் கர்னாடகத்தின்மீது படையெடுக்க ரேண்டுல் கான், ஷஹாஜி இவ்விருவீரர்கள் பால் அனுப்பினான். இக்கர்னாடக வெற்றியில் சுல்தான் ஷஹாஜிக்கு கோவார், பெங்களூர், பாரா கோட்டை, பாலாபூர் சுரகடம், வேலூர், ஆரணி என்னும், இப்பிராந்தியங்களை ஜாகிராக அளித்தான். இதுடன் ஸடாரா நகருக்கு முப்பது மைல் தூரத்திலுள்ள தூரார் ஜில்லாவைச் சேர்ந்த இருபத்திரெண்டு கிராமங்களுக்கும் * தேச முக்கியராக ஷஹாஜியை நியமித்தான்.

நிற்க, சிவாஜிக்குப் பத்தாம் பிராயம் நிறைந்தது. அக்கால வழக்கத்தின்படி சிவாஜிக்கு விவாகம் முடிக்க வயதாய்விட்டது. ஜீஜாபாய் சிவாஜியை யழைத்துக்கொண்டு பீஜாபுரத்திற்குச் சென்றாள். பீஜாபுரத்திலிருந்த விதோஜி மோஹட்நிவாஸ்கரின் குமாரத்தி சாயிபாயியை சிவாஜிக்கு மணமுடித்தனர். ஷஹாஜிக்குத் துக்காபாயி மூலமாய் வெங்கோஜி என்னும் ஒரு பிள்ளை பிறந்தது. ஷஹாஜி வரவர முன்னிலும் அதிகமான செல்வாக்கும் அதிகாரமும்

* தேசமுக்கியர் என்பது ஸ்ரோத்திரியம்தார். பின்னர் வரவர மகாராஷ்டிரத்தில் இவர்கள் ஒரு வம்சத்தினராக ஆயினர்.

பெற்றார். இவர் கீழ் எண்ணிறந்த மகாராஷ்டிர உத்தியோகஸ்தர்கள் இருந்தனர். இவருக்கு முக்கியமாக நரபண்ட் ஹநுமந்த் என்பவரும் தாதோஜிகோனதேவ் என்பவருமே அந்தரங்கத் தோழர்களானார்கள். விவாகச்சடங்கு சிவாஜிக்கு நிறைவேறினவுடனே, பீஜாப்புரத்தில் சிவாஜி அநேக தீரச்செயல்களைச் செய்யலானார். சிறுபிராய முதற்கொண்டே சிவாஜி பெரிய இராஜ்ய காரியங்களைப் பேசுவதும், கவனிப்பதுமாக யிருந்ததினால், இவர் 'ஒரு காலத்தில் சகல சாம்பிராச்சியத்துடன் சார்வ பௌமனா யிருப்பார் எனப் பலர் ஷஹாஜிக்குச் சொல்லி வந்தார்கள். என்றாலும், சிவாஜியின் செயல்கள் ஷஹாஜிக்குப் பயமாயிருந்தது. ஒருநாள் சில கால்நடைகளை யோட்டிக்கொண்டு போன கசாப்புக் கடைக்காரர்களை வழிமறித்து, அப்பிராணிகளைக் கொடிய இம்சையினின்றும் சிவாஜி விடுவித்தார். இது துருக்கர்கள் பலருக்கு மிக்க ஆபாஸத்தை யுண்டுபண்ணிற்று. மற்றொரு நாள், ஷஹாஜி சிவாஜியை இராஜசபைக்கு அழைத்துக்கொண்டு சென்றார். சுல்தானைக் கண்டவுடன் ஒவ்வொருவரும் முதுகு வளைந்து, தலைகுனிந்து, முழந்தாள் குறுகி சலாம் செய்வது வழக்கம். சிவாஜி இவ்வழக்கத்தை யனுசரிக்காமல் சாதாரணமாகச் சலாம் செய்தார். இச்செயல் இராஜசபையிலுள்ளோர் பலருக்கு மிக்க வருத்தத்தை யுண்டுபண்ணிற்று. இம்மாதிரியான பல செயல்களைக் கண்ட ஷஹாஜி இனி சிவாஜி இவ்விடம் இருப்பதினால் தனக்கே ஆபத்துவரும் எனக்கொண்டு, உடனே ஜீஜாபாயியையும் சிவாஜியையும் கி. பி. 1638-ம் வருடம் புனாநகரத்திற்கு அனுப்பினார். புனாநகரம் அக்காலத்தில் மேன்மைபெற்றதல்ல. இது முத்தா நதிக்கரையில் சிறிய சிறிய குடிசைகள் கொண்ட ஒரு கிராமம். இப்புனாகிராமத்திற்கு அரை மைல் தூரத்தில் முத்தாநதி மூலாநதியுடன் சங்கமமாகின்றது. ஸிம்மகடா பர்வதத்தினின்றும் மழை காலத்திற் பெருகும் ஜல தாரைகள் முத்தாநதிக்கும், சய்யாதிரி பர்வதத்தினின்றும் வருஷா காலத்தில் விழும் நீரருவிகள் மூலாநதிக்கும் போய்ப்பாய்வதால் இந்நதிகள் மிக்க பெருக்குப்பெற்றதாகும். புனாநகரத்தைச் சுற்றிலும் பூமி ஒரே கரம்பு நிலமாகயிருக்கும். பீஜாபுரத்திற்கும் மொகலாயர்களுக்கும் நடந்த கொடிய யுத்தத்தில் மகம்மத்

அடில்ஷா தன் இராஜதானிக்கு இருபது மைல் சுற்றிலும் பாழாக்கினுன். மொகலாயர்கள் அடில்ஷாவைத் தண்டிப்பதற்காக மிகுதி பாகங்களைப் பாழாக்கினுர்கள். இவ்விருவர்களும் போட்டா போட்டியிட்டுப் பாழாக்கினதினுல் ஊர்களைச் சுற்றிலுமுள்ள நிலங்கள் சாகுபடியாகாமல் கரம்பாகவே யிருந்தன. படையெழுச்சிக்குப் பயந்தே குடிகள் பயிரிடாமல் கரம்பாகக் கிடத்தினுர். புனுநகரம் விசேஷமாகக் கரம்பு நிலங்களால் சூழப்பட்டிருந்தது. குடிகள் சேனைகளின் உபத்திரவத்தினுல் நாடு நகரங்களை விட்டு வெளியூருக்குக் குடிபுகுந்தனர். வனசரங்கள் விசேஷமாக வாசஞ்செய்து வந்தன. முத்தாநதிக்கரையில் பரதவரும் (மீன்பிடிப்போர்) வலைஞரும் சிலவிடத்தே வசித்து வந்தனர். ஜீஜாபாயும் சிவாஜியும் புனு நகரத்திற்கு வருங்காலத்தில் ஊர் இந்நிலைமையி லிருந்தது. இவர்களுக்குச் சகாயமாக ஷஹாஜி தாதோஜி கோனதேவரை யனுப்பினுன். சாமானிய குடும்பத்தினர் இவ்வூரில் அக்காலத்தில் வசிக்க மனந் துணிய மாட்டார்கள். ஆனுல் ஜீஜாபாயும் தாதோஜியும் சாமானிய மானவர்களல்ல. தாதோஜி கோனதேவர் வெகுசூரர். இவர், புனு ஜில்லாவைச் சேர்ந்த மல்தான் என்னுமூரில் தேசஸ்த பிராமண குலத்திற் பிறந்தவர். இவர் இராஜ்ய விஷயங்களில் பல துறைகளிலும் அதிகாரஞ் செலுத்தினவராதலால், புனுநகரைச் சீர்படுத்த வாரம்பித்தார். நாட்டின் தனப் பெருகத்திற்கு ஆதாரமாயுள்ள வழிகள் பலவும் இவருக்கு நன்ருய்த்தெரியும். பாழடைந்த புனுவிற்குக் குடிகளைக் கொணர்ந்தார். நன்ருய்ச் சாகுபடி செய்யும்படி அக்குடிகளுக்குத் தீர்வையின்றி நிலங்களைக் கொடுத்தார். பயிர்களைத் துஷ்டமிருகங்கள் அழிக்காதபடி வனசரங்களைக் கொல்லும்படி பல வேட்டைக்காரர்களை அமர்த்தினுர். செழிப்படைந்த ஊர்களைப் பகைவர் கொள்ளையடிப்பது அக்கால வழக்கமாகையால் கொள்ளை யடிக்காம லிருக்கும்படி சில வீரர்களையும் கடுங்கண் மறவர்களையும் கொண்டு வைத்தார். இவ்வேற்பாடுகளைக் கேள்வியுற்ற ஷஹாஜி சந்தோஷமடைந்து, சமீபத்தே பீஜாபூர் சமஸ்தானத்தில் கொடுத்த இரண்டு ஜாகீரையும் தாதோஜிவசமே ஒப்புவித்தார். இம்மாதிரி தாதோஜி நிலங்களைச் சீர்ப்படுத்தி ஜீஜாபாயையும் சிவாஜியையும் மிக்க அன்புடனும் ஆதரவுடனும் பாதுகாத்து வந்தார்.

நான்காவது அத்தியாயம்.

சிவாஜியின் இளமையும் அவரது எழுச்சியும்

ஷஹாஜியின் உத்திரவுபடி ஜீஜாபாய் புனு நகரத்திற்குப் புறப்பட்ட காலத்தில் சிவாஜிக்கு வயது பதினொன்று. சிறு பிராயத்தே இவர் வருடக்கணக்காக மலைநுழைகளிலும் அடவிகளிலும் மாறி மாறி தங்கியிருந்து கன கஷ்டங்களை யனுபவித்தார். இவர் தீர்க்காலோசனையும் திடமான செயல்களையுங் கொண்டவர் என்பதற்கு அவருடைய வளைந்த புருவங்களே சாட்சி. ஆவலுங் கவலையுங் கொண்டவரென்பதற்குக் காற்றிலும் வெய்யிலிலும் அடிபட்டுக் காய்ந்த தடித்த கன்னங்களே நிதரிசனம். மெல்லிய உதடுகளினுல் அவர் இடிவிழினுஞ் சலியாத தீர்மானங் கொண்டவர் என்பது புலப்படுகிறது. சுருங்கச் சொல்லின் அவரது முகம் பார்வைக்குப் பல கஷ்டங்கள் அடுத்தடுத்துவரினும் அவைகளை ஒரு பொருட்டாக மதிக்காமல் தைரியமாய் ஏற்றுக்கொள்ளும் சுபாவ மென்பதை விளக்குகின்றது. சிவாஜியின் தேகம் அவ்வளவு உயரமானதல்ல. குட்டையானதுமல்ல. நடுத்தரம். ஆனுல் நல்ல தேகக் கட்டு வாய்ந்தது. * ஆஜானுபாகு. இத்தேக லட்சணங்கள் அமைந்த இளஞ்சிங்கத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு தாதோஜிக்கு வீழ்ந்தது. தாதோஜி சற்றேனும் முகங்கோணுமல் இது கடவுளிட்ட கடமையெனக் கொண்டு சிவாஜியைக் காப்பாற்றி வந்தார். சிவாஜியின் பிராயத்தை யொத்த இளஞ்சிறுர் பலரை அவருக்குத் தோழராக்கி நாட்டு வளப்பங்களையும் வீரர்களின் சாகஸங்களையும் பற்றி அடிக்கடி கதை சொல்வர். வீரர்களின் கதைகளைக் கேட்குங் காலத்தில் சிவாஜிக்கு வீரா வேசமுண்டாவது வழக்கம். இதுவே சிவாஜியின் வீரா வேசத்திற்கு முதல் காரணம். தாதோஜி சிவாஜியைத் தட்டிக்கொடுத்து ஆவேசத்தைத் தணிக்க பீஷ்மர் அருளிய இராஜ தர்மங்களையும் ஞானதேவர் அருளிய உபதேச ரத்தினங்களையும் கூறுவர். இங்ஙனம் இக்கதைகளை நெடுநாளாகக்கேட்டு வந்ததினுல்

* அருச்சுனனைப்போல் முழந்தாளளவு நீண்ட கையுடையோன்.

அருச்சுனனைப் போல் யுத்தஞ் செய்ய வேண்டுமென்னும் எண்ணம் சிவாஜிக்கு சிறு பிராயத்திலேயே உதித்தது. மகாராஷ்டிரத்தைப் பலப்படுத்தி ஆளவேண்டு மென்னும் அவா தனக்கு இருப்பதென் பதைத் தன் அந்தரங்கத் தோழர்களுக்குத் தெரிவித்தார். இவருடைய மித்திரர்களான தானுஜீமாலஸூரே, பாஜீபஸல்கார், யஸாஜீகங்க், தாதாஜீபால்கர், பிரதாபராவுகுஜர், ஆகிய ஐவர்களும் சிவாஜியின் எண்ணத்தை அங்கீகரித்து வந்தனர். அது முதற் கொண்டு இவர்கள் பாராளுவதற்குரிய சகல சாதனங்களையுஞ் சேகரிக்கலானார்.

இச்சிறுவர்களுடைய அவாவை யறிந்த தாதோஜியும் உள்ளங் களித்துப் புளகிதங்கொண்டு, இவர்களுக்கு வேண்டிய யுத்த பயிற்சிகளையும், இராணுவ சூழ்ச்சிகளையும், கற்பித்து வந்தார். இவர்கள் பயமின்றி இராக்காலங்களில் அடர்ந்த வனங்களிலும் இருண்ட குகைகளிலும் புகுந்து புகுந்து வருவர். கிருஷ்ணாநதிதீரத்தின் பள்ளத்தாக்குகளிலும், சய்யாதிரி பர்வதங்களின் கணவாய்களிலும், அலைந்துதிரிவர். பீமாநதி உற்பத்தியாகும் பீமசங்கர மலையிலும், வளைந்து வளைந்து பாயும் இந்திராயணி யாற்றங்கரை யோரமாகவும் சுற்றிச்சுற்றி அலைவர். இவர்கள் மாதக்கணக்காக மாறி மாறி குகைகளிலும் அடவிகளிலும் கணவாய்களிலும் தங்கி நாட்களைக்கழிப்பர் இவர்கள் மலைகள் பலப்பல ஏறினர். ஆறுகள் பல பல கடந்தனர். மேடு பள்ளங்கள் பற்பல தாண்டினர். இதினால் இவர்களுக்குத் தட்சிணத்திலுள்ள சகல மூலை முடுக்குகளும் பசுமரத்திலடித்த ஆணிபோலாயின. நிற்க, தாதோஜி ஜீஜாபாயிக்கும் சிவாஜிக்கும் ஏற்ற கட்டட மொன்று முத்தா நதிக்கரையில் வெகு அழகாய் அமைத்து *'இராஜ்மகால்' எனப் பெயருமிட்டார். இதல்லாமல், புனாவைச் சுற்றியுள்ள மலைகளும் மலைக் கோட்டைகளும் சிவாஜியின் வீரா வேசத்தை எழுப்பின. இது இவருடைய வீரமதர்ப்புக்கு இண்டாவது காரணம்.

ஏனெனில், ஷஹாஜியின் ஜாகீரைச் சுற்றிலும் பலமான மலைக் கோட்டைகளைக் கண்ணுற்று அவைகள் ஒரு காலத்தில் மகாராஷ்டி

---

* தற்காலம் புனா முனிசிபாலிடியார் இதை யொட்டி சிங்காரத் தோட்டமொன்று ஏற்படுத்தியிருக்கின்றனர்.

ரத்திற்குப் பெரிய இயற்கைக் காப்பாகும் என்பதை சிவாஜி உடனே அறிந்துகொண்டார். புனுவிற்குத் தென்றிசையில் பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள மலைக்கோட்டைக்கு "சிம்மகடா" எனப் பெயர். தென் மேற்காய் இருபதுமைல் தூரத்தில் செங்குத்தான மலையுச்சியிலுள்ள துருக்கத்திற்கு தோரணு எனப் பெயர். இதற்கு அடுத்தாற்போலிருப்பது இராஜகடா. புனுவுக்கு வட திசையில் ஒருகாவத தூரத்திலுள்ள கோட்டைக்கு அலந்தி என்பார். இது ஞானதேவர் சமாதியடைந்த இடமாகும். இதல்லாமல் சாக்கன் கோட்டையும் புரந்தரன் கோட்டையும் புனுவைச்சுற்றியிருக்கும். இக்கோட்டைகள் யாவும் சரிவர பாதுகாக்கப்படவில்லை; மேல் பார்வையின்றி வெகு கேவலமாயிருந்தன. அவைகளைச் சுவாதீனப்படுத்த வேண்டுமென்னும் உணர்ச்சி சிவாஜிக்கு உண்டாயிற்று. பீஜாபூர் நவாப் தட்சிணத்தில் தங்குவது தரிப்பது இல்லாமல் கர்னாடகத்தில் படையெடுப்பதே நோக்கமாக இருந்தமையால் சிவாஜி இதுவே தருணமெனக்கொண்டு கோட்டைகளை சுவாதீனப்படுத்த முயன்றார். பீஜாபூர் நவாப் அடில் ஷா, தன் இராஜதானியில் பெரிய கட்டடங்கள் அமைப்பதிலும் பெருத்த அரண்மனைகள் உயர்த்துவதிலும் காலத்தைக் கழித்து வந்ததினால், இம்மலை அரண்கள் பராமரிப்பின்றி இருந்தன. இதன்றியும், அவருடைய துரைத்தனம் ஒரு வழிப்பட்டு ஒழுங்காக நடவாமலும், குடிகளுக்கும் துரைத்தனத்துக்கும் யாதொரு பற்றுசில்லாமலும் பல விதத்திலும் பயனற்றதாகவே யிருந்ததால், சிவாஜி மகா ராஷ்டிரத்தை ஸ்தாபிக்க இதுவே காலமெனக்கொண்டு மலைமேற் கோட்டைகளைத்தன் வியப்படுத்தத் தைரியங் கொண்டார்.

யுத்த தர்மங்களையும், இராஜ்ய வியவகாரங்களையும், தனக்கு அடிக்கடி விளக்கிவரும் தாதோஜியிடம் தன் அவாவை வெளியிட்டார். தன் ஆருயிர்த் தோழர்களிடம் ஆலோசனைசெய்து தோரணு துர்க்கத்தைக் கைவசப்படுத்திக் கொள்வதற்கான திராணியும் தருணமும் வாய்க்கிற வரையில் அவசரப்படுதல் ஆகாதென்று பொறுத்திருந்தார். என்றுலும், இவர் சும்மாயிருக்கவில்லை. புனுவைச் சுற்றிலுமுள்ள மாவலிகளெனப்படும் மலை வாணர்களுடன்

இவர் பழகலானார். அவர்கள் நாகரிகமற்ற வேடர்களாயினும், அவர்களிடத்தே தைரியமும், அஞ்சாமையும், குருபக்தியும், சோம்பலின்மையுமாகிய இந்நற்குணங்கள் ஒருங்கே அமைந்திருப்பதை சிவாஜி அறிந்துகொண்டார். அவர்களுடைய சகாயம் மிக்க நன்மையைப்பயக்கும் என்பதை யறிந்து, அவர்களைத்தன் படைவீரர்களாக அமர்த்திக் கொண்டார். அவர்கள் நல்ல வில்திறங்கொண்டவர்கள். விற்போரிலும், மற்போரிலும், இணையற்ற சூரர்கள். அவர்களிடத்தே சிவாஜி வில்வித்தை, கவண், (கல்லெறி வித்தை) சிலம்பம், வாள் போர் முதலிய படைக்கலப்பயிற்சி பலகற்றுக் கொண்டார்

இங்ஙனம், சிவாஜி மலைவாணர்களுடன் நெருங்கிப் பழகினதினால், அம்மலைப் பிராந்தியங்களிலுள்ள இடைவழிகள் யாவையும் அவர் நன்கு அறிந்து கொண்டார். இதனாற்றான் இவருக்கு * 'மலை எலி' என ஒரு காரணப் பெயரு முண்டு. தட்சிணத்தைச் சார்ந்த மலைச்சாரல்கள், குகைகள், கோட்டைகள் யாவும் இவையிவை இன்னின்ன திக்குகளில் இருக்கின்றன வென்பது சிவாஜிக்கு நன்றாய்த் தெரியும். சிவாஜி இத்தகைய ஏற்பாடுகளைத் தன் பதினாறும் பிராயத்திலேயே வெகு சாதுரியமாய்ச் செய்யத் தொடங்கினார். கி. பி. 1639-ம்வருடத்தில் சிவாஜி தன் பதின் மூன்றாம் பிராயத்திலேயே † இராஜ இலாஞ்சன மொன்று செய்து கொண்டார். இதில் பின் வரும் எழுத்துக்கள் செதுக்கப்பட்டன.

முதல் சந்திரன் சிறியதா யிருந்த போதிலும்
அது வரவர வளரு மென்பதை மனிதர்கள்
காண்பார்கள்; இதுவே ஷஹாஜியின் குமாரர்
சிவாஜிக்கு ஏற்றது.

நிற்க, கி. பி. 1643-ம் வருடத்தில மாவல் ஜில்லாவைச் சேர்ந்த ரோஹிதா துர்க்கத்திலுள்ள ரோஹிதீஸ்வரர் ஆலயத்திற்கு ஒரு

* இப்பெயர் ஔரங்கசிப் பாதுஷாவினால் கொடுக்கப்பட்டது.

† இராஜ முத்திரை விஷயம் மராடி பாஷையில் இராஜ வாடி என்பவரால் எழுதப்பெற்ற "இதிஹாஸஞ் சிஸாதனே" என்னும் புத்தகத்தினின்றும் எடுக்கப்பட்டது.

பூசாரியைத்தான் சொந்தமாக நியமித்துக் காலா காலங்களில் சரிவர பூஜை நடக்கும்படியான கட்டளைகளையும் ஏற்படுத்தினார். மலைவாசிகளான மாவலிகளுக்கு ரோஹிதீஸ்வரர் இல்லுறை தெய்வமானதினால் அக்கோயில் அழகுற்ற தென்பதை யுணர்ந்த அவர்கள் சிவாஜியைத் தங்கள் 'மகாராஜா'வென அழைக்கத் தொடங்கினர். இதுடன் பீஜாபூர் சமஸ்தானத்தின் மதி மந்திரிகளி லொருவரான தாதாஜீ தேஷபாண்டே என்பவரும் சிவாஜியின் அபார சக்தியைக் கண்டு, சாகுமளவும் சிவாஜிக்கு உதவி புரிவதாக சத்தியஞ் செய்து கொடுத்தார். இங்ஙனம், சிவாஜி நாளுக்குநாள் மலைவாணர்களைக் கூட்டி படைப் பயிற்சிகள் புரிவதும், கோட்டைகளைப் பார்வை யிடுவதும், யுத்த தளவாடங்களைச் சேகரிப்பதுமா யிருந்து வருவதையும், தாதோஜீ தேஷபாண்டே, சிவாஜிக்கு விசேஷ உதவி புரிந்து வருவதையுங் கேள்வியுற்ற பீஜாபூர் பாதுஷா மிக்க சினங்கொண்டு தாதோஜீயை விளித்து 'இனி சிவாஜிக்கு நீர் உதவிபுரியலாகாது' என கண்டித்தான். தாதோஜீ நடந்தன யாவையும் சிவாஜிக்குக் கடிதமூலமாய்த் தெரிவித்தார். சிவாஜி, அதை ஒரு பொருட்டாக மதியாமல் 'நான் பீஜாபூர் பாதுஷாவிற்குத் துரோகஞ் செய்பவனல்லன்; ஆனால் முகம்மதிய ஆளுகைக்குச் சம்பந்தமின்றித் தனியே இந்து ஸ்வராஜ்யமொன்று ஸ்தாபிக்க வல்லேன். ரோஹிதீஸ்வர ஸ்வாமியும் என் பக்கம் துணை புரிவதாக அருள் புரிந்திருக்கிறார். ஆகவே எனக்கு எவ்வாற்றாலும் நீவிர் துணை புரிவீராக!' எனக் கடிதமொன்று தாதோஜீ தேஷபாண்டிக்கு அனுப்பினார்.

i

தோரணா கோட்டையின் ஸ்வாதீனம்.

சிவாஜி கி. பி. 1646-ம் வருடத்தின் மாரிகாலத்தில் தோரணா துர்க்கத்தைக் கைப்பற்றிக் கொண்டார். தோரணா துர்க்கமானது சிவாஜியின் தகப்பனார் ஷஹாஜியின் ஜமீனுக்குத் தென்றிசையிலுள்ளது. ஜமீனுக்கு வடக்கிலுள்ளது. மொகலாயர்களைச் சேர்ந்த ஆமத் நகரம். ஜமீனுக்கு மேற்கே சய்யாதிரிமலைத் தொடர்ச்சிகளும் அதைச்சார்ந்த அடவிகளும் சூழப்பட்டிருப்பதால் துருப்பு

கள் எளிதில் தோரணு கோட்டைக்கு வரமுடியாது. கிழக்கு திசை யினின்றும் வரமுடியும். அது வெகு சுற்று வழியானதினுல் படை கள் தோரணு துர்க்கத்திற்கு வரக் கஷ்டப்படும். ஒருக்கால் துருப்பு கள் தோரணு கோட்டைக்கு வருவதாயிருந்தால் பீஜாபூர் வழியா கத்தான் வரமுடியும். தோரணு துர்க்கம் சொற்ப சைன்னியத் துடன் காக்கப்பட்டிருந்தது. நல்ல மாரிகாலத்தில் இத்துர்க்கத்தில் இருக்கும் சொற்ப படைகளும் கோட்டையை விட்டு மலையடிவாரத் தில் வந்து வசிப்பது வழக்கம். அப்பொழுது கோட்டையில் இரா ணுவ முஸ்தீப்பு ஒன்றுங் கிடையாது. இச்சமயத்தை யறிந்த சிவாஜி, சரியான மாரிகாலத்தில் ஆயிரம் படை வீரர்களுடன் தோரணு கோட்டையைக் கைவசப்படுத்திக்கொண்டார். தோரணு கோட்டையைப் பலப் படுத்த மதில்கள் கட்டி செப்பனிட்டு வருங் காலத்தில் சிவாஜிக்குப் பொன்னுணயங்கள் கொண்ட ஒரு பெரிய புதையல் ஒன்று அகப்பட்டது. சிவாஜி, கோட்டையைக் கைப்பற்றி னதும் துர்க்க காவலன் கடுகியே பீஜாபூர் சுல்தானுக்குத் தெரிவித் தான். ஆனுல், சிவாஜி இராஜ தந்திரங்களில் மிக்க தேர்ச்சிகொண்டவ ராதலால், தோரணுகோட்டைக் காவலன் பீஜாபூர் சுல்தானுக்குத் தெரிவிப்பதற்கு முன்னரே, இவர் அக்கோட்டை சரிவர காக்கப்பட வில்லை யென்றும், பீஜாபூரைச் சேர்ந்த இப்பாகங்களில் உண்டாகும் வரும்படியைச் சரிவரக் காவலன் அனுப்புவதில்லை யென்றும், தான் பீஜாபூர் சமஸ்தானத்திற்கு முன்னிலும் அதிகமான தொகையைச் செலுத்தி அரசிறையை விர்த்திசெய்ய இருப்பதாகவும் கடிதமூல மாய்ச் சுல்தானுக்குத்தெரிவித்தார். சுல்தான் அக்கடிதத்தைக் கண்ட வுடனே சிவாஜியின் மனப்படி ஆகுக என்று உத்திரவுங் கொடுத் தான். பீஜாபூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மதிமந்திரிகள் பலருக்கு சிவாஜி கைப்பணம் கொடுத்ததினுல், அவர்கள் சுல்தான் மனதைத் திருப்பி சிவாஜிக்கு நன்மை செய்து வைத்தார் என்னும் அபிப்பிரா யத்தை ஆங்கில சரித்திரக்காரர்கள் கொண்டிருக்கின்றனர். ஆகவே யாதொரு கஷ்டமின்றி முதல் முதல் தோரணு கோட்டை சிவாஜி க்கு வசமாயிற்று. புதையல் அகப்பட்ட பணத்தைக்கொண்டு படைக்கலங்கள் வாங்கினுர். மலைவாணர்கள் பலரை இராணுவத் தில் புதிதாக மறுபடியும் அமர்த்தினுர். சிவாஜி இதுடன் நிற்காமல்

அக்கோட்டைக்கு ஆறு மைல் தூரத்திலுள்ள மோர்பாடு என்னும் மலைக்கோட்டையையும் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு பழுது பார்த்து வந்தார். இத்துர்க்கத்திற்கு சிவாஜி இராஜகடா எனப் புதுப்பெயரு மிட்டார். சிவாஜியின் இத்தீரச் செயல்கள் புனாவையும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலுமுள்ள வாலிபர்களை இழுத்தன. மோரோ பிங்களே, அண்ணாஜீ தத்தர், நீராஜீ பண்டிதர், இராவ்ஜீ சோம நாதர், தத்தாஜீ கோபிநாதர், இரகுநாத பண்டிட், கங்காஜீ மங்காஜீ ஆகிய இவர்கள் அனைவரும் சிவாஜிக்குப் பவ்வியப்பட்டனர். புதிய நண்பர்கள் வந்து சேர்ந்தவுடனே, சிவாஜி இராஜகடா துர்க்கத் தைச் செப்பனிட்டுப் பலப்படுத்த வாரம்பித்தார். மோரோ பிங்களே இதற்குக் காவலனாக நியமிக்கப்பட்டார். இங்ஙனம், சிவாஜி தன் பாலியத்திலேயே சாகஸ காரியங்களைச் செய்து வந்ததினால் தாதோ ஜீக்குத் திகில் உண்டாயிற்று. பிஜாபூர் சமஸ்தானத்தில் உன்னத உத்தியோகமொன்றை சிவாஜி வகிக்கவேண்டுமென்பதே தாதோஜி யின் கருத்து. அக்கருத்து அவர் ஒருவர் மாத்திரம் கொண்ட தல்ல. அக்காலத்தில் பீஜாபூர், ஆமத்நகரம் ஆகிய இவ்விரு சமஸ் தானங்களில் இருந்த மராடியர்கள் பலருக்குப் பொதுவாக இக் கருத்தே குடிகொண்டிருந்தது. அக்கருத்து தற்காலத்தியவர் களுக்கு ஒரு மாதிரியாகத் தோன்றின போதிலும், பொதுவாக யோசிக்குமிடத்து பூர்வம் அம்மராடியர்கள் காலதேச வர்த்தமானங் களால் அவர்கள் சுதந்தர உணர்ச்சி கொள்ளப்போதுமான முகாந் தரம் பெறவில்லை. சமஸ்தானங்களில் பாடுபடுவதும் சுல்தான் களால் பரிசு பெறுவதும், ஜாகீர் வாங்குவதும் அரசிறை செலுத்து வதுமாக அவர்கள் இருந்துவந்தார்களே யொழிய, சர்வாதிகாரத் துடன் தாங்களே இராஜ்ய பாரஞ்செலுத்தி, இந்துக்களுக்குப் பிரத் யேகமான ஸ்வராஜ்யமொன்று ஸ்தாபிக்கவேண்டுமென்னும் எண் ணம் அவர்களுக்கு ஒருநாளும் இருந்ததில்லை. ஆகவே, தாதோ ஜிக்கு மட்டும் எங்கிருந்து புதிதாக ஸ்வராஜ்ய ஸ்தாபன எண்ணம் உண்டாகும்? அதினால்தான் தாதோஜி பீஜாபூர் சமஸ்தானத்தில் சிவாஜி நல்ல உத்தியோகம் பெறுமறபடிக்குக்கெட்டு அலையப் போகிறானே என்ற விசாரம் உண்டாகி அவனை அடக்க முயன்றார்.

இதற்கு சிவாஜி எள்ளளவுஞ் சம்மதிக்கவில்லை. அன்னியர் களிடத்தில் அதிலும் முகம்மதியர்களிடத்தில் உத்தியோகம் புரிவது

இந்துக்களின் ஜாதீய மரியாதைக்குத் தாழ்வு என்பதே சிவாஜியின் நோக்கம். ஜீஜாபாயும் இதையே சிவாஜிக்கு அடிக்கடி சொல்லி வந்தாள். ஜீஜாபாய் இயற்கையிலேயே மகம்மதீயர்களிடத்தில் வெறுப்பு கொண்டவள். ஆதியில் சிவாஜிக்கு விவாகம் பீஜாபூரில் நடத்தக்கூடாதென்று ஷஹாஜியுடன் அடிக்கடி ஜீஜாபாய் போராடினாள். ஷஹாஜியுடன் ஜீஜாபாய்க்கு உண்டான மனஸ்தாபம் எல்லாம் அவர், பீஜாபூர் சுல்தானுக்குக் கீழ்ப்பட்டு உத்தியோகஞ் செய்து வருவதே. இவ்வெறுப்பு ஜீஜாபாயிடத்தில் குடிகொண்டிருப்பதால், சிவாஜியின் நரம்புக்குழாய்களில் அறுவெறுப்பும் எரிச்சலும் சதா ஓடிக்கொண்டிருந்தது. சிவாஜியின் எழுச்சிக்கு அவர் தாயே முக்கிய காரணம். தாதோஜி அடிக்கடி கூறிவந்த வீரர்களின் கதை ஒரு பக்கம் இருக்க, புனா நகரத்தைச்சுற்றிலுமுள்ள பூமியமைப்புகள் மற்றொரு பக்கம் இருக்க, சிவாஜி தன் தாயினாலேயே இச்சுதந்தர ஆதரிசம் பெற்றார். சிவாஜி குழந்தைப் பருவமாயிருந்து வருகையிலேயே ஜீஜாபாய் இவருக்கு யுத்த தர்மங்களையும் உபாயங்களையும் கூறிவந்தாள். முகம்மதீயர்களுக்குத் தொண்டு புரிதல் தகாது என்னும் எண்ணத்தை சிவாஜிக்குக் குழந்தைப் பருவத்திலேயே ஊட்டினாள். ஆனால், அடிக்கடி இவள் சிவாஜியைத் தெய்வபக்தியுடன் இருக்க வற்புறுத்துவாள். பவானி தேவியையும் மகா தேவரையும் சதா தியானிக்கும்படி அவரை வேண்டுவாள். தாயின் பலம் சிவாஜிக்கு இவ்வளவு தூரம் இருக்க அவர் தாதோஜியின் வார்த்தையை எப்படி கேட்கமுடியும்? ஆகையால்தான், தாதோஜி என்ன சொல்லியும் சிவாஜி கேட்கவில்லை. வளர்த்தபிள்ளை தன் சொற்படி நடக்காமலிருப்பது தாதோஜிக்கு மிக்க விசனத்தை யுண்டுபண்ணிற்று. என்றாலும், தாதோஜி சும்மாயிராமல், தன்னைச்சுற்றிலுமுள்ள வயது சென்ற பெரியோர்களிடஞ் சொல்லி சிவாஜிக்கு புத்திமதி கூறும்படி உரைத்தார். மூப்பால் முதுகுவளைந்து தளர்ச்சியால் தண்டூன்றி மெல்லென வழிநடக்கும் மாமுதியோர் பலர் சிவாஜியிடம் நெருங்கி வார்த்தைகள் பலகூறி புத்திமதி சொல்லலுற்றார். யார் என் சொல்லியும் சிவாஜி காதுகொடுத்துக் கேட்கவில்லை. தாதோஜி தன் மேற் பழியில்லாமற்படிக்கு வெகு ஜாக்கிரதையாய்த் தாழ்ந்த

வணக்கத்துடன் ஷஹாஜிக்கு சிவாஜியின் நடத்தைகளைச் சாங்கோபாங்கமாகக் கடிதமூலமாய் எழுதலுற்றார். ஷஹாஜி பத்துவருடகாலம் ஜீஜாபாயியைப்பற்றியும் சிவாஜியைப்பற்றியும் யாதொரு கவலையின்றி யிருந்தார்.

ii

ஸிம்மகடா—புரந்தரன்கோட்டை முதலிய பல துர்க்கங்களின் ஸ்வாதீனம்.

ஷஹாஜி கர்ணாடகத்தின்மீது படையெடுத்துப் புதிய ஜமீன்கள் பெற்றாரென்பதைக் கடந்த அத்தியாயத்திலேயே கூறினோம். என்றாலும், ஷஹாஜியின் படையெழுச்சி கர்ணாடகத்தில் மட்டும் நிற்காமல் தென் தேசங்களிலும் செல்வதாகையால் நாமும் அவரையே பின்பற்றிச் செல்வோம். ஷஹாஜி தென்தேசங்கள்மீது படையெடுத்த காலத்தில் தஞ்சையில் ஆண்டுவந்தவர் இரகுநாத நாயகர். அவர் செஞ்சிக்கோட்டைக் காவலனான வைகுந்த நாயகருடனும் திரிச்சிராப்பள்ளி முதல் கொள்ளடக் கரை வரையிலுமுள்ள பிரதேசங்களுக்கு அதிபதியுமான திருமலை நாயகருடனும் மாறுப் போர்செய்து கொண்டிருந்தார். ஷஹாஜி உடனே அவர்கள்மீது படையெடுத்து அம்மூவர்களையும் பீஜாபூர் சமஸ்தானத்திற்குக் கீழ்ப்படிந்து கப்பங்கட்டும்படி திட்டஞ் செய்தார். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்ட மல்லவா? இவ்வாறு ஷஹாஜீ பலவருட காலமாய் வெல்வதும் படையெடுப்பதும் காப்பதும் முற்றுகை யிடுவதுமாய் இருந்து வந்ததினால் தாதோஜீயின் பிராது கடிதத்திற்குப் பதில் எழுதவில்லை. இதற்குள் பீஜாபூர் சுல்தானும் சிவாஜியின் நடத்தையைப் பற்றி ஷஹாஜிக்குத் தாக்கீது அனுப்பினான். ஷஹாஜி அஸாரஸ்யமாய் இருந்து விட்டார். கொஞ்சகாலம் கழிந்த பின்னர், ஷஹாஜி பீஜாபூர் சுல்தானுக்கு அஞ்சலொன்று அனுப்பிவிட்டு இராஜகடா துர்க்கத்தை விட்டு விடும்படி சிவாஜிக்கு மற்றொரு கடிதமும் அனுப்பினார். பீஜாபூர் சுல்தான் ஷஹாஜியை வீணில் துன்பப்படுத்துவான் என்னுந் திகில் ஒரு பக்கமும், சிவாஜியும் அவன் தாயும் அநாதர்

வாய்ப் போய்விடுவார்களென்னுங்கவலை மற்றொரு பக்கமும் தாதோ ஜியை மிக்க வருத்தின. இதனால் தாதோஜி நோய் கொண்டார். வைத்தியர்கள் அனைவரும் இவர் பிழைக்க மாட்டாரென்று கையை விரித்து விட்டார்கள். தாதோஜி சிறிது சிறிதாய் அசௌக்கியம் மேலிட்டுக் கடைசியாய் கி. பி. 1647-ம் வருடம் தேகவியோகம் அடைந்தார். உயிர் நீங்குமுன்னே, தாதோஜி தன்தேச முக்கியர் களையும் காரியஸ்தர்களையும் அழைத்துத் தனக்குப்பின் சிவாஜியை ஜாகீருக்குரிய பிரபுவாகக் கொள்ளுமாறு காட்டிக்கொடுத்தார். அப் போது தாதோஜிசிவாஜியைப்பார்த்து, கடவுளுக்கும் மகாராஷ்டிரகுடி களுக்கும் உரிய கடமைகளை விரோதமின்றி நிறைவேற்றுதல் வேண்டு மென்றும், முகம்மதீய அரசாட்சிக்குப் புறம்பாகத் தனி இராஜ்யம் ஒன்று சுயேச்சையாக ஸ்தாபிக்க வேண்டுமென்றும், பசுக்களையும், பிராமணர்களையும் விவசாயிகளையும் எப்பொழுதும் ஆதரவு செய்வது இராஜ தருமமென்றும், காலநிலைமையும் இடநிலைமையும் அறிந்து யுத்த சாகஸங்கள் செய்வதால் வெற்றி பெருகுமென்றும் வற்புறுத் திக் கூறினார். மரண மடைவதற்குச் சிறிதுகாலம் முன்புதான் தாதோஜீ, ஸ்வராஜ்ய ஸம்ஸ்தாபனத்திற்குரிய பராக்கிரமம், ஜாதீய மரியாதையைக் காப்பாற்றுங் குணம் முதலிய இராஜ லட்சணங்கள் சிவாஜிக்கு இருப்பதை யறிந்தார். ஏதோ நல்ல தைரியமும் துணிச் சலுங் கொண்ட வாலிபன் என்றே இவர் சிவாஜியை மதித்திருந்தார். சிவாஜியின் எண்ணங்களும், செயல்களும் முதன் முதல் இவருக்குக் கனவருத்தத்தை யுண்டுபண்ணின போதிலும் சிவாஜியால் மராடி யர்களுக்கு ஜாதீய மதிப்பும், சுதந்தரமும் உண்டாகப் போவதை அவர்தான் இறப்பதற்கு முன்னரே கண்டுகொண்டு ஆநந்த மடைந் தார். பீரங்கோஜி நர்ஸலர் சாம்பாஜீ மோஹட் இவ்விருவர் நீங்க லாக அனைவரும் தாதோஜீ இறக்குந் தருணத்தில் புனாவில் இருந் தனர். சக்கன் கோட்டைக் காவலனா யிருப்பவர் பீரங்கோஜி. ஷஹாஜியின் இரண்டாம் மனைவியின் சகோதரர் சம்பாஜி. இவன் சூபாகோட்டைக் காவலன். தாதோஜி இறந்த பின்னர் ஜமீனுக்குப் பொறுப்புள்ளவர் இனி ஷஹாஜியால் நியமிக்கப்படவேண்டு மென் றும், நியமனம் ஆகும் வரையில் சிவாஜிக்கு யாதொரு அதிகாரமு மில்லை யென்றும் கூறித்தடை செய்யலானான். இவனுக்கு சிவாஜி என் சொல்லியும் பயனில்லை எனக்கொண்டு முந்நூறு சுத்தவீரர்களு

டன் இரவோடு இரவாய் சூபாவிற்குச் சென்று நித்திரை புரியும் சாம்பாஜீயையும் அவனைச் சேர்ந்த சிலரையும் சிறைப்படுத்தி ஷஹாஜியின் இராஜதானியாகிய பெங்களூருக்கு அனுப்பினர். சாம்பாஜியுடன் செல்லப் பிரியமில்லாத வீரர்களை சிவாஜி தன் படையுடன் சேர்த்துக்கொண்டு அவரவர்கள் அந்தஸ்துக்கேற்றபடி உத்தியோகங் கொடுத்தார். இந்தாபுரம், பாராமதி ஜில்லாக்களும் சிவாஜிக்குச்சொந்தமாயின. ஷஹாஜியின் ஜமீனில் அடங்கிய மாகாணங்கள் ஒட்டுப்பற்றில்லாமல் அதனதன் பிரதிநிதியின் வசத்திலிருந்த யாவும் சிவாஜியிடம் ஒருங்கே அமைந்தன. பீஜாபூர் சுல்தான்வசம் துக்கடி துக்கடியாயிருந்த துர்க்கங்கள் சிவாஜியிடம் ஐக்யப்பட்டு இருந்தன. தோரணு, இராஜகடா துர்க்கங்கள் சிவாஜிக்கு வசமானதினுல் தென்மேற்கு வழியாகப் படை வராமற்படிக்கு நன்கு காக்கப்பட்டிருந்தன. புனுவிற்குத் தெற்கே ஒரு காவத தூரத்திலுள்ள கோண்டாணு கோட்டை மிக்க பலமுள்ளது. இதை சுவாதீனப்படுத்தினவர்களுக்கு முத்தாநதி பள்ளத்தாக்கும் புனு வெளிப் பிரதேசங்களும் கைவசமாகும். ஆதலால் சிவாஜி இதை நாடினுர். அக்கோட்டைக் காவலன் ஒரு பட்டாணியாக இருந்தான். பெரிய தொகைக்கு இக்கோட்டையை விட்டுவிடுவதாக அவன் சிவாஜியிடம் கூறினுன். உடனே சிவாஜி அதை சுவாதீனப் படுத்திக்கொண்டு அக்கோட்டைக்கு * 'ஸிம்மகடா' எனப் பெயருமிட்டார். ஸிம்மகடா துருக்கத்திற்குத் தென் கிழக்கில் பலமுள்ளதும் செங்குத்தாயுள்ளதும் படைக் கலங்களால் துளைக்க முடியாததுமான பெரிய கோட்டையொன்று உண்டு. இதற்குப் † புரந்தன் கோட்டை என்பார். பீஜாபூர் நவாபு, நீலகண்ட நாயகன் என்பான் ஒருவனை இக்கோட்டைக்குக் காவலனுக நியமித்தான். அவன் தாதோஜி இறந்த காலத்திற்குக் கொஞ்சநாள் முன்னதாக இறந்தான். பீஜாபூர் சமஸ்தானத்திலிருந்து புதிய காவலனை நியமிக்கும் உத்திரவு வருவதற்கு முன்னரே, நீலகண்ட நாயகனின் மூத்த குமாரனுன பீலு, புரந்தரன் கோட்டையையும், அதைச் சுற்றிலுமுள்ள

*ஸிம்மகடா என்பதற்கு சிங்கக் கோட்டை எனப்படும்.

† புரந்தரன், இந்திரனு௶கு மற்றொரு பெயர். இக்கோட்டையில் பூர்வம் இந்திரனுக்குத் திருவிழா நடந்து வந்தது பற்றிக் காரணப்பெயராயிற்று.

நிலங்களையும் சுவாதீனப்படுத்திக் கொண்டான். பீலுவின் சகோதரர்கள், தாங்களும் நீலகண்ட நாயகனின் குமாரர்களாதலால் பீலுவைப்போலவே தங்களுக்கும் தகப்பனர் சொத்துக்களில் பாத்தியதை யுண்டென வாதாடினர். பீஜாபூர் சமஸ்தானத்திற்கும் முறையிட்டனர். எவ்வளவு முறையிட்டும் அவர்களுக்கு ஒன்றுங் கைகூடவில்லை. உடனே, அவர்கள் சிவாஜியின் உதவியை நாடினார்கள். சிவாஜியும் அக்கணமே புறப்பட்டுப் பீலுவை நீக்கித் தன் துவஜத்தை நாட்டினர். நீலகண்ட நாயகனின் மூத்த குமாரனான பீலு நீலகண்டனுக்குக் கோட்டையைச் சுற்றிலுமுள்ள நிலங்களில் சிலவற்றையும் கொடுத்து ஒரு பெரிய வீட்டையையுங் கட்டிக் கொடுத்தார். நடுவிலோனான சங்கர ராவுஜீ நீலகண்டனுக்கு சிவாஜி தன் இராணுவத்தில் பீரங்கிப் படைக்குத் தலைவனாக நியமித்தார். கடையோனுக்சும் அப்படியே தன்னுடைய இராணுவத்தில் பெரிய உத்தியோகங் கொடுத்தார்; இங்ஙனம் அவர்களுடைய குறைகளை ஒவ்வொன்ருக நீக்கினபின், சிவாஜி மோரோ பிங்களே என்பவரை புரந்தரன் கோட்டைக்குக் காவலனாக நியமித்தார். சிவாஜியின் தென் மாகாணங்கள் நல்ல காப்புடன் வெகு ஜாக்கிரதையாயிருந்தன.

iii

* கல்யாணபுரம் கொள்ளை.

சிவாஜிக்குத் தோரணு கோட்டையில் அகப்பட்ட புதையல் பணமும் ஹஜாஜியின் ஜமீன் வரும்படித் தொகையும் அடியோடு செலவழிந்து விட்டது. இப்பொழுது சிவாஜிக்குப் பணம் அவசியம் வேண்டியதா யிருந்தது. புரந்தரன் கோட்டை வசப்பட்ட பிறகு, சிவாஜிக்கு மறுபடியும் அதிர்ஷ்டமுண்டாயிற்று. தாணு ஜில்லாவில் மிக்க ஐஸ்வரிய முள்ளது கலியாணபுரம். இது அம் மாகாணத்திற்கு முக்கியமான இராஜதானி. அதை யாண்டு வந்தவர் ஒரு முகம்மதியர். அவர் பெயர் மூலாணு ஆமத். இவர் சிவாஜியின் எண்ணங்களைச் சிறிதும் அறியாது தீர்வைப் பணத்

* இதற்குக் கல்யாண் என்று பெயர். இது புனுவிற்கும் பம்பாயிக்கும் இடையேயுள்ள ஒரு பெரிய ரெயில் சந்திப்பு. (ஜங்ஷன்)

தைத் திரட்டிப் பீஜாபூருக்கு அனுப்பினர். கஜானுவுடன் காவலாக சொற்ப வீரர்களே செல்லலுற்றனர். கஜானு செல்லும் வழிகளில் மலைவாணர்கள் கொள்ளை யடிக்காமலிருப்பதற்குச் சொற்ப காப்பாளிகளை யனுப்புவது காலங்கண்ட வழக்கம். கஜானு வண்டிகள் கொங்கணம் வழியாகப் புகுந்து வருகையில் சிவாஜி முந்நூறு குதிரைப்படை வீரர்களுடன் போரி கணவாயிலிறங்கிக் காவலாளிகளை எதிர்த்தார். சிவாஜியின் படைவீரர்களுக்கு முன் அவர்கள் எதிர் நிற்க மாட்டாமல் செத்தேன் பிழைத்தேன் என்று கஜானுவை விட்டு விட்டு இறந்தவர் போக உயிர்த்தவர் அடைக்கலம் புகுந்தனர். சிவாஜி இதுடன் நிற்காமல், அடுத்தாற் போலிருக்கும் சில மலைக் கோட்டைகளையும் பிடித்தார். இவர் பிடித்த கோட்டைகள் ஒன்பது. அவைகளில் இராஜ்மச்சி, ரைரி, லோககடா, முக்கியமானவை. போரி கணவாய் அடிவாரத்தில் உன்னத மலையில் உள்ளது இராஜ்மச்சி. ரைரி சிவாஜிக்குப் பிரதான நகரமாய் வரப்போவதால் அதைப்பற்றிப் பின்னால் கூறுவோம். போரிகணவாய்க்கு மேலே நல்ல இயற்கை வனப்புடன் கூடியது லோக கடா. சிவாஜி இக்கோட்டைகளை ஒன்றின்பின் ஒன்றாய் சுவாதீனப்படுத்தி வருகையில் ஷஹாஜியின் பழைய சிப்பந்தியும் சிவாஜியின் அந்தரங்கத் தோழர்களிலொருவருமான அப்பாஜி சோண தேவ் கலியாண புரத்தின் அகநகரில் புகுந்து மூலானு ஆமத்தை சிறைப்படுத்தினர். இச் செய்தியைக் கேட்ட சிவாஜி உடனே கலியாணபுரத்திற்கு வந்து அப்பாஜியைத் தட்டிக் கொடுத்து மூலானு ஆமத்தை வெகு மரியாதையாய்ப் பந்தோபஸ்துடன் பீஜாபூருக்கு அனுப்பினர். சிறைபட்டவரை வெகு மரியாதையுடன் நடத்துவது சிவாஜியின் குணங்களில் ஒன்று. அப்பாஜீ அரமனையுட் புகுந்து மிக்க அழகும் யௌவனமும் பொருந்திய மூலானுவின் மருமகளை சிவாஜிக்கு முன் நிறுத்தினன்; கொள்ளையிலும் படையெழுச்சியிலும் அகப்பட்ட அபூர்வமான வஸ்துக்களைத் தலைவனிடம் அனுப்புவது பழைமையான சம்பிரதாயம். சிவாஜி தன்னெதிர் நிற்கும் ரூபவதியைப் பார்த்து சிரித்து: என் தாயார் உன் அழகில் ஒரு பாதியாவது இருந்திருப்பாளாயின் நான் இன்னும் அழகுடையவனாயிருப்பேன். ஆகவே நீ என் தாய்க்குச் சமமானவள். பிரபஞ்சத்தில் எஸஸை விரும்பு

கிறவன் பரதார விருப்பங் கொள்ளான். என்று கூறி அவ்வனி தையை மிக்க வணக்கத்துடனும் அந்தஸ்துடனும் அவள் உறவினர் இருக்குமிடத்திற்குச் சாக்கிரதையாய் அனுப்பினர். இது வன்றோ அருமையான குணம். சித்திரப் பாவைபோல் பளபளப் புடனிருக்கும் ஸ்திரீயினிடம் தவமுனிவர்களும் தயங்குகையில் இளமையும் பராக்கிரமும் ஜயமும் பெற்ற க்ஷத்திரியன் ஒருவன் ஸ்திரீயிடம் மனஞ்சலியாமல் தாயைப்போல் நடத்துவது உயர்ந்த குணம் அல்லவா? இக்குணமொன்றே சிவாஜியைப் பெருமை படுத்திற்று. சர்வாதிகாரம் பெற்று சார்வ பௌமனு யிருக்கக் கருதும் இராஜன் ஒருவனுக்கு இருக்கவேண்டிய குணங்களெல்லாவற்றிலும் இக்குணமொன்றே இகபரமிரண்டிலும் புருஷார்த்தத்தைக் கொடுக்கக்கூடியது. முகம்மதிய சரித்திரக் காரனுன காபீ காணும் சிவாஜியினிடம் இக்குணம் தலை தூக்கி யிருப்பதைக் கூறியிருக்கின்றனன். கலியாண் கோட்டை கைவசப்பட்டதும், சிவாஜி உடனே, தாதாஜியின் தீர்வை ஏற்பாடுகளை வெகு விமரிசையுடன் திட்டப்படி நடத்தினர். நிற்க, கஜானு கொள்ளைபோனதும், கலியாணபுரம் கைவசப்பட்ட செய்தியும் பீஜாபூர்நவாபுக்கு எட்டினவுடனே, சிவாஜியின்மேல் உண்டானகோபம் இவ்வளவ்வளவல்ல. என்றாலும், சிவாஜி, கோட்டைகள் பிடிப்பதைமட்டும் நிறுத்தவில்லை. பலமாய்க் காக்கப்பட்ட கோட்டைகளை வெகு தந்திரமாய் சிவாஜி கைப்பற்றிக் கொண்டார். கங்குரி என்னுங் கோட்டையை வசப்படுத்தினது உபாயத்தினுலேயே. மாரிகாலத்தில் இம்மலைத் தொடர்ச்சிகளில் ஓயாமல் கனமழை பெய்வது வழக்கம். இம் மலைக் கோட்டைகளில் உள்ள கட்டடங்கள், வீடுகள், இதர கொட்டில்கள் ஆகிய இவைகள் மழையினுல் ஒழுகாதிருக்க ஆனிமாதக் கடைசியில் ஜனங்கள் நாணல்களைக் கட்டுகட்டாய்ச் சுமந்து கோட்டைக்குள் பிரவேசிப்பது வழக்கம். இதை யறிந்த சிவாஜி மலைவாணர்களைப்போல் படைவீரர்களும் தானுமாகத் தங்கள் ஆயுதங்களை நாணற் கட்டுகளில் சொருகி மறைத்துச் சுமையுடன் கோட்டைக்குள் பிரவேசித்துத் தலைவனை எதிர்த்துக் கோட்டையை சுவாதீனப்படுத்திக்கொண்டார். இச் சமயத்தில் சிவாஜி கொங்கணநாட்டு

அந்தணன் ஒருவனிடம் வெகு நாளாய் இருந்த * பவானி பட்டாக் கத்தியை நூறு வராகன் கொடுத்து வாங்கினர். பரம்பரையாகவே போன்ஸலே வம்சத்தினர்களுக்குப் பவானிதேவி குலதெய்வமான தினுல் பவானி என்ற மாத்திரத்தில் சிவாஜிக்குப் பெரும் எழுச்சி யுண்டாகும். சிவாஜி தான் அடைந்த வெற்றிக்குப் பவானிதேவியே காரணமெனப் பலகாலும் இவர் சொல்லியிருக்கிறார். பவானி தேவி யின் வரப்பிரசாதத்தினுலேயே தான் கொண்ட எண்ணம் நிறை வேறும் என்ற எண்ணம் சிவாஜிக்குச் சதா இருந்துவந்ததினுலேயே 'பவானி கத்தி' என்று சொன்னமாத்திரத்தில் திரண்ட திரவியம் கொடுத்து வாங்கினர். இதல்லாமல் பகைவர்களை யொழிப்பதற்கு இதுவும் பவானிதேவி அருளிய பிரசாதம் என்றே சிவாஜி நம்பி யிருந்தார்.

iv

ஷஹாஜியின் சிறை.

உள்ள காலமெல்லாம் பீஜாபூர் சமஸ்தானத்தில் உழைத்துப் பெரியதொரு உத்தியோகம் பெற்றுச் சீரும் சிறப்புங் கொண்டு வாழும் படைத்தலைவன் உப்பிட்டவரை உள்ளளவும் நினையாமல் இரண்டகஞ் செய்தான் எனக்கேட்ட சுல்தான், உடனே சிவாஜி யைப் பீஜாபூருக்கு வரும்படி ஓர் அறிக்கையும், ஷஹாஜிக்குத் தன் மகனைக்கண்டிக்கும்படி ஒரு கடிதமும் அனுப்பினன். சிவாஜி உடனே, 'என்வசமுள்ள பிராந்தியங்களை என்னிடமே ஒப்புவித்தால், பீஜா பூருக்கு வருவேன்; இல்லையேல் வரமுடியாது என்று கண்டிப்பாய் சுல் தானுக்குப் பதில் கடிதமும் விடுத்தார். சிவாஜி தன் தகப்பனுருக்கு 'இனி நான் குழந்தையல்ல; அதிகாரமும் பொறுப்புமுள்ள மனிதன் ஆயினேன்' என மற்றொரு கடிதமும் அனுப்பினர். சிவாஜியின் வேண்டுகோளுக்குச் சுல்தான் சம்மதிக்கவில்லை. கோபம் அதி

---

* பவானிதேவி கொடுத்த கத்தி. சிவாஜிக்கு ஸடாரா என்னு மிடத்தி லும் பவானிகத்தி மற்றொன்று கொடுக்கப்பட்டது. இது பவானிகத்தி யல்ல வென்று பின்னர் மறுக்கப்பட்டது. இதல்லாமல், இங்கிலாந்திலுள்ள தென் கென்ஸிங்டன் என்னும் நகரில் உள்ள காட்சிச் சாலையில் பவானி கத்தி ஒன்று வைக்கப்பட்டிருக்கின்றது.

கரித்தது. சமஸ்தானத்தில் ஷஹாஜியின் விரோதிகள் சுல்தா னுக்கு அடிக்கடி ஷஹாஜியைப் பற்றிப் பொச்சாப்புகூறிக்கொண்டே வந்தனர். சிவாஜி செயல்களுக்கு ஷஹாஜியே காரணம் என்பார் ஒரு தலையார்; சிவாஜி ஷஹாஜியின் உத்திரவுபடி நடந்தான் என் பார் மற்றொரு சார்பார். இங்ஙனம் எரியும் உடம்பில் எண்ணெ யைக் காய்ச்சிவிட்டாற் போல் அவர்கள் சுல்தானுக்கு மேன்மேலும் ஷஹாஜியைப் பற்றிக் கூறி அவன் மனதைக் கலைத்தனர். உடனே ஷஹாஜியைப் பிடிக்கும்படி சுல்தான் உத்திரவு கொடுத்தான். இவ் வுத்திரவு பகிரங்கமானதல்ல; ஒருக்கால் ஷஹாஜியால் பெருத்த கலகம் விளையக்கூடு மென்பதை யறிந்தே சுல்தான் ஷஹாஜியைத் தந்திரமாய்ப் பிடிக்க வேண்டுமென்று இவ்வுத்திரவைப் பிறப்பித் தான். பீஜாபூர் சமஸ்தானத்திலேயே தண்டத் தலைவனுயிருந்த பாஜீகோரபடே என்பவன் ஒருவன் ஷஹாஜியின் மேல் வெகு நாளாக அறுவெறுப்பும் எரிச்சலுங் கொண்டிருந்தான். ஷஹாஜி யின் அந்தஸ்தைப் பார்த்துச் சகியாத பேராசைக்காரன், அனுக்கு சுல்தான் மத்ஹோல் ஜில்லாவை ஜாமீனுகக் கொடுத்தான். அவனையே ஷஹாஜியைப் பிடிக்க சுல்தான் ஏவினுன். சமீபத்தில் ஷஹாஜி தென் தேசங்களில் அடைந்த வெற்றியையே ஒரு காரண மாகக் கொண்டு, பாஜிகோரபடே ஷஹாஜிக்கு விருந்தளிக்க வேண்டு மென்று யோசித்து, அவர்பால் அணுகி அவரை விருந்துக்கு வரும் படி வேண்டினுன். அவரும் இச்சதியாலோசனையைச் சிறிதும் கவனியாதவராய் மராட்டி ஒருவன் விருந்துக்கு அழைப்பதை மறுத் தல் தர்மசாஸ்திரத்திற்கு விரோதமென்று கொண்டு வருவதாகச் சம்மதித்தார். குறித்த நாளன்று ஷஹாஜி தன் மெய்க் காப்பாளரு டன் கோரபடே கிரகத்திற்கு வந்தார். ஷஹாஜி வாயிற்படி நுழை ந்ததும் கோரபடேயின் காவலாளர்கள் ஏற்பாடுபடியே ஷஹாஜியின் மெய்க்காப்பாளர்களை உள் நுழையாதபடி தடுத்தனர். இது ஷஹாஜிக்குச் சந்தேகமுண்டாயிற்று. என்ருலும், விருந்துக் கழைத்

---

* கோரபடே என்பது காரணப்பெயர். பூர்வம் உடும்பு வளர்த்து அதி னுல் பெரிய கோட்டை மதில்களை ஏறுவதினுல் இப்பெயர் இவர்களுக்கு உண்டாயிற்று. கோரபட் என்பது மகாராஷ்டிர பாஷையில் உடும்பு. இது இரண்டு நாக்குள்ள ஒரு ஜெந்து.

தவன் தீங்கிழைப்பானு வென்னும் எண்ணம் தோன்றிற்று. கோர படேயும் வெகு வினயத்துடனும் மரியாதையுடனும் போஜன சாலைக்கு அழைத்தான். போஜனசாலைக்குட் பிரவேசித்ததும் கதவு சடேலென்று மூடப்பட்டது. ஷஹாஜி தனியாய் அகப்பட்டுக் கொண்டார். புறங்கடையில் ஒளித்திருந்த சில வீரர்கள் உடனே ஓடிவந்து ஷஹாஜியைச் சிறைப்படுத்தினர். கைவிலங்கு கால் விலங்கிட்டு ஷஹாஜியைச் சுல்தானிடம் பீஜாபூருக்கு அனுப்பினான். ஷஹாஜி தான் நிரபராதி யென்று பலவாருகச் சொல்லியும் பயன்படவில்லை. இம்மேற்கூறிய விவரம் மகாராஷ்டிர சரித்திரக் காரர்களால் கூறப்படுகிறது. இதையே ஆங்கில சரித்திரக்காரர்களும் கூறுகின்றனர். ஆனுல் பஸாடின்-இ-ஸலாதீன் என்னும் பாரஸீக சரித்திரம் மாறுபாடாகக் கூறுகின்றது. பின்வருவது பாரஸீக சரித்திரத்தின் அபிப்பிராயம்:--

பீஜாபூர் துருப்புக்கு நவாப் முஸ்தாபா கான் பிரதம தலைவனுக வும், மாலிக்கரஹானும் ஷஹாஜியும் உபதலைவர்களாகவும் இருந்து கர்னுடகத்தின்மீது படையெடுத்து செஞ்சிக் கோட்டையைக் கைப் பற்றிக் கொண்டார்கள். செஞ்சிக்கோட்டை வீழ்ந்ததும் முஸ் தாபா கானுக்கும் மாலிக்ரைஹானுக்கும் மனஸ்தாபம் உண்டாயிற்று. முஸ்தாபாகான் செய்வது அநீதியென்பது ஷஹாஜிக்குத் தெரியும். ஆகவே இவர் முஸ்தபாகானுடன் சேராமல் மத்தியஸ்தராக ஒதுங்கிக்கொண்டார். இது முஸ்தபாகானுக்குப் பிடிக்காததினு லேயே இவருடன் பகைத்தான். இப்பகை வளர்ந்து கடைசியாக முஸ்தாபாகான் ஷஹாஜியைச் சிறைபடுத்தத் தீர்மானித்தான். ஒரு நாள் பாபாஜீ கோரபடேயையும் அசுவந்தராவையும் அழைத்துப் பொழுது விடியுமுன் ஷஹாஜியின் பாடிவீட்டிற்குச் சென்று மறை வாய்ப் படையுடன் காத்திருக்க முஸ்தாபாகான் உத்திரவு செய் தான். முந்தின தினம் இரவு வெகுநாழிகை பரியந்தம் ஆடல் பாடல்களினுலும் விருந்து சாப்பாட்டினுலும் கண்விழித்திருந்து சூரியோதயம்வரை அயர்ந்து நித்திரை செய்ததினுல் ஷஹாஜி முஸ் தாபான் கொடிய சூழ்ச்சியைக் கவனிக்கமுடியவில்லை. என்றுலும், அவர்களுடைய இருப்பை அறிந்து ஷஹாஜி வெகு வேகமாகக் குதிரை யேறிச்சென்ருர். ஆனுல் பாபாஜீ கோரபடே அதிவேக

மாய்ப் பின்தொடர்ந்து ஷஹாஜியை மடக்கிக் கைப்பிடியாய் நவாபு முன் நிறுத்தினன்* நவாபு ஷஹாஜியைச் சிறிதும் விசாரியாமல் சிறைப்படுத்தினன். ஷஹாஜி சிறைபட்டகாலம் கி. பி. 1648-ம் வருடம் ஆகஸ்டு மாதம் முதல்வாரம். ஆனல், சில மராதி சரித்திரக்காரர்கள் கி. பி. 1647-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 6-ந்தேதி என்று கூறுகின்றனர். இது மிகையேயாம்.

இது எவ்வாருயிருப்பினும் ஷஹாஜி பீஜாபூரில் சிறைபட்டது வாஸ்தவம். அதில்ஷா ஷஹாஜியைக் கொண்டே சிவாஜி சரணுகதி யடையும்படி குமாரனுக்கு எழுதச்சொன்னன். ஷஹாஜி எழுதின கடிதம் சிவாஜிக்கு வந்தவுடனே இன்னது செய்வதென்பது சிவாஜிக்குத் தெரியவில்லை. பீஜாபூர் சுல்தான் இரண்டொரு தடவைகளில் இராஜதானிக்குச் சிவாஜியை வரும்படி தெரிவித்ததால், இதில் ஏதோ சூது இருக்கிறதென்று சிவாஜி அறிந்து தன்னுடைய சிநேகிதர்களையும் மனைவியையும் அழைத்து அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டார். பலர் பலவிதமாகக் கூறவே, சிவாஜிக்கு ஒன்றும் பிடிபடவில்லை. கடைசியாக அன்றிரவு சிவாஜி தன்மனைவியைக் கேட்டார். இவர் மனைவி ஸஹீபாய் "நாதா! உம்மைச் சுற்றிலும் பெரிய இராஜ்ய தந்திரிகளிருக்கக் கேவலம் ஒரு அபலையைக் கேட்பது முறைமையோ? என்றுலும் பதிவார்த்தைக்குத் தடைகூறுதல் தர்மபத்னிகளுக்கு நீதியல்லவென்னும் ஸ்திரீ தர்மத்தைக்கொண்டு தங்களுக்குக் கூறுகிறேன். பிரபோ! அவரவர்களுடைய சுயபுத்தி சுகத்தைக் கொடுக்கும் பரபுத்தி (அன்னியர்களுடைய அபிப்பிராயத்தைக் கொண்டு நடத்தல்) இழிவையும் விநாசத்தையும் விளைக்கும். ஸ்திரீ புத்தியோ (லோக வியவகாரங்கள் அறியாத பேதைகள்) அழிவையும் பிரளயத்தையும் உண்டுபண்ணும். ஆகவே, பெண்புத்தி பேதமையுடைத்து" என்று கூறினள். சிவாஜி "என் பிரியே! வாஸ்தவந்தான். ஆனல் சில பெண்மணிகள் கிரக கிருத்தியங்களிலும் உலக வியவகாரங்களிலும் வெகு சூட்சும புத்தியுடன் விளங்குகிருர்கள். என் கீழிருக்கும் மதி மந்திரிகளைவிட நீ புத்திசாலி என்

* இது ஜாதுநாத சர்க்கார் பாரஸீக சரித்திரத்தினின்றும் மொழிபெயர்த்தது.

பதை யறிந்தே நான் உன்னைக் கேட்டேன். நீ எங்ஙனம் கூறுகின் றனையோ அங்ஙனமே யான் செய்யத் தடையில்லை. ஆகவே உன் அபிப்பிராயத்தைச் சொல்" என்று கேட்டார். ஸஹீபாய் உடனே "நாதா! என் வார்த்தையைப் பெரிதாக வெண்ணி நீர் நடப்பதாயின் நீர் இச்சமயம் பீஜாபூருக்குப் போவது கூடாது. உமக்கு ஏதாகி லும் துன்பம் நேரிடக்கூடும். தகப்பனாரை விடுவிக்க வேறு பிரயத் தனங்கள் செய்யும்" என்று வெகு நிதானமாய்க் கூறினாள். இம் மொழியைக்கேட்ட சிவாஜி வெகு ஆநந்தங்கொண்டு மனைவியைப் புகழ்ந்து, தகப்பனாரை விடுவிக்க எண்ணங்கொண்டார். இரவெல் லாம் நித்திரையின்றி ஆழ்ந்த யோசனையிலிருந்தார். சிவாஜி, கடைசி யாக பீஜாபூர் சுல்தானை எவ்விதத்திலாவது பயமுறுத்த வேண்டு மென்று டில்லி பாதுஷாவான ஷாஜிஹான் என்பவருக்கு வெகு வினயத்துடன் கடிதமொன்று ரகுநாதபண்ட் மூலமாய் சிவாஜி அனுப்பினார். ஷஹாஜியின்மேல் உண்மையாகவே ஷாஜஹானுக் குப் பிடித்தங் கிடையாது. என்றாலும் இவ்வளவு தூரம் கடந்து உதவியை நாடுவதால் அவசியம் செய்யவேண்டிய தென்னும் எண் ணம் ஒன்று. ஷஹாஜியின் மூலமாகப் பீஜாபூர் சுல்தானிடம் சண்டையிடலாம் என்பது மற்றொன்று. ஆகவே, இக்காரணங் களை முன்னிட்டு ஷாஜஹான் சிவாஜியின் கடிதத்தை ஒப்பி, ஷஹா ஜிக்கு மரியாதையாக * இராஜ உடுப்பு ஒன்றும் சாம்பாஜிக்கு டில்லி பாதுஷாவிடம் உத்தியோக மொன்றும் கொடுத்தனுப்பினான். இத்துடன் நிற்காமல் ஷாஜஹான் பீஜாபூர் சுல்தான் மூலமாக ஷாஹ ஜிக்கு ஒரு கடிதமும் சிவாஜிக்கு ஒரு கடிதமும் அனுப்பினான்.

* இது பெரும்பாலும் அக்காலத்திய ராஜ்யங்களின் ஆசாரமென்பது அறிக.

ஷாஜஹான் ஷஹாஜிக்கு எழுதிய * கடிதம்.

நவம்பர்மீ 30வ 1649-ம் வருடம்.

ஷஹாஜிக்கு,

உமது குமாரர் சிவாஜி இப்பொழுது உம்முடைய விஷயமாக அனுப்பின மனுவைப் பார்த்தோம். இதுவரை நீர் மொகலாய துரைத்தனத்திற்குச் செய்த குற்றங்களையும் அபராதங்களையும் மன்னித்தோம். நீர் இப்பொழுது காராக்ரகத்தில் கஷ்டப்படுவதை யறிந்து உம்மை விடுதலை செய்யும்படி பீஜாபூர் சுல்தானுக்கு உத்திரவு பிறப்பித்தோம், இனி, நீர் மன அமைதிபெற்று மொகல் ஏகாதிபத்தியத்திற்கு விஸ்வாஸத்துடன் உதவிபுரிவீர் என நம்புகிறோம். இராஜதானிக்கு வந்தவுடன் உம்முடைய கோரிக்கைகளையும் வேண்டுகோளையும் திட்டமாய்ச் செய்கின்றோம். உமது மூத்த குமாரன் சாம்பாஜிக்கு எங்கள் ஆதீனத்தில் உத்தியோகமொன்று கொடுத்திருக்கிறோம். கவலையற்றிரும். உம்முடைய காரியத்தில் நாங்கள் அக்கறையுள்ளவர்கள் என்பதற்கு இப்பொழுது உமக்கு மரியாதையாக உடுப்பு ஒன்று அனுப்பியிருப்பதே அத்தாட்சியாகும்.

ஷாஜஹான் சிவாஜிக்கு எழுதிய † கடிதம்.

1649-ம் வருடம், நவம்பர்மீ 30வ

சிவாஜிக்கு,

நீர் வெகு வணக்கத்துடன் ரகோபண்ட் மூலமாய் எழுதியனுப்பின காகிதம் பெற்றுக்கொண்டோம். நீர் கடிதத்திற் கூறிய ஏற்பாடுகள் எங்களுக்கு சம்மதமே. உம்முடைய கடிதத்தில், ஜுன்னார், ஆமத்நகரம் ஆகிய இவ்விரு ஜில்லாவின் தேச முக்கியத்தைப்பற்றிக் குறிப்பிட்டதைக் கவனித்தோம். ஆனால், அவைகளைப்

* இக்கடிதத்தில் ஷாஜஹான் கடைக்குமாரனான மூரத் பக்ஷ் என்பவனின் முத்திரை யிருந்தது.

† மேற்கண்ட கடிதங்கள் எழுதுங்காலத்தில் ஷாஜஹான் டெல்லிப் பட்டணத்தில் இல்லை. லாகூருக்குச் சென்றிருந்தார்.

பற்றி இப்பொழுது கவலைவேண்டாம். கூடிய சீக்கிரத்தில் இராஜ தானி வந்து சேர்ந்ததும் சகலமும் ஏற்பாடு செய்யப்படும். உம்மு டைய சிநேகம் இனிது ஓங்குமாக.

நிற்க, ஷஹாஜி பீஜாபூரில் சிறைபட்டுச் சாலவும் வருந்தினர். பீஜாபூர் சுல்தான் ஹஷாஜியை நிறுத்தி அவனைச் சுற்றிலும் சுவர் கட்டச் செய்தான். ஒவ்வொரு கல்வரிசை கட்டினதும் சுல் தான் ஷஹாஜியைக் கூப்பிட்டு இப்பொழுதாவது உன் குற்றத்தை ஒத்துக்கொள். மன்னித்து விடுகிறேன் என்று கேட்பதும் அதற்கு ஷஹாஜி என் மனச்சாட்சியாய் நான் பீஜாபூருக்குத் துரோ கமுஞ் செய்யவில்லை. ஒரு குற்றமும் புரியவில்லை என்று உரைப் பதுமாக யிருந்தது. கடைசியாக அச்சுவர்கள் ஷஹாஜியின் கழுத் தளவு வந்தன. அப்பொழுதும் ஷஹாஜி சத்தியத்தையே கூறி வந்தார். சுல்தானுக்கு மனமும் இளகவில்லை. இப்படியிருக்க, டில்லி பாதுஷாவிடம் சுல்தானுக்குக் கடிதம் வந்தது. அதில் ஷஹாஜி மொகலாய ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்தவராகையால், அவரை இனி சிறையில் வைப்பது அநர்த்தமாக முடியும். உடனே அவரை விடுதலை செய்யவேண்டும் என்றிருப்பதைக்கண்ட சுல்தான் திகிலடைந்து உடனே ஷஹாஜியை விடுதலை செய்தான். ஷஹாஜி நான்கு வருட காலம் சிறைபட்டார். இவர் விடுதலை யடைந்தது கி. பி. 1653-ம் வருடம்.

ஐந்தாவது அத்தியாயம்.

சிவாஜியின் வெற்றித் திறங்கள்.

முகம்மதியர்களுக்குக் கீழ்ப்படிதல் கூடாது என்னும் நோக்கத்தை சிவாஜி விரதமாகக் கொண்டபோதிலும், பொதுவாக இராஜ தந்திரிகள் காலநிலையையும் இடநிலையையும் அறியாமற் செய் யுங் காரியங்கள் இராஜீய முறையாக மாட்டா. தற்காப்பு நிமித்தம்

சிவாஜி தன் தகப்பனார் விடுதலைக்காகப் பீஜாபூர் சமஸ்தானத்திற்குச் சென்று அவர்களுக்குத் தான் அடிபணிதலைவிட பீஜாபூர் சமஸ்தானத்தின்மேல் வெகுகாலமாகக் குறிவைத்திருக்கும் மொகலாயருக்கு உடன்படிக்கை யொன்று செய்து காரியசித்தி யடைதல் நலம் எனக்கொண்டே இவர் ஷாஜஹானுக்குக் கடிதம் எழுதினார். இம்முறையை யனுஷ்டித்ததினால் சிவாஜி சிறந்த இராஜதந்திர நிபுணர் என்பதை ஆங்கில சரித்திரக்காரர்கள் பலர் கூறுகின்றனர். தன்மானம், தன்மதிப்பு இவ்விரண்டையும் சிவாஜி ஒரு நாளும் மறந்ததில்லை. மானம் அழியவாவது, மதிப்பு குன்றவாவது இவர் எக்காரியத்தையும் எக்காலத்திலும் செய்ததில்லை. நிற்க, ஷாஜஹான் கடிதம் பீஜாபூர் சுல்தானுக்கு மிக்க பயத்தை யுண்டுபண்ணிற்று. ஷஹாஜியைக் கொல்லவேண்டுமென்றே இருந்த சுல்தான் அதில்ஷா, ஷஹாஜியின் மித்திரர்களான முரார்ஜகதேவர், ரண்டூல்லாகான் ஆகிய இவர்கள் முறையிட்டபிறகே, ஷஹாஜியை விடுதலை செய்தான். சிவாஜிக்கும் பீஜாபூர் சமஸ்தானத்திற்கும் உள்ள உறவு முன்மாதிரியல்ல; அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி நிலையிலிருந்தனர். சுல்தான் ஷஹாஜியைத் துன்பப்படுத்தினால் சிவாஜி உடனே மொகல் துருப்பைப் பீஜாபூர்மேல் படையெடுக்க ஏவுவார். ஆகவே, இவ்விருதிறத்தாரும் ஒருவர்க்கொருவர் போராடவியலாமல் ஆறுவருடகாலம் சும்மாயிருந்தனர். என்றாலும் பீஜாபூர் சுல்தான்மட்டும் சிவாஜியை எப்படியாகிலும் ஒழிக்கவேண்டுமென்று அதற்குரிய ஏற்பாடுகளையுஞ் செய்துவந்தான். சிவாஜியும் பீஜாபூர் சமஸ்தானத்தின் கபட எண்ணத்தை பன்முறை யறிந்தவராதலால் வெகு சாக்கிரதையுடன் இராணுவத்தைப் பலப்படுத்திவந்தார். இப்படியிருக்கையில் புனாவிற்குத் தென்மேற்காய் ஐம்பதுமைல் தூரத்திலுள்ள மாஹாடு என்னும் ஊருக்குச் சிவாஜி போவது வழக்கமென்பதைப் பீஜாபூர் சுல்தான் அறிந்து, ஆங்கு சிவாஜியைச் சிறைப்படுத்த பாஜீஸாமராஜி என்பவனை அனுப்பினான். அவ்வூருக்கு நேர் கிழக்கில் ஜாவலி என்றொரு ஜமீன் உண்டு. இதற்கு இராஜா சந்தரராவ் ஜமீன்தாரரா யிந்தார். இவர் சிவாஜியின் குலத்தைச் சேர்ந்தவர். சிவாஜி பலதடவைகளில் இவருடன் சம்பாஷித்து மகாராஷ்டிர ஸ்வராஜ்ய ஸ்தபானத்திற்கு உதவிசெய்ய வேண்டுமெனக் கேட்டிருக்கிறார். சந்தரராவ் சரியாகப் பிடிகொடுத்துப்

பேசவில்லை. ஒரு சமயம் சிவாஜி பக்கமாகவும், மற்றொரு சமயம் பீஜாபூர் சுல்தான் பக்கமாகவும் வெகு கபடமாய் இவர் பேசுவது சிவாஜிக்கு எள்ளளவும் பிடிக்க வில்லை. அது முதற்கொண்டே சிவாஜி சந்தரராவிடம் நன்மொழியொன்றும் பலிக்காதென்று அறிந்து அவரை எப்படியாகிலும் அழிக்கவேண்டுமென நிச்சயித்தார். இது இவ்வாறிருக்க, பீஜாபூர் சுல்தான் அனுப்பின பாஜீ சாமராஜ் என்பவன் ஜாவலி ஜாகீரில் சந்தரராவ் ஆதீனத்தில் ஒருவருமறியாதபடி நடமாடிக் கொண்டிருந்தான். அவனுடைய எண்ணம் சந்தரராவுக்கு நன்றாய்த் தெரியும். தெரிந்தும் அதற்கு அவன் உடந்தையாகவே யிருந்தான். பீஜாபூர் சமஸ்தானத்தில் இந்த ஜாகீர்தார்களுக்குள் மிக்க பேர் போனவர் சந்தர ராவ். மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஜாவலி முக்கியமானதோர் இராணுவஸ்தலம். இனிவரும் மகாராஷ்டிர சாம்ராஜ்ய ஸ்தாபனத்திற்கு ஜாவலி இன்றியமையாதது. இது கோனாற்றின் பள்ளத்தாக்கில் உள்ளது. இதைச் சுற்றிலும் அகண்ட பீடபூமியிருக்கும். இப்பீடபூமிக்கு நான்கு பக்கங்களினின்றும் கிருஷ்ணா, வெண்ணாறு, கோனாறு, காயத்திரி, சாவித்திரி ஆகிய இவ்வைந்து ஆறுகள் உற்பத்தியாகின்றன. இவைகளில் காயத்திரி நதியும் சாவித்திரி யாறும் அரபிக் கடலில் சங்கமமாகின்றன. இதைச் சுவாதீனப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது சிவாஜியின் எண்ணம். நிற்க, ஷஹாஜி விடுதலையடைந்ததும் பீஜாபூரிலேயே சிலகாலம் இருக்கும்படி சுல்தான் உத்திரவிட்டான். நான்குவருடம் கழிந்த பின்னர் ஷஹாஜி பெங்களூருக்குச் சென்றார். ஊரெங்கும் திமிலகுமுதமாயிருந்தது. தண்டத்தலைவர் ஒருவருக்கொருவர் போர் செய்தனர். படைத்தலைவர் ஒருவருக்கொருவர் சண்டையிட்டனர். இப்படி சண்டையும் கலகமுமாகவேயிருந்தது. ஷஹாஜிக்குச் சொந்தமாயுள்ள கிணகிரி என்னும் ஜாகீரை * முஸ்தாபாகான் என்பான் ஒருவன் ஷஹாஜி இல்லாமையைக் கண்டு இதுவே தருணமென அதை முற்றுகையிட்டான். ஷஹாஜியின் மூத்த குமாரன் ஸாம்பாஜீ பலமாக எதிர்த்தும்

* இவன் சாமானிய படையணிக்குத் தலைவன். செஞ்சிக்கோட்டையைப் பிடிக்கையில் பிரதம தளகர்த்தராயிருந்தவரும் இப்பெயர் கொண்டவர். ஆனால், அவர் இறந்தார்.

முஸ்தாபாகான் இடங் கொடாததைக் கண்டு, உடனே ஸாம் பாஜீ இவ்விவகாரத்தைப் பீஜாபூர் சுல்தானுக்குத் தெரியப்படுத்து வது தர்மமாகு மென்று எழுதி கடிதமொன்றை முஸ்தாபாகானுக்கு அனுப்பினான். சாம்பாஜீ படைக்கலம் ஒன்றுமில்லாமல் தனியே பதில் கடிதத்திற்கு எதிர்ப்பார்த்திருப்பதை யறிந்த முஸ்தாபாகான் அவனைச் சுடும்படித் தன் தண்டத் தலைவனுக்குக் கட்டளையிட்டான். ஆனால், ஷஹாஜி வந்தவுடனே முஸ்தாபாகானைத் தோற்கடித்துத் தன் மகனைக் கொன்ற பாதகனைக் கொல்லாமல் உயிர் தப்பி வாழும் படி அனுப்பி விட்டார். ஷஹாஜி தனக்குப் பலவிதத்திலும் கஷ் டங்கொடுத்த கோரபடேயை மட்டும் மறக்கவில்லை. ஷஹாஜி அவனைப் பழிக்குப்பழி வாங்குவார் என்பது சுல்தானுக்குத் தெரி யும். சுல்தான் கோரபடேயைக் காப்பாற்றத் தன் முன்னிலையில் இவ்விருவர்களையும் வரவழைத்துப் பழைய விஷயங்களை மறந்து இனி இணையற்ற நேசர்களாய் வாழ்ந்து வருவதாகச் சத்தியஞ் செய்து கொடுக்கும்படி ஷஹாஜியை வேண்டினான். ஷஹாஜியும் ஒருவாறு இணங்கினார். என்றாலும், இவர் மனக்கொதிப்பு மட்டும் அடங்கவில்லை. ஷஹாஜி கடைசியாக சிவாஜிக்குக் கடிதமொன்று பின் வருமாறு எழுதினார்.

என் பிரியமுள்ள சிவாஜிக்கு,

நீ எடுத்த காரியத்தைப் பூர்த்தி பண்ணாமல் விட்டுவிடாதே. கடவுளின் அருளினால் உன் சத்துருக்கள் நாசமடைவார்கள். கட வுள் உனக்கு வெற்றியையும் எஸல்லையுந்தந்தருள்வாராக. *பாஜீ கோரபடேக்கு மரியாதை செய்யாதிருக்க மறக்காதே. அவனால் எனக்கு உண்டான செளகரியங்கள் பல என்பது உனக்குத் தெரியும்.

சிவாஜி இதின் மறை பொருளை யுணர்ந்து கோரபடேயைப் பழித்தீர்க்கச் சமயம் பார்த்திருந்தார்.

---

* பாஜீ கோரபடே ஷஹாஜியைச் சிறைப்படுத்தினவன்; இவனால் பல கஷ்டங்கள் அடைந்தார் ஷஹாஜி. இது இடக்கரடக்கல். (சொல்லத் தகாத வார்த்தையை மறைத்துச் சொல்வது)

i

ஜாவலி ஸ்வாதீனம்.

பாஜீ கோரபடேயைப் பழி தீர்ப்பதற்கு முன்னர், சந்தரராவை சுவாதீனப்படுத்திக் கொள்ளவேண்டு மென்னும் எண்ணம் சிவாஜிக்கு இருந்தது. என்றாலும் சந்தரராவின் நடத்தை சிவாஜிக்கு எள்ளளவும் பிடிக்கவில்லை. மகாராஷ்டிர சாம்ராஜ்ய ஸ்தாபனத்திற்குச் சந்தரராவ் முதலிய ஜமீன்தாரர்கள் தனக்குத் தடையாக யிருப்பதை யறிந்து அவர்களை யழிக்க முயன்றார். முகம்மதீயர் அரசாட்சியில் சிறிது உயர்ந்த அந்தஸ்துடைய ஜமீன்தார்களை ஒழிக்கும் கடமை சிவாஜிக்கு ஏற்பட்டது. முகம்மதீய அரசாட்சியின் உதவியின்றித் தனியே சுய ஆட்சி ஸ்தாபிப்பதை அவர்கள் ஒப்பவில்லை. இச்சமஸ்தானங்களில் பட்டமும் பரிசும் அடிக்கடி பெற்றுவருவதால் அவர்கள் தங்கள் சுயநலத்தையே நாடிப் பொது நலத்தைக் கனவிலும் கருதவில்லை. அதினாலேயே சிவாஜி தன் ஸ்வதர்மத்திற்கு விக்கினஞ் செய்துவரும் மராடியர்களைத் தண்டித்து வந்தார். நிற்க, சிவாஜி குழந்தையா யிருக்கையில் ஜீஜாபாய் சந்தரராவ் வீட்டில் தங்கியிருந்து அவன் குமாரத்திகளி லொருத்தியைச் சிவாஜிக்கு விவாகஞ் செய்து கொடுக்கும்படி கேட்டாள். சந்தரராவ் அதற் கிணங்கவில்லை. ஆகவே சிவாஜியைச் சிறுபிராயம் முதற் கொண்டே சந்தரராவ் நன்றாய் அறிவார். தன் தாய் வார்த்தையைத் தள்ளின சந்தர ராவைக் கீழ்ப்படியச்செய்து அவன் குமாரத்திகளி லொருத்தியை மணந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார். உடனே, ரகோபலால் ஆத்ரேயர் என்னும் ஒரு அந்தணரையும் சாம்பாஜீ காவாஜீ என்னும் மராதியரையும் தூதாக ஜாவலிக்கு அனுப்பினார். சந்தர ராவ் சரியாகப் பிடிகொடுத்துப் பேசாமல் கால தாமதஞ் செய்துவந்தார். அவன் காலதாமதஞ் செய்வதால் நமக்கு எனாகிலும் தீங்கு விளைப்பான் என்று கருதி, சிவாஜி உடனே நல்ல பராக்கிரமசாலிகளாகஆயிரம் வீரர்களுடன் ஜாவலிக்குப்புறப்பட்டார். புறப்பட்ட இவர் முதலில் புரந்தரன்கோட்டை வழியாகப் போய்த் திடீரென்று அன்றிரவு வழிமாறி வேறுதிக்காய்ச் சென்று மகாபலீஸ்வரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். ரகோபலால் ஆத்ரேயர் கடை

சியாகச் சந்தரராவைக் கண்டார். நடந்தது என்னவென்பது சரியாகத்தெரியவில்லை. சந்திரராவ் வஞ்சனை செய்கிறான் என்றறிந்த ஆத்ரேயர் அவன்மீது கடுங்கோபங் கொண்டார். சந்தரராவ் சிவாஜி துராகிரதமாய் மகாபலீஸ்வரத்தைக் கைப்பற்றிக் கொண்டு படையெடுக்கிறான் என்று ஆத்ரேயர்மீது பெருங்கோபங் கொண்டார். இப்படி ஒருவருக்கொருவர் கோபாவேசங் கொண்டு வித்தியாச வார்த்தைகள் கூறலுற்றனர். வரவர வார்த்தைகள் கடுமையாயின. உடனே உடைவாளை ஒவ்வொருவரும் உருவினர். கடைசியாக ஆத்ரேயரும் சாம்பாஜீயும் எழும்பி மகா உக்கிரத்துடன் சந்தரராவையும் அவன் சகோதரரையும் வெட்டித் தள்ளினர். சந்தரராவ் வெட்டுண்ட காலம் 1655. உடனே ஆத்ரேயரும் சாம்பாஜீ காவாஜீயும் ஓட்டம் பிடித்துச் சிவாஜியிடம் வந்து சேர்ந்தனர். சிவாஜி இவர்களைக் கொல்லும்படிச் சொல்லவில்லை. தூதராக அனுப்பினார். என்றாலும் சந்தர ராவ் மாண்டான் என்னுஞ் செய்தியைக் கேட்டவுடன் சிவாஜி தன் சேனைகளுடன் ஜாவலி நகருக்குள் பிரவேசித்தார். *சந்தர ராவின் இதர சகோதரர்கள் சிவாஜியை யடைக்கலம் புகுந்தனர். பாலாஜி சந்தர ராவின் மதிமந்திரி ஹனுமந்த ராவும் சந்தர ராவ் † குமாரர்களும் வெகு தைரியமாகப் போர் செய்தனர். சிவாஜியின் வீரர்களுக்கு முன் அவர்கள் நிற்க முடியாமல் திகைத்தனர். சிவாஜி அவர்களைச் சிறைப்படுத்தி அப்பால் தன் கீழே உத்தியோகமுங் கொடுத்தார். ஜாவலியும் அதைச் சேர்ந்த நிலங்களும் சிவாஜிக்குச் சொந்தமாயின.

ஜாவலிக்குக் கொஞ்சதூரத்தில் வஸோடா என்னும் ஒரு பலமான கோட்டை உண்டு. அது, அப்புறம் வெகுகாலமளவு காராக்கிரகமா யிருந்தது. இது, முதல் எதிர்ப்பிலேயே சிவாஜிக்குச் சொந்தமாயிற்று. ஜாவலியைக் கைப்பற்றினதும் சிவாஜிக்குத்

---

* சந்தர ராவுக்குப் பிறப்புப் பெயர் பாலாஜி. இவர் முழுப் பெயர் ராஜா பாலாஜீ சந்தர ராவ்.

† சந்தர ராவ் குமாரர்கள் பிடிபட்டதும் சிவாஜி அவர்களைக் கொல்ல உத்திரவுகொடுத்தார் என்று சில ஆங்கில சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். இது மிகையேயாகும். யுத்தத்தில் அகப்பட்ட சாமானிய வீரர்களைக்கூட சிவாஜி துன்பப்படுத்தாமல் அவர்களை உபசரித்திருக்கிறார்.

திரண்டதோர் திரவியம் அகப்பட்டது. வெகுகாலமாகச் சந்தர ராவ் வம்சத்தினர் சேகரித்த திரவியம் உபயோகப்பட்டது. இப் பணத்தைக் கொண்டு ஜாவலி நகரையும் மகாபலீஸ்வரமலைமீது வெகுகாலமாக யிருந்துவரும் பவானிதேவியின் கோயிலையும் சீர் திருத்தினர். படைக்கலங்கள் பலவும் பெற்றார். மிகுதிப் பணத்தை * பிரதாபகடா கோட்டையைப் பிடிக்க உபகரணங்களைச் சேகரிப்பதில் சிவாஜி செலவு செய்தார். இப்பிரதாபகடா கோட்டையைப் பற்றிய பழையதொரு கதையுண்டு. இது சிவதிக்கு விஜயத்தில் இருப்பது. மாலோஜிநாள் முதற்கொண்டு இப்போன்ஸலே வம்சத்தினர்கள் துலாபுரத்திலுள்ள பவானிதேவியைத் தரிசிக்க வருடத்திற்கொரு முறை போவது வழக்கம். சிவாஜியின் படையெழுச்சிக்கப்புறம் துலாபுரத்திற்குப்போவது கிடையாது. ஏனெனில், ஷஹாஜியின் ஜாகிருக்கு வெகு தூரத்திலிருப்பதால், துலாபுரத்திற்குச் செல்வது பந்தோபஸ்திற்குக் குறைவாக யிருந்தது. இதற்காக சிவாஜி ரைரிக் கோட்டையில் பவானிதேவிக்குக் கோயிலொன்று கட்டி, சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப் பளிங்குக்கல் கொண்டுவர நான்கு திக்குகளுக்கும் ஆள்களை யனுப்பினர். ஆனால் ஒரு நாளிரவில் பவானி தேவி தன்னெதிரில் நிற்பதாகவும் அத் தேவி தனக்கு ரைரிக்கோட்டையில் இருக்கச் சம்மதம் இல்லையென்றும் மகாபலீஸ்வர மலைக்குச் சமீபத்தே யுள்ள போரப்பிய மலையில் வசிக்கவேண்டு மென்றுஞ் சொன்னதாகச் சிவாஜி கனாக் கண்டார். உடனே, மறுநாள் காலையில் அம்மலையைத் தேடிச் சென்றார்.

ii

பிரதாபகடா.

இம்மலை மகாபலீஸ்வர மலைக்கு மேற்கே பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ளது. சிவாஜி கடைசியாக இம்மலை உச்சியில் சென்று அங்குமிங்கும் பார்க்கையில் ஒரு லிங்கம் அகப்பட்டது. கனவே நனவாக முடிந்ததென்று வெகு ஆச்சர்யப்பட்டு சிவாஜி உடனே

* பிரதாபகடா என்பதற்கு வெற்றிக் கோட்டை என்பது பொருள். இது காரணப் பெயர்.

மோரோ பிங்களேயை யழைத்துப் பவானி தேவிக்கு ஒரு கோயிலும் அக்கோயிலைச் சுற்றிப் பலமான ஒரு கோட்டையும் கட்டும்படி உத்திரவு கொடுத்தார். இக்கோட்டைக்குப் பிரதாப கடா என்று பெயரிட்டார். பவானி தேவியால் குறிப் பித்த இடம் வெகு ஆச்சர்யமானது. கோனு கணவாய்க்கு மேலே ஆயிரம் அடி உயரத்தில் பிரதாபகடா கோட்டை கட்டப்பட்டது. கோட்டைகளுக்குள் இது வெகு உன்னதமானது. இக்கோனு கணவாயிலிருந்து கொங்கணத்திற்குச் செல்லும் வழி பிரதாபகடாவைச் சேர்ந்ததாகையால் சிவாஜிக்கு இது பெருத்த இராணுவ ஸ்தலமாகும். இதுடன் சிவாஜியின் பழைய ஜாகிரையும் ஜாவலி ஜாகிரையும் இது ஒன்று சேர்க்கிறது. பிரதாபகடா கோட்டை ஸ்வாதீனமானவுடன் ஜாவலிப் பிராந்தியத்திற்குள் மிக்க செழிப்புள்ள கோல் வாடியையும் சிவாஜி கைப்பற்றினர். நிற்க, கி. பி. 1656-ம் வருடத்தில் பீஜாபூருக்கும் மொகாலயருக்கும் சண்டையுண்டாயிற்று. ஷாஜஹான் மூன்றுவது குமாரனை ஔரங்கசிப் தக்ஷிணத்திற்கு வந்து கோல்கொண்டா மீது படையெடுத்து மன்னனைத் தோற்கடித்து அவமானப்படுத்தினன். இது கழிந்த உடனே ஔரங்கசீப் பீஜாபூர் மீது திரும்பினன். பீஜாபூர் சுல்தான் ஷாஜஹான் மூத்த குமாரனை டேரா ஸுகோவிற்கு ஆப்த நண்பர். ஆகையால் ஔரங்கசீப் இவனைத் துவேஷித்தான். கி. பி. 1656-ம் வருடம் நவம்பர் மாதம் பீஜாபூர் சுல்தான் இறந்தான். அவனுக்கு ஒரே புத்திரன் இருந்தான். அவன் பெயர் ஆலி அதில் ஷா. இவனுக்கு அப்பொழுது வயது பத்தொன்பது. இவ்விளவரசனுடைய பாலியத்தையும் இராஜீய விஷயங்களில் அனுபோகமற்றிருப்பதையுங்கண்ட ஔரங்கசீப் தகப்பன்மேற் கொண்ட பகைமையைப் பிள்ளை மீது காட்டுவதற்கொப்ப ஆலி அதில்ஷாவைப் பீஜாபூர் சமஸ்தானத்திற்கு உரியவன் அல்லவென்று ஆட்சேபித்தான். இவ்வாட்சேபனையை ஷாஜஹானும் ஒப்பி பீஜாபூர் மீது படையெடுக்க ஔரங்க சீப்புக்கு உத்திரவு செய்தான். இத்திக்கற்ற இளவரசன் ஔரங்கசீப்புக்கு அடிபணிந்து அவன் இஷ்டப்படி உடன்படிக்கை செய்து ஒரு கோடிரூபாய் போர்த்திறையாகவும் கொடுக்க சம்மதித்தான். ஆனால் ஔரங்சீப் இதற்கு இணங்க

வில்லை. பீஜாபூரை அடியுடன் சுவாதீனப்படுத்திக் கொள்வதே ஒளரங்கசீப்பின் எண்ணமாதலால் ஊரைச் சூறையாடி இராசதானியை முற்றுகை யிட்டான். இது கடவுளுக்கே சகிக்கவில்லை. உடனே ஒளரங்கசிப் டில்லிக்குத் திரும்ப நேரிட்டது. கி. பி. 1657-ம் வருடம் செப்டம்பர் மாதம் 8-ந்தேதி ஷாஜஹான் நோய் கொண்டான். இவன் மூத்தபிள்ளை டோரா ஸுகோ ஆக்ராவிலிருந்து வந்து சிம்மாதன மெய்தினன். ஷாஜஹான் இரண்டாவது பிள்ளை ஸுஜா வங்காளத்தை யாண்டு வந்தான். கடைசி குமாரன் மூரத்பக்ஷ் ஆமதாபாத்தை ஆண்டுவந்தான். இவ்விருவர்களும் டோராவுடன் கலகஞ் செய்தனர். இதற்குள் ஒளரங்கசிப்பும் பெரிய நிதிக்குவியலுடன் வந்து டோராவை எதிர்த்தான். இதற்குள் ஷாஜஹான் சொஸ்தமடைந்து பிள்ளைகளை அவரவர் இருப்பிடம் போக உத்திரவு செய்தான். இவ் வுத்திரவை ஒருவரும் கேட்கவில்லை. கடைசியாக அம்மூவர்களும் ஒன்று சேர்ந்து டோராஸுகோவைத் தோற்கடித்தனர். இவர்கள் வெற்றியடைந்த கொஞ்சநாள் கழிந்த பின்னர், ஒளரங்கசிப் கி. பி. 1658-ம் வருடத்தில் மூரத்பக்ஷியைச் சிறைப்படுத்தினன். ஷுஜாவைத் தோற்கடித்து ஊரைவிட்டுத் துரத்தினன். டோராஸுகோவைக் கொன்றான். தகப்பனைச் சிம்மாதனத்தை விட்டு இறக்கினன். இவ்வளவு காரியங்களை வெகு வேகமாய் ஒன்றன்பின் ஒன்றாய்ச் செய்து முடிந்ததும் ஒளரங்கசிப் டில்லி பாதுஷாவானன். ஒளரங்கசிப் முதல் முதல் பீஜாபூர்மீது படையெடுத்து வருகையில் சிவாஜி அவனுக்கு உதவியாகச் சேர்ந்து கொண்டார். ஒளரங்கசிப்பின் வெற்றி தட்சிணத்தில் நாளுக்குநாள் பெருகிற்று. சிவாஜிக்கு இது பொறுக்கவில்லை. முகம்மதியர்களின் ஆதிபத்தியம் சிறிதுமில்லாமல் மராடியர்களைச் சுதந்தரர்களாக்க வேண்டு மென்பதையே சிவாஜி அடிக்கடி நினைத்துப் புதிய புதிய தீர்மானங்களைச் செய்தார். கி. பி. 1657-ம் வருடம் மே மாதம் சிவாஜி ஜுனார் பட்டணத்தையும் ஆமத் நகரத்தையும் எதிர்த்துக் கொள்ளை யடித்தார். டில்லி பாதுஷாவாக வேண்டு மென்பதையே கவலையாகக் கொண்டிருந்த ஒளரங்கசிப் சிவாஜியின் போரெழுச்சியைக் கவனிக்கவில்லை. நிற்க சிவாஜி இனி பீஜாபூர் வழியாக மராடியர்களிக்குத் துன்பம் நேரிடா

தென்பதை யறிந்து ஔரங்கசிப்பை நாடினர். சமீபத்தில் தாக்கி னதை மன்னிக்கும்படி சிவாஜி ஔரங்கசிப்புக்குக் கடிதம் எழுதி ஞர். ஔரங்கசிப்பும் சிவாஜியை மன்னித்து, இனி டில்லி பாதுஷா விற்கு விரோதஞ் செய்யாமல் விஸ்வாசித்தால் பீஜாபூர் பிராந்தியங் களில் இனி ஜெயிக்கும் இடங்களையும் சிவாஜியிடமே விடப்படும் என்று பதில் கடிதமொன்று சிவாஜிக்கு அனுப்பினன். பீஜாபூர் சமஸ்தானம் அழிய வாரம்பித்தது. சரியான இராஜ தந்திரிகள் கிடையாமல் நகர பரிபாலன விஷயங்கள் தாறுமாருய்க் கிடந்தன. தேசகாப்புக்குப் போதுமான இராணுவங்கள் இல்லாமல் நாடு ஆலோலப்பட்டது. சமஸ்தானம் எங்கும் அந்தக் கேடாய்ப் பழு துற்றுப் பாழடைந்திருந்தது. பீஜாபூர்பால் சிவாஜிக்குக் கொஞ்ச மேனும் பயங்கிடையாது. சிவாஜியின் பிராந்தியங்களில் வெற் றியே குடி கொண்டிருந்தது. 1659-ம் வருடத்தில் சிவாஜி ஜஞ் ஜீரா பட்டினத்தைப் பிடிக்க எத்தனித்தார்.

iii

ஜஞ்ஜீரா.

இது அரபிக்கடலில் முக்கியமான துறைமுகப்பட்டணம். பூர்வம் ஆமத் நகரைப் பரிபாலித்து வந்த மாலிக் ஆம்பர் என்னும் மதி மந்திரி யொருவன் நாட்டு வியாபாரத்தை விர்த்தி செய்யக் கருதியவனுய் இப்பட்டினத்தைப் பெரிய கடற்படை ஸ்தலமாகச் செய்தான். ஆமத் நகரம் பிளவுபட்டவுடனே இது பீஜாபூருக்குச் சொந்தமாயிற்று. ஆமத் நகர் சமஸ்தானத்தில் இருந்த அபி ஸீனிய மாலுமிகளையே பீஜாபூர் சமஸ்தானமும் இருத்திக்கொண் டது. சிவாஜி காலத்தில் ஜஞ்ஜீராவிற்குக் காவலனுயிருந்தவன் படேகான். இவன் ஆப்கன் ஜாதியைச் சேர்ந்தவன். இவனிடத்தில் பீஜாபூர் சமஸ்தானத்திற்கு மிக்க நம்பிக்கையும் மரியாதையுமுண்டு. இவனுடைய இராணுவ உத்தியோகஸ்தர்களிட மிருந்தே முதல் முதல் ரைரி, கோஸாலா முதலிய கோட்டைகளை சிவாஜி கைப்பற்றி ஞர். அது முதற்கொண்டு படேகான் சிவாஜியின் நடமாட்டத்தை ஒற்றர்களைக்கொண்டு கவனித்து வந்தான். சிவாஜியின் நடவடிக்கை ஒவ்வொன்றும் இவனுக்குத் தெரியும். ஜஞ்ஜீராவைப் பிடிப்போம்

என்கிற தைரியம் வெகுவாய்ச் சிவாஜிக்கு இருந்தது. உடனே நல்ல பராக்கிரமசாலிகளான எண்ணூறு ஆப்கன் வீரர்களைப்பொறுக்கிப் பெரிய மராடா சேனையைப் பலப்படுத்தி நேதோஜீபல்கர் என்பவரைத் தண்டத் தலைவராக நியமித்தார். இதுடன் சிவாஜி அன்னிய நாட்டு மந்திரி யொருவரைநியமித்தார். இதை வகித்தவர் சாமராஜ் நீலகண்ட ரஞ்ஜேகர். படேகானை எதிர்க்கும் பொறுப்பு இவருக்கு வீழ்ந்தது. இந்நியமனம் சரியானதல்ல. சிவாஜியே ஜஞ்ஜீரா மேல் நேராகப் போயிருக்க வேண்டும். சாமராஜ், படேகான் முன்நிற்க முடியாமல் தோல்வி யடைந்தார். உடனே சிவாஜி பெருத்த சேனையை ரகோபலால் ஆத்ரேயர் மூலமாக அனுப்பி படேகானை முறியடிக்கும்படி ஆக்ஞாபித்தார். இவர் படேகானைத் தாக்கிப் பின்னடையச் செய்தார். மோரோபிங்களே * அன்னிய நாட்டு மதி மந்திரியானார். சிவாஜி, பிங்களே, சாமராஜ் இம்மூவரும் மாரிகாலத்தில் இராணுவத்தைப் பலப்படுத்தினார்கள். இவ்வேற்பாடுகளைக் கண்ட பல ஜமீன் முக்கியஸ்தர்கள் சிவாஜிக்கு வருடந்தோறும் கப்பங்கட்டுவதாக உடன்படிக்கை செய்துகொண்டனர். இங்ஙனம் சிவாஜி பவானி தேவியின் சகாயத்தினால் வெற்றியே பெற்றுவந்ததைப் பீஜாபூர் சமஸ்தானம் சகிக்கமுடியாமல் சிவாஜியை ஒழிக்கத் தீராயோசனைசெய்து வந்தது. சிவாஜிக்கு வரவரப் பகைவர்கள் அநேகர் உண்டானார்கள். சாமானிய தண்டத் தலைவனின் குமாரன் பெரிய பூமிப்பரப்பை யாள்வதா என்னும் எண்ணம் இவர்களுக்கு உண்டாயிற்று. சிவாஜி அதிகமாக பலப்பட்டு வருவதைக்கண்டு சந்தோஷங் கொண்டார் ஷஹாஜி. இங்ஙனம் சிவாஜி மராடியர்களில் பலவேறு ஜாதியார்களை ஒன்று சேர்த்து வெகு சாமர்த்தியமாய் இராஜீய விவகாரங்களைப் பரிபாலித்து வந்தார். இவர் கீழ் பல வீரர்கள் இருந்தனர். பிராமணர்கள், † பிரபு ஜாதியார்கள், மாவலிகள் முதலிய பல ஜாதியார்கள் சிவாஜிக்குப்

---

* அன்னிய நாட்டு மந்திரிக்கு பீஷ்வா என்று பெயர். இதுடன் பிரதானி என்பாரும் உண்டு. 'ப்ரதானப் பேஷவாயத:' என்று இராஜ வியவகார கோசத்தில் கூறியிருப்பது காண்க.

† கொங்கணதேசத்துப் பிராமணர்களுக்குப் பிரபு என்பெயர் இன்றும் வழங்கி வருகின்றது.

பேருதவி புரிந்து சதா கைகட்டிக் காத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் சகலரும் மகாராஷ்டிர சரித்திரத்தில் மிக்க கீர்த்தி வாய்ந்தவர்கள். பிராமண வீரர்களில் நாற்பத்தைந்து வீரர்களைச் சரித்திரக்காரர்கள் குறித்திருக்கின்றனர். பிராமண வீரர்களில் முக்கிய மானவர்களைப்பற்றி நாம் கூறுவோம்: அவர்கள் யாரெனில்:—

1. * மோரோபண்ட் பிங்களே. இவர் சிவாஜியின் அதிகாரத்திற்கு அச்சாணி போன்றவர். இவர் தன் சாமர்த்தியத்தினுல் சிவாஜிக்கு மதிமந்திரியானுர். கோட்டைகள் கட்டுவதில் இவருக்கு இணையுள்ளவர்கள் அக்காலத்தில் வேறெவரும் இல்லை. இராணுவ அமைப்பிலும் இவர் கைதேர்ந்தவர். இவர் தகப்பனுர் ஷஹாஜியின்கீழ் உத்தியோகம் செய்திருந்தார். இவர் 1653-ம் வருடத்திலேயே சிவாஜியின் இராணுவத்தில் சேர்ந்தார். இவர் போகுமிடமெல்லாம் வெற்றியே பெற்றுவருவர். இவர் ஒவ்வொரு சண்டையிலும் போர்புரிந்திருக்கிருர். 1714-ம் வருடத்தில் பாலாஜீ விஸ்வநாதரை மதிமந்திரி (பேஷ்வா) யாக நியமிக்கும்வரை பிங்களே வம்சத்தினர்களே சிவாஜி வம்சத்தினர்களுக்குப் பரம்பரையாக மந்திரி வேலை பார்த்துவந்தனர். இராஜ்ய வியவகார சம்பந்தமான சகல ஏற்பாடுகளைச் சிவாஜிக்கு இவரே அடிக்கடி கூறிவந்தார்.

2. அப்பாஜீ ஸோணதேவர். இவரும் பிங்களேயைப் போலவே சிறுபிராய முதற்கொண்டே சிவாஜியுடன் இருந்துவந்தார். சிவாஜியின் ஜாகீர் எல்லையைவிட்டு கல்யாண புரத்தைத் தாக்கமுதல் முதல் வெளிச்சென்றவர் இவரேயாவர். இவரும் பிங்களேயைப்போல் கோட்டை கட்டுவதில் சமர்த்தர். சிவாஜி டில்லிக்குப் போயிருந்த காலத்தில் ஜீஜாபாய்க்குத் துணையாக அப்பாஜீயும் பிங்களேயுமே யிருந்து வந்தனர். சிவாஜி பட்டாபிஷேக காலத்தில் முதல் முதல் இவரை முஸௌம்தாராக சிவாஜி நியமித்தார். இவருடைய குமாரர் ஆமாத்தியனுக நியமனம் பெற்றுன்.

---

* இப்பிங்களே வம்சத்தினர் ஆந்தர தேசத்தினின்றும் வந்தவர்கள் எனச் சிலர் கூறுகின்றனர். பிங்களே வார்த்தை ஆந்திரம் என்பார்.

3. ரகோபலால் ஆத்ரேயர், * சித்தி ஜாதியார்களுடன் போர் புரிந்தவர்களில் இவரைப்போல் எவரும் சண்டை செய்யவில்லை. ஜாவலிக் காவலனான சந்திரராவைக் கொன்றவரும் இவரே. பீஜாபூர் சமஸ்தானத்திலிருந்து சிவாஜியிடம் அடைக்கலம் புகுந்த பட்டாணி துருக்கவீரர்களின் படைக்கு இவரே தலைவராக யிருந்து வந்தார்.

4. அண்ணஜீதத்தர், இவர் பன்னலம், ராங்கண கோட்டைகளைச் சிவாஜிக்கு ஸ்வாதீனப்படுத்திக் கொடுத்தவர். கொங்கணச் சண்டைகளில் மிக்க யுத்த சாகஸஞ்செய்து அப்பிராந்தியங்களைக் கைப்பற்றினவர். கர்னாடகத்தின்மீது படையெடுத்து ஹுப்ளியைச் சூறை யாடினவரும் இவரேயாவர். தென் கொங்கணத்திற் கதிபதியாய் இவர் வெகு காலமளவு இருந்துவந்தார்.

5. தத்தாஜீ கோபிநாதர். இவர் சிவாஜி வீட்டுக் காரியங்களுக்கு மந்திரியாக நியமனம் பெற்றவர். அப்ஸுல்கானுக்கும் சிவாஜிக்குமுண்டான உடன்படிக்கை விவகாரங்களுக்கு முதல் முதல் தூதராகச் சென்றவர் இவரே.

5. ராயோஜீ சோமநாதர். விதர்ப்ப தேசத்தின்மீது படையெடுத்த காலத்தில் அப்படைக்குத் தலைவராயிருந்து நாடு நகரங்களைக் கைப்பற்றினவர் இவரே. இவர் கொங்கண நாட்டுச்சண்டையிலும் தண்டத்தலைவராயிருந்தார். இவர் தகப்பனார் டபீராக (மந்திரி) யிருந்தார்.

7. நீராஜீ ராயோஜீ. இவர் சிறந்த நியாயாதிகாரியா யிருந்தார் என்றாலும் அநேக போரில் உபதளகர்த்தராகயிருந்து சண்டை செய்துவந்தார்.

பிரபுவீரர்களில் முக்கியமானவர்களின் பெயர் காண்க:—

1. முரார்பாஜீ. இவர் புரந்தரன் கோட்டைக்குக் காவலனா யிருந்தார். திலீர்கான் முற்றுகையிட்ட காலத்தில் வெகு சாமர்த்

* ஜஞ்ஜீரா கோட்டைக் காவலனான யகோன் சித்திஜாதியாரைச் சேர்ந்தவன் என சில சரித்திர வுரையாணியால் யறிகிறோம். சித்தி ஜாதியை நீக்ரோ ஜாதியரெனச் சிலர் கூறுகின்றனர். இச்சாதியார்கள் வெகுகாலமாக கொங்கணக்கரையில் வியாபாரஞ் செய்திருந்தனர்.

தியமாய்ப் போராடி அம்முற்றுகையிலேயே உயிர் துறந்தார். இவர் வெகு சூரர்.

2. பாஜீ பிரபு. இவர் முதல் முதல் சிவாஜியின் சத்துருக்களிடத்தில் இருந்தவர். பின்னர் இவர் சிவாஜிக்கு அத்யந்த சிநேகனுனார். பன்னலக் கோட்டையினின்றும் தப்பி ரங்கணு கோட்டைக்குச் சிவாஜி சென்றபோது, ஒடுக்கமான ஒரு பள்ளத்தாக்கில் ஆயிரம் படை வீரர்களுடன் பீஜாபூர் சேனையை வரவொட்டாமல் தடுத்து சிவாஜி சௌக்கியமாய் ராங்கணு கோட்டைக்கு வந்து சேர்ந்தார் என்ற பீரங்கிச்சப்தம் கேட்கும்வரை எதிரிகளுடன் கொடியபோர் புரிந்தார். இவர் அந்த யுத்தத்திலுண்டான காயத்தினுல் வீர சொர்க்கம் அடைந்தார். சிவாஜியின் உயிரைக்காப்பாற்றத்தன் பிராணனைத் தியாகஞ்செய்த வீரனுக்கு இம்மையிலும் மறுமையிலும் நல்ல பெயர் என்பதும் சந்தேகமா?

3. பாலாஜீ ஆவுஜீ, சிவாஜி வாழ்நாள் வரை அவருக்கு அந்தரங்க காரியதரிசியாக இவர் இருந்து வந்தார். இவர் வெகு சூட்சும புத்தி கொண்டவர். இவருடைய பின் சந்ததியார்களில் ஒருவர் 'சித்தினிபகார்' என்னும் நூலை எழுதியிருக்கிறார்.

மாவலி வீரர்களில் முக்கியமானவர்களின் பெயர் காண்க.

1. தானுஜீ மாலஸூரே இம்மாவலி வீரரைப்பற்றி மகாராஷ்டிர தேச சரித்திரத்தில் நேமி சரித்திர கீதத்தில் பல இசைகள் இருக்கின்றன. இவரும் இவர் தம்பி ஸூரியாஜீயும் சிவாஜிக்கு இரண்டு புஜங்களாக இருந்தனர். இவ்விருவர்களும் பிராணனைவிட்டு சிவாஜிக்கு சிம்மகடாவை சுவாதீனப்படுத்திக் கொடுத்தனர். இவர்களுடைய தீரம் மிகவும் மெச்சத்தக்கது.

2. யஸாஜீகங்க். இவர் மாவலி காலாட்பக்டைக்கு முக்கிய சேனுதிபதி. சிவாஜியின் ஆரம்பப் படையெழுச்சிகளில் இவர் மிக்க வீரப் பிரதாபம் பெற்றவர். சிவாஜியின் வாழ்நாள்வரை இவரும் தானுஜியும் சிவாஜியைவிட்டுப் பிரியாமலே அவருக்கு மெய்க்காப்பாளர்போலிருந்து வந்தனர். அப்ஸல்கான் வந்தயுண்டு காலத்தில்

அவவிருவர்களும் சிவாஜியுடனேயே யிருந்தனர். இவர்களிருவரும் சிவாஜியுடன் டில்லிக்குச் சென்றிருந்தனர்.

3. பாஜீபஸல்கர் தேசமுக்யர். இவரை சிவாஜி பஸல்கர் என்று வெகு அன்புடன் அழைப்பது வழக்கம். கொங்கண யுத்தத்தில் சாவந்தர்களுடன் போராடுகையில் இவர் இறந்தார்.

4. பிரங்கோஜீ நரஸலே. இவர் சக்கன்கோட்டைக் காவலனுயிருந்தார். கி. பி. 1648-ம் வருடத்தில் இவர் சிவாஜிக்குக் கொடுத்தார். இவர் ஒருகாலத்தில் சிவாஜிக்கு எதிரியா யிருந்தும், சக்கன் கோட்டையை மொகலாயர்கள் கைப்பற்றிக்கொண்டதும் இவருக்கு அவர்கள் நல்ல உத்தியோகமொன்று கொடுப்பதாகச் சொல்லியும் இவர் கேட்காமல் சிவாஜியுடன் வந்து சேர்ந்தார்.

4. நேதாஜீ பால்கர். இவரும் யஸாஜியைப்போலவே காலாட்படைக்கு நாயகனுயிருந்தார். இவர் மற்போரில் மிக்க திறங்கொண்டவர். இவர் கிழக்கே படையெடுத்து ஆமத்நகரம் முதல் ஒளரங்கபாத்வரைசென்று நாடு நகரங்களைச் சூறையாடினர். இவர் எவ்விடத்திலும் இருப்பவர். அபாயம் இருக்கும் இடங்களில் எல்லாம் இவர் தன்படையுடன் எதிர்த்து நிற்பார்.

6. பிரதாபராவ் குஜர். இவர் குதிரைப்படைக்கு நாயகன். பாகலன் என்னுமிடத்தில் மொகலாயர்களைத் தோற்கடித்தார். பீஜாபூர் துருப்பைப் பன்னலம் என்னுமிடத்தில் இவர் முறியடித்தார். சிவாஜிக்கும் டில்லி பாதுஷாவிற்கும் உண்டான உடன்படிக்கையில் ஒளரங்கபாத் நகரில் இருந்த மராடி சேனைக்கு இவரே நாயகனுக யிருந்தார். ஒருகாலத்தில் பீஜாபூர் சேனையை முறியடிக்க முடியாமல் கைசோர்ந்துவிட்டார் இவர். சிவாஜி மிக்க கோபங்கொண்டதைக்கண்டு உடனே நல்ல வீரர்களுடன் படையெடுத்துப் பீஜாபூர் சேனையை சின்னுபின்னப்படுத்தி முறியடித்துத் தானும் மாண்டார்.

இவ்வீர நாயகர்களைக் கொண்டு சிவாஜி மென்மேலும் படையெடுக்கத் தீர்மானித்தார்.

ஆருவது அத்தியாயம்.

அப்ஸுல்கான் வதம்.

பீஜாபூர் இராஜ்யத்திலுள்ள கோட்டைகளைக் கொஞ்சங் கொஞ்சமாக சிவாஜி சுவாதீனப்படுத்திக்கொண்டாரென்றும், நாளுக்குநாள் நாடு நகரங்களைச் சேர்த்துப் பலப்படுத்துகிருரென்றும், தன் இடத்திலுள்ள சேனைகளைத் தினேதினே திரட்டிப் பலப்படுத்தி வருகிருரென்றும், ஷஹாஜியின்பொருட்டுப் பல தடவைகளில் மன்னித்தும் நன்றியில்லாமல் நாள்தோறும் பீஜாபூர் சுல்தானுக்குத் துரோகமே செய்துவருகிருரென்றும், பர ராஷ்டர பிரபுத்துவத்தைத் தட்சிணப் பிராந்தியத்தில் வேரூன்றிக் கிளேக்காமல் சேற்றில் நட்ட கம்பமாக்க வேண்டுமென்று பாடுபட்டு வருகிருரென்றும் கேள்விப்பட்ட பீஜாபூர் சுல்தான் ஆலி அதில்ஷா தன் சமஸ்தானத்திலுள்ள மதிமந்திரிகள், பிரதானிகள், தளகர்த்தர்கள் முதலியவர்களை வரவழைத்துச் சபைகூட்டி சிவாஜியைக் கொல்லும் விதத்தைப்பற்றி ஆலோசனை பண்ணினன். இவ் வாலோசனை சபை கூட்டுவதற்கு அதில்ஷாவின் தாயாரே (இறந்த அதில்ஷாவின் மனைவி) காரணமா யிருந்தாள். சிவாஜியைக் கொல்வதற்கு முன்னர் அவன் (சிவாஜி) பற்றின கோட்டைகளை மீண்டும் முற்றுகைசெய்து பற்றவேண்டும் என்று சிலர் கூறினர். மற்றுஞ் சிலர் தகுந்த சேனாதிபதியை யனுப்பிச் சிவாஜியுடன் போர்புரிந்துஅவனைச் சிறைப்படுத்திக் கொண்டுவரவேண்டும் என்று கூறினர். இங்ஙனம் அநேகர் அவரவர்களுடைய அபிப்பிராயங்களை அடுத்து அடுத்துக் கூறிக்கொண்டே வருஞ்சமயத்தில் இராணிக்கு நெருங்கின உறவினனும் சுல்தான் பண்டகசாலைக்குத் தலைமை காரியஸ்தனும், திடகாத்திரனும், சிறந்தமல்லனுமான அப்ஸுல்கான் எழுந்துநின்று 'பாதுஷா! வளைக்கு வளைபுகுந்து புறப்படும் எலியைப்போல் மலைக்குகைக்குக் குகை செல்லும் அச்சிவாஜியைப் பிடித்துச் சிறைபடுத்திக் குதிரைமேல் உட்காரவைத்து ஊரார் அறியும்படி உங்கள் முன்பாகக் கொண்டுவர வல்லேன்' என்று மார்தட்டி வெகு ஆரவாரத்துடன் கூறினன். அப்ஸுல்கான் கூறின வளவிலே மகா சந்தோஷங்

கொண்ட சுல்தான் * பன்னீராயிரம் குதிரைப் படையை யனுப்பிச் சிவாஜியைப் பிடித்துக்கொண்டுவரக் கட்டளையிட்டான். அப்ஸல்கான் சுபாவத்திலேயே நல்ல தேகக்கட்டு வாய்ந்த தீரன். வாள்போரிலும் மற்போரிலும் இவனுக்கு நிகர் அக்காலத்தில் ஒருவருமில்லை. இவன் 'வாய' நகரத்திற்கு நாயகனாய்ச் சின்னாள் இருந்ததினால் கிருஷ்ணாநதி பாயும் இடங்களையும் ஜாவலியைச் சுற்றிய பிராந்தியங்களையும் நன்றாய் அறிவான். அப்ஸல்கான் சேனா சமுத்திரத்தைத் திரட்டிக்கொண்டு வெகு ஆடம்பரத்துடன் புறப்படுவதற்கு முன்னர் அப்ஸல்கான் தன் குருவைக் காணச் சென்றான். கான் வருகையைக் கேட்ட குரு, அவனை எதிர்கொண்டழைக்க வெளிவந்ததும், அவன் சிரசில்லாமல் முண்டமாய் வருவதைக் கண்டார். இது துர் நிமித்தம். நல்ல சகுனமல்ல. உயிருடனிருக்கும் மனிதன் ஒருவனுக்குச் சிரசு தோற்றாமல் இருந்தால் அவன் எட்டுநாட்களில் மரிப்பான் என்பது ஆப்த வாக்கியம். அப்ஸல்கானைப் போக வேண்டாமென்று தடை செய்தார் குரு. குரு மொழி கேளாமல் புறப்பட்டான் கான். புறப்பட்டுச் சற்று தூரம் போனவுடனே பட்டத்து யானை † பட்டிலஷ்கர் இறந்தது. இச் சகுனத்தடைகளை யொன்றும் அப்ஸல்கான் கவனிக்கவில்லை. கி. பி. 1659-ம் வருஷம் செப்டம்பர் மாதம் நல்ல மாரிகாலத்தில் பீஜாபூரை விட்டுப்புறப்பட்டான். சிவாஜியின் தென் புறத்துக் கோட்டைகளை முற்றுகையிட்டு வளைத்துப்போரிட வேண்டுமென்னும் நோக்கத்தைக்கொண்டு அப்ஸல்கான் முதல் முதல் பீஜாபூருக்கு நேர் வடக்கேயுள்ள துலாபுரத்திற்குப் படையெடுத்துச் சென்றான். துலாபுரத்தில் நல்ல அழகுள்ள பவானி தேவியின் விக்கிரகம் இருந்தது. இவ்விக்கிரக மூர்த்தி போன்ஸலே வம்சத்தவர்களுக்கு இல்லுறை தெய்வமாக யிருப்பது. இதை யறிந்த அப்ஸல்கான் விக்கிரகத்தைத் துண்டு துண்டாய் உடைக்க எத்தனித்தான்.

---

* இது சில சரித்திரக்காரர்களின் மதிப்பு. ஆனால் கிராண்ட்டப், 5000 குதிரைப்படை. 7000 காலாடபடை. ஆக பன்னீராயிரம் என்று கூறுகிறார்.

† இது யானையின் பெயர். தற்காலம் திருவனந்தபுரம் முதலிய மலையாள நாடுகளில் யானைகளுக்குப் பேர்வைத்துக் கூப்பிடும் வழக்கம் உண்டு.

அப்ஸுல்கான் கொடிய எண்ணத்தை ஏற்கனவே அறிந்த கோயில் பூசாரிகள் தகுந்த பந்தோபஸ்து செய்துவிட்டனர். அப்ஸுல்கான் விக்கிரகத்தைக் காணுமையால் கடுங்கோபங்கொண்டு காராம்பசு வொன்றைக் கோயிலுக்கு முன் வெட்டி இரத்தத்தைக் கோயில் முழுமையும் தெளிக்கச் சொன்னுன். இச்செய்கை இந்துக்களுக்குக் கன வருத்தத்தை யுண்டுபண்ணினபோதிலும் அப்ஸுல்கான் முன் அவர்கள் ஒன்றுஞ்செய்ய முடியவில்லை. அப்ஸுல்கான் வரவைக் கேள்விப்பட்ட சிவாஜி உடனே இராஜகடா வென்னும் கோட்டையை விட்டு ஜாவலிக்கு வந்து சேர்ந்தார். சிவாஜி ஜாவலிக்கு வந்த செய்தியைக் கேள்விப்பட்ட அப்ஸுல்கான் தன் வழியை மாற்றித் தென் மேற்காய்த் திரும்பி பீமா நதியைக் தாண்டி பண்டர புரத்திற்குவந்து சேர்ந்தான். பண்டர புரத்திலும் அப்ஸுல்கான் இந்துக்களுடைய கோயில்களை இடித்துத் தகர்த்தான். ஆலயங்களில் உள்ள விக்கிரகங்களை ஆற்றில் எறிந்தான். ஆனல் மிக்க பிரசித்து பெற்ற விடல்நாதனைப் பூசாரிகள் முன்னதாகவே ஒளித்து வைத்தனர். இப்படிப் போகுமிடங்கள் தோறும் கொள்ளை யடிபபதும், நாடு நகரங்களைக் கொளுத்துவதுமாக அப்ஸுல்கான் இருந்தான். கடைசியாக அப்ஸுல்கான் பண்டர புரத்தை விட்டு ரஹிமத்புரத்தின் வழியாய் வைய நகரத்திற்கு வந்து சேர்ந்தான். இங்கு சிவாஜியைச் சிறைப்படுத்தி அடைக்க அவன் ஒரு கூடுகட்ட உத்தரவுஞ் செய்தான் அப்ஸுல்கான். சிவாஜியை வைய நகரத்திற்கு வரும்படி தூதனுப்பினுன். பீஜாபூர் நடவடிக்கைகளைச் சிவாஜி நன்குய் அறிந்தவராகையால் அப்ஸுல்கானிடம் பெரிய சூது இருக்கிற தென்று அறிந்துகொண்டார். சிவாஜியின் சாரணர்களில் மிக்க கீர்த்திபெற்ற விஸ்வேஸராவ் முகம்மதீய பக்கிரி வேடந் தரித்து அப்ஸுல்கான்பாடி வீட்டுக்குச் சென்று அவன் எண்ணத்தை யறிந்து சிவாஜிக்குத் தெரிவித்தான். அப்ஸுல்கான் சிவாஜியிடம் தூதுவராக யனுப்பிய * கிருஷ்ணுஜீ பாஷ்கர் பிரதாப

* இவர் வாய நகரத்திற்குக் குல்கர்ணி (முன்சீப்பு) பாயிருந்து அப்ஸுல் கானுக்குத் திவாஞைர். ஆனல், அப்ஸுல்கான் தூதரைப்பற்றிப் பலர் பல விதமாகக் கூறுகின்றனர். அப்ஸுல்கானைப்பற்றிய பண்ணிப்பாட்டுகளில் தூதுவர் கிருஷ்ணுஜீ யெனக்கூறப்படுகின்றது. ஜாடுநாத ஸிர்க்கார் பாரஸீக சரித்திரத்தை மொழி பெயர்த்து வருகையில் இத்தூதுவரைக் கோபிநாத

கடா வென்னுங் கோட்டைக்குச் சென்று சிவாஜியைக்கண்டு, வாய நகரத்தில் இருக்கும் அப்ஸுல்கானைக்காணும்படி அவன் கூறுவதாகக் கூறினான். சிவாஜி தூதுவரைப்பார்த்து அப்ஸுல்கான் அங்ஙனம் என்னைக் காண வேண்டுமென்பது நிச்சயமாயின் ஜாவலியில் அவனை நான் பார்க்கிறேன்; நான் வாயநகரத்திற்குப் போகப் பயப்படுகிறேன். அவர் இங்கு வந்தால் நான் சகல ஏற்பாடுகளையும் செய்வேன் என்று விடைதந்தார். கிருஷ்ணாஜி அன்றிரவெல்லாம் சிவாஜியிடமே கழித்தார். அன்று இராத்திரி நடுயாமத்தில் சிவாஜி கிருஷ்ணாஜியிடம் வந்து 'ஸ்வாமி! நான் என் குலதெய்வமாகிய பவானிதேவியை நம்பி ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறேன். மகாராஷ்டிரம் அன்னியர்களுக்குக் கீழ்ப்பட்டிருப்பதைக் காண நான் சகியேன். மராடியர்கள் நிர்ப்பயமாய்ச் சுவாதீனத்திலிருக்க வேண்டுமென்பதே என் கருத்து. இந்துக்களுடைய ஆலயங்கள் விளங்காமல் இருப்பதை நீர் அறிவீர். துலாபுரம் அழிந்த விஷயம் உமக்குத்தெரியும். பண்டரபுரம் நிர்த்தூளியானதும் உமக்குத் தெரியாமலிராது. நம்மால் பூசிக்கப்பட்ட பசு இனங்கள் படும்பாட்டை நீர் அனுபவத்தில் கண்டு இருப்பீர். பக்தியும் பூஜையும் கீர்த்தனமும் சதா வைபவத்துடன் விளங்கியிருக்கும் கோயில்களில் நாற்றமும் மாமிசத் துண்டங்களும் இரத்தக் கால்வாய்களுமாக ஓடுகின்றன. இதைக்காணும் ஒவ்வொரு மராடியின் மனம் எவ்வாறிருக்கும் என்பதை யான் உமக்குச்சொல்ல வேண்டியதில்லை. நான் உம்மை எனக்குப் பரமமித்திரராக எண்ணுகிறேன். நீர் என் போலவே மராடிய ஜாதியில் பிறந்தவராதலாலும் பரந்த தெய்வ பக்தி கொண்டவராதலாலும் இவ்விஷயங்களை நன்றாய் ஆலோசிப்பீர் என நான் நம்புகிறேன். பகவானுடைய திருவருள் உமக்கு

பண்ட் எனக்கூறுகிறார்: கிராண்ட் டப் என்பவரும் இவ்வபிப் பிராயமே கொண்டிருக்கிறார். நிற்க, சிவதிக்கு விஜயத்திலும் ஷெட்காவகார் பகார் என்னும் நூலிலும் சிவாஜியின் தூது கோபிநாதபண்ட் என்றும் அப்ஸுல்கான் தூதர் கிருஷ்ணாஜி பாஷ்கரரென்றும் கூறியிருப்பது காண்க. இதல்லாமல் மகாராஷ்டிர சரித்திரத்தைப் புதிதாக எழுதி வெளிப்படுத்திய மிஸ்டர் கின்கெயிட், மிஸ்டர் பரஸ்நிஸ் இவர்களும் கிராண்ட் டப் அபிப்பிராயத்தைக் கண்டனஞ்செய்து கிருஷ்ணாஜி பாஷ்கரரே அப்ஸுல்கான் தூதர் என ஊர்ஜிதப்படுத்தினர்.

உண்டாகக் கடவதாக. மேலும் இப்பொழுது உம்மை அனுப்பின அப்ஸுல்கான் எண்ணம் எனக்குத் தெளிவுறக் கூறும். இவ்விஷயத்தில் நீரும் நானும் மனமொத்துப் போகவேண்டும். உம்முடைய பின் சந்ததியார்கள் சுகமே யனுபவிப்பதற்குப் போதுமான நிலங்களை ஜாகிராக உமக்குக் கொடுக்கிறேன். அப்ஸுல்கான் என்னைக் கொல்லவேண்டு மென்றிருக்கிறான் என்பதைச் சாரணர் மூலமாய் நான் அறிந்தேன். ஐயா! சற்றே யோசித்துக்கூறும்' என்றிவ்வாறு கூறினார். சிவாஜியின் வார்த்தைகள் எவருடைய மனதைத்தான் கரைக்காது. உடனே சிவாஜியின் வார்த்தைகளில் கிருஷ்ணாஜீ மிக்க ஈடுபட்டவராய், 'சிவாஜி! நீர் எண்ணிய எண்ணங்கள் யாவும் சரியே. உமது ஒற்றர்கள் கூறினதும் வாஸ்தவமே. அப்ஸுல்கான் உம்மைக் கொலைசெய்யவே எண்ணியிருக்கிறான்' என்று கூறினார். உடனே சிவாஜி கிருஷ்ணாஜீயை நோக்கி 'அப்படியானால் நீர் தயவுசெய்து அப்ஸுல்கானை இங்கு வரும்படி செய்யும் என்று கூறி *பண்டோஜி கோபிநாதரைக் கிருஷ்ணாஜியுடன் அனுப்பி அப்ஸுல்கானை வணக்கமாய் அழைத்து வரும்படி கட்டளையிட்டார். பண்டோஜியும் கிருஷ்ணாஜியும் மறுநாள் காலை புறப்பட்டு அப்ஸுல்கானைக் கண்டனர். கிருஷ்ணாஜி அப்ஸுல்கானை நோக்கி, "ஐயா! சிவாஜி மிக்க பயங்காளி. உமது பெயரைக் கேட்டவுடனே அவனுக்குண்டான பயம் இவ்வளவவ்வளவல்ல. உம்மை எதிர்க்கும் எண்ணம் அவனுக்கு இல்லை என்பதை நான் நிச்சயமாய்க் கூறுவேன். இவ்விடம் வந்து உம்மைக் காணுவதற்கே திகில் கொண்டிருக்கிறான். நாம் அவனிருக்குமிடமே தாராளமாய்ச் செல்லலாம். இதோ உம் எதிர் நிற்பவர் சிவாஜியின் தூதர். உம்மை அழைக்க வந்திருக்கிறார், சிவாஜிக்குப் பதில்சொல்லி யனுப்பும்" என்று கூறினார். அப்ஸுல்கான் சிவாஜியின் பயங்காளித்தனத்தை யறிந்து அவனைச் சிறு துரும்பாய்ப் பாவித்துத் தூதரைநோக்கி, 'சிவாஜிக்கு என்னிடத்தில் பயமிருப்பது வாஸ்தவமாயின் நானே புறப்பட்டு அவன் குறித்த விடத்திற்கே வருவோம் என்று போய்ச் சொல்லும்' என்று

* இவரை அப்ஸுல்கான் தூதர் எனச் சில சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். மற்றுஞ் சிலர் சிவாஜியின் தூதரெனவே கூறியிருக்கின்றனர். இவரை கோபிநாதபண்டி எனவும் கூப்பிடுவது உண்டு.

வெகு இறுமாப்புடன் அலட்சியமாய்க்கூறி பண்டோஜியை யனுப்பினான்.

அப்ஸலுல்காணுக்குத் தன் புஜபல பராக்கிரமும் சேனைகளின் வெள்ளப் பெருக்கும் நன்றாய்த் தெரியும். சிவாஜியின் சேனைகளை விட அப்ஸலுல்கான் சேனை மிகவும் பெரிது என்பதே அவனுடைய எண்ணம். சிவாஜியை மடக்கிச் சிறைப்படுத்திக் கொண்டு போகலாம் என்னும் தைரியம் அப்ஸலுல்கானுக்கு இருந்தது. நிற்க, அப்ஸலுல்கானிடம் உத்திரவு பெற்றுச்சென்ற பண்டோஜி உடனே சிவாஜிக்கு அப்ஸலுல்கான் வரவை வெகு விவரமாக அஞ்சல்மேல் அஞ்சலாக அறிவித்தார். சிவாஜியும் அப்ஸலுல்கான் பண்டரபுரத்தை விட்டு ஜாவலிதிசை நோக்கி வருகிறான் என்று கேள்விப்பட்டவுடனே, பிரதாபகடா கோட்டையை பலப்படுத்த ஆரம்பித்தார். உட்பிராந்தியங்களிலுள்ள கோட்டைகளைக் காப்பதற்குமட்டும் சில துருப்புகளை வைத்து மிகுதி சேனைகளைப் பிரதாப கடாவிற்கு வரும்படி சிவாஜி கட்டளையிட்டார். பிரதாபகடாவைச் சுற்றிலும் அடர்ந்த அடவிகள் இருப்பதினால் அவைகளினின்று பகைவர்கள் வரமுடியாது. கிழக்குத் திசை சற்றே திறந்தவெளி. இவ்வழியாய் அப்ஸலுல்கானை வரவழைக்க எண்ணி ஆங்கு காடுவெட்டிக் கரம்புகளைந்து நல்ல அகலமும் உயரமுமான ரஸ்தா ஒன்றை சிவாஜி ஏற்படுத்தினார். ரஸ்தாவைச் சுற்றிலும் ஆழ்ந்த பள்ளத்தாக்குகள் இருந்தன. இப் பள்ளத்தாக்குகளில் அடர்ந்த மரங்கள் இருப்பதால் பாதையின்மீது ஏறிப்போகும் மனிதர்கள் எவரும் கீழே நடப்பதைக் காணமுடியாது; ரஸ்தாக்களில் மைலுக்கு மைல் பாடி வீடுகள் அமைக்கப்பட்டன; இவ்வீடுகள் தோறும் படைகளுக்கு வேண்டிய சகல சாமான்களும் நிறைந்திருந்தன; ரஸ்தாக்களின் கீழுள்ள பள்ளத்தாக்குகளில் பகைவர் படைகளின் நடவடிக்கைகளையறிய, வீரர்கள் பலரை ஆயுதபாணிகளாகச் சிவாஜி நிறுத்திவைத்தார்.

கோட்டையைச் சுற்றிலுமுள்ள அகழிகளையும் அரண்களையும் வெகு பந்தோபஸ்துடன் பீரங்கிப்படைகொண்டு காவல் வைத்தார். இங்ஙனம் பிரதாபகடா கோட்டையும் அதைச்சுற்றிலுமுள்ள இடங்களிலும் நல்ல பந்தோபஸ்துடன் ஸேனைகளை ஏற்படுத்தின பிறகு சிவாஜி தன் நண்பர்களை யழைத்துச் சபைகூட்டினார். நிற்க,

அப்ஸுல்கான் வாயநகரை விட்டு வெகு ஆடம்பரத்துடன் புறப்பட்டான். வழிகளில் சேனைகளுக்கு வேண்டிய பண்டங்கள் நிறைந்திருப்பதைக் கண்டு கான் சந்தோஷித்தான். நிர்ப்பயமாய் வெகு இறுமாப்புடன் ஆடல் பாடல்கள் கொண்டு வழிநடந்தான் அப்ஸுல்கான். அப்ஸுல்கானைச் சந்திப்பதற்கு பிரதாபகடா கோட்டைக்குக் கால் மைல் தூரத்திலுள்ள ஒரு சிறிய மைதானத்தில் அழகிய மண்டபம் ஒன்று தோரணங்களுடனும் வர்ணச் சீலைகளுடனும் வெகு ஆடம்பரத்துடன் அலங்கரிக்கப்பட்டது. அப்ஸுல்கான் ராடதொண்டி கணவாய்க்குள் இறங்கி, பிரதாபகடாவின் அடிவாரத்திற்கு வரும்வழியில் படை முன்னணியில் துவஜமெடுத்து வரும் யானை, முன்செல்லாமல் அசைவற்று நின்றது. இதுவும் அப்ஸுல்கானுக்குப் பெருத்த சகுனத்தடைபோலும். ஆனால், கான் இதையொரு பொருட்டாக மதியாமல் மென்மேலும் சென்றான். இவ்வாறிருக்க சிவாஜி சபையோர்களை யழைத்து அவரவர்களுடைய யோசனையைக் கூறுமாறு கேட்டார். தானேஜீ மாலஸரே, மோரோ பிங்களே, நேதோஜி பால்கர், ஆகிய இவர்கள் சிவாஜிக்கு யுத்த தர்மங்களையும் சதுர்வித உபாயங்களையும் எடுத்துக் கூறினார்கள். சிவாஜி சந்துஷ்டியடைந்து மேற்கூறிய மூவர்களைத் தனியே யழைத்து, 'நாளைய தினம் எனக்கும் அப்ஸுல்கானுக்கும் நடக்கும் சம்பாஷணை காலத்தில் கான் ஏதாவது மாறுபாடாய் வஞ்சிக்க முயன்றால் உடனே தப்பி யோடுவதற்குப் பீஜாபூர் இராணுவத்தைச் சுற்றியும் மண்டபத்தைச் சுற்றியும் சக்கரவியூகங்கட்டி வெகு சாக்கிரதையாய்ப் படைகளுடன் காத்துக்கொண் டிருக்க வேண்டு'மென்று சிவாஜி கட்டளை யிட்டார்.

அப்ஸுல்கானுக்கும் தனக்கும் ஏதாவது கைகலப்பு சம்பவித்தால் படைகள் ஒன்று சேர்ந்து எதிர்ப்பதற்குச் சங்கத்தொனியே சமிக்கையாகக் கொள்ளவேண்டு மென்று சிவாஜி வெகு கண்டிப்பாய்த் தன் தளகர்த்தர்களுக்கு அறிவித்தார். இங்ஙனம் இவர் ஒன்றன்பின் ஒன்றாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கடைசியாக அந்தரங்க சபை யொன்று கூட்டினார். அப்பொழுது சிவாஜி அவர்களை யழைத்து 'ஒருவேளை துரதிருஷ்டத்தால் அப்ஸுல்கான் என்னைக் கொன்றால், என் காலத்திற்குப் பிறகு என் அருமைத்

தாயையும் என் அருமை மைந்தர்களையும் நன்கு பாதுகாப்பதுடன் என்னுடைய சொத்துக்கும் நாடு நகரங்களுக்கும் அதிகார தோரணை களுக்கும் என் கடைக்குமாரனுன சாம்பாஜீயே அதற் குரியவன்; சாம்பாஜி பாலனுயிருப்பதினுல் அவன் யுக்தவயது வருமளவும் நேதோஜீ பால்கர் அவனுக்குப் பாதுகாவலனு யிருக்க வேண்டு மென்று ஏற்பாடு செய்தார். இப்படி இரவெல்லாம் யுத்தசூழ்ச்சி யிலும் ஏற்பாடுகளிலும் காலங் கழித்தார்.

மறுநாட் காலையில் சிவாஜி வைகறையாமத்தில் எழுந்து நீராடி காலைக்கடனை முடித்துத் தன் குலதெய்வமான பவானி தேவியைப் பயபக்தியுடன் தரிசிக்கச் சென்றூர். பவானி தேவியும் சிவாஜியின் பக்திக்கு உகந்து அவர் முன் பிரசன்னமாகி, வாராய்! என் குமாரனே! உனக்கேன் இம்மனக்கிலேசம்? உனக்கு ஒரு அபாயமும் நேரிடாது. உனக்கும் எனக்கும் சகல இந்து சமூகத்திற்கும் தீங்கிழைத்த அப்ஸுல்கான் இன்று இறப்பான். தைரியமாயிரு. உனக்குச் சகல சம்பத்தும் உண்டாகும் என்று ஆசீர்வதித்து மறைந்தாள். இங்ஙனம் பவானி தேவியின் ஆசீர்வாதம் பெற்ற சிவாஜி மிக்க தைரியங்கொண்டு தன் தாயைக் காணச் சென்றூர். அன்னையும் தனயவன் வருகையைக் கேட்டு எதிர்கொணடழைத்து ஆசீர்வதித்தாள். அப்பொழுது சிவாஜிக்கும் ஜீஜா பாய்க்கும் பின் வருமாறு சம்பாஷணை நடந்தது.

சிவாஜி:—அம்மா! நான் இன்றுமாலை அப்ஸுல்கானைக் காண ஏற் பாடு செய்திருக்கிறேன். என்னை நீர் ஆசீர்வதித்து அனுப்ப வேண்டும்.

ஜீஜாபாய்:— தனயா! நீ இச் சந்தர்ப்பத்தில் கானைக் காண்பதில் எனக்கு இஷ்டமில்லை. உன்னுடைய சேனைகளை இன்னும் நன்ருய்ப் பலப்படுத்தி, நாடு நகரங்களை நன்ருய்ச் சேர்த்துப் பிறகு போவதுதான் நலம். ஆகவே, நீ கானிடம் செல்வதைத் தவிர்ப்பாய்.

சிவாஜி:— அன்னுய்! எனக்குப் பவானிதேவியும் வரப் பிரசாத மளித்திருக்கிருர். சகல தெய்வங்களும் எனக்குச் சகாயஞ் செய்

யத் துணிந்திருக்கின்றன. பெரியோர்களுடைய கிருபையும் பிராமணர்களுடைய கடாட்சமும் எனக்கு இருக்கின்றது. எனக்கு உற்ற உயிர்த்தோழர்களும் என் பொருட்டு உயிரைத் திரணமாக எண்ணிக் கொடியபோர் செய்யத் தயாராயிருக்கின்றனர். சகல விதத்திலும் எனக்கு நன்மையே உண்டாகும் எனத் தோற்றுகிறது. ஆதலால், என்னை ஆசீர்வதித்து உத்திரவு அளிப்பாய், தாயே! உனக்கும் சாம்பாஜிக்கும் தக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்.

ஜீஜாபாய்:— குமாரா! நீ ஏற்கெனவே சகல ஏற்பாடுகளையும் செய்திருப்பதால் உன்னைத் தடை செய்வதில் பிரயோசன மில்லை. ஆனால் ஒன்று கேள். உன் தமையன் ஸாம்பாஜியின் மரணத்திற்கு அப்ஸல்கானே காரணமா யிருந்தான். அவனைப் பழிக்குப்பழி தீர்ப்பதை மறக்காதே. மகனே! உனக்குச் சகல மங்கள முண்டாகக் கடவது. நீ சுகமே சென்று திரும்புவாயாக

என்று மகனை ஆசீர்வதித் தனுப்பினாள். பவானிதேவியின் வரப்பிரசாதமும் தாயின் ஆசீர்வாதமும் பெற்ற பிறகு சிவாஜி அரண்மனைக்குச் சென்று அன்னபானாதிகள் உண்டு மெய்ம்மறந்து கவலையற்று நித்திரை புரிந்தார். அந்திப்பொழுதிற்கு ஆறு நாழிகைக்கு முன்னர் சிவாஜி நித்திரை தெளிந்து அப்ஸல்கானைக் காண ஆயத்தஞ் செய்தார். இருப்பு வளையங்கள் கோர்த்த கவசந்தரித்து அதற்கு மேல் பொன் சரிகையிட்ட மகமல் சட்டையும் தரித்துக்கொண்டார். தலையில் இரும்புக்குல்லா யொன்று அணிந்து, அது தெரியாதபடி நல்லபட்டாடை யொன்று பேடாவாகக் கட்டிக்கொண்டார். இடதுகையில் புலி நகம் (வாக்நக்) கோர்த்துக்கொண்டார். சட்டையின் வலப்புறத்தில பிச்சுவா ஒன்றை மறைத்துச் சொருகிக் கொண்டார். இப்படி தன் தேக காப்புக்காக வேண்டிய சகல ஏற்பாடுகளையும் வெகு சாமர்த்தியமாய்ச் செய்து ஜீவாபா மஹாலா, சாம்பாஜி காவாஜீ இவர்களைத் தன் மெய்க் காப்பாளர்களாக அழைத்துக் கொண்டு மலையிறங்கினார். நிற்க, அப்ஸல்கான் சேனைகள் பிரதாபகடாவிற்கு வந்து சேர்ந்தன. உடனே, கிருஷ்ணாஜி அப்ஸல்கானிடஞ் சென்று பிரபோ! நீங்கள் இப்பொழுது சிவாஜி

யைக் கபடமாகக் கொண்டு போகவேண்டு மென்றிருந்தால் இத் தகைய சேனு ஆடம்பரங்களுடன் போனல் அவன் பயப்படுவான். இச்சேனைப் பெருக்கைக் கண்டவுடன் அவன் வெளியில் வரான். நம் சேனைகளை இம்மலை யடிவாரத்திலேயே யிருத்திச் சொற்ப காவலுடன் போகுதல் நலம் எனக் கூறினன். இதைக்கேட்ட அப்ஸூல்கான் அதற்கிணங்கி, சேனைகளை மலையடிவாரத்திலேயே இருக்கச் செய்து தான் மட்டும் பல்லக்கு மீது ஏறி மிகவும் சொற்ப மெய்க் காப்பாளருடன் சென்றான். அம்மெய்க் காப்பாளரில் வாள்யுத்தத்தில் மிக்க கீர்த்தி பெற்ற சையத் பந்தாவும் இருந்தான். சையத் பந்தாவைப் பார்த்தவுடனே தான் திகில் அடைவதால், பந்தாவை நிறுத்தினல் தன் மெய்க்காப் பாளரில் ஒருவனை நிறுத்துவதாகச் சொல்லும்படி சிவாஜி அப்ஸூல் கானுக்கு ஒரு தூதரை யனுப்பினர். அப்ஸூல்கானும் சையத் பந்தாவை நிறுத்தி இரு காப்பாளருடன் மண்டபத்துட் பிரவேசித் தான். சிவாஜியும் தன் இரு காப்பாளருடன் பிரவேசித்து அப் ஸூல்கானுக்கு வந்தனோபசாரஞ்செய்ய நெருங்கினர். சிவாஜி, நிராயுதபாணியாக யிருக்கிறார் என்று அப்ஸூல்கான் அறிந்து அவரை எளிதில் பிடிக்கலாம் என்று தீர்மானித்தான். அப்ஸூல் கான் நீண்டதொரு பட்டாக்கத்தியைச் சொருகிக் கொண்டிருந் தான். அப்ஸூல்கான் சிவாஜியை நோக்கி ஏகதேசமாக வசை மொழி கூறினன். அப்ஸூல்கானுக்கும் சிவாஜிக்கும் நடந்த சம்பா ஷணை பின்வருமாறு:—

அப்ஸூல்கான்:—ஏ! சிவாஜி! பயிர்த்தொழிலையே பரம்பரையாகக் கொண்ட உன் போன்ற சாமானியனொருவனுக்கு இம்மண்ட பத்தை அலங்கரிக்கத்தக்க விலையுயர்ந்த வஸ்துக்கள் எங்கிருந்து அகப்பட்டன?

சிவாஜி:—அப்ஸூல்கான்! அதைப்பற்றிய விசாரம் உனக்கேன். கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பமேன்? உலக விவகாரமின்ன தென அறியாத சாமானிய பண்டகசாலைப் பரிசாரகனின் குமார னுகிய உனக்கு இதைப்பற்றிய கவலைவேண்டாம்.

என்று கோபமாய்க்கூறினர். சிவாஜியின் வார்த்தையைக் கேட்டுச் சகியாதவனாய் மிக்க உக்கிரத்துடன் சிவாஜியின் கழுத்தைப் பிடித்துத்தன் கக்கத்தில் இறுக்கிச் சிவாஜியைக் கத்தியினால் வயிற்றில் குத்த எத்தனித்தான். நல்ல வேளையாய் சிவாஜி இருப்புக்கவசம் பூண்டிருப்பதால் கத்தி படவில்லை. சிவாஜியோ தத்தளிக்கிறார். பாவம். கானின் கபடச் செயல்களை முன்னதாக அறிந்த போதிலும் இவ்விதமாக அவன் செய்வான் என்பதை இவர் எதிர்பார்க்கவில்லை. சிவாஜி களைப்புடன் பிரமித்திருந்தார். உடனே பவானி தேவியின் தோற்றம் காணப்பட்ட மாதிரி அவருக்குத் தோற்றியது. தியானஞ் செய்யத் தொடங்கினர். இந்துக்களின் ஆலயங்களைப் பற்றிய எண்ணம் உண்டாயிற்று. கான் செய்த படு தொழிலின் தோற்றமும் உண்டாயிற்று. சிவாஜிக்குத் தைரியமும் திடமும் வந்தது. கான் சிவாஜியை அடிப்பதற்கு இரண்டாந்தரம் தன் கையைத் தூக்குகையில் சிவாஜி இதுவே தருணமெனக் கருதி, கான் இடுப்பைத்தன் கைகளாற் சுற்றிப்புலி நகத்தால் கான்வயிற்றைக் கிழித்தார். கான் மிக்க ஆவேசங் கொண்டு சிவாஜியின் தலையை வெட்டக் கத்தியை நோக்கினன். தலையில் இருப்புக்குல்லாய் போட்டுக்கொண்டிருந்தமையால் சிவாஜிக்கு இக்கத்தி வெட்டு ஒன்றுஞ் செய்யவில்லை. சிவாஜி தன் மெய்க்காப்பாளரிடமிருந்து கத்தியைச் சரேலென்று வாங்கிக்கொண்டு கான் கைகளைச் சேதித்தார். அப்ஸல்கான் தன் வீரர்களைக்கூவி யழைத்தான். சையத் பந்தாவும் இன்னுஞ் சில வீரர்களும் அதிவேகமாய் ஓடிவந்து கானைப்பல்லக்கின்மீது ஏற்றிச் செல்லலுற்றனர். இதற்குள் சிவாஜியின் மெய்க்காப்பாளர்கள் பல்லக்குத் தூக்கிகளைக் கொன்று கானையும் வெட்டினர். கானைக் கொன்றவன் சாம்பாஜீ காவ்ஜீ. சிவாஜி உடனே சங்கநாதஞ் செய்தார். அங்கங்கே மூலைக்கு மூலை பதுங்கிக் கொண்டிருந்த சேனைகள் பீஜாபூர் சேனைகளை வளைத்துக் கொண்டன. நேதாஜீ பால்கர் தன் குதிரைப் படைகளைக் கொண்டு எதிரிகளின் சேனைகளைச் சின்னபின்னப்படுத்தினர். சண்டையோ வெகு சீக்கிரத்தில் முடிந்தது. தப்பியோடுபவர்களைப் பிடித்து எமன் உலகு அனுப்பினர் சில வீரர்கள். கணக்கற்ற பீஜாபூர் வீரர்கள் மடிந்தனர். சரணம் புகுந்தவர்களைக் கொல்லாமல் சிறைபடுத்தினர். பீஜா

பூர் சேனையுடன் வந்த வஸ்துக்களைச் சிவாஜி சுவாதீனப்படுத்திக் கொண்டார். எதிரிகளினின்றும் கொள்ளையடித்த திரவியங்களைச் சிவாஜி தன் வீரர்களுக்குப்பங்கிட்டார். சிவாஜி விசேஷமாக தானதர்மங்களைச்செய்தார். தம்தம் பராக்கிரமங்களைக் காண்பித்த வீரர்களைக் கௌரவப்படுத்தி அவரவர்களுடைய அந்தஸ்துக்கேற்ற படி சிலருக்குப் பல்லக்குகள், சிலருக்குக் குடை சாமரங்கள், சில ருக்குப் பொன்னாபரணங்கள் ஆகிய இவைகளைச் சிவாஜி தந்தார். காயம்பட்ட வீரர்களுக்கும் போரில் மாண்ட வீரர்களுக்கும் அநேக தனங்களைக் கொடுத்து அவர்களின் குடும்பங்களை இரட்சித்தார். பண்டோஜீ கோபிநாதருக்கு ஹிவாரி என்னும் கிராமத்தைக் கொடுத்தார். அப்ஸூல்கானுடைய சூழ்ச்சியை வெகு சாதுரியமாயும் தந்திரமாயும் அறிந்து முதல் முதல் கூறின விஸ்வேஸ ராவுக்குத் திரண்ட திரவியம் அளித்தார். சாரணர்கள், ஒற்றர்கள், துவிஜ மெடுப்போர்கள், அரண்குழி எடுப்பவர்கள், பாகர்கள், மாவுத்தர்கள் முதலிய பணிவிடைக்காரர்களுக்கும் குற்றேவல் புரியும் குறுமக்க ளுக்கும் தக்க பரிசும் தந்தார். அப்ஸூல்கான் வெட்டுண்ட தலையை ஒரு கையில் பிடித்துக்கொண்டு, சிவாஜி தன் தாயிடஞ் சென்றார். சிவாஜி அப்ஸூல்கான் தலையைப் பவானி தேவிக்குப்பலியாகப் பிரதாபகடா மலை வழியிற் புதைத்து ஒரு கோரியும் கட்டினர். அப்ஸூல்கான் கத்தியை சிவாஜியும் சிவாஜியின் சந்ததியார்களும் வெகு காலமட்டும் காப்பாற்றி வந்தனர். அப்ஸூல்கான் கூடாரத்தில் மாட்டப்பட்ட பொன் கலசம் ஒன்றை மகாபலீஸ்வரர் மலையிடத்தே யுள்ள ஆலயத்திற்குத் தந்தருளினர். இது இக்காலத்தும் இருக் கின்றது. அப்ஸூல்கான் பிரேதம் வெகு சிறப்பாய்ப் பிரதாப கடாவின் சாலை வழியில் கொளுத்தப்பட்டது.

அப்ஸூல்கான் வதையைப்பற்றிய அபிப்பிராயங்கள்.

i

* ஸபாஸதா சித்தினிஸ்.

சிவாஜி மகாராஜா முகம்மதிய ஸூபேதாரைக் காணமண்டபத்தினுள் நுழைந்து மண்டியிட்டுச் சலாஞ் செய்கையில் அப்

* இவ்விரண்டும் மகாராஷ்டிர சரித்திரங்கள்.

ஸல்கான் அருவெறுப்பும் எரிச்சலும் கொண்டவனாய்ச் சிவாஜியைப் பிடிப்பது இதுவே தருணமெனக்கொண்டு மகாராஜாமேல் பாய்ந்து அவரை * இறுகப் பிடித்தான். சிவாஜி ஆயுதபாணியற்றவராய் இருப்பதை யறிந்த கான் சிவாஜியைக் கத்தியால் முதல் முதல் தாக்கினான். அது சரியாகப் படவில்லை. சிவாஜி உடனே கானைத் தன் பிச்சுவாவினால் குத்தினார். மறுபடியும் கான் சிவாஜியை வெட்டுவதற்குள் சிவாஜி அவன் இடுப்பைப் பிடித்துக்கொண்டு புலிநகத்தால் கான் வயிற்றை அழுத்தினார். அழுத்தவே கான் தன் கையில் இருந்த கத்தியை நிலத்தில் வீழ்த்தினான். பிறகு அப்ஸல்கான் கொல்லப்பட்டான்.

ii

† சிவதிக்கு விஜயம், ஷட்கவகார்.

சிவாஜி சத்ரபதி அப்ஸல்கானை வந்தனஞ் செய்வதற்குச் சென்றதும் அப்ஸல்கான் சிவாஜியை இழுத்துக் கழுத்தை ஒரு கையால் இறுக்கித் தலையைத் தன் கக்கத்தில் அழுத்தினான். சிவாஜி தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குக் கானின் முதுகில் புலிநகத்தை அழுத்தினார். புலிநகம் அழுந்தினதும் சிவாஜியைத் தளரவிட்டுக் கத்தியை உருவி வெட்டினான்; இவ்வெட்டு சிவாஜிக்குப் படவில்லை. உடனே சிவாஜி கான் தேகத்தின்மேல் பாய்ந்து பிச்சுவாவினால் குத்தினார். அப்ஸல்கான் பிள்ளை யொருவன் தகப்பனுடன் வந்திருந்தான். அவனும் சிவாஜியைத் தன் கத்தியால் வெட்டினான். அதுவும் சிவாஜிக்குப் படவில்லை. சிவாஜி இருப்புக்கவசம் பூண்டிருந்தார். அப்ஸல்கான் தன்னுடைய சூழ்ச்சியினாலேயே மாண்டான்.

---

* மேற்கூறிய இவ்விரண்டு சரித்திரங்களில் ஸபாஸதா மட்டும் கான் சிவாஜியை இறுகப்பிடித்தான் என்று கூறுகிறது. சித்தினிஸ், மகாராஜாவைக் கான் கத்தியால் தாக்கினான் என்று கூறுகிறது.

† இவ்விரண்டும் இந்து சரித்திரங்களே யாகும்.

iii

காபீகான்.

அப்ஸல்கான் சிவாஜிக்கு அனுப்பின பிராமண தூதர் சிவாஜியின் மோசவார்த்தைகளால் மயங்கி அப்ஸல்கானை முதல் முதல் ஏமாற்றினான். இது சிவாஜி செய்த முதல் சூழ்ச்சி. அப்ஸல்கானைக் காண சிவாஜி வருவதற்கு முன்னர், நல்ல வீரர்களை மெய்க்காப்பாளர்களாகத் தான் இருத்துவது தனக்குப் பயத்தை யுண்டுபண்ணுகிறது என்று கூறி வீரர்களை அனுப்பிவைத்தது சிவாஜியின் இரண்டாவது சூழ்ச்சி. சிவாஜி வெளித்தோற்றத்திற்கு நிராயுத பாணியாய் வருகிறானென்றால் அப்ஸல்கானும் ஆயுத மில்லாமல் வருவான் என்ற எண்ணத்தால் சிவாஜி வெளிவந்தது மூன்றாவது சூழ்ச்சி. எப்பாடுபட்டாகிலும் அப்ஸல்கானைக் கொல்லவேண்டுமென்றே திடப்படுத்தி யிருந்தமையால் சிவாஜி புலிநகம், பிச்சுவா முதலிய கூர்மையான ஆயுதங்களைக் கான் காணாமற்படிக்கு ஒளித்திருந்தான். இதுவே சிவாஜி செய்த நான்காவது சூழ்ச்சி. சிவாஜி மண்டபத்தினுள் நுழைந்து கைகட்டி, வாய்குளறி, அங்கம் நடுங்கி, பையப் பைய அப்ஸல்கானைக் கண்டான். சிவாஜி வாஸ்தவத்திலேயே தன்னைக்கண்டு மெத்த பயப்படுகிறான் என்று கான் நினைக்கும்படி சிவாஜி செய்த சூழ்ச்சிகளில் இதுவே ஐந்தாவது. அப்ஸல்கான் முன்னிலையில் சிவாஜி மண்டியிட்டுச் சலாம் செய்த காலையில் கான் சிவாஜியின் பயங்கொள்ளித் தனத்தைக்கண்டு சிரித்துக் கொண்டிருக்கையில் சிவாஜி அப்ஸல்கான் வயிற்றில் புலிநகத்தால் அழுத்தி பிச்சுவாவினால் குத்தினான். உடனே அப்ஸல்கான் தன் கத்தியை யுருவி சிவாஜியை வெட்டினான். இது சிவாஜிக்குப் படவில்லை. இடுப்பில் கட்டியிருந்த கச்சுப்பட்டையை யெடுத்து வயிற்றில் கட்டிக்கொண்டு கான் சிவாஜியைக் கத்தியால் வெட்டுவதற்குள் சிவாஜி தன் மெய்க்காப்பாள னிடத்தில் இருந்த கத்தியை வாங்கிக் கொண்டு அப்ஸல்கான் சிரஸை வெட்டினான்.

---

* இவன் முகம்மதீய சரித்திரக்காரன். அக்காலத்தவன். இவனுடைய சரித்திரம் பாரஸீக பாஷையில் இருப்பது. பின்னர் அநேகர் இவன் சரித்திரத்தை ஆங்கிலத்திலும் ஹிந்தி பாஷையிலும் தர்ஜமா செய்திருக்கின்றனர்.

iv

* பிரையர் வாக்குமூலம்.

சிவாஜியைக் காணும் நாள் வந்தது. அப்ஸூல்கானும் அவன் பிள்ளையும் சில வீரர்களுமாக மண்டபத்திற்குள் வந்தனர். சிவாஜி வருகிறபொழுதே சற்று தங்குவதும் சுற்றிப் பார்ப்பதுமாய் வெகு பயந்தவனாக வந்தான். மண்டபத்தின் வாயிலை நெருங்கினவுடனே சிவாஜி கண்ணீர்விட்டுப் பயத்தால் வாய் குழறிக் கத்தினான். அப்ஸூல்கான் சிவாஜி தன் தப்பிதங்களை மன்னித்து இனி காப்பாற்றுவதாய் உறுதி கூறினால் தனக்குப் பயம் தெளியும் என்று அறிவித்தவுடனே, அப்ஸூல்கான் சிவாஜியின் பயம் தெளியுமாறு தன்னிடம் இருந்த பட்டாக்கத்தியையும் பக்கத்திலிருந்த காவலாளியிடங் கொடுத்து சிவாஜியைப் பயப்பட வேண்டாமென்று அபயங் கொடுத்தான். சிவாஜி கான் அபயங்கொடுத்த அளவில் சமீபித்து வெகு வணக்கத்துடன் சலாம்செய்தான். குனிந்து சலாம் செய்கையில் ஒளித்திருந்த பிச்சுவாவினால் அப்ஸூல்கானைக் குத்தினான். அப்ஸூல்கான் காவலாளியிடமிருந்து தன் கத்தியை வாங்கிக் கொள்வதற்கு முன்னரே சிவாஜி கானைக் கொன்றான்.

ஆங்கிலேய சரித்திரக்காரர்களின் அபிப்பிராயங்கள்.

மகாராஷ்டிர சரித்திரம் எழுதின ஆங்கிலேயர் கிராண்ட் டப், ராலின்ஸன், கின்கெயிட் ஆகிய இவர்களே முதன்மையானவர்கள். கிராண்ட் டப் கி. பி. 1826-ம் வருடத்தில் மகாராஷ்டிர சரித்திரமென்னும் ஒரு நூலை எழுதி வெளியாக்கினார். எச். ஜீ. ராலின்ஸன் என்பவர் கி. பி. 1914-ம் வருடத்தில் 'சிவாஜி மகாராஜாவின் சரித்திரமும் அவர் காலமும்' என்னும் ஒரு கிரந்தத்தை எழுதி வெளிவிடுத்தார். ஸீ. ஏ. கின்கெயிட், ராவ் பகதூர் பராஸினிஸ் இவ்விருவர்களும் சேர்ந்து கி. பி. 1918-ம் வருடத்தில் 'மராட்டியர்களின் சரித்திரம்' என்னும் ஒரு புத்தகத்தை எழுதி பிரசுரித்திருக்கின்ற

* இவர் ஓர் ஆங்கிலேயர். அக்காலத்தில் இருந்தவர். மொகலாயர்களிடத்தில் வியாபாரஞ் செலுத்திக்கொண்டிருந்தவர். இவ்வதை நடந்த காலத்தில் ஒருவரால் கூறப்பட்டதை இவர் எழுதியிருக்கிறார்.

ணர். இதல்லாமல் பம்பாய் உயர்தர நியாஸ்தலத்தில் நீதிபதியா யிருந்து காலஞ்சென்ற மகாதேவ கோவிந்தரானடே எழுதிய 'மகா ராஷ்டிர ஆதிபத்திய அப்பியுதயம்' என்னும் நூலும் இருக்கின்றது. மேற்கூறிய இவைகளில் ரானடேயின் நூல் அப்ஸுல்கான் வதை யைப்பற்றி நன்கு கூறவில்லை. கிராண்ட் டப் எழுதினதில் அவர் சிவாஜியையே வசையிட்டுக் கூறியிருக்கிறார். அப்ஸுல்கானைக்கொல்ல சிவாஜியே முதல்முதல் சூழ்ச்சி செய்தான் என்று கூறுகிறார். இவர் ஔரங்கசிப் ஆஸ்தானத்தில் இருந்த சரித்திரக்காரரான காபீகானு டைய அபிப்பிராயங்களையே முதநூலாகக்கொண்டு தன் புத்தகத்தை வழி நூலாக எழுதினார். மிஸ்டர் ராலின்ஸனும் வெகுவாய் காபீ கானையும் கிராண்ட் டப்பையுமேபற்றி எழுதியிருக்கிறார். ஆனால், மிஸ்டர் கின்கெயிட் மேற்கூறிய வழிகளைத் தேடாமல் அநேக முகா ந்தரங்களைப்பற்றி அவர்களின் அபிப்பிராயங்களைக் கண்டித்து எழுது கிறார். பின் வருவது இவருடைய அபிப்பிராயம்.

அப்ஸுல்கானுடைய தூதரான பண்டோஜீ கோபிநாதருக்குச் சிவாஜி கைக்கூலி கொடுத்து அவன் உதவியாலேயே சிவாஜி அப் ஸுல்கானை வஞ்சித்துக் கொன்றான் என்பது கிராண்ட் டப்பின் அபிப்பிராயம். கிராண்ட் டப் கூறுவது சுத்த தப்பு. முதல் முதல் பண்டோஜி கோபிநாதர் சிவாஜியின் தூதரே யன்றி கானுடைய தூதரல்ல; கிராண்ட் டப் காபீகானுடைய அபிப்பிராயத்தை எழுது கிறார். நாம் தற்காலம் காபீகானுடைய அபிப்பிராயத்தை அடி யுடன் களைய வேண்டும். ஏனெனில், காபீகான் சிவாஜியின் பெய ரைக் கூறுமிடங்களிலெல்லாம் அவரை 'பாபி' 'நரகநாய்' என்று கூறி யிருப்பதால் அவனுக்கு சிவாஜியிடத்தில் முதலிலிருந்தே நல்லஅபிப் பிராயங்கிடையாது. இதல்லாமல், அவர்கள் கூறுவது மாதிரி அப் ஸுல்கானைக் காணுஞ் சமயத்தில் சிவாஜி மெய் நடுங்கி, கால் தடு மாறி கண்ணீர் சொரிய யிருந்திருப்பின், சிவாஜி கபடஞ் செய்கிறான் என்று அப்ஸுல்கான் எளிதில் அறியக்கூடும். ஆகவே சிவாஜி தன் பாதுகாப்புக்காக அப்ஸஜில்கானைக் கொன்றார். ஆனால் முதல் முதல் வஞ்சித்தது அப்ஸஜில்கானே யன்றி சிவாஜியல்ல.

சிவாஜி மகாராஜாவின் அபிப்பிராயம்.

சிவாஜி காலத்தில் இருந்த இராமதாஸரின் சரித்திரத்தை எழுதின ஹனுமந்த் என்னும் அவர் சீடர் அப்ஸுல்கான் வதை முடிந்த பிறகு முதல் முதல் இராமதாஸரைச் சிவாஜி தரிசித்த காலத்தில் பின்வரும் வார்த்தைகளை மகாராஜாவே கூறினர் என அச்சரித்திரத்தில் ஹனுமந்த் எழுதியிருக்கிறார். இது பின் வருமாறு:—

* சுவாமி! முதல் முதல் நான் அப்துல்லாவை (அப்ஸுல்கான்) க்காணக் கிட்ட நெருங்குகையில் அவன் என் கழுத்தைப்பிடித்து ஒரே அமுக்காய்த் தன் கக்கத்தில் இறுத்தினான். எனக்குப் பேச்சு மூச்சு இல்லாமல் ஸ்மரணை தப்பும்படியான நிலைமையில் இருந்தேன். ஸ்வாமியுடைய ஆசீர்வாதமே என்னைக் காப்பாற்றிற்று.

† இந்நூலாசிரியரின் அபிப்பிராயம்.

இவ்வத்தியாயத்தை முடிக்கு முன் அப்ஸுல்கானுடைய வதையைப்பற்றி நாம் கூறவேண்டுவது சில உண்டு. அப்ஸுல் கான் வதையைப்பற்றி இரு அபிப்பிராயங்களை உண்டு. ஒன்று முகம்மதீய அபிப்பிராயம். மற்றொன்று இந்துக்களின் அபிப்பிரா யம். முகம்மதீய அபிப்பிராயங்களைத்தழுவி சிலர் நூல் எழுதி யிருப்பதுபோலவே இந்துக்களின் அபிப்பிராயங்களைத் தழுவி வேறு சிலரும் நூல் எழுதியிருக்கின்றனர். இப்படி அவரவர்கள் கூறின விவித அபிப்பிராயங்களைக்கொண்டு ஒரு முடிவுக்கு வருதல் கஷ்டமான காரியமே. வாசா ஞானத்தையே சாதாரணமாக அவ லம்பித்து வரும் கேவல தத்துவ நீதியர்கள் எளிதில் முடிவுக்கு வரக்கூடும். கிரியாஞானத்தையே அனவரதமும் அவலம்பித்து வரும் லௌகிக தத்துவநீதியர்கள் அவ்வளவு சீக்கிரத்தில் முடி வுக்கு வரமாட்டார்கள். எக்காலத்திலும் தோஷமில்லாமல் ஒரு வர் இருக்க முடியாது. சிவாஜி சுயஸம்ரக்ஷண நிமித்தமே செய்த

---

* இராமதாஸரைத் தரிசிக்கச் செல்லுகையில் சிவாஜி இவரைப் பார்த் துச் சொன்னது.

† இது எமது சொந்த அபிப்பிராயம்.

இக்காரியம் குற்றமாகமாட்டா தென்பதே எமது அபிப்பிராயம். சிவாஜி காலத்தில் நீதிமுறைகள் இப்பொழுது இருப்பதுபோலில்லை. சாமானியமான நீதிமுறைமைக்கும் இராஜநீதி முறைமைக்கும் வித்தியாச முண்டு. சத்துருக்களை வஞ்சகமாய்க் கொல்லுதல் முதலிய காரியங்கள் தோஷமற்றவை யெனக்கூறுவர் சில இராஜதந்திரிகள். உபாயத்தினுல் சத்துருக்களை வெல்வதும் தோஷ மற்றவையே. ஸ்ரீராமபிரான் பூர்வம் மரம் மறைவில் இருந்து வாலியைக் கொன்றதும் மகாபாரத யுத்தத்தின் கடைசியில் ஸ்ரீகிருஷ்ண பகவான் பீமனுக்குத் தன் தொடையைக் காட்டித் துரியோதனனைக் கொல்ல வைத்ததுமான இவ் விஷயங்களைச் சிவாஜி தன் சிறுவயதினின்றுமே கேட்டுக்கொண் டிருந்தபடியால் அப்ஸுல்கானை வதைத்தது நியாய விரோதமென்று அவருக்குத் தோன்றவில்லை. இதல்லாமல் சிவாஜி காலத்தில் பகைவர்களை வஞ்சித்துக் கொல்வதே இயற்கையாக யிருந்தது. பீஜாபூர் சமஸ்தானத்தில் இத்தகைய கொலைகள் சாதாரணமாக சம்பவித்திருந்தன. சத்துரு விநாசம் முக்கியமாக அக்காலத்தில் உபாயத்தினுலும் வஞ்சனையினுலுமே நடந்து வந்தது. நிற்க, சிவாஜியின் மூத்தசகோதரன் ஸாம்பாஜியை மோசத்தாலேயே அப்ஸுல்கான் கொன்றதினுலும் பழிக்குப் பழிதீர்க்க வேண்டுமென்று தாய் கூறினதினுலும், தாய் வார்த்தையைத் தள்ளாத சிவாஜி இதை தர்மமாகக்கொண்டு அப்ஸுல்கானைக் கொன்றூர். மேலும் அப்ஸுல்கான் தண்டயாத்திரை வரும்வழியில் ஹிந்து கோயில்களையும் தேவாலயங்களையும் இடித்துத் தகர்த்ததினுலும், சிவாஜியின் மூதாதைகள் பரம்பரையாய்த் தரிசித்துவந்த பவானிதேவியின் விக்கிரகத்தை யுடைத்து வீழ்த்தினதினுலும், சுயமத ஸம்ஸ்தாபனத்திற்கு இரவும் பகலும் உழைத்து வந்ததினுலும் தன் மதத்திற்குப் பங்கம் செய்தவனைக் கொல்வது ஸ்வதர்மம் எனக்கொண்டு சிவாஜி அப்ஸுல்கானைக் கொன்றூர். இன்னும் அப்ஸுல்கானும் சிவாஜியைப் பிடித்துச் சிறைபடுத்தவும் அல்லது கொல்லவுமான வழிகளை வஞ்சகமாய்ச் செய்யவேண்டு மென்பதே நோக்கமாகக் கொண்டு வந்ததினுல் ‘அஞ்சனக்காரன் முதுகில் வஞ்சனைக்காரன் ஏறினுன்’ என்னும் சாதாரண பழமொழிக் கிணங்க சிவாஜி பீஜாபூர் வழிகளைப் பன்முறை யறிந்தவராதலால் சர்வசாக்கிரதையுடன் இருந்து அப்ஸுல்கானைக் கொன்றூர். ஆகவே அப்ஸுல்கான் ‘கெடுவான் கேடு நினைப்பான்’ எனப்படி தன் வஞ்சனையால் தானே மாண்டான்.

ஏழாவது அத்தியாயம்.

பீஜாபூர் சமாதானம்—தந்தை தரிசனம்.

சிவாஜியைச் சிறைபடுத்திக் குதிரைமீது பீஜாபூருக்கு அழைத்து வருவதாகச் சபதஞ் செய்த அப்ஸல்கான், வதை யுண்ட செய்தியைக் கேள்வியுற்ற ஆலி அதில் ஷாவும் அவன் தாயும் மனவருத்தங்கொண்டு அன்னபானாதிகள் நீக்கிச் செயலற்று, ஏழு நாள் வரை துக்கங்காத்தனர். இவ்விருவர்கள் படுங் கஷ்டங்களைக் கண்ணுற் காணச் சகிக்கவில்லை. சமஸ்தான மெங்கும் ஒரே இருள் சூழ்ண்ட சூன்ய ப்ரதேசம் போலிருந்தது. பீஜாபூர் இராணுவத்தில் இருந்த பல இந்து வீரர்கள் சிவாஜியிடம் அடைக்கலம் புகுந்தனர். சிவாஜிக்கு முன்னினும் பன்மடங் கதிகமான சேனைப் பெருக்கம் உண்டாயிற்று. இராணுவ வீரர்களை வரிசைக்கிரமமாக வகுத்து நல்ல தளகர்த்தர்களை நாயகர்களாக நியமித்தார். சிவாஜியின் பிராந் யத்தின் ஒவ்வொரு பாகங்களும் நல்ல இராணுவ முஸ்திப்பு கொண் டிருந்தது. பீஜாபூர் சமஸ்தானத்தில் சிலநாளாக இராணுவத்தில் உத்தியோகஞ் செய்து வந்த டல்விகள் என்னும் மராடி வம்சத்தி னர் துரத்தப்பட்டனர். சிவாஜி அவர்களைத் தன் படையில் சேர்த்து உத்தியோகம் அளித்தார். இப்படி கொஞ்சகாலம் இராணுவ சீர் திருத்தங்களில் கவனஞ் செலுத்தி வந்ததும், சிவாஜி அண்ணாஜி தத்தரைப் பன்ஹலம் கோட்டையைப் பிடிக்க யனுப்பி னார். இக்கோட்டை கோலாபூருக்குச் சமீபத்தே யுள்ளது. இது வெகு பலமான கோட்டை. முற்றுகை யின்றி சுவாதீனப்பட்டது. பவன்கடா, வசந்தகடா கோட்டைகளும் உடனே வீழ்ந்தன. ரங் கணா கோட்டையும் கெல்னா துர்க்கமும் பிறகு சுவாதீனப்பட்டது. சிவாஜி இக் கெல்னா துர்க்கத்திற்கு விஷல்கடா என்று புதுப்பெயர் கொடுத்தார். பீஜாபூர் துரைத்தனத்தார் சிவாஜியை முறியடித்துப் பின் வாங்கும்படி செய்வதற்குப் பலத்த சேனையைக் கோலாபூர் வழி யாக ரஸ்டாம் ஜமான் வசம் அனுப்பினர். ரஸ்டாம் ஜமானிடம் இருந்த வீரர்களின் தொகை மூவாயிரம். சிவாஜியிடம் இருந்த வீரர்

கள் கணக்கற்றவர். பன்ஹலம் துர்க்கத்திற்குச் சமீபத்தில் சிவாஜி ரஸ்டாம் ஜமானைச் சேனையுடன் முறியடித்து நெடுந்தூரம் அனுப்பினார். ரஸ்டாம் ஜமான் தான் தப்பிப்பிழைத்தது தம்பிரான் புண்ணியம் எனக்கொண்டு மீராஜ் நகரத்தை யடைந்தான். சிவாஜி தன் குதிரைப் படைகளைப் பீஜாபூர்மீது அனுப்பி இராசதானியின் எல்லைவரை சூறையாடினார். வலிமைக்கு வழக்கில்லை யல்லவா? இராசதானிவரை வந்து கொள்ளை யடித்த சிவாஜியை எவ்விதமாகிலும் ஒழிக்க வேண்டு மென்று கருதிய ஆலி அதில்ஷா அபிஸீனிய ஜாதியைச் சேர்ந்த ஸிடி ஜோஹர் என்பவனுக்கு ஸலபட்ஜங் என்னும் பட்டமு மளித்து முக்கிய சேனாதிபத்தியங் கொடுத்துப் பதினாயிரம் குதிரைப்படை பதினாலாயிரம் காலாட்படை இன்னும் இதர படைகளுடன் அனுப்பினான். ஸலபட் ஜங் சேனாதிபதிக்கு அப்ஸுல்கான் புத்திரன் அஸன் மகமத் உபசேனாதிபதி. பன்ஹலத்தை மீண்டும் மீட்சி செய்யும்படி ஆலி அதில்ஷா உத்திரவு செய்தான். இதே சமயத்தில் ஆலி அதில்ஷா ஜஞ்சீராவிலிருந்து படை யனுப்பிக் கொங்கணத்தை சுவாதீனப்படுத்திக் கொள்ளும்படி படேகானுக்கு உத்திரவும் செய்தான். சவந்தவாடியிலுள்ள ஸவந்தர்கள் சிவாஜியின் தென்மேற்குப் பிராந்தியங்களில் வந்து உபத்திரவஞ் செய்யலானார்கள். சாவந்தவாடி என்பது சய்யாதிரி பர்வதத்தை யொட்டி யிருப்பது. இங்ஙனம் மூன்று பக்கங்களிலும் சிவாஜியை எதிரிகள் எதிர்க்கலானார்கள். படேகானைத் துரத்தி ஓட்டும்படி சிவாஜி ரகோபலால் என்பவரை நியமித்தார். பாஜி பஸல்கார் சவந்தர்களை யடக்கச் சில குதிரைப் படைகளுடன் சென்றார். சிவாஜி வெகுபலமாய் பன்ஹலம் கோட்டையைக் காப்பாற்றி வந்தார். மாரிகாலம் தொடங்கும் வரை ஸலபத் ஜங்குடன் போராடும்படி சிவாஜி நேடோஜீபால்கரை யனுப்பினார். சேனைகள் ஒன்றோடொன்று பலமாய்த் தாக்கின. நெடுநாள்வரை யுத்தம் நடந்து வந்தது. படேகானும் சலிக்கவில்லை; ரகோபலாலும் சலிக்கவில்லை. சவந்தவாடியும் நன்றாய்த் தாக்கப்பட்டது. என்றாலும் எதிரிகளின் சேனைகள் பலங்குறைந்தன. இது இவ்வாறிருக்க, நேடோஜீ பால்கரும் ஸலபட்ஜங்கும் ஒருவருக்கொருவர் தளர்ச்சியடையாமல் யுத்தம் புரிந்து வந்தனர். எதிரியின் சேனை பெரியது; ஸலபட்ஜங்கும் நல்ல

வீரன். ஆகவே சிவாஜியின் சேனைகள் சற்றே பின்வாங்கின. பன்ஹலம் எதிரியிடம் வீழ்ந்துவிடும் என்பதை யுணர்ந்தார் சிவாஜி. உடனே ஸலபட் ஜங்குக்குச் சிவாஜி உடன்படிக்கைக்கு வருவதாக தூதுவரை யனுப்பினர். உடன்படிக்கையைப்பற்றிய விவரங்கள் வெகு நேரமட்டும் முடிவாகவில்லை. ஆனால் சேனைகள் உடன்படிக்கையை எதிர்பார்த்திருந்ததினால் அவர்கள் கவலையின்றி வெகு அசாக்கிரதையாய் இருந்தனர். சிவாஜி உடனே இரவோடு இரவாய்ப் பன்ஹலத்தை விட்டு ஒருவரும் அறியாதபடி விஷல்கடாவிற்குப் புறப்பட்டார். பொழுது விடிந்தது. சிவாஜியைக் காணவில்லை. ஸலபட் ஜங்குக்கு அனுமானம் விழுந்தது. சிவாஜி காணமற் போனர் என்பதை அவன் உணர்ந்தான். உடனே சிவாஜியைப் பிடிக்கச் சேனையைத் துரத்தினன். சேனை வெகு வேகமாய்ப் பின் தொடர்ந்து வருவதைக்கண்டார் சிவாஜி. பகைவர்களிடம் அகப்பட்டுக்கொள்வோம் என்றறிந்து உடனே ஒரு யோசனை செய்தார். விஷல்கடா இன்னும் ஆறுமைல் தூரமேயுள்ளது. * பாஜிதேஷபாண்டேயைத்தான் விஷல்கடாவிற்குச் சுகத்துடன் சேர்ந்த செய்தியைப் பீரங்கிவெடியால் தெரியப்படுத்தும் வரை மலை இறக்கத்தினுள்ள பந்தர்பாணி என்னுமிடத்தில் எதிரியைப் பலமாய்த் தாக்கும்படி உத்திரவு செய்தார்.

பிறகு, ஸவந்தவாடியில் அதி உக்கிரமாய்ப் போராடின பாஜீபஸல்கார் இரணகளத்தில் ஆவியிழந்தார். சிவாஜி கட்டளையைத் தலைமேற்கொண்டு பீஜாபூர் படையை எதிர்க்கத் தேஷபாண்டே அக்கணவாய்ச் சரிவில் காத்துக்கொண்டிருந்தார். எதிரிகளும் எதிர்க்கவந்தனர். வெகு நாழிகை பரியந்தம் முகம்மதீய துருப்புகளைப் பின் வாங்கும்படி இவர் செய்தார். ஆனல் அன்று மாலை பெரிய சேனையொன்று பாஜல் முகம்மத்தை நாயகனுகக்கொண்டு எதிர்த்தது. எதிரிகளின் தாக்கலுக்குச் சிறிதேனும்

* பாஜி தேஷபாண்டே ஜாவலிக் காவலனுன சந்திரராவிடம் இருந்து சிவாஜியுடன் போர்புரிந்தவர். சந்தரராவ் இறந்த பிறகு பாஜீ சிவாஜியையடைந்தார். சிவாஜியிடம் அத்யந்த விஸ்வாஸம் காண்பித்து வந்தார்.

இடங்கொடுக்காமலே தேஷபாண்டே வெகு சாமர்த்தியமாய் நின்று வந்தார். எதிரிகள் வர வர வெகு பலமாய்த் தாக்கினார்கள். தேஷபாண்டேக்குத் தேகத்தில் காயமதிகமாயிற்று. முன்னணியில் நிற்க முடியவில்லை. இப்படி யிருக்கையில் பீரங்கி சப்தம் கேட்டது. சிவாஜி விஷல்கடா சேர்ந்தார் என்பதை யறிந்தார். தேஷபாண்டேக்கு உற்சாகம் உண்டாயிற்று. மறுபடியும் எதிரிகளைத் தாக்கினார். ஒன்றும் பிரயோசனமில்லை. கடைசியாகத் தேஷபாண்டே தன் தேக ரணத்தின் வேகத்தைச் சகிக்கமுடியாமல் நிலத்தில் வீழ்ந்தார். வீரர்கள் உடனே அவர் தேகத்தை எடுத்துக்கொண்டு கடுகியே விஷல்கடாவிற்குச் சென்றனர். வீரரும் வீர சொர்க்கம் சென்றார். தப்பியோடின சிவாஜியை இனி பிடிப்பதரிது எனச் சோர்வடைந்த ஸலபத்ஜங் விஷல்கடாவிற்குச் சமீபத்தேயுள்ள கஜபுரி என்னும் கிராமத்தில் தங்கினார். விஷல்கடா துர்க்கத்தைப் பிடிக்கவேண்டுமென்று ஸலபத்ஜங் தீர்மானித்து உடனே முற்றுகையிட்டான். சிவாஜி இம்முற்றுகைச்சேனையைப் பலமாகத்தாக்கி முதுகு காட்டி ஓடும்படி செய்தார். ஆலி அதில்ஷா இதையறிந்தவுடன் ஸலபத்ஜங்கை நிறுத்தித்தானே சேனாதிபதியாகிச் சேனையை நடத்தினான். சுல்தான் தானாகவே சேனையை நடத்தினதினால் படைகள் வெகு குதூஹலத்துடன் போராடின. பன்ஹலம் துர்க்கம் சுல்தானுக்குச் சுவாதீனப்பட்டது. சிவாஜியினால் பிடிக்கப்பட்ட கோட்டைகளை வெகு சீக்கிரத்தில் அதில்ஷா கைப்பற்றிக்கொண்டான். ரங்கணு துர்க்கமும் விஷல்கடா கோட்டையும் வெகு பலமாகக் காக்கப்பட்டிருந்ததால் பகைவர்கள் அவைகளைக் கைப்பற்ற முடியவில்லை. மாரிகாலம் தொடங்கிற்று. சிபாஜி ஜஞ்சீராவிற்குச் சமீபத்தில் வடமேற்காயுள்ள தண்ட ராஜபுரி என்னும் துறைமுகத்தைத்தாக்கிக் கைப்பற்றிக் கொண்டார். இத்துறைமுகப்பட்டினம் மிக்க தனப் பெருக்கங்கொண்டது. இதில் ஆங்கிலேய வியாபாரிகள் வெகுபேர் இருந்தனர். இவர்கள் படேகானுக்கு உதவி செய்வதாக அறிந்து சிவாஜி அவர்களைச் சிறைப்படுத்தினார். ஜஞ்சீராவைப் பிடிக்கப் பெரிய சேனையைச் சிவாஜி நடத்தினார். ஜஞ்சீரா வெகு பலமுள்ளதாயும் நன்றாய்க் காக்கப்பட்டு வந்ததாலும் இதை எதிர்க்க சிவாஜிக்கு ஆகவில்லை. உடனே சிவாஜி ஜஞ்சீராவைவிட்டு

விட்டு மால்வானுக்குப் புறத்தேயுள்ள * சிந்து துர்க்கத்தைக் கைப் பற்றிக்கொண்டு அதைத்தன் கடற்படை ஸ்தலமாக்கினர். கடற் படை ஸ்தலங்கள் இந்தியாவில் கிறிஸ்து பிறந்த மூன்றுவது நூற் றூண்டுமுதல் இருந்துவந்தன. பூர்வம் ஏனைய நாட்டார்கள் நாகரிகக் குறைவினுல் மிருகப்பிராயமாயிருந்த காலத்தில் இந்தியா கடற்படை ஸ்தலங்களைக்கொண்டு பெருமைபெற்றிருந்தது. ஆனல் வர வர மாருப்படை யெழுச்சிகளினுல் கடற்படை ஸ்தலங்கள் இருந்த இடங்தெரியாமற் போயின.

நிற்க, பீஜாபூர் சுல்தான் மறுபடியும் சிவாஜியை எதிர்க்க † பாஜீ கோரபடேயைச் சவந்த வாடிக்கு அனுப்பினன். பாஜீ கோரபடே புறப்படும் செய்தியைக் கேள்விப்பட்ட சிவாஜி உடனே விஷல் கடாவிற்குச் சென்று மூவாயிரம் வீரர்களுடன் இரவோடு இரவாய் முத்தோல் பிராந்தியத்திற்குச் சென்று பாஜி கோரபடேயைப் பழிக் குப்பழி தீர்க்க எதிர்த்து அவனையும் அவன் பிள்ளைகளையும் கொன் றூர். பாஜி கோரபடேயின் மரணத்தை சிவாஜி தன் தகப்பனுருக்குக் கடிதமொன்று ‡ எழுதினர். கோரபடே மாண்ட செய்தியைக் கேட்ட ஆலி அதில்ஷா கோபாக்கிராந்தனுய் நல்ல படைவீரர் களுடன் சிவாஜியை எதிர்க்க கவாஸ்கானை அனுப்பினன்.

இப்படியிருக்கையில் ஏதோ ஒரு விஷயத்தில் மரியாதையின் றித் தன்னை சுல்தான் அவமானப்படுத்தினன் எனக்கொண்டு ஸல பத்ஜங் பீஜாபூர் சேனையைவிட்டு நீங்கினன். கிருஷ்ணுநதிக்கும் துங்கபத்திராநதிக்கும் இடையுள்ள ரங்கத்தில் உள்ள இந்து ஜமீன்

---

* ஜஞ்சீராவை முற்றுகையிட்டு வருங்நாளில் ஒரு நாளிரவு சிவாஜிக்கு முன் வருணபகவான் பிரசன்னமாகி 'நீ ஜஞ்சீராவைப் பிடிக்கமுடியாது. இதுபோல் மிக்க பலமுள்ள சிந்து துர்க்கம் உன் கைவசப்படும். அதை வைத் துக்கொள்.' என்று கூறினமையால் சிவாஜி சிந்து துர்க்கத்தைக் கைப்பற்றின ரென்று சிவதிக்கு விஜயபகார் கூறுகின்றது.

† சிவாஜியின் தகப்பனர் ஷஹாஜியை வஞ்சகமாய்ச் சிறைப்படுத்தின வன் பாஜீ கோரபடே.

‡ ஷஹாஜிக்கு சிவாஜி எழுதிய கடிதத்தை இவ்வத்தியாயத்தின் முடி வில் காண்க.

தார்கள் சிலர் பீஜாபூர் சுல்தானையே எதிர்க்கலானார். இவர்களுடன் ஸலபத்ஜங் சேர்ந்துகொண்டான். இதை யறிந்த சிவாஜி உடனே பெரியபடை யொன்றை யனுப்பி ரைச்சூரை சுவாதீனப்படுத்தினார். இது விழுந்ததும் டோர்னகல் கோட்டையும் வீழ்ந்தது. போர்த்துகல் ஜாதியார் எதிரிகளுக்குதவி செய்வதை யறிந்த சிவாஜி அவர்களை முறியடித்து வியாபார ஸ்தலங்களைத் தரையோடு தரையாய்த் தகர்த்தார். சவந்தவாடி சிவாஜிக்கு சுவாதீனப்பட்டது. மூவாயிரம் படைகளையும் வருட வருமானத்தில் பாதியையும் சிவாஜிக்குக் கொடுப்பதாக உடன்படிக்கை யொன்று நடந்தது. போர்த்துகல் ஜாதியார்களுக்குச் சொந்தமான கோவாபிராந்தியத்தைச் சுற்றியும் சிவாஜி படையெடுத்துத் தோற்கடித்து அவர்களை வெடிமருந்து, துப்பாக்கிகள் முதலிய போர் தளவாடங்களை அனுப்பும்படி உடன்படிக்கை செய்துகொண்டார். இது நடந்தது கி. பி. 1662. பீஜாபூர் சுல்தான், சவந்தசாதியார் முதலியவர்களால் தனக்குப் பயமில்லை யெனக்கொண்ட சிவாஜி இவர்களுடன் யுத்தம் புரிவதை நிறுத்தினார். இவர் எண்ணமெல்லாம் மகாராஷ்டிரத்தில் சுயராஜ்யம் ஒன்று ஸ்தாபிக்கவேண்டு மென்பதே. சுயராஜ்ய ஸம்ஸ்தாபனத்திற்குத் தடங்கலாயிருந்த ஜாவலிக் காவலனான சந்திரராவ், முத்தோல் (ஐ) சேர்ந்த பாஜீகோரபடே, ஸவந்தவாடி சிற்றரசனான லக்கம் ஸவந்த் முதலிய இந்துக்களை முறியடிப்பது சிவாஜிக்கு முக்கிய கடமையாக ஆயிற்று. தேசநன்மைக்கும் பரோபகாரத்திற்கும் பாடுபட்டு வந்த சிவாஜியின் நோக்கத்தை யறியாமல் மராடி ஜமீன்தார்கள் தங்களுக்குத் தாங்களே அழிவை நாடி மாண்டனர். மேற்கூறிய மராடிய ஜமீன்தாரர்களைச் சிவாஜி சாமதான உபாயங்களைத் தன்னாலியன்றளவு பிரயோகித்தும் பலிதமாகாததைக் கண்டபிறகே, இவர் அவர்களைப் பேததண்ட உபாயங்களினால் அழித்தார்.

பீஜாபூரைப்பற்றிய கவலை சிவாஜிக்கு எள்ளளவும் இல்லை. மகாராஷ்டிரத்தைச் சுதந்தரப்படுத்த பீஜாபூர் கோல்கொண்டாவுடன் சந்தி (சமாதானம்) செய்ய சிவாஜி முன்வந்தார். இது சிறந்த இராஜதந்திரத்தைப் பற்றியது. காலதேச வர்த்தமானங்களை யறிந்தே போர்புரியும் வீரர் ஒருவர் வெற்றியுடன் ஞாலங் காப்பார் என்பது காலங்கண்ட வாய்ச்சொல். மொகலாயர்கள்

சுவாதீனப்படுத்திக் கொண்ட சில மகாராஷ்டிரப் பிராந்தியங்களைச் சிவாஜி தானே சுவாதீனப் படுத்திக்கொள்ள பீஜாபூர், கோல் கொண்டாவுடன் சமாதானஞ்செய்துகொண்டார். அவர்களும் யுத் தத்தை ஒருவாறு நிறுத்த மனங்கொண்டு சிவாஜியின் ஏற்பாட்டிற்கு ஒத்துக்கொண்டனர். சிவாஜியின் தகப்பனார் ஷஹாஜியே இராஜ தூதராக நியமிக்கப்பட்டார். சிவாஜியின் நடவடிக்கைகளை ஆரம்பத் தில் அருவருகைகொண்ட ஷஹாஜி 'மகன்றந்தைக்காற்று முதவி யிவன்றந்தை யென்னோற்றான் கொல்' என்னுஞ் சொற்படி யிருப் பதைக் கண்டு மனங்களித்துத் தூதராகச்சென்றார். ஷஹாஜி * துகாபாயியையும் † வெங்கோஜீயையும் அழைத்துக்கொண்டு துலா புரத்திற்குவந்து பவானி தேவியைத் தரிசனம்செய்து பண்டர புரஞ் சென்று விடல்நாதனைத் தொழுது புனவை யடைந்தார். தகப்பனார் வருகையை எதிர்ப்பார்த்திருந்த சிவாஜி அவர் புனு நகரை யடை வதற்குச் சிறிது தூரம் முன்னரே ஷஹாஜியை எதிர் கொண்ட ழைக்க மோரோ பிங்களேயை யனுப்பினர். சிவாஜி தன் தாயார் ஜீஜாபாயுடனும் ஸகீபாய் ஸொயாராபாய் இரு மனைவிகளுடனும் ஆலயத்தின் வாயிலில் ஷஹாஜியைக் காணத்தங்கினர். ஷஹாஜி ஆலயத்தின் கோபுர வாயிற்படிக்கு வந்ததும் சிவாஜி தன் தகப்பனை எதிர்கொண்டு சாஷ்டாங்கமாக அடிபணிந்தார். பிறகு ஷஹாஜி யின் மனைவி ஜீஜாபாயும் அப்பால் சிவாஜியின் இருமனைவிகளும் முறைப்படி வணங்கினர்கள். உடனே ஷஹாஜியைப் பல்லக்கில் ஏற்றி ஜேஜுரி கிராமத்திற்கு அழைத்துச் சென்றனர். சிவாஜி புனு நகரத்திலிருந்து ஜேஜுரி கிராமம் போகுமளவும் தகப்ப னருக்கு மரியாதை செய்யக் கால்நடையாகவே வந்தார். ஜேஜுரி கிராமம் வந்தடைந்ததும் வெகு அழகாய் அமைக் கப்பட்ட ‡ படி வீட்டில் ஷஹாஜி இறங்கினர். சிவாஜி கைகட் டித் தகப்பனர் முன் நின்றார். ஷஹாஜி சிவாஜியை உட்காரும் படிச் சொல்லியும் சிவாஜி உட்காராமல், 'தந்தாய்! சிறு பொழு தில் உங்கள் வார்த்தையைக் கடந்து செய்த குற்றங்களினால் உமக்குச்சிறை சம்பவித்ததை மன்னிக்கும்படி பிரார்த்திக்கிறேன்'

* துகாபாய் என்பவள் ஷஹாஜியின் இரண்டாந்தாரம்.

† வெங்கோஜி துக்காபாயிககு ஷஹாஜியினிடம் பிறந்த பிள்ளை.

‡ படி வீடு—கூடாரம். பாடி வீடு என்றால் சேனைகள் இறங்குமிடம்.

என்று மறுபடியும் ஷஹாஜியை அடிபணிந்தார். சிவாஜி கூறின வார்த்தைகளினால் மனங் குழைந்து 'மகனே' நீ இளம்பிராயத்தில அறியாமையாற் செய்த குற்றங்கள் பெரியனவாயினும் 'சிறியோர் செய்த சிறு பிழை யெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடமை என்று விளம்பிப்' பிள்ளையைவாரி மார்போடு அணைத்து ஆலிங்கனஞ் செய்து ஆநந்த பாஷ்பம் பெருக்கினார். பிறகு, ஷஹாஜி புனாநகரத் திற்கு வந்து சேர்ந்தார். பீஜாபூர் சமஸ்தானத்துடன் உடன்படிக்கை நிறைவேறிற்று. சிவாஜியின் வேண்டுகோள் யாவும் கொடுக்கப் பட்டன. இது நடந்தது கி. பி. 1662. வடக்கில் கல்யாண் நகரத்தி லிருந்து தெற்கே பொண்டாவரையிலும், மேற்கே டாபல் பிராந்தி யத்திலிருந்து கிழக்கே இந்தாபுரம் வரையிலுமுள்ள நாடுகள் சிவா ஜிக்குச் சொந்தமானவை. ஷஹாஜி உயிருடன் உள்ளவரை பீஜா பூர் சமஸ்தானத்தை எதிர்ப்பதில்லை என்று சிவாஜி வாக்களித்தார். இதுடன் அன்னியர் படையெழுச்சி சம்பவித்தால் அவரவர்கள் ஒன்றுசேர்ந்து கும்பலாய்த் தாக்கவேண்டுமென்னும் ஏற்பாட்டை யும் பீஜாபூருடன் சிவாஜி செய்துகொண்டார். உடன்படிக்கை ஏற் பாடுகள் யாவும் நடந்தவுடன் சிவாஜி ஹஷாஜியை இராஜகடா, புரந் தரன்கோட்டை, லோகஹடா, ரைரிமுதலிய துர்க்கங்களுக்கு அழைத் துச் சென்றார். ஷஹாஜி ஒவ்வொரு கோட்டையையும் பார்த்து ரைரி துர்க்கத்தின் இருப்பை யறிந்து தன் குமாரனை யழைத்து 'இதோ! கோட்டைகளுக்குள் மிக்க பலமானது ரைரி. இதைச் சுற்றிலும் பலமான மலைத் தொடர்களிருப்பதினால் இதைப் பகைவர் கள் முற்றுகையிடார்கள். ஆகவே இதைப் பலப்படுத்த ஏற்பாடு செய்வாயாக' என்று கூறினார். தகப்பனார் வார்த்தையை சிரசாக வகித்து ரைரி கோட்டையை வெகு பலமாகவும் உயரமாகவும் கட் டும்படி சிவாஜி அப்பாஜி சோணதேவருக்குக் கட்டளையிட்டார். கோட்டை கட்டடம் முடிந்தவுடன் இதற்கு ராயகடா என்று பெய ரிட்டார் சிவாஜி. கோட்டைக்குள் தாய் ஜீஜாபாயிக்கு நல்ல வசதி யும் தனக்கு ஒரு வசதியும் வெகு அழகாய் அமைத்துக் கொண் டார். கோட்டை கட்டி முடிந்தவுடன் சிவாஜி அதின் பலத்தைப் பரீக்ஷிக்க ஒரு இராஜ விளம்பரம் அனுப்பினார். அதாவது, எவன் ஒருவன் இக்கோட்டைமீது இராஜ துவாராயின்றி இதர எவ்வழி

யாகிலும் ஏறிவருகிருனோ அவனுக்கு ஒரு பை பொன்னுணயம் கொடுக்கப்படும் என்றறிவித்தார். இந்த இராஜ அறிக்கையைக் கேட்ட * மாகர் குலத்தைச்சேர்ந்த ஒருவன் சிவாஜியை யடிபணிந்து 'மகாராஜா' நான் கோட்டைமீது ஏறிச்செல்வேன்; நான் ஜயமடைந்தால் என்கொடியைக் கோட்டைமீது நாட்டுவேன் என்று கூறினான்; சிவாஜி அவனை உற்றுநோக்கி உள்ளங்களித்து அப்படியாகுக. உன்னுடைய பிரயத்தனத்தைச் செய் என்று கூறி விடையளித்தார். சிவாஜியின் உத்திரவைப்பெற்றுத் தான் சிறுபொழுதிலிருந்து ஏறிச்செல்லும் வழியைக்கொண்டு பையப்பைய மேலேறிக் கோட்டையின் உச்சியில் வந்து தன் துவஜத்தை நாட்டினான். உடனே கோட்டையின் உச்சியில் கொடி பறப்பதைக் கண்டு சிவாஜிக்கு அறிவித்தார் பலர். சிவாஜி அம்மாகர் குலத்தவனை யழைத்துத் தட்டிக் கொடுத்துப் பணத்தை வெகு உற்சாகத்துடன் அளித்தார். அதுமுதற் கொண்டு அவன் ஏறிவந்த வழிக்கு † சோர்தர்வாஜா என வழங்கி வருகின்றது. சிவாஜி இவ்வழியை நன்ருக மூடிப் பெரிய உள்மதில் ஒன்று கட்டினார். இப்படி இருக்குந் நாளில் ஒருநாள் மற்ருெரு சம்பவம் நேர்ந்தது. கோட்டைக்குள்ளிருக்கும் படைவீரர்களுக்கு வழக்கமாய்ப்பால்கொண்டு வருபவள் ஹிரகாணி என்னும் ஆயர்பெண்டிர். இவள் ஒருநாள் பால் கறந்து கொடுப்பதிலேயே யிருந்ததினுல் மாலைப்பொழுது போனதையும் கவனிக்கவில்லை; கோட்டையை விட்டு வெளியே புறப்படுவதற்குக் கோட்டை வாயில் மூடியிருந்தது. காப்பாளர்கள் வழிவிடமாட்டோம் என்று கண்டிப்பாய்க் கூறினர். இவள் தன் வீட்டிற்குப் போகவேண்டும்; வீட்டில் குழந்தையும் வயதுசென்ற மாமியும் தன்வரவை எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றனர், என்செய்வாள் ! பார்த்தாள், உடனே யோசனை ஒன்று தோன்றிற்று. கோட்டைப் பின்புறத்தில் இருட்டுவழி யொன்றிருப்பதை இவள் நன்ருய் அறிவாள்; உடனே இராஜ தண்டனையும் பார்க்காமல் தன் உயிரையும் இலக்ஷியம் செய்யாமல் வீட்டிற்குத் திரும்பிச் செல்வதையே கருமமாகக்கொண்டு புறப்பட்டு, அவ்

---

* மகாராஷ்டிரத்தில் உள்ள தீண்டாத் திருமேனியர்களுக்கு மாகர் எனக் கூறுவர்.

† சோர்தர்வாஜா என்ருல் கள்ளவழி. சோர்-கள்ளன் தர்வாஜா-வழி,

வழியே சென்று தன் வீடுபோய்ச் சேர்ந்தாள். இதைக் கேள்வி யுற்ற சிவாஜி அப்பெண்மணியின் சாகஸத்தைக்கொண்டாடி உடனே அவ்வழியை மறைக்கப் பெரிய சுவரொன்று கோபுரமாகக் கட்டி அதற்கு அப்பெண்மணியின் பெயர் என்றும் வழங்கும்படி அதற்கு 'ஹிரகாணி கோபுரம்' எனப் பெயருமிட்டார். கோட்டைக்கு வேறு கள்ளவழிகள் இல்லையென்பதை நன்ருய் அறிந்து சிவாஜி தன் கஜா ஞவைக் கோட்டைக்குள் கொண்டு வந்தார். கஜாஞவில் அவருக்கு அப்பொழுது இருந்த தொகை சற்றேறக்குறைய * ஒன்பதுகோடி ரூபா என்பதை வாரிங் என்னும் ஆங்கிலேயர் ஒருவர் தாம் எழுதிய மராதியர் என்னும் நூலில் எழுதியிருக்கிருர். இக்கோட்டையைப் பற்றி ஹென்றி ஆக்ஸன்டன் பின் வருமாறு வர்ணிக்கிருர்.

இக்கோட்டை இயற்கையமைப்பு கொண்டது. எவ்வளவுதான் கைப்பாடு கொண்டிருந்தபோதிலும் இக்கோட்டைக்கு இயற்கை யின் பலமேபலம். இக்கோட்டைக்கு இருவாயில்கள் உண்டு. அவ் வாயில்கள் பெரிய மதில்சுவற்றில் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோட்டையைச் சுற்றிலும் செங்குத்தான மலைகளே யிருக்கும். இக்கோட்டைக்குள் பல கட்டடங்கள் இருக்கும். மதிமந்திரி பிரதானிகள் முதலியவர்களின் வசதிகள் மட்டும் முன்னூ றுக்குக் குறையாம லிருக்கின்றன. இதல்லாமல் ஆஸ்தான மண் டபம், குதிரைச்சாலை, முதலிய பல இருக்கைகளும் இருக்கும். இக்கோட்டைக்கு ஆங்கிலேயர் † 'கிழக்கு ஜிப்ரால்டர் எனக்கூறு வர். 1817-ம் வருடத்திலுண்டான முற்றுகையில் இக்கோட்டை ஒருவாறு நாசப்பட்டு நஷ்டமடைந்தபோதிலும் கோட்டையின்

* இவ்வொன்பதுகோடி ரூபாய் மதிப்பில், வெனிஸ் தேசத்திய பொன் ஞணயங்கள், ஸ்பெயின் தேசத்துப் பவுன்கள், மொகலாயர்களின் மோகராக் கள், பொன் கதிர்கள், தங்கக் கம்பிகள், முத்து, வைரம், நகை, ஆபரணங்கள் முதலியனவும், பட்டுபீதாம்பரங்கள், துணிகள் முதலியனவும், படைத்தொழி லுக்குரிய பற்பல தளவாடங்களும் இருந்தன.

† ஜிப்ரால்டர் என்பது மத்திய தரைக்கடலையும் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தையும் பிரிக்கும் ஒரு பூசந்தி. இதுபெரிய செங்குத்தான மலையி லுள்ளது. மிக்க பலமானது. இக்கோட்டையும் ஜிப்ரால்டர் போலவே பலமாயிருப்பதால் இதற்கு அப்பெயரிட்டனர்.

பெருமையும் பலமும் பார்த்த மாத்திரத்தில் இன்றைக்கும் நன்கு புலப்படும். இவ்விடத்திலேயே சிவாஜிக்கு மகுடாபிஷேகம் நடந்தது. இவ்விடம் இன்றும் காணப்படும். இவ்விடத்தில் யாத்திரைக்காரர்கள் காலில் பாதரட்சையின்றி வெகு பயபக்தியுடன் செல்வார்கள். தீண்டாத் திருமேனியர்கள் இவ்விடம் வர பயப்படுவார்கள். இவ்விடத்தில் ஒரு * மாடமொன்று கட்டப்பட்டிருக்கின்றது. இம்மாடம் சிவாஜி பரலோகமடைந்து தகனஞ் செய்யப்பட்ட இடத்தில் கட்டப்பட்டது. இதுடன் ஒரு கோயிலும் ஒரு கோரியும் கட்டப்பட்டிருக்கின்றது.

அனுபந்தம் 1.

சிவாஜி மகாராஜாவின் கடிதம்.

சிவாஜி ஷஹாஜிக்கு எழுதியது.

உம்முடைய கடிதம் வந்து சேர்ந்தது. அதில் பாஜீ கோரபடே மகாராஷ்டிர ஸம் ஸ்தாபனத்திற்கு உதவிபுரியாமல் முகம்மதியர்களுடன் சேர்ந்துகொண்டு துரோகஞ் செய்கிறான் என்றும், கவாஸ்கான் கோரபடேயுடன் சேர்ந்து லக்கம் ஸவந்த், கெம் லெவந்த் ஆகிய இவர்கள் என்னை (சிவாஜியை) எதிர்க்க வருகிறார்களென்றும் நீர் எழிதியிருக்கிறீர். இதுடன் தகப்பனர் வார்த்தையை ஒருநாளும் தள்ளாத நீயே (சிவாஜியே) அவர்களைப் பழிக்குப் பழி வாங்க இதுவே தருணமென்றும் பாஜீகோரபடே முத்தோல் வந்துவிட்டான் என்றும் வெகு விலாசமாய் எழுதியிருக்கிறீர். இவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டு நாங்கள் முத்தோல் சென்று சூறையாடி நாட்டையும் கைவசப்படுத்திக் கொண்டோம். பாஜீயும் எங்களுடன் அமர் புரிந்து மாண்டான். சண்டை வெகு பலமானது. திரண்ட நிதிக்குவியல்களைக் கொண்டோம். எங்களுக்கு நிரம்ப சாமான்கள் கிடைத்தன. கவாஸ்கான் எங்களை

எ

† ரேடம்—துளசிமாடம் அல்லது பிருந்தாவனம் எனப்படுவர்.

எதிர்க்கவந்தான். அவனையும் நாங்கள் முறியடித்தோம். ஸவந்தர்களை அழுத்துவதே எங்கள் அடுத்த கடமை. கோட்டைகள் பல எங்கள் சுவாதீனமாயின. பொண்டாவுடன் போர்புரிந்து கோட்டைகளைத் தூள் தூளாக்கினோம். அவர்களுடைய பிராந்தியங்களுக்கு நாங்களே நாயகர்களானோம். பிறகு போர்த்துகல் இராஜ்யத்தை நாடினோம். அவர்களை எதிர்த்துச் சில பாகங்களைக் கைப்பற்றினோம். அவர்கள் உடன்படிக்கைக்கு வந்து எங்களுக்கு அநேக பெரிய பீரங்கிகளைக் கொடுத்தார்கள். ஸவந்தர்களும் இனி போர்த்துகல் ஜாதியார்களின் பிராந்தியங்களில் வசிப்பது பந்தோபஸ்தல்லவென்று எங்களுடன் சமாதானத்திற்கு வந்தார்கள். அவர்களுடைய சமாதான ஏற்பாடுகளை நாங்கள் ஏற்றுக்கொண்டோம், ஆகவே, இவைகள் யாவும் உங்களுடைய ஆசீர்வாதத்தினாலேயே கிடைத்தன. நீங்கள் எண்ணியபடியே சகலமும் சம்பவித்தன. நீங்கள் சந்தோஷப்படுவதற்கே, இச்சங்கதிகளை உங்களுக்குத் தெரியப்படுத்தினேன்.

எட்டாவது அத்தியாயம்.

துக்காராம்—இராமதாஸ்—சிவாஜி.

இராஜஸ குணத்தை அவலம்பித்து வந்த சிவாஜிக்கும் ஸத்துவகுணமே உருவெடுத்த துக்காராம், இராமதாஸ் இவர்களுக்கும் என்ன சம்பந்தம் என்பதைப்படித்தவர்கள் கேட்கக்கூடும். ஆனால் சிவாஜி இதுகாறும் காண்பித்த சௌரியப் பிரதாபத்திற்கும், சுயதேசாபிமானத்திற்கும் சுய மதஸம்பரக்ஷணத்திற்கும் இவர்களே காரணம். மகாராஷ்டிரம் மதவழிபாடுகளிலும் இராஜீய தேசீய வழிபாடுகளிலும் இலக்கண இலக்கிய நூல் வழிபாடுகளிலும் பாஷாபிவிர்த்தி வழிபாடுகளிலும் ஜனாசார வழிபாடுகளிலும் மேம்பாட்டையடைந்தது இவர்களின் பிறப்பேயாகும். மகாராஷ்டிர அப்பியுதம்முக்கியமாக முழுதல் முதல் சுயமத ஸம்ஸ்தாபனதினாலேயே யுண்டாயிற்று. இதர தேச சரித்திரங்களுக்கும் நம் நாட்டுச்

சரித்திரத்திற்கும் பல வேறுபாடுகள் இருந்தும் பொதுவாகக் கூறு மிடத்து ஒவ்வொரு நாட்டிலும் இராஜீய உணர்ச்சிகள் உண்டாவ தற்கு முன்னர் சுயமத உணர்ச்சியே உண்டாகும். மனிதர்களுக்கு மதாபிமானமானது இன்றியமையாதது; மத உணர்ச்சியின் பெருக் கமே தேசாபிமானத்தை வளரச் செய்கின்றது. மத உணர்ச்சி குறைந்தவிடத்து தேசாபிமானம் குறையும். கி. பி. 1646-ம் வருடம் முதல் 1660-ம் வருடம்வரை இங்கிலாந்து தேச ரக்ஷகரான கிராம்வெல் ஜெயித்த யுத்தங்கள் யாவும் மத உணர்ச்சிப் பெருக் கத்தினாலேயே என்பதை அத்தேச சரித்திரக்காரர்கள் வெகு வாய்க் கூறுகின்றனர். ஐரோப்பாவிலுள்ள ஹாலந்துதேசம் பிர ஜாத்மக இராஜ்யம் ஸ்தாபித்ததற்கு மத உணர்ச்சியே முக்கிய காரணமெனப் பலர் கூறுகின்றனர். ஸாங்கியத்தில் யோகத்தை யும் யோகத்தில் ஸாங்கியத்தையும் உபயோகித்துக் கர்மத் தையும் ஞானத்தையும் ஒன்று சேர்த்து அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ண பகவானால் உபதேசிக்கப்பட்ட கீதா சாஸ்திரமானது பெரிய வேதாந்த கிரந்தமெனச் சகல இந்துக்களும் கொண்டாடி வருகின்றனர். இந்த வேதாந்த சாஸ்திரமானது அர்ச்சுனனுக்கு மோட்ச சாதனமாக ஏற்பட்டு அவனை ஸ்வதர்மத்தை யனுஷ்டிக்கும் படி தூண்டவில்லையா? அதுபோல் அவர்கள் தம் மகாராஷ்டிரம் சுய ஆட்சி பெறுவதற்குச் சிவாஜியைத் தூண்டினார்கள்.

மகாராஷ்டிரத்தில் பிறந்த பகவத் பக்தர்கள் மகாராஷ்டிரத் தில் ஏகநாதர், வாமனஸ்வாமி, முத்தேஸ்வர ஸ்வாமி, துக்காரம், இராமதாஸ் முதலிய சாதுக்கள் அநேகர் பிறந்தனர். அவர்களில் சிலர் சிவாஜி காலத்தவர்கள். இவர்களில் துக்காராம் என்பவர் வணிக குலத்தைச் சேர்ந்தவர். இவருக்கு முற்பட்டவர்களும் இவர் காலத்திருந்தவர்களும் அல்லது பிற்பட்டவர்களும் மகா ராஷ் டிரத்தில் செய்த நன்மைகள் பல உள. அவைகளில் முக்கியமானவை மூன்று.

1. சங்க சேர்க்கை:—இவர்கள் ஜாதிபேதமின்றி பக்திஞான வைராக்கியங்களை எல்லா சாதிக்கும் உபதேசித்து வந்தார்கள். ஞானி யொருவன் இழி குலத்திற் பிறந்தவனாயினும் அவனைப்

பிராமண ஞானிகளைப் போலவே வித்தியாசமின்றி சன்மானிப்பார்கள். துக்காராம் வைசியர்; நாமதேவர் சூத்திரர்; சோகாமேளர் பறையர். இவர்கள் யாவரும் பிராம்மண குலத்திற்றோன்றிய ஏகநாதர், ராம்தாஸ் முதலியவர்களைப் போலவே சமானமான கௌரவ முள்ளவர்களாகக் கருதப்படுகிறார்கள். இப்படி இந்த சாதுக்கள் ஜனங்களுக்கு ஞானம் பிரதானமே யல்லது ஜன்மம் பிரதானமல்லவென உபதேசித்து வந்தனர்.

2. பாஷாபிவிருத்தி:—ஞான நன்னெறிக்கு நல் வரம்பாகிய வேதாந்த கிரந்தங்கள் யாவும் சமஸ்கிருத பாஷையில் இருப்பதினால் சமஸ்கிருத பாஷையறியாத அநேகர் வேதாந்த விஷயங்கள் அறியுமாறு மராடி பாஷையில் கத்திய நடையில் எழுதப்பட்டன. அநேகர் பத்தியமாகவும் எழுதி யிருக்கின்றனர். மகாராஷ்டிரத்தில் உண்டான கவிகள் யாவரும் பகவத் பக்தி கொண்டவர்களே. மராடி பாஷையில் கவிபாடினவர்களைச் சமஸ்கிருத பண்டிதர்கள் பரிகசித்தார்கள். முகம்மதியர்கள் பாஷாபி விருத்திக்குத் தடங்கலாயிருந்தனர். முகம்மதியர்களின் துர் அபிமானத்தையும் சமஸ்கிருத பண்டிதர்களின் பரிகாசங்களையும் இலட்சியஞ் செய்யாமல் இவர்கள் கல்விப் பிரியத்தினால் அவிவேகிகளுக்கு ஈஸ்வர ஞானம் சுலபமாக உண்டாகும்படி செய்யவேண்டு மென்று நிர் அபேக்ஷைப் பரோபகார புத்தியினால் பரவசப்பட்டு மகாராஷ்டிர மெங்கும் தேச பாஷையை விர்த்தி செய்தனர். ஞானவிஷயங்கள் நன்றாகத் தெரியும்படியும் நீதி விஷயங்கள் நன்கு புலப்படும்படியும் பகவத் பக்தி பாகவத பக்தி இவ்விரண்டும் செவ்வனே உண்டாகும்படியும், பிராணிகளிடத்தில் அன்பு, தயை முதலிய குணங்கள் உண்டாகும் படியும் செய்த இஞ்ஞானிகள் பிரபஞ்சத்திலுள்ள எத்தேசத்திலும் பூஷணமாக யிருந்து வருவார்கள்.

3. இராஜீய உணர்ச்சி—இச்சாதுக்கள் பகவத் பக்திவழியாக இந்துக்கள் சகலரையும் ஒரு இடத்தில் சேர்த்து அவர்களுக்குள் ஐக்கியபத்யம் விர்த்தியாகும்படி செய்தனர். ஐக்கியமின்றி, துக்கடித் துக்கடியாய் அங்கங்கே இந்துக்கள் இருந்த பொழுது, முகம்மதியர்கள் தொடுத்த துன்பங்களை யெல்லாம் வெகு தைரியமாய்

அவர்கள் சகித்துக்கொண் டிருந்தார்களே யொழிய முகம்மதியர்களை எதிர்க்க சாத்தியமற்றிருந்தனர். இப்பகவத் பக்தர்களுடைய சகாயத்தினுல் இந்துக்கள் வர வர ஐக்கிய மடைந்து சுயமத ஸம்ரக்ஷணத்திற்கு அதி உற்சாகத்துடன் முன்வந்தார்கள். இச்சாதுக்களின் உபதேசங்களினுல் மராடியர்கள் வெகுவாய் ஐக்கியம், தேசாபிமானம், மதாபிமானம் முதலிய அரிய குணங்களைப் பெற்றனர்.

இச்சாதுக்களில் சிவாஜி காலத்திருந்தவர்கள் இருவரே. இவ்விருவர்களும் சிவாஜிக்கு இராஜ தர்மங்களையும் மத உபாக்கியானங்களையும் உபதேசித்து வந்தனர். அவர்களில் முதல் முதல் துக்காரம் ஸ்வாமி. ஆகவே, அவரைப்பற்றிச் சற்றே கவனிப்போம்.

1. துக்காராம்.

புனுநகரத்திற்கு அருகாமையில் இந்திராயணி நதிக்கரையிலுள்ள டேகு என்னுங் கிராமத்தில் கி. பி. 1608-ம் வருடம் இவர் பிறந்தார். இவர் தகப்பனுர் ஒரு சிறிய வியாபாரி. 1629-ம் வருடத்தில் உண்டான கொடிய பஞ்சத்தில் துக்காராம் தாய் தகப்பன்மார்களும் இதர சுற்றத்தார்களும் பரலோக பிராப்தி யடைந்தார்கள். இவர் பண்டர புரத்தில் பிரசன்னமா யிருக்கும் விடோபா (பாண்டுரங்கன்-விடலநாதன்) ஸ்வாமியை அனவரதமும் தொழுது வந்தார். இவருடைய பக்தி நாளுக்கு நாள் விர்த்தியாகவே, பக்தி வலையிற் படுவோன் மெய்ம்மறந்து கூறும் வார்த்தைகள் யாவும் பத்தியமாக முடிவதுபோல், துக்காராம் விடோபாவைப் பூசித்துக் கூறும் சொற்கள் சிறந்த பாக்களாகத் தோன்றின. அக்காலத்தில் பிராமணர்கள் இவரை ரொம்பவும் இம்சை செய்தார்கள். என்றுலும் கடைசியாக அவர்கள் அனைவரும் துக்காராம் சுவாமியைச் ரணுகதியடைந்தனர். இறக, சிவாஜி சுவாமியின் அரிய செயல்களையும் ஞானவைராக்கியங்களையும் பலரறியக் கேட்டு துக்காராம் ஸ்வாமியைத் தரிசித்துத் தன் அரண்மனையில் வந்து வசிக்கும்படி பிரார்த்தித்தார். துக்காரம் ஸ்வாமி சிவாஜிக்குப் பல உபதேசங்கள் செய்து தன் ஊர் போவதாகப் புறப்பட்ச

மறைந்தார். இவர் மறைந்த காலம் கி. பி. 1649. சாமானிய ஜனங்கள் துக்காராம் ஸ்வாமியை விடோபா திருவுள்ளம் பெற்றுத் தன்னிடம் சேர்த்துக் கொண்டார் எனக்கூறுகின்றனர். துக்காராம் சிறந்த கவி. இவர் கவிகள் அனைத்தும் சாமானிய ஜனங்களுக்கு நன்கு தெளிவுறும். பின் வருவன துக்காராம் ஸ்வாமி சிவாஜிக்குப் பிரசாதித்தருளிய * நீதிவாக்கியங்கள்.

1. பகவான் பூமியைப் படைத்தார்; அதில் சகல கலைகளையும் அறிவையும் உண்டாக்கினார். ஓ! வல்லமை பொருந்திய அரசனே! நீ குரு பக்தியிலும் ஞானநெறியிலும் ஈடுபட்டிருக்கிறாய்.

2. மராடியர்களுக்குத் தலைவனாய், சத்தரபதியாய் பாராளும் வேந்தனாய் இருக்கிறாய். உன் பெயர் சிவா. விரதங்களையும் நோன்புகளையும் அனுஷ்டித்திருக்கிறாய். தியானத்தையும் யோகத்தையும் உபாசித்து வருகிறாய். நல்லது. ஆகவே, என்னை அரண்மனைக்கு அழைக்கிறாய்.

3. வேந்தே! கேளாய். நாங்கள் காடே திரிந்து காற்றே புசித்து கந்தையே சுற்றியிருப்பவர்கள். ஆடையின்றி ஊனூராய் அலைந்து திரிபவர்; அன்னபானமின்றி கறங்குபோல் ஆடுபவர். மேலும், நான் விகார ரூபத்தைக் கொண்டவன். என்னைப்பார்ப்பதில் உங்களுக்கு என்ன இன்பம். நான் சொல்வதைக் கேள். என்னை அழைக்காதே.

4. அரண்மனைக்கு என் வரவேண்டும். பலனற்ற யாத்திரையை நாடுவானேன். மனைதோறும் சோறிருக்க, திசைகள் ஆடைகளாயிருக்க, பூமியே படுக்கையாயிருக்க, வானமே போர்வையாயிருக்க எனக்கென்ன குறை.

5. ஏன் என்னை யழைக்கிறாய்; வீண்கால விரயம்; கீர்த்திக்கு உறைவிடம் அரசன்; இம்மைக்குதவாது கீர்த்தி. அரசன் பாக்கியசாலி; மற்றவர் துரதிருஷ்டசாலி. உன் பொன்னுடையைப் பார்த்ததும் பாதி பிராணன் போனவனானேன்.

* இவ்வாக்கியங்கள் மராடி பாஷையில் பத்தியத்தில் இருப்பதனால் தர்ஜமாசொல்லுக்குச் சொல் அப்படியே செய்யப்பட்டது. ஆகவே நடை அழகின்றிருக்கும்.

6. நீ என்னை அநாதரவு பண்ணினாலும் பகவான் என்னை அநாதரவாகச் செய்யார். துறவறமே எனக்கு உகந்த துணை நலம். ஆகவே, உன் மனப்படி செய்.

7. மாந்தர்கள் பலர் காய சுத்திகொண்டு கொடிய விரதங்களும் யாகங்களும் உபாசனைகளும் செய்கின்றனர்; ஆசையை மட்டும் ஒழிக்கவில்லை. நீ புருஷர்களில் சிரேஷ்டமானவன்.

8. எப்பொழுதும் ஒரே காரியத்தைச் செய். விசாரமற்றிரு. என்னை அழைக்காதே. பாபத்திற்குப் புகலிடம் அரண்மனை.

9. துன்மார்க்கர்களும் வசை கூறுவர்களும் உன்னைச் சுற்றியிருப்பர்; அவர்களை இலட்சியஞ் செய்யாதே. நல்ல இராஜ தர்மங்களையறிந்தவர்களைத் தேடு. இதையே விரதமாக வைத்துக் கொள்.

10. இதைச் செய்; என் மனம் சாந்தியடையும். உன்னுடன் வர முடியாது. வாழ் நாளோ குடங்கவிழ் நீர் போன்றது.

11. உலகில் சத்தியம் ஒன்றே உண்டு. சர்வ பூதங்களிலும் ஆன்மா ஒன்றே உண்டு. உன்பக்தியை இவ்வான்மாவிடத்தில் செலுத்து. இராமதாஸைக் காண்பாய். எவன் சகல பிராணிகளிடத்திலும் உள்ள ஆன்மாவைத் தன்னிடங் காண்கின்றானோ, எவன் தன் ஆன்மாவைச் சகல பிராணிகளிடத்திலுங் காண்கின்றானோ அவனே தீரன், அவனே யோகி, இதை மறக்காதே. சகல பிராணிகளும் உன்னை வாழ்த்தும். இம்மையிலும் மறுமையிலும் நல்ல கீர்த்தி பெறுவாய்.

12. ஓ! அரசனே! கேள். இராமதாஸரிடம் உன் மனத்தைச் செலுத்து; அவரே உன் குரு. உனக்கு ரட்சகர். அவரைச் சரணாகதியடை.

13. அவர் மாருதி (ஹனுமான்) அம்சம்; உனக்கு மந்திரோபதேசஞ் செய்வர். இராமநாமமே கலிதீர்க்கும்; இராமநாமமே வால்மீகியை மோட்சம் பெறவைத்தது. வசிஷ்டரின் மணிமந்திரமும் இதுவே. ஓ! சிவா! பாண்டுரங்கனே உன்னை இரட்சிப்பார். இராமதாஸரையே சதா பஜி. வேறொருவரையும் நாடாதே.

14. நீயோ சத்தரபதி. (சந்திரவட்டக் குடை கீழிருந்து குவலயம் காப்பவன்) நாங்களோ பத்தரபதி. (வான் கீழிருந்து கந்தை சுற்றி யிருப்பவர்) நாங்கள் எங்கும் பிக்ஷையெடுக்க அருகர்கள்.

15. பகவான் எங்களுக்குப் பிக்ஷா பாத்திரத்தைக் கொடுத்திருக்கிறார். நநங்கள் எங்கள் வழிச் செல்வோமாக. நீயும் இராம பக்தன். நீ உன்வழியை நாடு. நாம் அனைவரும் விடலநாதனின் தொண்டர்கள். பகவான் நம்மைக் கைவிடமாட்டார்.

16. இராமதாஸரை அடிபணிவாய். உனக்கு நன்மை வரட்டும். உன் குருவுக்கு நீ சேவை செய்வாய்.

17. சிற்றால வட்டங்கள், குடைகள், பரிவாரங்கள் இவைகள் எனக்குதவா. ஓ! பகவானே! ஏன் வீணாக இச்சம்ஸாரத்தில் என்னை அழுத்துகிறாய். கீர்த்தியும் வேண்டேன். போகமும் வேண்டேன்.

18. எனக் குதவாத வஸ்துக்களை விரும்பும்படி தூண்டுகிறீர். என் உடல், பொருள், ஆவி மூன்றையும் உனக்கு அர்ப்பணஞ் செய்தும், என்னை வீணே தொல்லையில் தள்ளுகிறீர்.

—oo:o:oo—

சிவாஜி துக்காராம் ஸ்வாமியைப் பன்முறை தரிசித்து வந்தார். துக்காராம் ஸ்வாமியின் ஞானோபதேசத்தில் ஈடுபட்ட சிவாஜி இவ்வுலகை வெறுத்து சர்வசங்க பரித்தியாகியாக நாடினார். ஆனால் ஜீஜாபாய் சிவாஜிக்கு இராஜ தர்மத்தைப் போதித்து மகாராஷ்டிரத்தில் சுயராஜ்யமொன்று ஸ்தாபிக்க வேண்டுமென்னும் உணர்ச்சியை அடிக்கடி இவள் சிவாஜிக்கு ஞாபகமூட்டி வந்தாள். இவர், பிறகு, ராமதாஸரைத் தன் குருவாக வரித்துக்கொண்டார். இம்மகான் பிறந்தது கி. பி. 1608.

2. இராமதாஸ்.

இவர் கோதாவரி தீரத்திலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவர். இவர் தகப்பனார் பெயர் சூனயாஜி பண்ட். தாயார் பெயர் ராணுபாய். இவர்களுக்கு வெகு காலமளவு புத்திரப்பேறு கிடையாமல்

இருந்து கடைசியாக சூரியபகவான் அருளினல் இருபுத்திரர்கள் பிறந்தனர். மூத்தகுமாரன் பெயர் கங்காதரன். இவன் சூரியன் அம்சம். இரண்டாவது குமாரன் பெயர் நாராயணன். இவன் மாருதி அம்சம். குழந்தைப்பருவ முதற்கொண்டே இவர்கள் மிக்க மத உணர்ச்சி கொண்டவர்கள். ஞானவழியில் மிக்க விருப்பங் கொண்டவர்கள். மூத்தவனுக்குச் சிறுவயதிலேயே விவாகம் ஆயிற்று. இரண்டாவது குமாரனுக்கு விவாகச் சடங்கு நடந்து வருகையில் விரக்தி தோன்றி அவர் மணவறையை விட்டு நீங்கினர். இவர் தான் ராமதாஸ். (ராமபிரானுடைய தொண்டன்) இருபத்திநன்கு வருடகாலம் இவர் எங்கிருக்கிறார் என்பது தாய் தகப்பன்மார்களுக்குத் தெரியாது. இவர் முதல் முதல் பஞ்சவடிக்குச் சமீபத்திலுள்ள தாக்காலி என்னுமிடத்திற்குச் சென்றார். இங்கு பன்னிரண்டு வருடகாலம் இவர் அகோரதவத்தில் இருந்தார். பிறகு இவர் சேது இமயகிரிவரை திவ்விய தேசயாத்திரை செய்து பல ஆலயங்களைத் தரிசித்தார். 1644-ம் ஆண்டில் இவர் தன்னூர் வந்து வயதுசென்ற தாயை வணங்கி அங்கேயே வசித்து வந்தார். வையாநகரமும் மாஹூலி புரமும் ராமதாஸுக்குப் பிரீதியான இடங்கள். இவர் நாள் கணக்காக இவ்விடங்களில் தங்குவதுண்டு. இவ்விடத்தில்தான் ராமதாஸ் 1649-ம் ஆண்டில் சிவாஜிக்கு முதல் முதல் தரிசனங் கொடுத்தார். சிவாஜி பலதுறைகளினின்றும் ராமதாஸின் மகிமையைக் கேட்டு அவரைத் தரிசிக்க ஆவல்கொண்டு சாபல் நகருக்குச் சென்றார்: ராமதாஸ் அங்கில்லை. உடனே அன்னுகாரமின்றிப் புறப்பட்டார் சிவாஜி. குருமூர்த்தியைக் காணும் வரை உண்பதில்லை என சபதஞ் செய்து கொண்டார் இவர். கடைசியாக பவானி தேவியின் அருளினல் ராமதாஸரைத் தரிசித்தார் சிவாஜி வரவர இராமதாஸரிடம் அத்யந்த பிரேமைகொண்டு பூசிக்கலானர். சிவாஜியின் பக்தி இவ்வளவவ்வளவல்ல. இராமதாஸ் சிவாஜிக்கு மிக்க அன்புகாட்டி வந்தார். இராமதாஸ் சிவாஜிக்குப் பல நீதிகள் கூறினர். அவை பின்வருமாறு.

1. சலியாத நெஞ்சத்தவனே! பலர் உன்னல் பிழைக்கின்னர். நீயோ சாதுக்களுடைய வாழ்க்கையைக் கொள்ள நாடுகிறாய். உன் வாழ்க்கை இன்பமுள்ளது. நீ, தியானத்தைக் கொள்கிறாய்.

உன் மனம் மிக்க விசாலமானது. உனக்கு இணையானவர்கள் இங்கு வேறெவரும் இல்லை.

2. தைரியவானே! நீ அநேக மன்னர்களைக் கொன்று கீர்த்தி யடைந்தாய். ஆலயங்கள் அழிந்தன. அந்தணர் இருக்கைகள் ஒளி குறைந்தன. பூமி நடுங்குகிறது. பக்தி தொலைந்தது.

3. தேவர்களும் பசுக்களும் பிராமணர்களும் காப்பாற்றத் தக்கவர்கள். பக்தி பெருகச் செய்யவேண்டும். ஆகவே உன்னைப் பகவான் கருவியாகப் படைத்தார்.

4. பிரபஞ்சத்தில் ஒருவராலும் காப்பாற்ற முடியாத மதாசாரத்தை நீ காப்பாற்றினாய். துஷ்டர்கள் ஒழிந்தனர். அவர்கள் நடுநடுங்குகின்றனர். அநேகர் உன்னை அடைக்கலம் புகுகின்றனர். ஓ! சிவா!

5. சகல விக்கினங்களையும் அறச் செய்யும் கணபதியை நான் தொழுகிறேன். நான் சரஸ்வதியையும், இலட்சுமியையும், ஞானிகளையும், குல தெய்வங்களையும், ஸ்ரீராமபிரானையும் தொழுகிறேன். என்னைக் கேட்பவர்கள் அங்ஙனம் செய்தால் இன்புறுவார்கள். இலதேல் அவர்கள் பிரியம். நான் உன்னுடைய இராஜாங்கத்திற்காகவே எழுதினேன். எவனொருவன் நீதியாய்ப் பரிபாலனஞ் செய்கிறானோ அவன் சுகத்தை யனுபவிப்பான். உன்னுடைய முயற்சிகள் இடைவிடாமல் இருப்பின் கடைசியாக நீ வெற்றி பெறுவது திண்ணம்.

6. முதல் முதல் மனிதர்களுடைய மாதிரிகளை அறிந்துகொள்; ஒருவன் நல்ல முயற்சி யுள்ளவன் என்று உன் மனதிற்குப் பட்டால் உடனே அவனுக்கு வேலை கொடு. அவன் சோம்பேறியாயிருந்தால் அவனை நீக்கிவிடு.

7. பார்வையிலும், அறிவதிலும், கஷ்டப்படுவதிலும் அவமானம் வேண்டாம். மனிதர்களின் முயற்சிக் கேற்றவாறு நன்மைகள் உண்டாகும். உழைப்பாளியாயிருந்து ஒருவன் முரடனா யிருந்தால் அவனைச் சேர்த்துக் கொள்ளலாம். முரட்டுத் தனமும், வஞ்சகமும் இருந்தால் உடனே அவனை ஒழித்துவிட வேண்டும்.

8. ஒவ்வொருவர்களுடைய மனதையும் அறிய வேண்டும். துஷ்டர்களை ஒதுக்குவதும் நல்லவர்களைப் பக்கலில் அடைவதுமே நல்ல திருஷ்டத்திற்கு அறிகுறியாம்.

9. ஒருவன் உனக்கு உதவி செய்தால் அவனுக்கு மறுபடியும் உபகாரஞ் செய்வதில் மறக்காதவனாயிரு. நியாயந் தவறி நடவாதே. நியாயந் தவறினால் துன்பங்கள் பல விளையும். நீதியில்லா விடத்தில் ஒன்றுமில்லை. நோயும் வறுமையும் சதா குடிகொண்டிருக்கும்.

10. துரதிருஷ்டத்தால் துன்பப்பட்டவன், திடீரென்று செல்வம் அடைந்தவன், நல்ல ஆபத்து சமயத்தில் பயங்காளியான வன் ஆகிய இவர்களை எவ்வாற்றாலும் நம்பொணாது.

11. கஷ்ட தசையில் மனங் கலங்காதே. எல்லா உபாயங் களாலும் பரிகாரந் தேடு. கடைசியில் எல்லாம் நன்மையாகவே முடியும்.

12. ஒவ்வொருவர்களையும் அந்தஸ்திற்குத் தக்கபடி அடக்கி வை. விவேகிகள் அப்பொழுதுதான் உன் பரிபாலனத்தைக் கொண்டாடுவார்கள். அடக்கு முறைகள் சரியாக இல்லாமற் போனால் இராஜாங்கமானது பலஹீனப்படும்.

13. சண்டையில் எப்பொழுதும் முன்னணியிற் செல்லாதே; அங்ஙனம் போவது இராஜதந்திரமல்ல. அநேக தளகர்த்தர்களை அனுப்பலாம், சிப்பந்திகளை நிரம்ப வைத்துக்கொள், ஒரே காரியத் திற்கு அநேகரை நியமிக்காதே, உன் புத்திக்கு எட்டியபடி அவரவர் களுக்கு வெவ்வேறு காரியங்களைக் கொடு.

14. தலைவனுடைய மானம் பங்கப்படுவதாயிருந்தால் அவன் பிராணனை வைத்துக்கொண்டிரான். மானத்தைக் காப்பாற்றுவதே மன்னர்களுக்குரிய சிறந்த கடமை.

15. நல்ல படையைச் சேர்த்தவுடனே யுத்தத்திற்கு ஆரம் பிக்க வேண்டும். யுத்தம் ஆரம்பிப்பதில் வெகு சாக்கிரதையாய் இருக்கவேண்டும். ஆடுகள் புலியைக்கண்ட மாத்திரத்தில் மூலைக்கு மூலை ஓடுகின்றன. பருத்த காளைகள் ஓடா.

16. அரசர்கள் அவர்களுக்குரிய கடமைகளைச் செய்யட்டும். க்ஷத்திரியர்களா யிருப்பவர்கள் க்ஷத்திரியர்களுடைய தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும்.

17. அசுவங்கள், யுத்த தளவாடங்கள், குதிரைப்பாகர்கள் ஆகிய இம் மூன்றையும்பற்றிச் சதா மேல்விசாரணை செய்துகொண் டிருக்கவேண்டும். இவைகளின் பலமே இராஜ்ய பலமாகும்.

18. எவன் ஒருவன் குடிகளின் மனதைக் கவறுகிறானோ அவனே பாக்கியவான்; சமயத்திற்குத் தக்கபடி நடப்பவர்களைத் தூர விலக்கவேண்டும்.

19. வஞ்சனை, பொறாமை, லோபம் முதலிய தீக்குணங்களைக் களையறுக்க வேண்டும். சத்தியம், தர்மம் இக்குணங்களைத் தலைமை யாகச் செய்யவேண்டும்.

20. யுத்த வீரர்களா யிருப்பவர்கள் போரில் பின்னடையக் கூடாது, யுத்தத்திற்குப் பயப்படும் வீரன் படைத்தொழிலை விட்டு வேறு ஜீவனஞ் செய்யவேண்டும்.

21. சுத்த வீரன் நல்ல யுத்தத்தில் உயிர்துறந்து வீர சொர்க் கம் புகுவான்; அவனுக்கு வீரமே பிரதானம்.

22. பக்தி குறைந்தவன் மக்களிற் பதறெனப்படுவான். சுய மதாபிமானம் குறைந்தவன் உயிருடன் இருப்பதைக் காட்டிலும் பிராணத்தியாகஞ் செய்துகொள்வது நலம்.

23. மராடியர்களை ஒன்றாய்ச் சேர்த்து வலிமைக்கு மார்க்கமா யுள்ளதைத் தேடவேண்டும். சுய மதம் விளங்கும்படியான முயற்சி கள் செய்யவேண்டும். இல்லையேல் நம் முன்னோர்கள் வானுலகினின் றும் பரிகசிப்பார்கள்.

24. நல்ல நற்குடியிற் பிறந்தாய் என்னும் உணர்ச்சி உனக் கிருந்தால் நீ உன் மதத்திற்கும் தேசத்திற்கும் யுத்தம் புரிவாய்.

25. ஓ! இராஜன் ஒருவருடைய தர்மத்தை மற்றொருவர் செய்வதும் ஒரு குலத்தின் தர்மத்தை மற்றொரு குலம் செய்வதும் எக்காலத்திலும் ஏற்காது.

26. ஈஸ்வரத் துரோகிகள் நாய்க்குச் சமானமானவர்கள். அவர்களை நிக்கிரகம் செய்யவேண்டும். ஈஸ்வரத் தியானியா யிருப்பவர்களாலேயே இராஜ்யம் சுபிக்ஷமாகும் என்பதைமட்டும் மறவாதே.

27. நிதானம், பகுத்தறிவு, முயற்சி இவைகளே உனக்குப் பூஷணம்.

28. துலாஜா பவானி ஸ்ரீராமபிரானை வாழ்த்தினதினாலேயே அவர் இராவணனைக் கொன்றார்; துலாஜ பவானியைச் சதா தியானஞ் செய்.

29. * மூடர்கள் நகைகளினால் அலங்கரித்துக் கொள்ளுகின்றனர்; விவேகிகள் ஞானத்தைப் பூஷணமாகக் கொள்ளுகின்றனர். ஞானமில்லாத மனிதன் பிணத்திற்குச் சமானம். அவனுக்கு உயிர் இருந்தும் உயிரற்றவனே யாவான்.

30. டாம்பீகத்தை யொழி, மிதமிஞ்சின செலவை விடு, எப்பொழுதும் அடங்கிநட; விவேகிகள் பிடிவாதத்தை வெறுப்பார்கள்.

31. பிடிவாதமே சகல துன்பங்களுக்கெல்லாம் தாய் தந்தை. நடுவு அறிய வொட்டாது, பிரிவினை செய்யும், அறிவினை மயக்கி விடும்.

32. சாக்கிரதையுள்ள மனிதனுக்கு எச்சரிக்கை வேண்டாம், ஆனாலும் அவன் சதா சர்வ சாக்கிரதையுடன் இருக்கவேண்டும்.

33. † அரசனிடத்தில் அநேகர் ஜீவித்திருப்பார்; அவன் வெகு பொறுமையா யிருக்கவேண்டும். ஏனெனில் அநேகருடைய நித்திய வாழ்க்கைக்கு மூலகாரணனா யிருக்கிறான்.

---

* அப்ஸுல்கானைக் கொன்ற பிறகு சிவாஜி ராமதாஸரைத் தரிசிக்கச் சென்ற காலத்தில் அவர் சிவாஜிக்கு அருளிய நீதி வாக்கியங்கள்.

† இந்நீதி வாக்கியங்கள் யாவும் இராமதாஸரின் பிரதம சீடரான கல்யாண ஸ்வாமி எழுதிய "தாஸபோதம்" என்னும் நூலினின்றும் தர்ஜமா செய்யப்பட்டது.

34. நடுவு நிலைமையும், பாரபுத்தியும், பதார்த்த ஞானமும், தீரச் செயல்களும் ஒருவனுக்கு உயிர்த்துணைகளாம்; கீர்த்தியும், வெற்றியும் குணமுள்ளவர்களிடம் ஓங்கும். தன் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். மானமழிந்து வாழாமை நலம்.

35. ஜனங்களின் அன்பும், பிராமணர்களின் வாழ்த்தும், தெய்வங்களின் சகாயமும், கற்புடைய பெண்டிர்களின் ஆசியும், அரசாங்கத்தைப் பலப்படுத்தும்.

36. குணத்திற் சிறந்தது விஷய ஞானம்; பணத்திற் குரியது தானம், வித்தைக்குரியது வினயம்.

37. ஸ்திரீகளைப் பழிக்கலாகாது; ஸ்திரீகளைக் கௌரவிக்க வேண்டும். ஸ்திரீகளின் கண்ணீர் அரசை யொழிக்கும்.

38. பரதேசங்களின் நிலைமையைச் சாரணர் கொண்டு அறி; காலதேச வர்த்தமானங்களை அறிந்துநடக்கும் ஒற்றர்களை அமத்து.

சிவாஜிமகாராஜா துக்காராம் ஸ்வாமியையும் இராமதாஸ் ஸ்வாமியையும் பல தடவைகளில் தன் அரண்மனையில் கொஞ்சகாலம் வந்து வசிக்கும்படி வருந்தியழைத்தும் அவர்கள் வரவில்லை. என்றாலும் ஸ்வாமிகளிடத்திலுள்ள பக்தியும் பிரேமையும் சிவாஜிக்கு நீங்காமல் நாளுக்குநாள் கொழுந்துவிட்டு வந்தன. சிவாஜி இவர்களுடைய ஆஸ்ரமங்களில் பலநாள் கழித்தனர். அடிக்கடி சங்கீர்த்தனங்களைக் கேட்கப்போவார். அவர்களுடன் சிவாஜி பஜனைக் கூட்டத்தில் சேர்ந்து மெய்ம்மறந்து இருப்பர். பகவத் காலட்சேபங்களில் இவருக்கு மிக்கபிரியம். புண்ணிய கதாஸ்ரவண காலங்களில் இவர் எதையும் கவனியார். இதை ஸ்திரப்படுத்துவதற்கு ஒரு சம்பவம் நேர்ந்தது. புனநகரத்தில் இவர் சிறுபிராயத்திலிருந்து தொழுது வரும் ஓர் ஆலயத்தில் பாகவத கதா காலட்சேபஞ் செய்யுமாறு துக்காரம் ஸ்வாமியை வரவழைத் திருந்தார். காலட்சேபம் வெகு விமரிசையாய் நடந்துவருகிறது. காலட்சேபத்திற்கு ஸ்வாமியை யழைத்த காலத்தில் சிவாஜி மொகலாயர்களால் தோற் கடிக்கப் பட்டுச் சில நாடுநகரங்களையும் கைவிட்டார். சிவாஜியைச் சிறை

படுத்தவேண்டிய நோக்கம் ஔரங்கசிப்புக்கு இருந்தது. அவன் தன்னிடத்தேயுள்ள கொழுத்த ஆப்கன் சாதியர்களை அனுப்பியிருந் தான். சிவாஜி கதா சிரவணத்திற்குக் கோயிலுக்குப் போயிருப்ப தாக ஆப்கன் வீரர்கள் கேள்விப்பட்டுக் கோயிலைச் சுற்றி முற்றுகை யிட்டனர். சிவாஜி வெகு ரஸமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார். எதிரிகள் வந்திருப்பதையும் அறிந்தார். ஆனாலும் அவர்களை இலட் சியஞ் செய்யாமல் கதையைக் கேட்டுக் கொண்டேயிருந்தார். இப் படியிருக்க, அங்கு வந்திருந்தவர்களில் ஒருவர் சிவாஜியைக் காப் பாற்ற ஒருவருக்குந் தெரியாமல் முகத்தை மூடிக்கொண்டு மெள்ள மெள்ள வாயிலைத் தாண்டி ஓட்டம் பிடித்தார். ஓடுபவர் சிவாஜியே எனக்கொண்ட ஆப்கன் வீரர்கள் பின்தொடர்ந்து சென்றனர். அப்பால் கதா பிரசங்கம் முடிந்தவுடன் சிவாஜியும் அவர் நண்பர் களும் வீடுபோய்ச் சேர்ந்தனர். இங்ஙனம் உயிரைக்கூட நினைக் காமல் புண்ணிய கதா பிரசங்கம் கேட்பதில் சிவாஜிக்கு மிக்க ஆவல் உண்டு. சிவாஜிக்கு இராமதாஸரிடம் மிக்க பக்தியுண்டு. ராமதாஸ ரைக்காண ஒருநாள் சிவாஜி புறப்பட்டு அங்கு அவர் இல்லாததினால் காடு மலைகளிலும் குகைகளிலும் அலைந்து தேடினார். சிவாஜியின் பக்தியைப் பரீட்சிக்க ராமதாஸர் ஒரு குகையினுள்ளே நோயால் துன்பப்படுபவர்போலப் பாசாங்கு செய்தார். சிவாஜி ஸ்வாமியைக் கண்டு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து ஸ்வாமியின் தேக நிலைமை யைப்பற்றி விசாரித்தார். ஸ்வாமியும் சிவாஜியை நோக்கி எனக்குற்ற நோய் தீராதென நம்புகிறேன். இதைத் தீர்க்க ஒரு மருந்துண்டு. ஆனால் அது அகப்படுவது அருமை என்றார். சிவாஜி ஸ்வாமியைப் பார்த்து அருமையான வஸ்துக்கள் எங்கிருந்தாலும் நான் கொண்டு வருகிறேன். தயவு செய்து சொல்லும் என்றார். ஸ்வாமி, புலிப்பால் கொண்டு வருவதாயிருந்தால் என் தேகம் சுகமடையும் என்றார். இதைக்கேட்ட சிவாஜி உடனே ஸ்வாமியிடம் உத்திரவு பெற்றுக் கொள்ளாமல் பாதசாரியாய் அடவியினிடை புகுந்து புலிகள் வசிக் கும் குகைகளிற் சென்றார். அங்கு புலிக்கூட்டங்கள் இவரைத் துன்பப்படுத்தவில்லை. ராமநாமத்தைப் பஜித்தார். ராமதாஸ ரையே நினைத்துக்கொண்டு பெண்புலியினிடம் சென்று அதின் கால் களைக் கட்டிப் பால்கறந்து இராமதாஸருக்குக் கொண்டுபோய்க்

கொடுத்தார் * இவருடைய சாகஸமே சாகஸம். இன்னொரு சமயம் சிவாஜி ஸடாராவுக்குப் போயிருந்தார். இராமதாஸ் மாஹுலியில் இருந்து ஜாந்தா பர்வதத்திலுள்ள ஆலயத்திற்குச் சென்றார். சிவாஜியும் வேறொரு வழியாக இக்கோயிலுக்கே சென்றார். இராமதாஸர் பிக்ஷை யெடுப்பது வழக்கம். ஏனெனில், இவர் சன்யாஸி. அன்று இவருக்குப் பிக்ஷை அகப்படவில்லை. சிவாஜியும் கோயிலுக்கு வந்தார். உடனே இராமதாஸர் சிவாஜியைப்பிக்ஷை கேட்டார். இராமதாஸ் ஸ்வாமி பிக்ஷை கேட்டவுடனே, சிவாஜி ஒரு ஓலைத்துண்டில் எழுதி அவர் கையில் கொடுத்தார். இராமதாஸர் ஓலைத்துண்டைப்பார்த்து உள்ளம் துடித்து மீண்டும் சிவாஜிக்கே திருப்பிக்கொடுத்து விட்டார். சிவாஜி மறுத்தார். இராமதாஸர் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. அப்பால் சிவாஜி இராமதாஸரை நோக்கி ஸ்வாமி எனக்கு மீண்டும் இராஜ்யத்தைக் கொடுப்பதாயிருந்தால் அதை யாள்வதற்குப் பாத்தியதையுள்ளவனாக மாட்டேன். பூர்வம் ஸ்ரீராமபிரான் தன் பாதுகையைப் பரதனுக்குக் கொடுத்துப் பரதன் இராஜ்யபாரஞ் செய்ததுபோல், வேண்டுமானால் நான் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே கிருபை செய்து உங்கள் பாதுகையைக் கொடுங்கள்' என்றுகூறி பாதுகையை வைத்துக் கொண்டே † இராஜ்யபாரம் நடத்தினார். இராமதாஸர் சிவாஜியை நோக்கித்தனக்கு மூன்று வரன்கள் கேட்டார். குரு மூர்த்தி கேட்டவுடன் சிவாஜி மிக்க வணக்கத்துடன் வாக்களித்தார். இராமதாஸரின் மூன்று வரன்கள் பின் வருமாறு:

1. சிராவண மாதத்தில் பிராமணர்களுக்கு சமாராதனஞ் செய்யவேண்டும். ஸ்ரீராமபிரானுடைய திவ்யமங்கள விக்கிரகங்களை வார்த்துத் தாராளமாய்த் தானஞ்செய்ய வேண்டும்.

2. சிராவண மாதத்தில் பிராமணர்களுக்குத் தட்சிணை கொடுக்கவேண்டும்.

---

* மேற்கூறிய விஷயம் சிவதிக்கு விஜயத்தில் இருப்பது. இதுடன் ராமதாஸரின் சீடர்களில் ஒருவரான ஹனுமந்த ஸ்வாமியும் இதைப்பற்றி எழுதியிருக்கிறார்.

† இவ்விஷயமும் சிவதிக்கு விஜயத்தில் இருப்பது. இதை அநேக மராடியகார்கள் (சரித்திரங்கள் கூறுகின்றன.)

3. என்னுடைய வழிபடு தெய்வமான ஸ்ரீராமபிரானைத் தொழ வேண்டும். உன் நாட்டிலுள்ள குடிகள் ஒருவரை யொருவர் தரிசிக்குங்காலத்தில் கைகூப்பி 'ராம்' 'ராம்' என மரியாதை செய்ய வேண்டும். இக்கடைசிவிஷயம் இன்றும் மகாராஷ்டிரத்தில் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. ராமதாஸர் சிவாஜியைக் கொண்டாடி அவருடைய இராஜ்யத்திற்கு சந்யாஸி வர்ணமான காவி நிறமுடைய துவஜமொன்றையும் வைத்துக் கொள்ளும்படி ஆக்ஞாபித்தார். இக்கொடிக்குப் 'பாகவத ஜண்டா' எனப் பெயர். சிவாஜி இராமதாஸருக்கு பரானி என்னும் கிராமத்தை குரு தட்சிணையாகக் கொடுத்தார். இராமதாஸர் உடனே அக்கிராமத்தில் மாருதிக்கு ஒரு கோயில் கட்டினார். இராமதாஸ் கோயில் கட்டி முடிந்தவுடன் அக்கோயிலில் நித்திய கைங்கரியம் நடக்க சிவாஜி முப்பத்திரண்டு கிராமங்களைக் கொடுத்தார். அப்பால் கொஞ்சநாள் இருந்து இராமதாஸ் கடைசியாக கி. பி. 1681-ம் ஆண்டில் பரலோக பிராப்தியானார்.

ஒன்பதாவது அத்தியாயம்.

சிவாஜியின் குணாதிசயம்.

சிவாஜி அழகிய வடிவங்கொண்ட திடபுருடர். நீண்ட கைகால்களையுடையவர். விசாலமான மார்பும் அகன்ற நெற்றியும் கொண்டவர். தேகம் பழுப்பு நிறமானது. குரல் கம்பீரமானது. அவர் இன்மொழி நன் மொழியாகவே யிருக்கும். அவரிடம் சிறந்த பாங்கு பரிசனையும் ஆசார உபசாரமும் உண்டு. அவர் புண்ணியப் பொக்கிஷம். பொறுமைக் கிருப்பிடம். ஞானக் களஞ்சியம். நற்குண பாத்திரம். அவர் எந்த வேலை செய்தாலும் கடவுளுடைய தியானத்தை மறவார். அவர் எந்த உயிரையுந் தன் உயிர்போலக் கருதி உபகாரஞ் செய்வார். பிறர்பேரில் நிந்தனையான

வார்த்தைகளைப் பேசார். பிறர் பேசவும் இடங்கொடார். அவர் உத்தியோகஸ்தர்களையும் வேலைக்காரர்களையும் பிரீதியாகவும் விவேகமாகவும் நடப்பிக்குந் தன்மையினால் அவர்கள் எவ்வித சாகஸ காரியங்களையும் வெகு உற்சாகத்துடன் செய்து முடிப்பார்கள். அவர் நற்குடிப் பிறந்தோர். அருள் அன்பு முதலிய நற்குணங்கள் குடிகொண்டவர். அஞ்சாத தீரர்; சலியா முயற்சியுள்ளவர். செயற்கரிய காரியத்தையும் செய்து முடிக்கும் திறமையுடையவர். மற்றவர் பயந்து பின்னிடைதலான கார்யங்களில் பிரவேசிப்பதே அவர் சுபாவம். கோபம் நீங்கிய குணசாலி. தாய்வார்த்தையைச் சிரசா வகிப்பவர். தாய்ச்சொல் தள்ளாத தனயன். குதிரைச் சவாரியில் அவருக்கு மிஞ்சினவர்கள் அக்காலத்தில் இல்லை. வரிசைபாகக் குதிரைகளை நிறுத்தி வைத்து, ஒன்றைவிட்டொன்றைத் தாண்டுவர். ஒரு குதிரை மீது நின்று மற்றொரு குதிரை மேல் தாவி நிற்பர். அடவிகளில் புலிக்கூட்டத்தினிடை வெகு அலட்சியமாய்ச் செல்வர். தைரியம் மாத்திரமே யன்றி சிங்கத்துக் கொப்பான பலமும் உள்ளவர். இளைப்படையாமல் எவ்வளவு தேகப் பிரயாசையும் தாங்கத் தக்கவர். பன்னெடுங் காதமானாலும் சரி, இலட்சிய மின்றி சவாரி செய்வார். வேட்டையாடுவதும், துஷ்ட மிருகங்களுடன் நேருக்கு நேர் சண்டை போடுவதும் நாண் தொடுத்து வில் அடிப்பதும் அவருக்குப் பிரியம். மலைக்குகைகளிலும், காட்டு வழிகளிலும் கால் நடையாக நெடுந்தூரம் நடப்பது அவருக்கு வழக்கம். அரசனுக் குரிய செங்கோன் முறைமையும் தளகர்த்தனுக் குரிய தறுகணாண்மையும் அவரிடம் அமைந்திருந்தன. கோட்டைகளை எதிர்ப்பதில் அவருக்கு இணையானவர்கள் இல்லை.

சிவாஜி அன்பான சுபாவத்தைக் கொண்டவர். அன்பில்லாதவரும் அன்படையுமாறு செய்யுஞ் சக்தியைக் கொண்டவர். சிநேகிதரிடத்தில் உண்மையுள்ளவர். தன்னுடன் பழகினவர்களை ஒரு போதும் மறவாதவர். பழிக்குப் பழி வாங்குங்குணம் அவரிடத்தில் தலையிட்டிருந்தது. எப்போதும் கருணையுடனே நீதி செலுத்துகின்றவர். உதாரகுணம் அவருக்கு இயல்பு. சிவாஜி குடிகளின் விருப்பத்துக்குத் தக்கினபடி தேசபரிபாலனத்திற்குரிய வழி

பாடுகளை வரையறுப்பதற் கேற்ற மனச் சார்புள்ளவர். மத சம்பந்தமான விஷயங்களும் ஜன பரிபாலன விஷயங்களும் நீதி செலுத்து முறையும் எக்காலத்தும் குடிகளின் சாதக பாதகங்களுக்கு உரியவையாகையால், இவைகளின் விஷயத்தில் நியாயாதார மில்லாத தப்பபிப்பிராயங்களுக்கு மனதில் இடங்கொடுக்காமல் அவர் உத்தமமான அபிப்பிராயங்களையே ஏற்றுக் கொள்ளும் நோக்கம் உடையவர். சுயமதத்தில் மிக்க விருப்பம். சமயபேதம் பாராட்டாமல் இருக்கும் குணம் இவரிடம் இல்லை. புண்ணிய கதா காலட்சேபங்களில் அவருக்கு மிக்க பைத்தியம். சிறியோராயினும் பெரியோராயினும் எவர் எதைக்கூறினும், அதை யெல்லாம் செவி சாய்த்துக் கேட்பார். பஜனைக் கூட்டங்களில் சேர்ந்து ஆடிப்பாடுவார். சாமானிய சனங்களிடத்தும் ஸமரஸமாய்க் கலந்து உறவாடுவதே அவருடைய இயல்பு. அடிக்கடி போர் புரிவது அவருக்கு விருப்பமாகவே இருந்தது. அவர் ஆயுட் கால மெல்லாம் ஆயுதபாணியாகவே இருந்தவர். மிகவும் துணிகரமான பராக்ரமம் உள்ளவர். போர் புரிவதில் மிக்க யூகையுள்ள நிபுணர். அவர் காலத்தவரில் அவருக்கு நேரான போர்வீரர் எவரும் இல்லை. இரக்கம், அன்பு, பெருந்தன்மை முதலிய அரிய குணங்களும் அவரிடம் அமைந்திருந்தன. முகம்மதீய சுல்தான்களோடும் மராடிய ஜமீன்தாரர்களோடும் போராடுவதே அவருக்கு ஒழியாத தொழிலாக இருந்தது. எதிரிகளை உபாயத்தால் ஜயிப்பதில் மிக்க கவற்சியுடையவர். உபாயத்தால் வெற்றி பெறக் கூடுமானால் வீணிலே போர் புரிந்து படைகளை அழிக்கார். தேச நன்மையின் பொருட்டும் அல்லது பொது நன்மையின் பொருட்டும் போர் புரிவதற்குப் பின்னிடமாட்டார். தன்கால முழுவதும் அவர் வீணாக ஒரு போர் தானும் புரிந்ததேயில்லை. சுகபோக வைபவங்கள் சூழவிருந்தும், அவற்றால் மனம் மயங்காமல் நல்லொழுக்கத்தில் நிலை பெற்றிருந்தார். உலக வின்பங்களில் அவருக்கு விருப்பம் இல்லை. அக்காலத்தில் தன்னை யொத்த மராடி ஜமீன்தார்களைப் போல் சுகபோகங்களிலும் மதுபானத்திலும் விருப்பமின்றி ஞானவழிகளிலும் சுதந்தர பாவத்திலும் விருப்ப முற்றிருந்தார். அன்னியர்களுக்கு அடிபணிதல் என்பது அவருடன் பிறந்ததில்லை. சுதந்தரமே வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்னும் உணர்ச்சியைக் கொண்டிருந்தார்.

முகம்மதீயர்களுக்குச் சற்றேனும் பிடிகொடாமல் இராஜ்யபாரஞ் செலுத்திவந்தார். முகம்மதீயர்களிடம் உத்தியோகம் புரிவது மரியாதைக் குறைவு என்றே அவர் எண்ணியிருந்தார். வெய்யிலும் மழையும் அவருக்கு ஒரு பொருட்டில்லை. அவர் அதிகாலையில் எழுந்திருந்து காலைக் கடனைக் கழித்து வருவார். வீணிலே பொழுது போக்குவதான வழக்கம் அவரிடத்தில் இல்லை. உரிய கடமைகளில் ஒன்றையுஞ் செய்யாமல் விடுவதுமில்லை. இராஜ காரியங்களைப் பார்ப்பதும் கோட்டை கொத்தளங்களைக் கட்டுவதும் ஞானவான்களோடு சம்பாஷிப்பதும் அவர்கள் சம்பாஷணையைக் கேட்பதும் அவருக்கு நித்திய காலட்சேபம். அவர் காலமும் கருவியும் அறிந்து கார்யம் முடிப்பவர். உற்றார் உறவினர் திறத்திலும் அவர் நியாயந்தவறி நடப்பதில்லை. சங்கற்ப மாத்திரத்தில் காரியத்தைச் செய்யும் இயல்பையுடையவர். ஜாதியபிமானத்துக்கும் மதாபிமானத்துக்கும் அவர் மிக்க இடங்கொடுத்து வந்தார். மராடியர்களென்றும் முகம்மதியரென்றும் வேற்றுமை அவரிடம் இருந்த போதிலும் முகம்மதிய வேதபுத்தகத்தையும் முகம்மதீய ஸந்யாசிகளை (பக்கிரி) யும் கௌரவித்து வந்தார். நினைத்த மாத்திரத்தில் நியமனஞ்செய்து நினைத்தமாத்திரத்தில் தள்ளிவிடுகிற சில சுல்தான்களைப்போலன்றி ஆய்ந்தோய்ந்து பார்த்தே சகல காரியங்களையுஞ் செய்வர். பிரிவினை கருதாமல் ஐக்யமே உண்டாக்கும் நோக்கம் உள்ளவர். எதிரிகளுடைய பலத்தைப் புறத்திலே போக விடாமல் தனக்கே ஆகும்படி அனுகூலப்படுத்திக்கொள்ளும் சாமர்த்தியம் அவரிடத்தில் உண்டு. யுத்தத்தில் அடைக்கலம் புகுந்தவர்களையும் சிறைபட்டவர்களையும் வெகு மரியாதையுடன் நடத்தும் வழக்கம் அவருக்கு உண்டு. ஸ்திரீகளிடத்தில் அத்யந்த கௌரவம் காட்டி வந்தார். பரதார விருப்பம் ராஜ்ய பாரத்தை யொழிக்கும் என்றே அவர் நம்பியிருந்தார். படை யெடுத்த காலங்களில் அகப்படும் வஸ்துக்களை வகையறிந்து அவர் செலவழிப்பது வழக்கம். வஸ்திரங்கள், தாமர பாத்திரங்கள், செப்பு சாமான்கள் முதலிய வஸ்துக்கள் படையெடுப்பில் அகப்படின் அவைகளைக்கண்டுபிடித்த வீரர்களுக்கே கொடுத்து விடுவது அவர் இயல்பு. பொன், வெள்ளி, ரத்தினம் முதலிய விலையுயர்ந்த வஸ்துக்களைக் கஜானாவிற்குச் சேர்ப்பார்.

ஸ்தல தரிசனம் பண்ணுவதிலும் ஸாது தரிசனம் பண்ணுவதிலும் அவர் ஊக்கங் கொண்டிருந்தார். இவரைச் சில சரித்திரக்காரர்கள் 'கொள்ளையடிக்கும் தொழிலைக்கொண்டவன்' எனக்கூறுகின்றனர். மற்றுஞ் சிலர் இவரை 'வரப்பிரசாதம் பெற்ற தெய்வாம்சங் கொண்டவர்' எனக்கூறுகின்றனர். ஒரு சார்பார் இகழ்ந்தும் மற்றொரு சார்பார் புகழ்ந்தும் கூறுவர். ஆனால் சிவாஜி கொள்ளைக்காரனுமல்ல; தெய்வாம்சங்கொண்டவருமல்லர்; அவர் நல்ல உயர் குடியிற்பிறந்த புருஷோத்தமர். அவர் சாமானிய ஜனங்களை விட நற்குணங்கள் பல ஒருங்கே அமைந்தவர். அக்காலத்தில் ஜமீன்தார்கள் போல் சுல்தான்களுடைய தயவிற்கு நச்சியிருக்குந்தன்மை இவரிடம் இல்லை. தன்னுடு, தன் மதம் என்பதைக் கனவிலுங்கருதாத மராடிய தேச முக்கியர்களைப் போலிராமல் ஆழ்ந்த தேசாபிமானமும் தோய்ந்த மதாபிமானமுங் கொண்டவர். இவருடைய குணங்கள் அக்காலத்தில் இருந்த மன்னர்களின் குணங்களைக்காட்டிலும் சிறந்தன. இவரைக் கொள்ளைக்காரர்களென்றும் கூறும் சில சரித்திரக்காரர்களே இவருடைய உயர்ந்த குணங்களைப்புகழ்ந்து கூறியிருக்கின்றனர். சிவாஜி சில விடங்களில் கொள்ளை யடித்தது நிச்சயமே. இது அக்காலத்தில் உண்டான வழக்கங்களில் ஒன்று. தேச சரித்திரங்கள் மன்னர்களில் படை யெடுக்குங் காலங்களில் அவர்கள் கொள்ளை யடிக்காமல் இருந்ததில்லை. ஒருவன் மற்றொருவனை வழிபறித்துக் கொள்ளையடிப்பது அதர்மம். ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரைத் துராக்கிரதமாய்க் கொள்ளையடிப்பதும் அதர்மம். இதுவே பீஷ்மர் யுதிஷ்டிரருக்குச் செய்த உபதேசம். சாணுக்யன் தமது அர்த்தசாஸ்திரத்திலும் கூறியிருக்கின்றனர். இது சிறந்த இராஜ தந்திரம். ஒருவன் மற்றொருவனைக் கொலை செய்தால் அது குற்றம். ஒருவன் யுத்தத்தில் பலர்களைக் கொலை செய்வது சிறந்த தர்மம். ஏனெனில் ஒன்று சுயநன்மையைப்பற்றியது; மற்றொன்று பொது நன்மையைப்பற்றியது; சுய நன்மையைப்பற்றிச் செய்யுங் காரியங்கள் அதர்மமென்றும், பொது நன்மையைக் கருதிச் செய்யுங்காரியங்கள் தர்மமென்றுங் கூறுவர் பெரியோர். ஆகவே சிவாஜி கொள்ளை யடித்தது ஒரு குற்றமாக மாட்டாது. நாகரிகம் நிறைந்த இருபதாம் நூற்றாண்டில் இது குற்றமே யாயினும் பதினேழாவது

நூற்றாண்டில் அது குற்றமாகாது. ஒரு காலத்தில் அனுஷ்டிக்கப் படுவது மற்றொரு காலத்தில் அனுஷ்டிக்கப்படுவதில்லை. ஒரு காலத்தில் அனுஷ்டிக்கப்படாதது மற்றொரு காலத்தில் அனுஷ்டிக் கப்படுகின்றது. இது காலத்தின் கிரமம். புதியன புகுத லும் பழையன கழிதலும் கால இயல்பு. சிவாஜியின் குணாதிசயங்களைப்பற்றி காபீகான் பின் வருமாறு கூறு கிறார்:—வர்த்தகர்கள் வெளியூர்களிலிருந்து வியாபார சகிதம் கொண்டுவரும் சரக்குகளைச் சிவாஜி கொள்ளை யடித்துவந்தார். ஆனால் கொள்ளையில் முகம்மதியர்களின் பள்ளிவாயல்கள், வேத புத்தகங்கள், ஸ்திரீகள் முதலியவைகளை ஒன்றுஞ் செய்வதில்லை. சிவாஜியைத் தற்காலத்திய நீதி முறைமைகளைக்கொண்டு அபிப்பிரா யத்திற்கு வருதல் ஒரு தலையேயாம். புராதன காலங்களில் சரித் திரக்காரர்கள் சில விடத்தே விஷயங்களைப் பெருக்கியும் சிலவிட த்தே குறுக்கியும் வருவது இயற்கை யாதலால் அக்காலத்திய வழக் கத்தை இக்காலத்தில் கடை பிடித்தல் சாலவும் ஒரு சார்பேயாகும். ஆதலால் யாம் தற்பொழுது அத்தகைய குற்றங்களைப் பாராட்டுதல் அழகல்லவென்பதே எமது அபிப்பிராயம். சில மராடிய ஜமீன் தார்களை சிவாஜி கொன்றது வாஸ்தவம். அவர்கள் மராடிய சுய ராஜ்ய ஸம்ஸ்தாபனத்திற்குத் தடங்கலா யிருந்ததினால் அவர்களை ஒழிப்பது சிவாஜிக்கு இன்றியமையாததாக ஆயிற்று.

1. ஸ்வயாதிகாரம்.

சிவாஜி தட்சிணத்தில் மகாராஷ்டிர ஸ்வயாதிகாரத்திற்குரிய ஏற்பாடுகளை ஒன்றன்பின் ஒன்றாய் முடித்துவந்தார். சிவாஜி முதல் முதல் தன் தகப்பனாருக்குச் சொந்தமாயுள்ள புனா, ஸுபா ஜமீன் களைப் பலப்படுத்தி அவைகளைச் சுற்றிலுமுள்ள மலைக்கோட்டைகளை யும் தக்க காவலுடன் பலப்படுத்தினார். இவருடைய எழுச்சியைக் காண பீஜாபூர் சமஸ்தானத்திற்குச் சகிக்கவில்லை. போர் பல புரிந் தனர். கடைசியாக சிவாஜிக்கும் பீஜாபூர் சமஸ்தானத்திற்கும் உடன்படிக்கை யொன்று நடந்தது. இதனால் தட்சிணத்திலுள்ள சமஸ்தானங்கள் ஒன்றுக்கொன்று கட்டுப்பட்டு இருந்தன. இங்ஙு னம் இருந்தும் சிவாஜி சும்மாயிருக்கவில்லை. தன்னுடைய இலட்சி

யத்திற்கு இவ்வுடன்படிக்கைப் போதாதென்றெண்ணி தட்சிணத்தில் மொகலாயர்களுடைய ஆதிபத்தியம் சிறிதும் இருக்காதபடி செய்யவேண்டுமென்று சிவாஜி எண்ணினர். ஸ்வயாதிகார ஸ்தாபனத்திற்கு மொகலாயர்களின் பிரவேசம் தடங்கல் என்பதே சிவாஜியின் கருத்து. உடனே நல்ல சேனையைத் தயார் செய்தார். குதிரைப் படைகளையும் பீரங்கிப் படைகளையும் முன்னினும் அதிகமாகப் பலப்படுத்தினர். பூர்வம் மூலானு ஆமத் என்பவனிடமிருந்து சுவாதீனப்படுத்தியிருந்த கல்யாண் பட்டணத்தைக் கி. பி. 1661-ம் வருடத்தில் மொகலாயர்கள் சுவாதீனப்படுத்திக் கொண்டனர். இவ்விஷயம் சிவாஜிக்கு அப்பொழுதே தெரியும். ஆனால் எதிர்க்காமலே இது பரியந்தம் தள்ளி வந்தார். இப்பொழுது சிவாஜி உடனே நேடோஜி பால்கரிடம் பெரிய குதிரைப்படையை யனுப்பி கல்யாண்மீது படையெடுக்க உத்திரவு கொடுத்தார். இதுடன் ஆமத் நகரம் முதல் ஔரங்கபாத் நகரம் வரையிலுள்ள மொகலாயப் பிராந்தியங்களைச் சூறையாட மோரோ பிங்களே என்பவரையும் அனுப்பினர். தட்சிணத்தில் மொகலாய பிராந்தியங்களுக்குச் சுபேதாராக (கவர்னர்) யிருந்தவன் * ஷெயிஸ்டி கான். மொகலாயப் பிராந்தியங்களைச் சேர்ந்த பல கிராமங்களிலிருந்து வசூல் பணம் ஔரங்கபாத் தலை நகருக்குப் போவது வழக்கம். மகாராஷ்டிரர்களுக்குப் பயந்து இரண்டொரு வருடம் போகாமலே யிருந்தது. ஷெயிஸ்டிகான் வந்ததும் வசூல் பணம் செலுத்த உத்திரவு அளித்தான். மகாராஷ்டிரர்களைப்பற்றி அவனுக்கு ஞாபகஞ் செய்தார்கள். அவர்கள் வார்த்தையைக் கேட்டுப் பரிகசித்து 'இதோ ஆண் பிள்ளைகளெனப் பெயர் கொண்ட நீங்கள் வசூல் பணத்தை எடுத்துக்கொண்டு இராசதானிக்குப் போகமுடியாமற் போனால், நான் ஒரு ஸ்திரீயை யனுப்புகிறேன் பாருங்கள்' என்று கூறித் தன்னிடமிருக்கும் சிறந்த தளகர்த்தரான உதாபுரி தேச முக்கியரின் மனைவியான ராய் பகினி என்பவளை அனுப்பினன். வீரர்களுக்குரிய பலம், சௌரியம், தைரியம் முதலிய குணங்கள் அவளிடம் அமைந்திருந்தன. வசூல் பணம் வரவை யறிந்தார் சிவாஜி. உடனே சிறிய படையொன்றை யனுப்பி வசூல் பணத்தைக் கொள்ளை யடித்து ஸ்திரீ

* மொகலாய பாதுஷாவான ஔரங்கசிப் பகதூரின் தாய்மாமன்.

யையும் சிறைபடுத்தினர். ஸ்திரீயின் யுத்த சாகஸத்தைச் சிவாஜி மெச்சி அவளை வெகு மரியாதையுடன் அனுப்பினர். ஔரங்கபாத் தலைநகரிலிருந்து சிவாஜியை எதிர்க்க வந்த சேனைகளை ஆமத் நகர சமீபமாக சிவாஜி முறியடித்தார். மொகலாயர்களுடைய தக்ஷிணத் தலைநகர் வரையிலுள்ள 'பிராந்தியங்களைச் செந்தூள் பறக்கும்படி யடித்து அந்தந்த ஊர்களினின்றும் படைப்பணமும் வசூலித்தார். இதைக்கேட்ட ஔரங்கசிப் மிக்க சினங்கொண்டு, சிவாஜியின்மீது படையெடுக்க ஷெயிஸ்டிகானை அனுப்பினன். ஷெயிஸ்டிகான் போர் கோலங்கொண்டு நல்ல திட்மான வீரர்களைக் கூட்டி சிவாஜியை வெல்லப் புறப்பட்டான். மகாராஷ்டிர தண்டுக்கும் ஷெயிஸ்டிகான் சேனைக்கும் கடும்போர் நடந்தது. ஷெயிஸ்டிகான் துரவிப்படைகள் வெற்றி யடைந்தன. சிவாஜி பின்னடைந்து இராஜகடாவிற்குச் சென்றார். ஷெயிஸ்டிகான் உடனே புனவையும் ஸூபாவையும் கைவசப்படுத்திக் கொண்டான். புனவையும் ஸூபாவையும் ஷெயிஸ்டிகான் கைப்பற்றினவுடனே சிவாஜி இராஜகடாவைவிட்டு ஸிம்மகடாவிற்குச் சென்றார். மொகலாயர்கள் ஸிம்மகடா துருக்கத்தையும் கைப்பற்றக் கருதி நல்ல குதிரைப் படைகளுடன் முன் வந்தார்கள். சாக்கன் கோட்டையை முதல் முதல் மொகலாயர்கள் முற்றுகையிட்டனர். இக்கோட்டையை பீரங்கோஜி நரஸாலா என்பவர் காத்துக்கொண்டிருந்தார். மொகலாய சேனைகள் பலமாக முற்றுகையிட்டதை யறிந்த இவர் இரவில் நல்ல குதிரைப் படைவீரர்களுடன் கீழிறங்கி எதிரிகளை முறியடித்தார். இரவில் மொகலாய சேனைகள் ஒருவாறு முறிபட்டபோதிலும் மறுநாள் அதிக சேனைப் பெருக்கத்துடன் பீரங்கிப்படைகொண்டு எதிர்த்தார்கள். பீரங்கிப் படைக்கு சிவாஜியின் படைகள் முன்னிற்க முடியவில்லை. பீரங்கிப் பிரயோகத்தினல் அநேக படை வீரர்கள் மாண்டனர். பீரங்கோஜி நரஸாலா எதிரி வசம் அகப்பட்டுக்கொண்டார். ஷெயிஸ்டிகான் இவரை அதிக மரியாதையுடன் வரவழைத்து மொகலாய சேனையில் சேரும்படி வற்புறுத்தினன். பீரங்கோஜி தேசாபிமானம் தலையெடுத்தவராதலால் நாட்டிற்கும் சுயமதத்தினருக்கும் சிவாஜிக்கும் துரோகஞ் செய்ய நினையாமல் மொகலாய சேனையில் உத்தியோகம் புரிய ஆகாதெனக் கூறினர். ஷெயிஸ்டிகான் பீரங்கோஜியை சிவாஜியுடன்

அனுப்பினான். சிவாஜி பீரங்கோஜியை வெகு உற்சாகத்துடன் வரவேற்புசெய்து பூபாலகடாவிற்கு சுபேதாராக நியமித்தார்.

2. ஷெயிஸ்டிகான் போர்ப்படலம்.

நிற்க, சிவாஜி ஸிம்மகடாவை விட்டு விட்டு மறுபடியும் இராஜகடாவிற்கே சென்றார். இவர் இராஜகடாவில் இருக்கையில் ஷெயிஸ்டிகான் உடனே சாக்கன்கோட்டையைவிட்டுப் புனாநகரம் வந்தடைந்தான். தாதோஜி கோனதேவர் சிவாஜிக்குச் சிறுபொழுதிலே கட்டிக்கொடுத்த இராஜமகால் என்னும் அரண்மனையில் ஷெயிஸ்டிகான் வசித்தான். புனா நகரத்தை சிவாஜி எதிர்க்காமலிரார் என்பதை ஷெயிஸ்டிகான் அறிந்து புனா நகர எல்லைக்குள் வருபவர்கள் சீட்டு இல்லாமல் வரக்கூடாதென்று வெகு நிர்ப்பந்தமான உத்திரவு ஒன்று பிறப்பித்தான். தன்னிடத்தேயிருந்த மராதி குதிரைவீரர்களையும் புனாநகர எல்லைக்குள் வரவொட்டாமற் செய்தான். காலாட்படைகளை மட்டும் ஷெயிஸ்டிகான் அனுப்பவில்லை. காலாட்படைகளை அனுப்பிவிட்டால் அவர்களால் ஏதாவது கலகம் சம்பவிக்குமென்றெண்ணி அவர்களை சர்வ சாக்கிரதையுடன் நகர காப்பிற்கு நியமித்தான். நகர எல்லைகளைச் சுற்றி மொகலாய துருப்புகள் வெகு பத்திரமாய் காவல்காத்துக் கொண்டிருந்தன. இவ்வாறு ஷெயிஸ்டிகான் உத்திரவு பிறப்பித்ததையறிந்த சிவாஜி ஷெயிஸ்டிகானையும் அவன் சேனைகளையும் முறியடிக்க எண்ணி புனா நகரத்திற்குட் புக ஆலோசித்தார். படைவீரர்களுடன் போர்க்கோலங் கொண்டு நகர் உள்ளே செல்வது நன்மையல்லவெனக் கொண்டு கபடமாய் உள்செல்லல் வேண்டுமென்றே தீர்மானித்தார். உடனே கி. பி. 1663-ம் வருடம் ஏப்ரல்மாதம் சிவாஜி யஸாஜிகங்க் தானாஜீ மாலஸூரே முதலியவர்கள் நல்ல பொறுக்கான இருநூறு படைவீரர்களுடன் மொகலாய படைவீரர்களைப்போல் வேடந் தரித்துக்கொண்டு புனா நகரத்தில் விவாகம் நடத்தப் போக வேண்டுமென்று நகர்க்காவலர்களிடம் உத்திரவு சீட்டு பெற்று உட்புகுந்தார்கள். இவர்கள் வரிசை வரிசையாக ஊர்க்கோலம் செல்வதுபோல் ஏற்பாடு செய்துகொண்டு முன்னே ஒரு சிறு பையனைக் கலியாணப் பெண் உடை உடுத்தி மேள வாத்தியங்களுடனும் கலி

யாணப் பாட்டுகளுடனும் வழி நடந்தார்கள். மற்றொரு வழியில் சிவாஜியின் வீரர்களிற் சிலர் மொகலாய வீரர்களைப்போல் உடை தரித்து எதிரிகளின் வீரர்களைக் கைதிசெய்து சுல்தானிடம் அழைத்துச் செல்வதுபோல் தங்களிற் சிலரைக் கைதிகளாகப் பிடித்து இழுத்துக்கொண்டு காவலாளர்கள் முன்பாக அடித்துத் துன்பப் படுத்தவே அவர்கள் இவ்வீரர்களை நம்பி பிரவேசச் சீட்டுகள் கொடுத்து உள்ளே அனுப்பினார்கள். மொகலாய வீரர்களைப்போல் வேடந்தரித்து வந்த சிவாஜியின் வீரர்கள் நகரத்திற்குட் பிரவேசித்து சிவாஜி முதலியவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். ஷெயிஸ்டிகான் வசிக்கும் அரண்மனையின் வாயிலில் விளக்கு வெளிச்சங்கள் அதிகமாயிருந்ததினால் காவலாளிகள் விழித்துக்கொண்டிருப்பார்களென்று சிவாஜி முதலானவர்கள் எண்ணி, சமயலறை பக்கமாகச் சுவர் ஏறிக் குதித்தார்கள். சமயலறைகளில் இருந்த சில சுயம்பாகிகள் நித்திரை செய்திருந்தார்கள்; சிலர் விழித்துக்கொண்டு வேலைகள் செய்துகொண்டிருந்தனர். இவ்வாறு இருக்குஞ் சமயத்தில் அவர்கள் சமயலறைகளில் புகுந்து விழித்திருந்த வேலைக்காரர்களைச் சந்தடியில்லாமல் கத்தியினால் வெட்டி நித்திரையில் இருந்தவர்களை ஈட்டியினால் குத்தித் தள்ளி ஷெயிஸ்டிகான் நித்திரை புரியும் அறைக்குட் பிரவேசிக்க அங்குமிங்கும் சுற்றினார்கள். அறைகள் யாவும் தாளிட்டிருந்தன. கடைசியாக அவர்கள் சுவற்றைத் துளைத்து உட்பிரவேசிப்பதே சரியெனக்கொண்டு மதில் சுவற்றைத் துளைக்க வாரம்பித்தனர். துளைக்கும் அரவம் கேட்கவே ஷெயிஸ்டிகான் பாங்கிமார்களில் ஒருத்தி ஓடோடியுஞ்சென்று சுவர் துளைக்கப் படுவதை கானுக்கு அறிவித்தாள். கான் குடிமயக்கத்தால் ஸ்மரணையின்றி காடாநித்திரை செய்துகொண்டிருந்தான். பாங்கி சொல்வது ஏறவில்லை. சுவர் வரவர அதிகமாக் துளைக்கப்பட்டுத் தாராளமாக ஆள் நுழையும்படி இருந்தது. உடனே மற்றொரு பாங்கியும் முன்மாதிரியே கூறி கானை ஒருவாறு எழுப்பினாள். கான் எழுந்ததும் விஷயங்களை அறிந்து தன் பாதுகாப்புக்காக ஈட்டியும் வில்லும் கொண்டுவரச்சொல்லி ஆயுதபாணியா யிருந்தான். சுவர் நன்றாய்த் துளைக்கப்பட்டவுடனே ஒருவர்பின் ஒருவராய் உட் பிரவேசித்தார்கள். கான் புதிய ஆள் வந்ததைக்கண்டு ஈட்டியால் குத்தி

ஞன். உடனே மற்ருெருவன் கானுடைய விரல்களில் ஒன்றைச் சேதித்தான். இங்ஙனம் வரவர சிவாஜியின் வீரர்கள் ஷெயிஸ்டிகான் படுக்கை யறையில் அதிகரிக்கவே, ஷெயிஸ்டிகான் புத்திரனும் சில முகம்மதீய வீரர்களும் எதிர்த்தார்கள். ஆனுல், எவ்வளவு எதிர்த்தும் பயன்படவில்லை. கான் பிள்ளை அப்துல்படீகான் கடைசியாக வெட்டுண்டு இறந்தான். இப்படி இருக்குந்தருவாயில் ஷெயிஸ்டிகான் தன் விரல் வெட்டுண்ட வேகத்திஞல் மூர்ச்சையடைந்தான். ஷெயிஸ்டிகான் மாண்டான் எனக்கொண்டு மராதி வீரர்கள் அரண்மனை வாயிலைத் திறந்து வெளியேறிஞர்கள். இவர்கள் வெளிவந்ததும் மற்ருெரு மராதிய படைவீரர்களின் கூட்டத்தார் வந்து சேர்ந்தனர். இவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து புனவைவிட்டு அதிவேகமாக ஸிம்மகடாவிற்குச் சென்றனர். இதற்குள் புனநகரமும் அரண்மனையும் கொள்ளை யடிக்கப்பட்டதென்னும் செய்தியை மொகலாய துருப்புகள் அறிந்ததும் உடனே போர்க்கோலங் கொண்டு சிவாஜியை எதிர்க்கப் புறப்பட்டன. சிவாஜி ஸிம்மகடாவிற்குச் சென்றதை இவர்கள் அறியார்கள். சில துருப்புகள் மட்டும் கட்ராஜ் மலைச்சாரல் வழியாகச் சென்றன. ஷெயிஸ்டிகான் சில வீரர்களுடன் ஸிம்மகடாவை முற்றுகையிட முன்சென்ருன். முற்றுகை யிடுவதற்கு ஆதாரமாகப் பீரங்கிப் படைகள் ஒன்றும் இவனிடம் இல்லை. மாரிகாலம் வந்தது. ஸிம்மகடா மலையிலிருந்து முத்தாநதி உற்பத்தியாவதால் பெருக்கம் அதிகமாயிற்று. நதிப்பெருக்கம் உண்டாகும் காலத்தில் கோட்டையை முற்றுகையிடுவது அசாத்தியமான காரியம். சிவாஜி வெகு நிதானத்துடன் மொகலாய சேனைகள் கோட்டையை நெருங்கும்படி காத்துக்கொண்டிருந்தார். படைகள் கோட்டையை நெருங்கி மதில் புறத்திற்கு வந்தவுடன் சிவாஜி வீரர்கள் பீரங்கியைப் பிரயோகித்தார்கள். பீரங்கி வெடிக்கு முன் நிற்கமாட்டாமல் கான் வீரர்கள் மாண்டனர். கான் ஏறிவந்த யானை குண்டுபட்டு மாண்டது. கான் திக்பிரமை கொண்டான். கடைசியாகத் தன் நிலைமை தடுமாற்றத்தில் இருப்பதைக் கண்டு கான் புறங்காட்டி புனவிற்கு ஓடிஞன். ஷெயிஸ்டிகான் புறங்காட்டிப் புனவிற்குத் திரும்புகையில் நேடோஜீபால்கரின் உபதளகர்த்தரில் ஒருவரான கட்டோஜீ குஜார் என்பவர் கான் படைகளை வழிமறித்துச் சின்னபின்னப்படுத்திஞர். இப்படி பல

பக்கங்களிலும் தாறுமாருய்த் தோல்வியடைந்த கான் புனுநகரை வந்தடைந்தான். ஷெயிஸ்டிகான் உபதளகர்த்தரான ஜஸ்வாண்ட் சிங், ஷெயிஸ்டிகானின் அபஜயத்தைக் கேள்வியுற்றுக் கானைப் பார்த்து துக்கம் விசாரித்தான். ஜஸ்வாண்ட் ஸிங் விசாரித்ததும் கான் தன் அபஜயத்தைப்பற்றிப் பரிகாசஞ்செய்கிருன் என்றெண்ணி வெகு கோபத்துடன் ஔரங்கசிப்புக்குத் தன்னிடம் இருக்கும் இந்து வீரர்கள் அனைவரும் சிவாஜி பக்கமாகவே யிருக்கின்றனர் என்று கடித மூலமாய்த் தெரிவித்தான். கடிதம் அனுப்பியும் கோபந் தணியாமல் முரட்டுத்தனங்கொண்டு புனுநகரை விட்டுவிட்டுத் தன் துருப்புடன் ஔரங்கபாத் நகருக்குச் சென்ருன். ஜுன்னுர் சாக்கன் இவ்விரு கோட்டைகளையும் பாதுகாக்கும்படி கான் ஜஸ்வாண்ட் ஸிங்கிக்கு உத்திரவு அளித்தான். ஜஸ்வாண்ட் ஸிங் அக் கோட்டைகளைப் பலமாய் முற்றுகையிட்டு வருஞ் சமயத்தில் புனுவைவிட்டு வரும்படி ஔரங்கசிப் பாதுஷாவிடமிருந்து உத்திரவு வந்தது. ஜஸ்வாண்ட் ஸிங் முற்றுகையை விட்டுவிட்டு பாதுஷா உத்திரவுபடி சென்ருர். தக்ஷிணத்துருப்புகளுக்கு ஔரங்கசிப் தன் குமாரனுன மூஹாஸிம் இளவரசரைத் தளகர்த்தராக நியமித்தான். ஸிம்மகடா கோட்டையைப் பிடிக்க பிரயத்தனப்பட்டும் முடியவில்லையென்று கொண்டு பாதுஷாவையும், கான் செயலையும்பற்றி நினைத்துக்கொண்டு படைப் பயிற்சியின்றி சிலகாலம் சும்மாயிருந்தார். ஆனல் சிவாஜி வாஸ்தவத்தில் சும்மாயிருக்கவில்லை.

3. சூரத் நகரச் சூறை.

ஔரங்கசிப் பாதுஷாவின் ஆதீனத்திலிருக்கும் ஐஸ்வரியமுள்ள நகர் ஒன்றைச் சூறையாட சிவாஜி எத்தனித்தார். தென் குஜராஷ்டிரத்தில் * தபதி நதி முகத்துவாரத்தில் சூரத் என்னும் மாநகர் ஒன்று மிக்க தனப் பெருக்கங் கொண்டிருந்தது. இந்நகரிடையே போர்த்துகல், டச்சு, இங்கிலீஷ், பிரான்சு முதலிய ஐரோப்பிய சாதியார்கள் தங்கள் தங்கள் சரக்கறைகள் கட்டிக் கொண்டு வர்த்தகஞ் செய்துகொண்டிருந்தனர். கி. பி. 1600-ம் வருடம் இங்கிலாந்தை யாண்டுவந்த எலிஜபெத்ராணியார் இந்தியாவில்

* இதற்குத் தாபனி என்று வடமொழியில் கூறுவர்.

ஆங்கிலேயர்கள் வர்த்தகக் கம்பெனியொன்று ஏற்படுத்த உத்திரவு கொடுத்தார். அக் கம்பெனிக்கு கிழக்கு இந்தியா கம்பெனி என்று பெயர். இக்கம்பெனி வர்த்தகர்களே சூரத் நகரில் பெருத்த வியாபாரஞ் செய்துவந்தனர். இவர்கள் டில்லி பாதுஷாவின் உத்திரவைப் பெற்றுக்கொண்டு உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் வாணிகஞ் செய்து வந்ததினால் சிறந்த தனவந்தர்களானார்கள். சூரத் நகரம் இங்ஙனம் சிறந்த வியாபார ஸ்தலமாயிருந்ததினால் பெரிய நிதிக்குவியல்கள் கொண்ட நகரமாயிற்று. சிவாஜி இந் நகர்மீது கண்ணோட்டஞ் செலுத்தினார். சிவாஜி முதல் முதல் சூரத்நகரைச் சூறையாடுவதற்கு முன்னர் போர்த்துகல் தேசத்தவர்கள் தங்கள் உறைவிடமாகக் கொண்டிருந்த பேஸின் பட்டினத்தைக் கைவசப்படுத்திக்கொண்டு சூரத் நகரின் நிலைமையை யறிந்துவரும்படி பகீர்ஜீ நாயக் என்பவரை யனுப்பினார். சிவாஜியும் சந்நியாஸி கோலங்கொண்டு வட கொங்கணத்திலிருந்து வரும் பாதைவழியாக தரம்பூர் சமஸ்தானத்தில் புகுந்து தென் குஜராஷ்டிரத்துக்குப்போய் நகரங்களின் இருப்பை யறிந்து பேஸின் பட்டிணத்திற்குத் திரும்பினார். இதற்குள் பகீர்ஜீ நாயக் என்பவரும் சகல விஷயங்களையு மறிந்து திரும்பிவந்தார். உடனே சிவாஜி நாலாயிரம் குதிரைப்படையுடன்ஒருவரும் அறியாதபடி இரவோடு இரவாய் தரம்பூர் சமஸ்தானத்திற்குட்புகுந்து சூரத் நகருக்குப் பன்னிரண்டுமைல் தூரத்தில் வந்திறங்கினார். சூரத்நகர் சுபேதார் (கவர்னர்) சிவாஜியின் எண்ணத்தை யறிந்து வரும்படி தூதரொருவரை யனுப்பினான். சுபேதார் சூரத்நகரத்திலுள்ள டச்சு இங்கிலீஷ் வியாபாரிகளை தனக்குதவிபுரியும்படி கேட்டான். ஆனால் அவர்கள் தங்கள் சரக்கறைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று உதவி புரிய மறுத்தார்கள். ஆனால் டச்சுக்காரர்கள்மட்டும் சிவாஜியின் நடமாட்டங்களை யறிந்து வரும்படி இரண்டு சாரணர்களை யனுப்பினார்கள். அவர்கள் சிவாஜி வீரர்களினால் பிடிக்கப்பட்டனர். சிவாஜியின் குதிரைப்படை வெகு வேகமாய் அந்நகரில் புகுந்தது. சுபேதாரும் அவனைச் சேர்ந்த சிலரும் சிவாஜியின் தாக்கலுக்குமுன் நிற்கமுடியாமல் அரண்மனையிற் பதுங்கிக்கொண்டார்கள். தலைவன் நின்றால் தண்டு நிற்கும், தலைவன் மயங்கினால் ஸர்வமும் மயங்கும். அரசனில்லாத படை வெட்டுமா? தலைவன் பயந்து அரண்மனைக்குட்

பிரவேசிக்கவே, அவனுடைய குடிகள் இன்னது செய்வதென்றறியாமல் திகைத்துப்பின்னர், ஓடங்களைக் கொண்டு நதி கடந்து சிலர் சென்றனர். சிவாஜி அந்நகரில் இறங்கி, சுபேதாரையும் சூரத் நகரில் பெரிய தனவந்தர்களான ஹாஜீ சையத், வீராஜீ போஹிரி, ஹாஜீகாஸிம் ஆகிய இவர்களையும் தன் பாடி வீட்டிற்குவந்து காணும்படி ஆள் அனுப்பினர். சுபேதார் மட்டும் பயத்தினால் தன் இருப்பைவிட்டு வரவில்லை. மகாராஷ்டிர வீரர்கள் இங்கிலீஷ் சரக்கறைகளைத் தாக்கினார்கள். அன்றிரவு, ஸுவாலியிலிருந்து சூரத் நகருக்கு ஆன்தோனி ஸ்மித் என்பவர் திரும்பி வந்தார். சிவாஜி வந்திருப்பதை இவர் அறியார். உடனே மராடிய வீரர்கள் இவரை சிறை பிடித்துவந்து சிவாஜியிடம் ஒப்படைத்தனர். சிவாஜி ஆன்தோனியை இங்கிலீஷ் வியாபாரிகளிடமும் நிக்கோலங் கொலண்டிரா என்னும் கிரீக் தேசத்து வியாபாரியை டச்சு வியாபாரிகளிடமும் அனுப்பி அவர்களிடம் படைப்பணம் வசூலிக்கும்படி அனுப்பினர். இங்கிலீஷ் வியாபாரிகளும் டச்சு வியாபாரிகளும் படைப்பணம் கொடுக்க மறுத்தனர். நகரத்தினர் சிவாஜியின் படையெழுச்சிக்குப் பயந்து நகரை விட்டுப்போனதால் சிவாஜியின் வீரர்கள் உட்புகுந்து கொள்ளையடித்துப் பெரிய நிதிக்குவியல்களைத் திரட்டினர். சூரத் நகரக் கொள்ளையைக்கேட்ட ஔரங்கசிப் உடனே சிவாஜியை எதிர்க்கப் படையொன்றை யனுப்பினான். மொகலாய படை வருமுன்னே சிவாஜியும் அவர் வீரர்களும் கடுகியே திரும்பினர். திரண்ட நிதிக்குவியல்களை ராயகடாவிற்குக்கொண்டு போய்ச் சேர்த்ததும், ஷஹாஜி மரணமடைந்தார் என்னுஞ் செய்தி சிவாஜிக்குத் தெரிந்தது. ஷஹாஜிக்குச் செய்யவேண்டிய சாமக் கிரியைகள் யாவையும் வெங்கோஜியே செய்தார். பீஜாபூர் சமஸ்தானம் ஷஹாஜியின் மரணத்திற்கு வெகு துக்கப்பட்டு அறிக்கையொன்று அனுப்பி, பெங்களூரையும் தஞ்சாவூரையும் வெங்கோஜிக்குக் கொடுத்தது. ஷஹாஜி இறந்ததற்குச் சில ஜமீன்தார்களை காரணமாயிருந்தனர் என்று சிவாஜி கேள்விப்பட்டு அவர்களை முறியடித்தார். சிவாஜி முறியடித்த செய்தியைக் கேள்விப்பட்ட பீஜாபூர் சுல்தான் மிக்க சந்தோஷங்கொண்டு சிவாஜிக்கு ஷஹாஜி இறந்த கிராமத்தை இனமாகக் கொடுத்தான். ஷஹாஜி இறந்த

கிராமம் யரகடனள்ளி. இது பசவ பட்டணத்திலுள்ளது. ஜீஜா பாய் உடன் கட்டையேற நிச்சயித்திருக்கையில் சிவாஜி தாயை அடிபணிந்து தான் இருக்கும் வரை உயிருடன் இருக்கும்படி மன்ருடினார். மகாராஷ்டிர சுயராஜ்ய ஸம்ஸ்தாபனத்திற்கு அடிகோலினவர் ஷஹாஜியேயாவர். இந்து தளகர்த்தர்களின் ஆதிபத்தியத்தினால் துருப்புகள் விசேஷ பராக்கிரமத்தைக் கொண்டு ஜயமடையக்கூடுமென்பதை ஷஹாஜியே முதல் முதல் அன்னியர்களுக்குக் காட்டினார். சிவாஜியின் சுயராஜ்ய நிர்மாணத்திற்கு வழி காண்பித்தவரும் ஷஹாஜியே யாவர். இவர் மாண்ட காலம் கி. பி. 1664.

பத்தாவது அத்தியாயம்.

மோசலாயர் யுத்தம்.

சிவாஜி சூரத் நகரத்தைச் சூறையாடித்திரண்ட திரவியத்துடன் தன்னூர் திரும்பாமல் பீஜாபூர் எல்லையின் கடற்கரையிலுள்ள பட்டினங்களைக் கோகர்ண க்ஷேத்திரம்வரை சூறையாடினார். ஔரங்கசிப் சிவாஜியின்மீது தண்டெடுத்து அவரைத் தன் ஆதீனத்திற்குட்படுத்தக்கருதி, இரஜபுத்திர வீரரான ஜயசிங்கரையும் ஆப்கன் தீரனை டிலிர்கானையும் இவர்களுக்கு உபதளகர்த்தர்களாக டாவுட் கான், ராஜாஸுஜன்ஸிங், ஜபர்தஸ்த்கான், கீரத்ஸிங் முதலியவர்களையும் அனுப்பினான். இவர்கள் கொண்டுபோன படையின் சங்கியை பதினாலாயிரம். * ஜயசிங்கர் கி. பி. 1665-ம் வருடம் ஜனவரி மாதம் ஒன்பதாம் தேதியன்று நருமதையாற்றைக் கடந்து ஔரங்கபாத் தலை நகருக்குப் போய்ச் சேர்ந்தார். ஜயசிங்கர் மார்ச்சு மாதம் மூன்றும் தேதி யன்று புனநகரை வந்தடைந்து ராஜா ஜெஸ்வாண்ட் ஸிங்கை உடனே டில்லிக்கு அனுப்பினார். ஜயசிங்கர் மகா சாமர்த்தியசாலி. நல்ல போர்த்திறமை வாய்ந்தவர். இவர் தாய் தகப்பன் அற்ற அனாதைப் பிள்ளையாக யிருந்து, தன் பன்னிரண்

* இவ்விஷயம் அலம்கீர் நாமா (ஔரங்கசிப் சரித்திரம்) விலிருந்து எடுக்கப்பட்டது

டாம் பிராயத்தில் மொகலாய சேனையில் சேர்ந்தார். அந்நாள் தொடங்கியே இவர் வெகு தைரியத்துடன் மத்திய ஆசியாவிலும் ஆப்கானிஸ்தானத்திலும் இவர் போர்புரிந்தார். ஷாஜிஹான் பாதுஷா இருந்த காலத்தில் இராணுவ சூழ்ச்சியை யிவரிடமிருந்தே யறிந்து கொள்வார். இவர் நல்ல பேச்சுக்காரர். துருக்கி பாஷையிலும் பாரஸீக பாஷையிலும் நல்ல பாண்டித்தியம் பெற்றவர். இவர் ஆப்கான், மொகல், இராஜபுத்திர வீரர்களுக்குத் தலைவராக யிருப்பவர். இராஜ தந்திரத்தில் சிவாஜிக்குக் குறைந்தவரல்ல; இராணுவ சூழ்ச்சியிலும் இவருக்கு நிகரானவர்கள் மொகலாய ஏகாதிபத்தியத்தில் அக்காலத்தில் ஒருவருமில்லை. சிவாஜியின் மீது தண்டெடுத்த காலத்தில் இவருக்கு வயது அறுபது. இக்கிழச் சிங்கமும் டிலிர்கானுமாக வந்து சேர்ந்தனர். ஔரங்கசிப் முதல் முதல் இவரைக் கொங்கணத்தைத் தாக்கும்படி உத்திரவு செய்தான். ஆனால் ஜய சிங்கர் பாதுஷாவின் உத்திரவை ஏற்றுக் கொள்ளாமல், சிவாஜியை மடக்குவதற்கு மகாராஷ்டிர பிராந்தியத்தின் மத்தியிலுள்ள புரந்தரன் கோட்டை, இராஜகடா, லோககடா முதலிய துருக்கங்களைப் பலமாகத் தாக்கினால் மிகுதிபாகங்கள் தானாகவே விழும் என்று கொண்டு அவர் முதல் முதல் ஸஸ்வாடி கிராமத்தில் பாளையங்களை இறக்கினார். ஜயஸிங், ஸஸ்வாடியில் இறக்கின பாளையங்களை நான்காகப் பிரித்து ஒன்றை டிலிர்கான் வசம் புரந்தரன் கோட்டை பக்கமாகவும், மற்றொன்றை கிரத்ஸிங் மூலமாக லோகா கோட்டை பக்கமாகவும் அனுப்பித் தான் ஸிம்மகடாமீது சென்றார். போகும் வழியில் ஜயஸிங்கர் ருத்ரமால் (வஜ்ஜிரகடா) கோட்டையைத் தாக்கி அதைக் கைப்பற்றிக் கொண்டார். இதல்லாமல், கொங்கணத்தைச் சேர்ந்த சில ஜமீன்தார்கள் மொகலாயர்களின் ஏவுதலினால் ஜாவலி பக்கத்தில் படையெடுத்தனர். சூரத் நகரத்திலுள்ள ஆங்கிலேய டச்சு வியாபாரிகள் தங்கள் சிறிய படகுகளில் படைக்கலங்கள் கொண்டு கடற்கரையிலுள்ள சிவாஜி துறைமுகங்களை எதிர்த்தார்கள். இங்ஙனம் நாலு பக்கங்களிலும் மகாராஷ்டிரத்தைப் பலமாக தாக்கினார்கள். ருத்ரமால் கோட்டை கைவசமாயிற்று. ஏப்ரல் மாதம் இருபத்தைந்தாம் தேதியன்று ஜயசிங்கர் ஏழாயிரம் படைவீரர்களுடன் ஸிம்மகடாவை முற்றுகை யிட்டார். பலமான யுத்தம் நடந்தது. இருதிறத்திலும் அநேக வீரர்கள் மடிந்தார்கள்

புரந்தரன் கோட்டையும் முற்றுகை யிடப்பட்டது. இவ்விடத்தி லும் கடும்போர் நடந்தது. வீரர்களின் தலைகள் உருண்டன. மகாராஷ்டிர படைத்தலைவரான பாஜீபிரபு நள்ளிரவில் எழுநூறு வீரர்களுடன் கோட்டையின் கீழ் இறங்கி மொகலாய துருப்புகளை யும் கோட்டையைத் தகர்க்கக் கட்டிவைத்த பீரங்கி மேடைகளையும் தாக்கிச் சின்னபின்னப்படுத்தி வருகையில் டிலிர்கான் மொகலாய படையுடன் எதிர்த்தான். பாஜி பிரபு ஐந்நூறு மொகல் வீரர்களை மேலுலகிற்கு அனுப்பித்தாலும் யுத்தகளத்தில் மாண்டார். பாஜி பிரபு மாண்டதையும் படைகளின் அணிவகுப்புகள் திசை தப்பியோ டுவதையுங் கேள்வியுற்ற சிவாஜி கால தேச வர்த்தமானங்களை யறி ந்து யுத்தம் புரிதலைத் தவிர்த்து உடனே உடன்படிக்கை செய்து கொள்வதெனத் தீர்மானித்தார். சிவாஜி ஒவ்வொரு காரியத்திற் கும் தன் குல தெய்வமான பவானி தேவியின் உத்திரவை எதிர் பார்த்துப் பிறகே அக்காரியத்தைச் செய்வது வழக்கமாதலால், அவ்வழக்கத்தை யனுசரித்து இவர் இத்தருணத்திலும் * பவானி தேவியை உத்திரவு கேட்டார். பவானி தேவி ஜயஸிங்கரை வெல்ல முடியாதென்று கூறினாள். உடனே சிவாஜி தன்னிடம் மிக்க அன்பு வாய்ந்த ரகுநாத பண்ட் என்பவரை ஜயசிங்கரிடம் உடன் படிக்கைக்கு வரும்படி அனுப்பினார். ஜயசிங்கர் முதல் முதல் ஒப்பவில்லை. ஏனெனில் சிவாஜி இதற்கு முன்னர் அப்ஸல்கான் முதலியவர்களை நய வஞ்சகமாய்க் கொன்றாரெனப் பன்முறை மொகலாயர்களிட மிருந்து கேட்டவராதலால், சிவாஜி இச்சமயம் தன்னை நய வஞ்சகமாய்க் கொல்லக்கூடு மென்றெண்ணியே முதல் முதல் ஒப்புக்கொள்ள மறுத்தார். சிவாஜி வாஸ்தவமாகவே உடன்படிக்கைக்கு சம்மதிக்கிறார் என்று ஜயசிங்கரிடம் ரகுநாத பண்ட் வெகு நயமாய்க் கூறினார். ஜயசிங்கரும் கடைசியாக ஒத்துக்

* பவானி தேவியின் வார்த்தைகளைக் கேட்ட பின்னரே சிவாஜி யுத் தம் புரிதலைத் தவிர்த்து உடன்படிக்கை செய்து கொண்டார். இவருடைய நடத்தை கேவலம் மூட பக்தியை யனுசரித்த தென்று கிராண்ட் டப் கூறு கிறார். ஆனால் ரானடே, சிவாஜி சிறந்த இராஜ தந்திரியாதலால் நிகழ் காலத்தை யனுசரித்தும் எதிர் கால சம்பவத்தை யனுசரித்தும் உடன் படிக்கைக்கு உட்பட்டார் என்று கூறுகிறார்.

கொண்டார். சிவாஜி மறுநாள் ரகுநாத பண்டருடன் ஜயசிங்கரைக் காண வந்தார். ஜயசிங்கர் சிவாஜி வருவதைக்கண்டு, எதிர் கொண்டழைத்து ஆலிங்கனஞ் செய்து அவரைத் தன் பக்கத்தில் நல்ல ஆசனத்தில் அமரச் செய்தார். ஜயசிங்கர் சிவாஜியின் யோக க்ஷேமங்களை விசாரித்த பிறகு இராஜ்ய விஷயங்களை விசாரித்தார். சிவாஜி தன் எண்ணத்தை ஜயசிங்கருக்கு வெளியிட்டார். ஜயசிங்கரும் சிவாஜியின் பரோபகார எண்ணத்தை மெச்சி, இனி டில்லி பாதுஷாவின் கீழ் உயர்ந்த ஜாகீர்தாராக இருக்க உத்திரவு வாங்கிக் கொடுக்கிறேன் என்றும் கூறினார். சிவாஜியின் உடன்படிக்கை ஏற்பாடுகளை ஜயசிங்கர் உடனே டிலிர்கானுக்குத் தெரியப்படுத்தி முற்றுகையை நிறுத்தச் சொன்னார். டிலிர்கானும் ஜயசிங்கரின் வார்த்தையைக் கேட்டு முற்றுகையை ஒருவாறு நிறுத்தி சிவாஜிக்கும்* ஒரு கடிதம் எழுதினான். பின்வருவது சிவாஜியின் உடன்படிக்கை.

புரந்தரன் கோட்டை உடன்படிக்கை கி. பி. 1665.

1. சிவாஜி தட்சிணத்தில் பன்னிரண்டு துருக்கங்களையே வைத்துக்கொண் டிருக்கவேண்டும். வருடந்தோறும் ஒரு லட்சம் ஹுன் (5 லட்சம் ரூபாய்) நாணய வருமானம் உள்ள நிலங்களையும் சிவாஜி வைத்துக் கொண்டிருக்க வேண்டும். மொகலாய ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த நாடு நகரங்களை இனி கொள்ளையடிக்கக் கூடாது.

2. தட்சிணத்தில் எந்த பிராந்தியத்திலாகிலும் மொகலாயருக்கு யுத்தம் நேரிடுவதாயிருந்தால் சிவாஜி உடனே மொகலாயர்களுக்குப் படையுடன் உதவி புரியவேண்டும்.

3. சிவாஜியின் பிள்ளை சாம்பாஜி மொகலாய இராணுவத்தில் ஐயாயிரம் படை வீரர்களுக்குத் தலைவராகயிருந்து தட்சிணத்திலிருக்கும் மொகலாய சுபேதாருக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டும்.

---

* டிலிர்கான் சிவாஜிக்கு எழுதிய கடிதம் இவ்வத்தியாயத்தின் அனுபந்தத்தில் காண்க.

4. * பீஜாபூர் சமஸ்தானத்திலுள்ள சில பிராந்தியங்களில் † சவுத் வரியும் ‡ ஸர் தேஷமுகி வரியும் சிவாஜி வசூல்செய்யலாம்.

இவ்வுடன்படிக்கை ஏற்பாட்டை ஜயசிங்கர் ஔரங்கசிப் பாதுஷாவிற்குக் கடித மூலமாய்த் தெரிவித்தார். ஔரங்கசிப் ஜயசிங்கர் செய்த உடன்படிக்கையைப் படித்து சிவாஜிக்கு ஒரு கடிதமும் $ அனுப்பினன்.

1. அனுபந்தம்.

ராஜா சிவாஜிக்கு டிலீர் கான் எழுதிய கடிதம். ‖

உமக்குக் கடவுள் துணைபுரிவாராக! உம்மைப்பார்க்க வேண்டுமென்னும் அவா எனக்கு இவ்வளவவ்வளவல்ல. நீர் மாஹல்தார் (காவலர்கள்) களிடம் அனுப்பிய கடிதம் வந்து சேர்ந்தது. உம்முடைய கடிதம் உடன்படிக்கையைப்பற்றியது. நான் அங்கீகரித்தேன். ஆனல் இந்த சந்தர்ப்பத்தில் உமக்குச் சொல்லவேண்டியது ஒன்று உண்டு. முதல் முதல் யுத்தம் புரிவதற்கு முன்னரே உடன்படிக்கைக்கு நீர் வந்ததைப்பற்றியது. நாடுநகரங்களை விட்டுப் பல நதிகள் கடந்து உம்முடைய மலைநாடுகளில் நல்ல யுத்தம் புரியலாம் என்று நாங்கள் இவ்வளவு தூரம் வந்திருக்க நீர் வந்த அதிதிகளை உபசரியாது உடன்படிக்கை செய்து எங்களை

* நான்காவது உடன்படிக்கை நடக்கவேயில்லை என்று சிலமுகம்மதீய சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். இந்து சரித்திரக்காரர்கள் நடந்ததாகத் தெரிவிக்கின்றனர்.

† நிலத்தில் நாலில் ஒரு கடமை வாங்குவதற்கு சவுத் என்று பெயர்.

‡ விளைவில் பத்தில் ஒரு கடமைக்கு ஸர்தேஷமுகி என்று பெயர்.

$ ஔரங்கசிப் சிவாஜிக்கு எழுதின கடிதம் அனுபந்தத்தில் பார்க்க.

பன்னிரண்டு துருக்கங்களாவன:—ராஜகடா, தோரணு, பாய்கடா, லிங்கணு, மராகடா, பல்லகடா, கோவஷாலா, ஈஸ்வரீபானி, புருப், குமாரி. உதயதுர்க்கம்.

‖ இக்கடிதம் இங்கிலாந்திலுள்ள இந்தியா ஆபீஸ் புத்தகாலயத்தில் பாரஸிக பாஷையில் எழுத்து மூலமாகயிருந்ததை வங்கநாட்டில் உள்ள பாபு ஜாடுநாத ஸிர்க்கார் ஆங்கிலத்தில் தர்ஜமா செய்ததனின்றும் எடுக்கப்பட்டது.

மனம் நோவச்செய்வது தர்மமா? வானளாவிய மலைகளையும் அம்மலைகளின் மீது பலமாய்க் கட்டப்பட்ட கோட்டைகளும் கண்ணுழையாக் காடுகளும் செங்குத்தான கற்பாறைகளும் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்களும் உம்மிடமிருந்தும் நீர் எங்களுடன் சமாதானஞ் செய்கிறீர். நீர் வெகுகாலமாக எங்களுடன் சமாதானஞ் செய்வதாகயிருந்த போதிலும் நீர் இப்பொழுதும் * யுத்தம் புரிவதாயிருந்தால் அது எனக்கு மிக்க விருப்பமேயாகும்.

சிவாஜிக்கு ஔரங்கசிப் பகதூர் எழுதிய கடிதம்.

(கி. பி. 1665, ஆகஸ்டு மாதம் 26-ந்தேதி

சிவாஜிக்கு,

உமக்கும் ஜயவிங்கருக்கும் முதல் முதல் நடந்த சம்பாஷணையில் உண்டான உடன்படிக்கைகளைப்பற்றி அவர் தெரிவித்ததின் பேரில் இப்பொழுது உமக்குக் கடிதம் ஒன்று நான் எழுதலானேன். நீர் அவரிடம் கூறினமாதிரி சகல ஏற்பாடுகளுக்குட்பட்டு மொகலாய ஏகாபத்தியத்திற்கு மிக்க விஸ்வாஸத்துடன் இருப்பீர் என்று நான் நினைக்கிறேன். இதுகாறும் என் இராஜாங்கத்திற்கு இழைத்த தீங்குகளையும் மொகலாயர்களுக்குச் செய்த அபராதங்களையும் நான் மன்னித்து உமக்கு ஜயவிங்கருடைய வேண்டுகோள்படி வரி வசூலிக்கும் அதிகாரமுங் கொடுத்தேன். உமது மைந்தனுக்கு அவ்வாறே மறியாதை செய்யப்பட்டது. உமக்கு மரியாதையாக சமஸ்தானத்திலிருந்து † இராஜ உடுப்பு ஒன்று அனுப்பப்பட்டது.

---

* டிலிர்கானுக்கு உடன்படிக்கையில் இஷ்டமில்லை. சிவாஜியுடன் யுத்தம் புரியவேண்டுமென்பதே அவன் நோக்கம். சிவாஜியுடன் போர் செய்து ஜயித்தால் தனக்கு நலல கீர்த்தி என்பதை இவன் அறிந்தான்.

† தற்காலத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்நாட்டில் சிலருக்குக் கொடுக்கும் பட்டங்களைப் போல் அக்காலத்தில் மொகலாய கவர்ன்மெண்டார் மரியாதையாக அனுப்புவது.

ஔரங்கசிப்பஹதூருக்கு சிவாஜி எழுதிய கடிதம். *

டில்லி நவாப் பகதூருக்கு இவ்வடிமை மிக்க தாழ்ந்த வணக்கத் துடன் எழுதியது என்ன வென்றால் இப்பவும் இந்த அபராதி செய்த குற்றங்களை எல்லாம் மன்னித்து இராஜ முத்திரையிட்டு அனுப்பின உங்கள் பர்மன் (கடிதம்) வந்து சேர்ந்தது. தாழ்ந்த பதவியிலுள்ள இவ்வற்ப ஜமீன்தாரை ஒரு பொருட்டாக மதித்து இராஜ உடுப்பும் சாம்பாஜிக்குப்பதவியும் தந்தருளின கருணைக்கு மிக்க நன்றியுள்ளவனாயினேன். இவ்வடிமை மிர்ஜாராஜா † ஜயஸிங்கருக்கு விடைகொடுத்தனுப்பி நான் ஊர்போய் பீஜாபூர்மீது தண்டெடுக்கச் சேனைகளைத் திரட்டுவேன். நமது சேனுபலம் விசாலமானது. கடவு ளருளால் நமது நேச சேனைகள் பீஜாபூரை அழிக்கும் என்பதில் பொய்யல்ல. தாழ்ந்த வணக்கத்துடன் பாதுஷாவிற்கு நமஸ்காரம்.

ii

சிவாஜியின் திக்குவிஜயம்.

சிவாஜிக்கும் பீஜாபூர் சமஸ்தானத்திற்கும் ஷஹாஜியின் மூல மாய் நடந்த உடன்படிக்கை வெகுகாலம்வரை நீடித்திருக்கவில்லை. சிவாஜியின் ஏற்றத்தை பீஜாபூர் சமஸ்தானம் சகிக்கவில்லை. பீஜா பூர் சமஸ்தானம் தனிமையாகத் தன்னரசு கொண்டிருப்பது ஔரங்கசிப் பாதுஷாவிற்குச் சகிக்கவில்லை. ஔரங்கசிப் பீஜாபூர் சமஸ்தானத்தைத் தன் கீழ் அடக்கி வைத்துக்கொள்ள வேண்டு மென்பதையே நோக்கமாகக் கொண்டவராதலால், சிவாஜியுடன் உண்டான உடன்படிக்கைக்குப் பிறகு ராஜா ஜயஸிங்கரையும் டிலீர்

---

* இக்கடிதம் ஜயஸிங்கர் சொல்லி சிவாஜி பாதுஷாவிற்கு எழுதினது. ஜயஸிங்கருடைய தபாற் கடிதங்கள் யாவையும் பாரிஸ் நகர புத்தகாலயத் தில் பத்திரப்படுத்தி வைத்ததிலிருந்து ஆங்கிலத்தில் தர்ஜமா செய்யப்பட்டுத் தமிழில் எழுதப்பட்டது. இது பூர்வம் பாரஸீக பாஷையில் இருந்தது. சிவாஜி பாரஸீக பாஷை தெரிந்த காரியதரிசி யொருவரை நியமித்திருந்தார். அவர் பெயர் காஜீஹைதர். அக்காரியதரிசி எழுதிய கடிதம் இது என்பார் சிலர். மற்றுஞ் சிலர் ராஜா ஜயஸிங்கரின் காரியதரிசியான உதயராஜ் எழுதியது என்பார்.

† ஜயசிங்கரை மொகலாயர்கள் மிர்ஜா ராஜா என்றழைப்பது வழக்கம்.

கானையும் பீஜாபூர்மீது படையெடுக்க உத்திரவு பிறப்பித்தார். ஜய ஸிங்கரும் கானும் படையெடுத்தனர். சிவாஜி பீஜாபூர் சமஸ்தானத்தை வேருடன் அழிக்க வெகுகாலமாகக் கருதியவராதலால், இதுவே தருணமெனக்கொண்டு, பீஜாபூர் சமஸ்தானத்தைப் படையெடுக்கவந்த மொகல் சேனையுடன் ஒன்பதினாயிரம் படைவீரர்களோடு சிவாஜி சேர்ந்துகொண்டார். சிவாஜி, பீஜாபூர் சேனைகளை முறியடித்து பல்டன், தத்துவாடி, இவ்விரண்டையும் சுவாதீனப் படுத்திக்கொண்டார். இங்ஙனம் சிவாஜியின் பராக்ரமத்தை வீரர்கள் மூலமாய் அறிந்த ஒளரங்கசிப் உடனே சிவாஜிக்கு இரத்தினக் கற்கள் இழைத்த பட்டாக்கத்தி யொன்றை சன்மானமாக அனுப்பினார். கத்தியனுப்பின கொஞ்சநாள் கழிந்ததும் ஒளரங்கசிப் மறுபடியும் சிவாஜிக்கு மற்றொரு கடிதம் எழுதி, அதில் சிவாஜியை டில்லிக்கு வரும்படி எழுதியிருந்தார். சிவாஜிக்கு இதே சமயத்தில் ராஜா பட்டமும் ஒளரங்கசிப் தந்தார். ஒளரங்கசிப் பாதுஷாவிடமிருந்து வந்த கடிதத்தைக்கண்டு சிவாஜி டில்லிக்குப் பிரயாணமாக முதல் முதல் பவானி தேவியை உத்திரவு கேட்டார். பவானிதேவியும் சிவாஜிக்கு அனுகூலமாகவே வரமளித்தார். ராமதாஸ் குருமூர்த்தியும் சிவாஜியை டில்லிக்குப் போகும்படி உபதேசித்தார். சிவாஜியின்மீது சதா அனுமானங்கொண்டிருக்கும் ஒளரங்கசிப்பின் மனதைச் சமாதானப்படுத்த டில்லிக்குப்போவது நன்மையே எனச் சிலர் கூறினர். சிவாஜி உடனே இராஜ்யத்தைத் தன் தாயிடமும் பீஷ்வா மோரோ பிங்களே என்பவரிடமும் அண்ணாஜி தத்தரிடமும் ஒப்புவித்துவிட்டுப் பிரயாணமானார். பிரயாணமாவதற்கு முன்னர் தாயை யழைத்துத் தன் பத்தினிமார்களையும் இரண்டாவது குமாரன் இராஜாராமையும் பார்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். சாம்பாஜி சிவாஜியுடன் புறப்பட்டான். சிவாஜி தன்னுடன் தானாஜீ மாலஸுரே, யஸோஜிகங்க், பாலாஜி, அப்பாஜீ, ரகுநாத பண்ட், முதலிய வீரர்களை மெய்க்காப்பாளராக அழைத்துச் சென்றார். இவர் முதல் முதல் பீஜாபூர் சமஸ்தானத்திற்கருகில்பாடிவீட்டில் இருந்த ஜயஸிங்கரைக் கண்டார். ஜயஸிங்கர் சிவாஜியை வெகு மரியாதையுடன் எதிர்கொண்டழைத்து அவர் பத்திரமாய் டில்லிக்குப் போகத்தன் குமாரன் ராம்ஸிங்கனை யனுப்பினார். வட தேச

யாத்திரையில் சிவாஜி ராஜா அடிக்கடி ராம்ஸிங்கருடன் வெகு நாழிகை பரியந்தம்வார்த்தையாடுவார். இங்ஙனம் சிவாஜிராம்ஸிங்கனுடன் பேசிவந்ததினால் இவ்விருவர்களுக்கும் வெகு அன்னியோன்னியம் உண்டாயிற்று. ராம்ஸிங் சிவாஜியின் குணாதிசயங்களைக்கண்டு வெகு மரியாதை செய்ய வாரம்பித்தான். கடைசியாக சகலரும் ஆக்ராநகரம் வந்து சேர்ந்தனர். சிவாஜி ஆக்ரா நகரில் வந்திறங்கி பாதுஷாவிடம் தான் வந்த செய்தியைக்கூற ராம்ஸிங்கனையே தூதராக அனுப்பினார். சிவாஜி ஆக்ராபோய்ச் சேர்ந்ததும் டில்லியிலிருந்து சிவாஜியை யழைத்துச்செல்ல முக்கிய இராணுவ அதிகாரி யொருவர் வருவார் என்று ராஜா ஜயஸிங்கர் புறப்படும்பொழுதேயே கூறியிருந்தார். ஆனால் ஜயஸிங்கர் கூறினமாதிரி நடக்கவில்லை. ஔரங்கசிப் சிவாஜியை மரியாதையாய் அழைக்காமல் வெகு சாமானியமாய் நடத்தினதை சிவாஜியும் ராம்ஸிங்கும் கண்டு மனம் நொந்தனர். என்றாலும், சிவாஜி இதை வெளிக்குக் காண்பிக்காமல் அரண்மனைக்குச் சென்றார். ஔரங்கசிப் ஆக்ராவிலேயே கொலுவிருந்தான். சிவாஜி கொலுமண்டபத்திற்கு வந்து அக்காலத்திய வழக்கப்படி பாதுஷாவிற்கு நமஸ்காரஞ்செய்து தான் கொண்டுவந்த முப்பதினாயிரம் ரூபாயைக் காணிக்கையாக அவர் முன் வைத்தார். ஔரங்கசிப் சிவாஜியைத் தன் இரண்டாவது * வகுப்புப் படைத்தலைவர்களின் கோஷ்டியில் இருக்கும்படி உத்திரவு அளித்தார். இது சிவாஜியை அவமானப்படுத்தினதாயிற்று. பன்னீராயிரம் படைவீரர்களுக்குத் தலைவராயிருந்து அநேக யுத்தங்களைப் புரிந்த சிவாஜிக்குச் சாமானிய படைத்தலைவன் பதவி கொடுத்தது மிகவும் விசனிக்கற்பாலது. சிவாஜியின் குமாரன் சாம்பாஜிக்கும் தன் கீழ் தண்டத்தலைவராயிருக்கும் நேடோஜி பால்கருக்கும் ஐயாயிரம் படைவீரர்கள்கொண்ட அணித்தலைவராக நியமித்த ஔரங்கசிப் சிவாஜிக்கும் அதே பதவி கொடுத்தது வேண்டுமென்றே சிவாஜியை அவமானப்படுத்தின

* 5000 படை வீரர்கள் கொண்ட அணித்தலைவன் சாமானியன். 10,000 படைவீரர்கள் கொண்ட அணித்தலைவன் சேனாதிபதி. இதற்கு மேல் இருபதினாயிரம் வீரர்கள் கொண்ட அணி வகுப்பு உண்டு. பூர்வம் அர்த்தரதர், மகாரதர் என்றபடி இவ்வகுப்புத் தலைவர்களின் பிரிவு மத்திய காலத்தில் ஏற்பட்டது.

னென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும். நிற்க, ஔரங்கசிப் கூறின வார்த்தை சிவாஜிக்கு நாராசங் காய்ச்சி நெடுச் செவியில் ஊற்றினர் போலிருந்தது. ராம்ஸிங்குடன் தன் அதிருப்தியைக் கூறினர். சிவாஜி பாதுஷாவைப் பார்த்து 'நீர் வரும்படி எனக்கு ஆக்ஞாபித்தமையால் இவ்விடம் வரலானேன். இம்மாதிரி நடக்கும் என்றெண்ணி யிருந்தால் நான் வந்திருக்கமாட்டேன்' என்று கூறினர். ஔரங்கசிப் உடனே சிவாஜியின் வார்த்தையைக் கேட்டுச்சீறி இனி நீர் என் கொலுவிருக்கைக்கு வரவேண்டாம். உமக்கு ஏதாவது சொல்லவேண்டுமானல் தூதரிடம் அனுப்பும் என்று கூறித் தன் தளகர்த்தரை யழைத்துச் சிவாஜியை டாஜ்மகால் கட்டடத்திற்குச் சமீபத்தேயுள்ள மாளிகையில் கொண்டு விடும்படி ஆக்ஞாபித்தார். சிவாஜியும் தனக்கு ஏற்பட்ட மாளிகையில் வந்து இறங்கினர். மாளிகையைச் சுற்றிலும் முகம்மதிய வீரர்கள் காவலாக நியமிக்கப்பட்டார்கள். சிவாஜியோ பெரிய கஷ்டத்தில் இருக்கிறார். காவலைவிட்டு நீங்கினல், இதை ஒரு குற்றமாகக்கொண்டு ஔரங்கசிப் சிவாஜியின் தலையைச் சேதிக்கக்கூடும். காவலைவிட்டு நீங்காமலிருந்தால் சிவாஜி சாகுமளவு சிறையிலிருக்கும்படி நேரிடும். ஆகவே இவ்விஷயங்களை நன்ருய் அறிந்த பின்னர், சிவாஜி ரகுநாத பண்டை ஔரங்கசிப் பாதுஷாவிடம் தூதராக அனுப்பித் தன்னை விடுவிக்கும்படி சொல்லி அனுப்பினர். பாதுஷா தூதரின் வார்த்தையைக் காதுகொடுத்துங் கேட்கவில்லை. அப்பால் சிவாஜி ராம்ஸிங்கனுக்குக் கடிதம் எழுதித் தன் விஷயமாக பாதுஷாவைப் பார்க்கும்படி அனுப்பினர். அவன் பாதுஷாவைப் பார்த்ததும் அவன் 'இனி நான் செய்யவேண்டியதொன்றுமில்லை. அவன் விடுதலையடைந்து தட்சிணத்திற்குப் போவதாயிருந்தால் ஸாம்பாஜியை அடைக்கலமாக இங்கு விட்டு விட்டுப் போகவேண்டும்' என்று கூறினன். கடைசியாக சிவாஜி இதற்கு ஒப்பவில்லை. இவ்வேற்பாட்டிற்கு சிவாஜி உடன்பட்டால் கட்டாயம் ஸம்பாஜியை இழக்க நேரிடும். அதுடன் மகாராஷ்டிரர்களுக்குத் துரோகஞ் செய்தது போலாகும். நிற்க, சிவாஜி தன்னை ஊருக்கு அனுப்ப இஷ்டமில்லாமற்போதிலும் தன் சைன்னியங்களையாவது ஊருக்குத் திரும்பிப் போக உத்திரவு கொடுக்க வேண்டுமென்று கூறினர். இவ்வுத்திரவு

கொடுக்கப்பட்டது. சிவாஜியின் வீரர்கள் வெகு மனஸ்தாபத்துடன் திரும்பினர். சிவாஜிக்கு அந்தரங்கத் தோழர்களிற் சிலரே ஊரில் இருந்தனர். சிவாஜி தான் தப்பும் வழியைநாடினூர். சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு போவதற்கு சிவாஜி செய்த யுக்தி மிகவும் அற்புதமானது. அதனாலேயே அவருடைய கற்பனை சக்தி மிக்க சாகஸமானது என்று விளங்குகின்றது. சிவாஜியின் காவலாளிகளுக்குத் தலைவனான போலட்கானிடம் தனக்கு இனி தட்சிணத்திற்குப் போகவிருப்பமில்லையென்றும், தன் தாய், மனைவி, மக்களையும் இவ்விடத்திற்கே அழைத்து வரும்படி கட்டளையிட விருப்பங்கொண்டிருப்பதாகவும் வெகு கபடமாய்க் கூறினூர். ஔரங்கசிப் சிவாஜிக்கு நித்தம் வேண்டிய பொருள்களை அனுப்பியிருந்தான். இதனால் இவர் அநேக தின்பண்டங்களைச் செய்து தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களுக்குக் கொடுத்துவந்தார். அப்பால் வரவர, பட்டணத்திலுள்ள தன் சிநேகிதர்களுக்குத் தன்னூர் தின்பண்டங்களைச் செய்து அனுப்ப சிவாஜி உத்திரவு கேட்டார். இவ்வுத்திரவு கொடுக்கப்பட்டது. அது முதல் சிவாஜி நித்தம் பெரிய கூடைநிறைய பட்சணங்களைச் செய்து தன் மித்ரர்களுக்கு அனுப்பி வந்தார். இவ்வாறு நடந்து வருகையில் ஒருநாள் தேகம் அசௌக்கியமா யிருக்கிறதென்று இவர் தெரிவித்தார். வைத்தியர்கள் வந்தனர். நாளுக்குநாள் தேக ஸ்திதி பலப்பட்டு வருகிறதென்று கூறித் தான் நோயால் வருந்திப் பிழைத்த சங்கதியைக் கேட்டுத் தன் மித்திரர்கள் சந்தோஷப்படும்படி அன்று முன்னினும் அதிகமாக பட்சணங்களை யனுப்பக் கூடைகளைக் கேட்டார். கூடைகள் வந்தன. இக்கூடைகளில் ஒன்றில் சிவாஜியும் மற்றொரு கூடையில் சாம்பாஜியுமாக உட்கார்ந்து கொண்டார்கள். தன் வேலைக்காரர்கள் நித்தம் பட்சணங்கள் எடுத்துச் செல்வதுபோல் தலையில் தாங்கிக்கொண்டு வெளிச்சென்றூர்கள். சிவாஜி இருந்த அரண்மனையில் தன்னுடன் இருந்த வேலைக்காரர்களில் ஒருவர் நீங்கலாக மற்றெல்லோரும் மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு வெளியேறினூர்கள். ஈராஜி பாஸந்த்என்பவன் மாத்திரம் மாளிகையிலேயேயிருந்து சிவாஜிபோல் வேடங்கொண்டு, அவர் படுக்கையில் படுத்துக்கொண்டு நோயால் வருந்துவதுபோல் பாசாங்கு செய்தான். மறுநாள் காலையில் கால்

கை பிடிக்கும் பையன் தன் வழக்கப்படி பிடித்துவிட்டுப் போனான். இதற்குள்ளாக சிவாஜியும் சாம்பாஜியும் தன் முதல் மந்திரி (பீஷ்வா) மோரோ பிங்களேயின் மைத்துனர்களான அண்ணாஜி, கோஸோஜி, விஸாஜீ இவர்களின் வீடு போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் வரவை முன்னதாகவே எதிர்ப்பார்த்திருந்த இவர்கள் சிவாஜியையும் சாம் பாஜியையும் வரவழைத்துத் தக்க ஏற்பாடு செய்தனர். சிவாஜி இனி இவ்வேடத்துடன் இருப்பது உயிருக்கே மோசம் என்றுகொண்டு தலை மயிரைக்களைந்து, மொட்டையிட்டுத் தாடி முதலியவைகளை நீக்கிக் காவியுடை தரித்துத் தண்ட கமண்டலத்துடன் சந்நியாசி வேடங்கொண்டார். சாம்பாஜியோ சிறிய பாலனா யிருப்பதினால் வழிப் பிரயாணத்திற்கு உதவான் என்று கொண்டு சிவாஜி கிருஷ்ணாஜியின் தாயிடம் விட்டுவிட்டுப் புறப்பட்டார். இதல்லாமல் சிவாஜியும் சாம்பாஜியும் ஒன்று சேர்ந்தால் மொகலாயர்கள் தங்களைப் பிடித்து விடக்கூடுமென்றே சிவாஜி சாம்பாஜியை விட்டுத்தான் தனியே போகத் துணிந்தார். இவ்வாறு இவர் சகல ஏற் ஏற்பாடுகளையுஞ் செய்து நகர் நீங்குந்தருவாயில் அங்கே ஈராஜி அன்றிரவு தன் சுய வேடந் தரித்துக் கடைக்குப் போவதாகக் காவலாளர்களிடம் கூறி வெளியேறினான்; பொழுது புலர்ந்ததும் மாளிகையுள் ஒருவருமில்லை. சிவாஜியின் படுக்கையில் ஒருவரையும் காணவில்லை. போலட்கான் உடனே பாதுஷாவிற்குத் தெரிவித்தான். பாதுஷா மதுரா நகரத்தில் தேட அங்கங்கே ஆள்களையனுப்பினான். ஆள்கள் சிவாஜியைத் தேடுவதை இவர் அறிந்தார். உடனே சிவாஜி ஸ்ரீ காசி க்ஷேத்திரத்திற்குச் சென்று கங்கையில் நீராடி பிரயாகைக்கு வந்து சங்கமத்தில் ஸ்நானஞ் செய்து கயாவிற்குச் சென்று சகல கிரியைகளையும் பண்ணிப் பிறகு வங்காளத்திற்குச் சென்றார். வங்காளத்திலிருந்து இண்டோர் சமஸ்தானத்திற்குப் போய் அப்பால் தட்சிணத்திற்குட் சென்றார். தட்சிணத்திலிருந்து வெகுதூரம் வரை வழிப் பிரயாணஞ் செய்து மராடி குதிரை வீரர்கள் இருக்கும் ஒரு கிராமத்தை வந்தடைந்தார். புனா நகரம் சமீபித்தது. இனி மொகலாயர்களால் ஆபத்து ஒன்றும் நேரிடாதெனக்கண்டு சிவாஜி தன்வரவை அனைவரும் அறியும்படி அறிக்கையொன்று நாடெங்கும் அனுப்பினார். புனாவிலிருந்து சிவாஜி ராய

கடாவிற்குச் சென்று தாயைக்கண்டு அடி பணிந்தார். தாயும் பிள்ளையை இனி காணப்போகிறோமாவென்று ஏக்கங் கொண்டிருந் தவளாதலால் சிவாஜியின் ஸ்வரூபத்தைக்கண்டு அவனை வாரி அணைத்துக் கொண்டாள். சிவாஜியின் பத்தினிப் பெண்டிர்களும் நாயகனைக்கண்டு களித்தனர். ஜீஜாபாயிக்கு இன்னமும் மனது சமாதானமாகவில்லை. சாம்பாஜியைப்பற்றி மிகவும் வருந்தினாள். இவ்வாறு இருக்கையில் ஒருநாள் கேஸோஜியும் ஸாம்பாஜியும் வந்து சேர்ந்தனர். ஜீஜாபாயிக்கு அடங்காத ஆனந்தம் உண்டாயிற்று. சிவாஜி மகன் வரவைக் கண்டு மிக்க சந்தோஷங் கொண்டு, தங்க க்குளு உயிர்ப்பிச்சை கொடுத்துக் காப்பாற்றின அம்மூன்று சகோ தரர்களுக்கும் தலைக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் இனம் கொடு த்து அவர்களுடைய தாய்க்கு இருபத்தைந்தாயிரம் ரூபாயும் சாம் பாஜியை யாதொரு ஆபத்துமின்றி கொண்டு சேர்த்த கேஸோஜிக்கு இன்னும் இருபத்தைந்தாயிரம் ரூபாயுமாக இனம் கொடுத்தார். சாம்பாஜி சுகமாய் வந்து சேர்ந்ததும் தங்களிருவரையும் கொல்லப் பிரயத்தனஞ் செய்த ஔரங்கசிப் பாதுஷாவின்மீது படையெடுக்க சிவாஜி எத்தனித்தார். நிற்க, பீஜாபூரை முற்றுகையிட்டுத் தகர்க் கப்பல நாளாக யுத்தம் புரியும் ஜயசிங்கரை எப்படியாகிலும் முறி யடிக்க வேண்டுமென்றே பீஜாபூர் சுல்தான் கோல கொண்டா அரச னிடம் படை கேட்டான். கோல கொண்டா படையும் பீஜாபூருக் குதவிசெய்ய வந்துவிட்டது. ஜயசிங்கர் இனி முற்றுகையிட முடி யாதென்று ஔரங்கசிப் பாதுஷாவிற்குத் தெரிவித்தார். ஔரங்க சிப் பாதுஷாவிடமிருந்து பதில் வருகிற பரியந்தம் தாரூருக்குப் போவது சரியென்றெண்ணி ஜயசிங்கர் பின்வாங்கினார். சிவாஜி படை திரட்டி முன்போல் வெளிக்கிளம்பினார். கொங்கணத்தை மொகலாய துருப்புகள் முற்றுகையிட்டதையறிந்து முதல் முதல் சிவாஜி தன் படையைக் கொங்கணத்தின் மீது தாக்கினார். கொங் கணம் சுவாதீனப்பட்டது. தானிழந்த கோட்டைகள் ஒவ்வொன் றும் சுவாதீனப்பட்டது. ஜயஸிங்கரின் தோல்வியும் ராமஸிங்கரின் சூழ்ச்சியும் பாதுஷாவிற்கு அனுமானமுண்டாயிற்று. உடனே ஜய சிங்கரை டில்லிக்கு வரும்படி உத்திரவிட்டுத் தன் மைந்தன் மூஸீம் இள்வரசரைச் சேனாதிபதியாக நியமித்தார். மூஸீம் சண்டையை வெறுப்பவன். சிவாஜியுடன் போர் செய்ய அவனுக்கு இஷ்ட

மில்லை. அதல்லாமல் சிவாஜியின் குணத்தில் ஈடுபட்டவன். இப்படியிருக்க, ஜயசிங்கர் டில்லிக்குத் திரும்பும் வழியில் பர்ஹன்பூரில் தேகவியோகமடைந்தார். இவர் மாண்ட வருடம் கி. பி. 1667. மூஸீம் சண்டை வெறுத்து சிவாஜியுடன் கி. பி. 1668-ம் வருடத்தில் உடன்படிக்கையொன்று சிவாஜிக்கு அனுகூலமாகச் செய்து கொண்டான். இவ்வுடன்படிக்கை ஔரங்கசிப்புக்குப் பிடிக்கவில்லை. என்றாலும் அவன் செய்வது என்ன? நிற்க, பீஜாபூர் சுல்தானும் சண்டையின் பயங்கரத்தை நினைத்து மொகலாயர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டான். இத்தகைய உடன்படிக்கைகளினால் சிவாஜி தான் முன்னிழந்த கோட்டைகளை யெல்லாம் மறுபடியும் சுவாதீனப்படுத்திக் கொண்டதுடன் இவர் முன்னினும் பன்மடங்கு அதிகமான பராக்கிரமத்தையும் பலத்தையும் அடைந்தார்.

டில்லி பாதுஷாவான ஔரங்கசீப்புக்குச் சதா தன் இராணுவத்திலுள்ள இந்து தளகர்த்தர்களிடம் சந்தேகமுண்டு. அவர்கள் சிவாஜிக்கு உதவி செய்கிறார்களென்றும், சிவாஜியின் எதிர்ப்புக்கு இத்தளகர்த்தர்கள் இடங் கொடுக்கிறார்களென்றும் ஷெயிஸ்டிகான் முதலானவர்களிட மிருந்து பல முறை கேட்டிருப்பதால் இப்பொழுது இந்து தளகர்த்தர்களைப் போர் முகத்திற்கு அனுப்பாமல் சிவாஜியை முறியடிக்கத் தன் குமாரனையே போகும்படி ஔரங்கசிப் திட்டஞ் செய்தான். சிவாஜியும் மூஸீம் இளவரசரும் வெகு அன்னோன்னியமாக யிருப்பவர்கள். மொகலாய துருப்புகளை எதிர்க்க சிவாஜிக்கு இஷ்டமில்லை. சிவாஜியுடன் போர்புரிய மூஸீம் இளவரசருக்கும் இஷ்டமில்லை. என்றாலும் ஔரங்கசிப், சிவாஜியையும் பிரதாப ராவ் குஜாரையும் சிறைப்படுத்த மூஸீம் இளவரசருக்கு வெகு கண்டிப்பாய் உத்திரவு பிறப்பித்தார். இவ்வுத்திரவு டில்லியிலிருந்து ஔரங்கபாத் தலைநகருக்கு வருவதற்கு முன்னரே இளவரசரின் அந்தரங்க காரியஸ்தர் ஔரங்கசிப் பாதுஷாவின் எண்ணத்தைத் தெரியப்படுத்தினான். இச்சங்கதியை யறிந்த மூஸீம் உடனே, சிவாஜியின் அன்னிய நாட்டு மந்திரியையழைத்து, பிரதாப ராவ் குஜாருக்கும் சிவாஜிக்கும் பாதுஷாவின் எண்ணத்தைத் தெரியப்படுத்தும்படி கூறினான். அவ்வளவிலே, நீராஜீராவ்ஜீ பிரதாபராவுக்

குத் தெரியப்படுத்தினர். பிரதாப ராவ் மராடி சேனைகளைத் திரட்டிக் கொண்டு சிவாஜியிடம் போய்ச் சேர்ந்தார். இவர் வருகையைக் கண்ட சிவாஜி மிக்க கோபங்கொண்டு ஒருவாறு தனக்குத்தானே தணிந்து கொண்டு புன்னகையுடன் 'மொகலாயர்கள் இரண்டு வருட காலமாக என் குதிரைப்படைகளைக் காப்பாற்றி வந்தார்கள். அவர்களுடைய பாதுகாப்பினால் குதிரைகள் எவ்வளவு தூரம் பிரயோசனத்தை யடைந்த தென்பதை இப்பொழுது அவர்களுக்குக் காட்டுகிறேன்' என்று கூறினர். நிற்க, ஸிம்மகடாவிலும் புரந்தரன் கோட்டையிலும் மொகலாயர்களுடைய சேனைகள் இருப்பது சிவாஜிக்குத் துன்பமாயிருந்தது. சமீபத்தில் ஔரங்கசிப் செய்த சூழ்ச்சியினால் இனி மொகாலயர்களுடன் சமாதானமாயிருக்க முடியாதென்றுகொண்டு, சிவாஜி உடனே மொகலாயர்களை எதிர்க்க நினைத்தார். ஸிம்மகடா கோட்டை மொகலாயர்கள் வசம் இருப்பது ஜீஜாபாயிக்குத் தலைவலியா யிருந்தது. அக்கோட்டை எப்படியாகிலும் தன் வசம் வந்து விடவேண்டுமென்பதே இவள் நோக்கம். இவளுடைய நோக்கத்தை யொட்டி ஒரு கதை * சொல்வதுண்டு. ஒரு திங்கட்கிழமை உதயத்தில் சிவாஜி ராயகடாவில் இருந்தார். ஜீஜாபாய் பிரதாபகடாவில் இருந்தாள். இவள் தந்த சீப்பினால் தன் தலை மயிரைக் கோதிக் கொண்டிருந்தாள். உடனே கீழ்த்திசையை நோக்கினள். ஸிம்மகடாவின் மேல் இவள் பார்வை வீழ்ந்தது. சூரிய பிரகாசத்தினால் அது தக தகவென்று ஜொலித்துக் கொண்டிருந்தது. உடனே இவளுக்கு ரோஷம் பிறந்தது. 'சிவாஜியை இத்தட்சணம் இங்கு வரும்படி நான் சொன்னேன் என்று கூறிவா' வென்று ஜீஜாபாய் ஒரு தூதனை யனுப்பினள். சிவாஜி தாய் வார்த்தையைத் தள்ளாதவராதலால் உடனே சர்வாயுத பூஷணராய் கிருஷ்ணு என்னும் தன்னருமை கறுப்பு குதிரைமீது ஆரோகணித்துப் பிரதாபகடாவிற்கு வந்து சேர்ந்தார்.

சிவாஜி தாயைக்கண்டு நமஸ்கரித்து 'இவ்வளவு வேகமாய்க் கூப்பிட்ட காரியம் என்ன' வென்று கேட்க, அம்மாள் பதிலொன்

---

* இக்கதையை எழுதினவர் துளசிதாஸ் ஷாஹிர்.

றும் உரையாமல் மகனைத் தன்னுடன் சொக்கட்டான் ஆடவரும்படி வற்புறுத்தினாள். சிவாஜி மறுத்தார். எவ்வளவு மறுத்தும் பிரயோசனமில்லை. கடைசியாக இருவரும் ஆட ஆரம்பித்தார்கள். ஆட்டத்தில் ஜீஜாபாய் ஜெயித்தாள். சிவாஜி தோல்வியடைந்தார். வெற்றி யடைந்ததற்கு என்ன வேண்டும் என்று கேட்டார் சிவாஜி. அன்னையார், தனக்கு ஸிம்மகடா கோட்டை வேண்டுமென்று உறுதியுடன் கூறினார். ஸிம்மகடா எதிரிகள் வசம் இருப்பதை சிவாஜி கூறியும் பிரயோசனப் படவில்லை. அப்பால், ஸிம்மகடாவை வென்று ஜீஜாபாயிக்குக் கொடுப்பதாக வாக்குத்தத்தஞ் செய்து கொடுத்தார். தாயிக்கு உறுதி கூறினவுடன் ஸிம்மகடாமீது தண்டெடுத்துச் செல்ல யார் சரியானவர்கள் என்று ஆலோசித்துக் கடைசியாக தானாஜீ மாலஸூரே என்பவரைத் தான் அனுப்ப வேண்டுமென்று தீர்மானித்தார். தானாஜீ தன் குமாரன் ராயப்பாவிற்கு விவாகஞ்செய்ய ஏற்பாடு செய்து வருஞ்சமயத்தில் தூதர்கள் வந்து சிவாஜியின் உத்திரவை விடுவித்தார். கலியாண ஏற்பாடுகள் நிறுத்தப்பட்டன. தானாஜீ பன்னீராயிரம் வீரர்களுடன் சிவாஜியின் உத்திரவை சிரமேற்கொண்டு ராயகடாவிற்கு வந்து சேர்ந்தார். தானாஜீயைக் கண்டவுடனே சிவாஜிக்கு அடக்கமுடியாத ஆநந்தம் உண்டாயிற்று. தானாஜிக்கு அடக்க முடியாதகோபம் வந்தது. சிவாஜி தானாஜியிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு, உம்மை வரவழைத்தது என்தாயார் என்று வெகு நிதானமாய்க் கூறினார். தானாஜி ஜீஜாபாயிடஞ்சென்று அவள் உத்திரவை எதிர்ப்பார்த்திருந்தார். ஜீஜாபாய் தனக்கு ஸிம்மகடாவைக் கொடுத்தால் உம்மை சிவாஜிக்குத் தம்பியாகப் பாராட்டுவேன் என்று கூறினாள். தானாஜி ஜீஜாபாயின் வார்த்தையைக் கேட்டு ஸிம்மகடாவை முற்றுகையிட ஆயத்தஞ்செய்தார். மொகலாய வீரர்கள் அந்த துர்க்கத்தைக் காவல்செய்திருந்தனர். குறைவு சிறிது மின்றி உணவு பொருள்கள் சவதரித்து வைத்திருந்தமையால் எவரேனும் நெடுங்காலம் முற்றுகை செய்யினும் அந்த துர்க்கம் சலிக்காமல் இருக்கக்கூடியது. இத்துர்க்கம் மலைமேல் இருப்பதால் ஏணிக்கெட்டாத உயர்ச்சியும் புறத்தோரால் தோண்டக் கூடாத அடியகலமும் உடையது. அன்றியும் பகைவர்விடும் படைக்கலங்கள் தம்மேற்படாமல் உள்ளிருப்பவர்

நின்று போர் செய்தற் கமைந்த தலையகலமும் பகைஞரால் படைக் கலத்தால் அழிக்க ஒண்ணாத திண்மையும் வாய்ந்தது. இக் கோட்டையை முற்றுகையிட தானாஜீ இருபதினாயிரம் வீரர்களுடன் சென்றார். சென்றளவில் படைகளை ஒருபக்கம் நிறுத்திவிட்டுத் தான் தனியாக கிராம * படேல் வேடங்கொண்டு எதிரிகளிருக்கு மிடத்திற்கு இடையேயுள்ள கண்ணுமழையாக் காட்டிற்குட் புகுந் தார். வனவாசிகளான கோலி சாதியார்கள் தானாஜியைப் பிடித் தனர். தானாஜி வெகுதந்திரமாய் அவர்களுடன் உறவாடி அவர் களுக்கு வேண்டிய சிலதுணிமணிகளைக் கொடுத்துத்தான் வந்திருக் கும் செய்தியை அவர்களுக்குக் கூறினார். அவர்கள் கோட்டையின் இரகஸியங்களை ஒவ்வொன்றாகக் கூறிக் கடைசியாக அக்கோட்டை யின் இடது பக்கத்தில் தாக்கினால் துர்க்கம் வழிவிடும் என்று கூறினார்கள். தானாஜி உடனே அவ்வழியை நாடினார். நல்ல பொறுக்கான வீரர்களுடன் கோட்டையின் இடது பக்கத்து மதில் புறத்திற்குச் சென்றார். போகும்பொழுது இவருக்கு துர்நிமித் தங்கள் உண்டாயின. ஆனால் இவர் அதை இலட்சியஞ் செய்ய வில்லை. தானாஜி தன் வசம் கொண்டு வந்த உடும்பை மதில் சுவற் றின் மீது வீசினார். அது சுவற்றைக்கெட்டியாய்ப் பற்றிக் கொண்டு உச்சியில் ஏறி நின்றது. வீரர்கள் ஒவ்வொருவராக உடும்பின் வாலில் கட்டப்பட்ட நூற் கயிற்றைப்பிடித்துக் கொண்டு பட்டாக் கத்தியை வாயில் கவ்விக்கொண்டு பையப்பைய ஏறிச் சென்றார்கள். வரவர வீரர்கள் அதிக நெருக்கத்துடன் ஏறவே நூற்கயிறு அறுந்து வீழ்ந்தது. கோட்டை மதில் சுவற்றின்மேல் ஐம்பது வீரர்களே ஏறினர். இவ்வீரர்கள் தைரியத்துடன் கோட்டை வாயில்களைக் காத்துக் கொண்டிருந்த மொகலாய வீரர்களைக் கண்டதுண்டமாக வெட்டி வானுலகு ஏற்றினர். மராடி வீரர்களுடைய புஜ வலிமை எவரும் எதிர்த்து நிற்கமுடியவில்லை. ஒருவரும் தப்பிப் பிழைக்க முடியவில்லை. மராடியர்களுடைய வீரமோ உலகப்பிரசித்தமானது. ஒன்று சத்துரு தொலையவேண்டும், அல்லது தாம் தொலையவேண் டும். இரண்டிலொருகை பார்ப்பதே அவர்கள் வழக்கம். ஸிம்ம கடாவிற்குக் காவலனாயிருந்தவன் உதிபான். இவன் நல்லதீரன்.

* கிராம மணியகாருக்குப் படேல் என்று கூறுவர்.

இவனுக்குப் பதினெண்மர் பத்தினிமார்கள். இவனிடம் ஆள்முட்டும் யானை யொன்று சந்திராவளி என்னும் பெயர்கொண்டு இருந்தது. உதிபானுக்குப் புதல்வர்கள் பன்னிருவர். மராடிய வீரர்கள் கோட்டையினுட் புகுந்து காவலாளிகளைக் கொன்ற செய்தியை உதிபானுக்குத் தெரிவித்தார்கள். அவன் குடிமயக்கத்தால் மதிமயங்கிக் காம வெறி கொண்டு மனைவிமார்களைத் தழுவிவருஞ் சமயமா யிருந்தது. உதிபான் ஸிடிஹிலால் என்பவனை அனுப்பினான். ஸிடிஹிலால் மராடி வீரர்களை எதிர்த்தும் பயன்படாமல் தானாஜி வாளுக்குக் கடைசியாக இரையானான். அப்பொழுதும் உதிபான் லட்சியஞ் செய்யாமல் தன் மைந்தர்களை யனுப்பினான். மைந்தர்கள் அனைவரும் கொடிய போர் செய்தும் ஒருவரும் உயிர்வாழாமல் தானாஜியின் வாளால் வெட்டுண்டு மாண்டனர். மைந்தர்கள் இறந்த செய்தியைக் கேட்டவுடனே உதிபானுக்கு ஆவேசங்கொண்டு தன் மனைவிமார்களை முதல் முதல் * வெட்டிவிட்டு இரத்தம் தோய்ந்த கைகளுடன் போர்க்கோலங் கொண்டு பகைவர்களை எதிர்க்கச் சென்றான். இவனுக்கும் தானாஜிக்கும் கொடிய போர் நடந்தது. கடைசியாக உதிபான் தானாஜியைத் தன் வாளால் வெட்டினான். தானாஜி ஆவி துறந்தார். தானாஜி வெட்டுண்டதும் இவர் மாமன் ஷிலேர் என்பவர் உதிபான்மேல் பாய்ந்து அவனை இருபிளவாகப் பிளந்தார். யுத்தம் நெடுநேரம் நடந்தது. மொகலாயர்களில் பலர் மடிந்தார்கள். சேனைப் பெருக்கத்தால் தங்களுக்கே வெற்றிகிடைக்கும் என்று அவர்களது நம்பிக்கை. ஆகவே மராடி வீரர்கள் விடாமல் சண்டை செய்தார்கள். ஸிம்மகடா கோட்டை மராடியர்களுக்கு சுவாதீனமாயிற்று. தானாஜி மாண்ட செய்தியைக்கேட்ட சிவாஜி உடனே ஓட்டமாய் ஓடிவந்தார். சிவாஜி வருகையைக்கண்ட வீரர்கள் அவரைச் சுற்றி வளைத்துக்கொண்டு ஸிம்மகடா நமக்கு சொந்தமாயிற்று என்று கூறினர். சிவாஜி மனத்துயருடன் ஆம்! கோட்டையை

---

* சில ஆப்கன் சாதியார்கள் யுத்தத்திற்குப் போவதற்குமுன் தங்கள் மனைவிகளை வெட்டுங் காரியம் என்னவென்றால், வீரர்கள் போரில் மாண்டபின் அவர்கள் மனைவிமார்கள் எதிரிகளுக்கு வசப்பட்டு மானம் அழியக்கூடும் என்றெண்ணி அம்மானம் அழியாதபடி யிருக்க அவர்களை வெட்டுவிது வழக்கம்.

நாம் ஜெயித்தோம். ஆனால் * சிம்மத்தை இழந்தோம் என்று கூறினர். ஸிம்மகடா சுவாதீனப்பட்டகாலம் கி. பி. 1670-ம் வருடம் பிப்ரவரி மாதம் பதினேழாந்தேதி.

ஸிம்மகடா துர்க்கம் வீழ்ந்ததும் புரந்தரன் கோட்டையை முற்றுகையிட சூரியாஜி மாலஸுரே பெரிய படையுடன்சென்று மொகலாயர்களைத் தாக்கி அக்கோட்டையைக் கைவசப்படுத்திக் கொண்டார். இப்பொழுது சிவாஜியின் பிராந்தியத்தில் மொகலாயர்களுக்கு ஒரு அடி பூமிகூட கிடையாது. பிறகு சிவாஜியின் ஜனனஸ்தானமான சிவநேரிக் கோட்டையைப் பிடிக்கப் படையைச் செலுத்தினர். சிவநேரிக் கோட்டை சுவாதீனமாகவில்லை. இதை விட்டு விட்டு மறுபடியும் சிவாஜி ஜஞ்சிராமீது படையெடுத்தார். ஜஞ்சிராவுக்குக் காவலன் படேகான். இவனை முறியடிக்கச் சேனையை முடுக்கினர். சேனை வரவர அதிகரிப்பதைக்கண்ட படேகான் சிவாஜியுடன் உடன்படிக்கை செய்துகொண்டான். ஆனால் படேகான்கீழ் உபதளகர்த்தர்களாக யிருந்த ஸிடியாகுத் ஸிடிகையிரத் என்னும் இவ்விருவர்கள் படேகானைப் பிடித்து விலங்கிட்டுச் சிறைப்படுத்தி சிவாஜியை எதிர்க்கத்தக்க சேனைகளை அனுப்பும்படி பீஜாபூர் சுல்தானுக்குக் கடிதம் அனுப்பினர்கள். இதுடன் நிற்காமல் இவர்கள் மொகலாயர்களுக்கும் கடிதமொன்று எழுதி யனுப்பினர்கள். மொகலாயர்கள் உடனே உதவிசெய்ய சூரத் துறைமுகத்திலிருந்த கப்பல்களைக்கொண்டு ஜஞ்சிரா துறைமுகத்தி லிறக்கி ஸிடியாகுத்துடன் சேர்ந்து சிவாஜியின் சேனைகளை எதிர்த்து அவர் கடற்படைகளையும் முறியடித்தனர். சூரத்நகரம், கி. பி. 1664-ம் வருடத்தில் சிவாஜியால் கொள்ளையடிக்கப்பட்டது. கொள்ளை யடிக்கப்பட்டும் சூரத் நகரை தக்க பந்தோபஸ்துடன் வைக்கவில்லை. மறுபடியும் சிவாஜி கி. பி. 1670-ம் வருடத்தில் சூரத் நகரை இரண்டாவது தடவை சூறையாடினர். ஐரோப்பிய வியாபாரிகள் தங்கள் தங்கள் சரக்கறைகளைக் காப்பாற்றிக் கொண்டனர். என்றாலும் சிவாஜிக்கு அபரிமிதமான திரவியம் அகப்பட்டது. ஐரோப்பிய வியாபாரிகள் தாக்கப்பட்டனர். அவர்களுள் ஆங்கிலே

---

* தானாஜீ மாலஸுரேயை ஸிம்மமென்றார் சிவாஜி.

யர் மட்டும் சிவாஜியுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். நிதிக் குவியல்களைத் திரட்டிக்கொண்டு ராயகடாவிற்குச் சேர்க்கத் திரும்பினவுடன் சிவாஜியை மொகலாய சேனைகள் எதிர்த்தன. மொகலாய சேனைத் தலைவன் டாவுட்கான். இரு சேனைகளுக்கும் கடும்போர் நடந்தது. என்றாலும் மராடிய வீரர்களின் தொகை யதிகமா யிருப்பதினால் மொகலாய சேனைகள் முறிக்கப்பட்டு மூலைக்கு மூலை ஓடின. மொகலாய சேனைகளுக்கு உண்டான நஷ்டம் இவ்வளவவ்வளவல்ல. மோரோ பிங்களேயும் பிரதாபராவும் வெகு வீரத்துடன் யுத்தம் புரிந்து மகபத்கான் சேனைகளை அதமாக்கினர். இக்னிஸ்கான் முதலிய தளகர்த்தர்கள் வெருண்டு ஓடினர். மராடியர்கள் இதுகாறும் இவ்வளவு பலமாய் நேருக்கு நேர் போர்செய்து ஜெயித்தவர்களில்லை. அக்பர்நாள் தொடங்கி, ஜிஹான்கிர், ஷாஜிஹான் முதலிய பாதுஷாக்களால் நல்ல இராணுவ முஸ்திப்புடன் பயிற்சி செய்துவந்த சேனைகள் சிவாஜியின் வீரர்களால் முறியடிக்கப்பட்டன. ஸல்ஹேர் துர்க்கமும் கடைசியாக சிவாஜிக்கே வீழ்ந்தது. மொகல்சேனைகளும் கடைசியாக ஔரங்கபாத் தலைநகருக்குப் போய்ச் சேர்ந்தன. சிவாஜி முதல் முதல் தானிழந்த சர்வ பிராந்தியங்களையும் கைவசப்படுத்திக்கொண்டு இன்னும் நாடு நகரங்களைப் பிடிக்க சேனையைக் கூட்டினார். கடற்படைகளைப் பெருக்கினார். கோட்டை கொத்தளங்கள் சீர் திருத்தப்பட்டன.

பதினோராவது அத்தியாயம்.

சிவாஜியின் மகுடாபிஷேகம்.

கிறிஸ்து பிறந்த 1661-ம் ஆண்டில் இங்கிலாந்து தேசத்தையாண்டு வந்த இரண்டாவது சார்லஸ் என்பவன் போர்த்துகல் தேசத்து மன்னனின் புத்திரியான கேதரைன் என்பவளை மணந்து கொண்டான். அப்போர்த்துகல் மன்னன் தன் மகளுக்கு சீதனமாக ஆப்பிரிக்காவிலுள்ள காங்கயர் என்னும் நகரையும் இந்தி

யாவில் அரபிக்கடலிலுள்ள பம்பாய் நகரையுங் கொடுத்தார். சீதனம் கொடுத்த காலத்தில் பம்பாயில் போர்த்துகல் தேசத்து வம்சத்தினர்கள் பதின்மரேயிருந்தனர். விவாகமான பிறகு சார்லஸ் தன் மனைவியின் உத்திரவைக் கொண்டு கி. பி. 1668-ம் வருடத்தில் ஆங்கிலேய வியாபாரிகள் சங்கமாகிய கிழக்கு இந்திய கம்பெனியின் தலைவர்களுக்குக் கொடுத்தான். ஆங்கிலேய வியாபாரிகள் பம்பாயில் சரக்கறைகளை ஸ்தாபித்ததுடன் கப்பற்படையையுங் கொஞ்சங் கொஞ்சமாக ஸ்தாபித்தனர். பம்பாய் துறைமுகம் கப்பல் நிற்க ஏற்ற ஸ்தலமானதால் ஆங்கிலேய வியாபாரிகள் தங்கள் சரக்கறைகளைக் காப்பதின் நிமித்தம் அத்துறை முகத்தைக் கடற்படைத் தலமாக ஏற்படுத்தினார்கள். இது இவ்வாறிருக்க, கி. பி. 1672-ம் வருடத்தில் சிவாஜி கால்வான் பிராந்தியத்திலுள்ள * கோலித்தலைவர்களை அடக்கி அவர்களை ஒவ்வொரு வருடந்தோறும் தனக்குக் கப்பங்கட்டி வரும்படி செய்தார். இதல்லாமல், போர்த்துகல் ஜாதியார்களையும் தனக்குக் கப்பங்கட்டி வரும்படி சிவாஜி வற்புறுத்தினார். அவர்கள் மறுத்தனர். சிவாஜி அவர்கள்மீது படை யெடுத்தார். சிவாஜியின் படையெழுச்சியைக்கண்ட ஆங்கிலேயர்கள் தங்களுக்கு ஒருக்கால் ஆபத்தாய் முடியப்போகிறதே யென்று நினைத்து யுத்தம் புரிதலை நிறுத்த சிவாஜியிடம் மன்றாடினார்கள். அன்றியும் சிவாஜி சூரத் நகரை இருமுறை சூரையாடினதில் ஆங்கிலேயர்கள் தங்கள் வியாபாரம் தழைத்து வருவதற்கும் இராணுவ நிலைமை பலப்பட்டு வருவதற்கும் மொகலாயர்களுடனும் சிவாஜியுடனும் உடன்படிக்கை செய்துகொண்டனர். சிவாஜி ஆங்கிலேயர்களின் வார்த்தைகளில் ஈடுபட்டுப் போர்புரிவதைத் தவிர்த்து ராஜ்பூர் என்னும் நகரில் வியாபாரஞ் செய்ய ஆங்கிலேயர்களுக்கு உத்திரவுங் கொடுத்தார். ஆனால், ஆங்கிலேயர்கள் இதுவரை சிவாஜியால் உண்டான நஷ்டத்தைக் கட்டிக் கொடுக்கும்படி கேட்டார்கள். சிவாஜி கண்டிப்பாய் மறுத்தார். இது இவ்வாறிருக்க, ஸல்ஹேர் நகரம் சிவாஜிக்கு ஸ்வாதீனமான செய்தியைக் கேள்விப்பட்ட ஔரங்கசிப் சிவாஜியின்மீது போர் நடத்த கான்ஜஹான் பகதூரைத்

* கோலி என்பவர்கள் மலை வாசிகள். இந்தியாவின் புராதனக் குடிகளில் இவர்கள் ஒருவரென்பது சரித்திரக்காரர்களின் துணிபு.

தண்டத்தலைவனாக நியமித்துப் பெரிய படையைத்திரட்டி அனுப்பினான். அத்தண்டத் தலைவன் இராணுவ சூழ்ச்சிகளில் உபயோகமற்றவனா யிருப்பதைக்கண்ட மராடியர்கள் அவனையும் அவன் சேனையையும் முறியடித்துத் துரத்தினார்கள். மராடிய போர்வீரர்கள் ஆமத் நகரத்திற்கும் ஔரங்கபாத் தலை நகரத்திற்கும் இடையிலுள்ள பிரதேசங்களை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டார்கள். சிவாஜி தன் படைகளைக்கொண்டு மாறிமாறி நகரம் நகரமாக சூறையாடி வருங்காலத்தில் கொங்கணத்தைச் சேர்ந்த ஐஞ்சீராவில் பெரிய விசேஷமொன்று நடந்தது. சிவாஜி அவ்விடங்களில் இல்லாத சமயத்தில் ஸிடியாகுட் என்பவன் மகாராஷ்டிரர்களுக்குச் சொந்தமாயுள்ள அநேக மரக்கலங்களை சுவாதீனப்படுத்துவதும் கப்பலோட்டிகளைச் சிரச்சேதஞ் செய்வதுமா யிருந்தான். சிவாஜிக்குச் சொந்தமாயுள்ள * தண்டராஜபுரி துறை முகத்திலுள்ள கப்பல்களை யழித்து மாலுமிகளைச் சமுத்திரத்தில் அழுத்தினான். தண்டராஜபுரி கோட்டையையும் முற்றுகையிட்டான். அக்கோட்டைக் காவலனா யிருந்தவர் † ரகோபலால் ஆத்ரேயர். இவர் ஹோளி பண்டிகையின் கொண்டாட்டத்தில் இருந்தமையால் பகைவர்களின் படையெழுச்சியைக் கவனிக்கவில்லை. ஸிடியாகுட் கோட்டையின் மதில் புறத்தை யணுகி அதன்மேல் ஏறி உள்ளே குதித்து மராடியர்களின் பீரங்கி ஸ்தலத்தைக் கொளுத்தினான். பீரங்கி ஸ்தலம் கொளுத்தப்பட்டவுடன் அது வெடித்துப் படைகளை அழித்தன. பலர் மாண்டனர். ஸிடியாகுட் வெகு சுலபமாக அக்கோட்டையை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டான். வீரர்களை வாளுக்கு யிரையாக்கினான். ஸ்திரீகளைக் கற்பழித்து முகம்மதிய மதத்திற்குச் சேர்த்தான். இவ்வாறு மதவெறி பிடித்த ஸிடியாகுட் தண்ட ராஜபுரியிலுள்ள பாலர்களையும் இளம்பெண்களையும் இஸ்லாம் மதத்தைத் தழுவும்படி துன்பப்படுத்தினான். பிறகு, கி. பி. 1672-ம் ஆண்டில் பீஜாபூர் சுல்தான் ஆலி அதில்ஷா இறந்தான். இவன் காலத்தே குடிகள் மிகவும் துன்ப மெய்தினர். மொகலாயர்கள் பீஜாபூர் சமஸ்தானத்தின் சில பாகங்களை சுவாதீனப்படுத்தினர். சிவாஜியும்

---

* தண்டராஜபுரி சிவாஜிக்குச் சொந்தமான பெரிய கடற் படை ஸ்தலம்.

† ஜாவலிக் காவலனான சந்திரராவைக் கொன்றவர்.

சில பாகங்களைத் தனக்கு சுவாதீனப்படுத்திக்கொண்டார். ஒரு வருடம் கழிந்த பிறகு சிவாஜி விஷல்கடாமீது படையெடுத்து பன்ஹாளத்தைக் கைப்பற்றிக்கொண்டார். பன்ஹாளம் ஸிடி ஜோஹர் வசம் இருந்தது. தார்வார், ஹுப்ளி நகரங்கள் அக்காலத்தில் அரும்பெருஞ் செல்வத்துடன் தலையெடுத்திருந்தன. பீஜாபூர் சமஸ்தானம் உயிர் நிலையிலிருந்த காலத்தில் ஹுப்ளி நகர் பெரிய வியாபாரஸ்தலமா யிருந்தது. எண்டிசையினின்றும் வாணிகர் பலர் கூடி தம்தம் கூலங்களை விற்பர். ஆங்கிலேய வியாபாரிகளிற் சிலரும் அந்நகரிடத்தே வாணிபஞ் செய்து வந்தனர். சிவாஜியின் தண்டத்தலைவரில் ஒருவரான அண்ணாஜி தத்தர் நகரிடை புக்கி பல வகைப்பண் ங்களையும் திரட்டி கூலவாணிகர்களிட மிருந்து திரண்ட திரவியமும் கொண்டார். ஆங்கிலேய வியாபாரிகளின் பண்டசாலைகளினின்றும் நாற்பதினாயிரம் ரூபாய் விலைமதிப்புள்ள துணிமணிகளை அண்ணாஜி தன் வயப்படுத்தினார். ஆங்கிலேயர்கள் சிவாஜியின் செயல்களைக் கண்டு வருத்த முற்றனர். நஷ்டத்தைக் கட்டிக் கொடுக்கும்படி சிவாஜியைக் கேட்டனர். சிவாஜி கடைசியாக இராஜபுரியில் உண்டான நஷ்டங்களைக் கட்டிக் கொடுப்பதாக வாக்குத் தத்தஞ் செய்தார். அதுமுதல் ஆங்கிலேயர்கள் இராஜபுரியில் வியாபாரஞ் செய்யத் தலைப்பட்டார்கள். இது இவ்வாறிருக்க, கார்வார் (கன்னடம்) பிராந்தியத்திற்குச் சுபேதாராக யிருந்த முகம்மதியன் ஒருவன் சிறிய படைகொண்டு போர்த்துகல் ஜாதியாரையும் ஆங்கிலேயர்களையும் கொள்ளையடித்தான். சிவாஜி மொகலாயர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையால் அவர் மொகல் படைத் தலைவரான பகதூர் கானுக்குத் திரண்ட திரவியம் அனுப்பிவிட்டுத் தான் பெரிய படையுடன் கார்வார் பிராந்தியத்தைத் தாக்கி அன்கோலா, கார்வார் முதலிய நகரங்களையும் சூறையாடினார். பெட்னூர் ராஜா அடைக்கலம் புகுந்தான். மாரிகாலம் நீங்கினவுடனே சிவாஜி போந்தர்மீது படையெடுத்தார். ஆனால் அது வெகு பலமாகக் காக்கப்பட்டிருந்தது. பீஜாபூர் சமஸ்தானம் பன்ஹாளம் பக்கமாக சிவாஜியை எதிர்க்க ஒரு பெரிய சேனையையும் அனுப்பியது. அச்சேனைக்குத் தண்டத் தலைவன் அப்துல் கரீம் என்பான். சிவாஜியின் படைத்தலைவர் பிரதாபராவ் குஜர். அவர் அப்துல்

கரீம் படையை முறியடித்து அவ்வீரர்களை ஒன்றோடொன்று சேரா மல் மூலைக்குமூலை ஓடும்படி செய்தார். அப்துல்கரீம் கடைசியாக அடிபணிந்தான். யுத்தம் நின்றது. என்றாலும் கரீம் இரவோடு இர வாய்த் தன் மிகுதிப் படையுடன் ஒட்டம் பிடித்தான். இச்செய்தி யைக் கேள்வியுற்ற சிவாஜி பிரதாபராவைக் கண்டித்தார். பிரதாப ராவ் தன் விதிவசத்தால் கோபம் பொங்கி, மொகலாயர்களின் பிராந் தியத்தினுள்ளே புகுந்து சூறையாடினார். மொகலாயர்களுக்கும் சிவா ஜிக்கும் உண்டான உடன்படிக்கையை இவர் வரம்பு கடந்து துராக் கிரதமாய்க் கொள்ளையடித்தார். அப்துல் கரீம் படையையும் அவனையும் அடியோடு தொலைக்காமல் தன் கண்முன் வரக்கூடா தென்று பிரதாபராவுக்குக் கண்டிப்பாய் சிவாஜி உத்திரவு தந்தார். பிரதாபராவ் மிக்க வீராவேசத்துடனும் கோபத்துடனும் படையைத் திரட்டிப் பகைவனை எதிர்க்கப் புறப்பட்டார். பீஜாபூர் சேனை மராடி சேனைகளைவிடப் பலமானது. படைக் கலங்கள் அதிகமா யிருந்தன. கொடிய போர் நடந்தது. பீஜாபூர் சேனைகள் பல மாய்த் தாக்கின. பிரதாபராவ் குஜர் அடிபட்டு இறந்தார். மராடி வீரர்கள் பின்னடைந்த செய்தியைக் கேள்விப்பட்டவுடனே ஹா ஸாஜீ மோஹத் ஐயாயிரம் குதிரைப்படையுடன் ஓடிவந்து பின்ன டைந்த வீரர்களுக்குத் தைரியம் கூறி பீஜாபூர் படைகளைப் பலமாய்த் தாக்கினார். பீஜாபூர் சேனைகள் பின்னடைந்தன. கடைசியாக மராடி சேனைகள் வெற்றியடைந்தன. பிரதாபராவ் இறந்ததைக் கேள்வியுற்ற சிவாஜி மிக்க வருத்தமடைந்தார். பிரதாப ராவ் சுற்றத்தாருக்கும் மனைவி மக்களுக்கும் விசேஷ தனங்களைக் கொடுத்தார். சிவாஜி தன் இரண்டாவது குமாரன் இராஜாராமுக் குப் பிரதாபராவின் குமாரத்தியை மணமுடித்தார்.

நிற்க, பூர்வம் போன்ஸலே வம்சத்தினர்களுக்கு ஆமத் நகர மன்னர்கள் கொடுத்த 'ராஜா' பட்டத்தையும் கவனியாமல் ஔரங்க சிப் பாதுஷா டில்லியில் தனக்குக் கொடுத்த 'ராஜா' பட்டத்தையும் ஒரு பொருட்டாக மதிக்காமல், தான் ராஜ்ய பட்டாபிஷேகம் சாஸ் திர முறைப்படி செய்துகொள்ள எண்ணினார். இவ்வெண்ணத் தைத் தன் அந்தரங்க காரியதரிசி பாலாஜி ஆபாஜீ சித்நிஸ் என்பவரிடம் கூறினார். காரியதரிசியும் அவ் வெண்ணத்தை அங்கீ

கரித்துக் காசி க்ஷேத்திரத்தில் உள்ள வேத வேதியர்களைக்கொண்டு பட்டாபிஷேகஞ் செய்து வைப்பதே தர்ம சாஸ்திரம் என்றுங் கூறினர். சிவாஜி தாயையும் குருமூர்த்தியையும் அடிபணிந்து தன் விருப்பத்தை வெளியிட்டார். அவர்களும் சிவாஜியின் விருப்பத்தை மெச்சிக் கொண்டாடினர்கள். அவ்வளவிலே சிவாஜி தன் மதிமந்திரிகளி லொருவரான பாலாஜியை யனுப்பச் சகல ஆயத்தங்களுடன் இருக்கையில், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற் போல ஞான நன்னெறிக்கு நல்வரம்பாகிய மறையனொருவன் காசி க்ஷேத்திரத்தை விட்டு வழியில் உள்ள புண்ணிய ஸ்தலங்களையும் புனித நதிகளையும் சேவித்துக் கோதாவரி தீரத்திலுள்ள பைதன் நகரத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் பெயர் கங்காபட்டர் என்பர். பாலாஜீ அவ்வேதியரிடஞ் செல்லப் புறப்பட்டார். பாலாஜீ ஆடம்பரங்களின்றித் தனியாய் அவ்வேதியரைத் தரிசித்து அவரை ராயகடாவிற்கு எழுந்தருளி சிவாஜிக்குப் பட்டாபிஷேக மகோற்சவம் நடப்பிக்க வேண்டுமாய்ப் பிரார்த்தித்தார். கங்காபட்டர், உடனே சிவாஜி க்ஷத்திரிய குலத்தவரில்லாததினலே அவருக்கு மகுடாபிஷேக உற்சவம் நடத்துவது தர்ம சாஸ்திர விரோதமென்று ஆக்ஷேபித்தார். பாலாஜி அம்மறையவருக்கு சிவாஜி க்ஷத்திரிய குலத்தவரே யென்று வாதித்து, அதற்கு முகாந்தரமாகச் சிவாஜியின் வம்சாவளியைக்காட்டி, உதயபுரத்து மகாராணு உதயசிங்கரின் மரபில் தோன்றியவரெனக்கூறினர். கங்காபட்டர் பாலாஜியின் முகாந்தரங்களைக்கண்டு திருப்தியடைந்து, காசி க்ஷேத்திரத்திலுள்ள தன் வர்க்கத்தார்களுக்குத் தெரியப்படுத்தி, அன்னவர்களின் சம்மதம் பெறவேண்டுவது அவசியமாயிருப்பதால் இன்னும் கொஞ்சநாள் தவணை வேண்டுமென்று கூறினர். சில மாதங்கழிந்த பிறகு வாரணாசியிலிருந்து ஓலையும் வந்தது. கங்காபட்டரும் ராயகடாவிற்கு எழுந்தருள சம்மதித்தார். உடனே சிவாஜி மறையவர் பலரையும் புரோகிதர் பால சந்திரபட்டரையும் பைதான் நகரத்திற்கு அனுப்பி, கங்காபட்டரைச் சகல ஆடம்பரங்களுடனும் வைபவத்துடனும் எதிர்கொண்டழைத்து வரும்படி அனுப்பினர். சிவாஜியும் துயிலொழித்து அதிகாலையில் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு மந்திர நீராடி சபாமண்டபத்திற்கு

விஜயஞ் செய்து, யாவரும் கண்டுகளி கூறவும், அந்தணர் வாழ்த்தவும், சூதர் மாகதர் ஏத்தவும், புலவர் பாடவும், கழலும் மாலையும் ஆபரணங்களுந்தரித்து, சாமரை முதலிய பலவகை அரசசின்னங்கள் புடைசூழ, அவை வாயிலில் அந்தணர் பெருமான் வருகையை எதிர்பார்த்த வண்ணம் இருந்தார். ஆசார வாசலில் எங்கு பார்த்தாலும் சீரும் சிறப்புமாகவேயிருந்தது. எதுவும், கண்டவர் மனமுங் கண்ணுங் கவர்ந்திட வனப்பு வாய்ந்திருந்தது. அழகியவாவிகளின் சிறப்பும் பல வர்ணக் கற்களால் சமைக்கப்பட்ட சபா மண்டபங்களின் அற்புதக்காட்சியும் மனதைக்கவர்ந்தன. அம்மண்டபத்தைப் பார்க்கப் பதினுயிரங்கண்கள் வேண்டும். அது மிக்க விசாலமுள்ளதும் பல்லாயிரம் பேர் ஒரே காலத்தில் ஒருங்கு சேர்ந்திருக்கக்கூடியதுமாக விருந்தது. பல வர்ணங்களையுடைய சதுரச்சலவைக்கற்களால் தளமிடப்பட்டுப் பற்பல விதமாய்ச் சித்திரவேலை செய்யப்பட்டுப் பார்ப்போர் கண்களைப் பறிக்கத்தக்க நிறங்களோடு கூடிய ரத்தின கம்பளங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அண்ணுந்து பார்க்கின் பல சித்திரப்பட்டாடைகள் விதானங்களை அலங்கரித்தன. சுவர்களெல்லாம் பற்பல சித்திரக்காரர் தத்தம் சாமர்த்திய முழுவதையுங் காட்டி எழுதிய பலபல அழகிய படங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஊடேடே நுட்பமான வேலை செய்யப்பட்ட பல அழகிய சிலாப் பிரதிமைகளும் சந்தனமரத்தினுற் செய்யப்பட்டு கைதேர்ந்த சிற்பிகளது நுண்ணிய வேலைத் திறமை வாய்ந்த பல மரப்பிரதிமைகளும் மண்டபங்களும் கமகம வென்று பரிமள கந்தங்களை வீசிக்கொண்டு அவ்வற்புத மண்டபத்தைச் சிறப்பித்தன. விதானங்களின் பற்பல இடங்களில் பலவர்ணப் பட்டுகளாலும் காகிதங்களாலும் வேலை செய்யப்பட்ட பூக்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. பல பிரதிமைகள் மணிவிளக்கைத் தாங்கிக் கொண்டிருந்தன. தூங்கா விளக்குகள் சுடர்விட்டெறிந்து கொண்டிருந்தன. தூண்களும் விட்டங்களும் மரகதத்தாலும் பவளத்தாலும் சைய்யப்பட்டனவோ வென்று பிரமிக்கத் தக்கனவாக விளங்கின. நன்ருய் வேலை செய்யப்பட்ட யானைகளாலும் சிங்கங்களாலும் தாங்கப்பட்டு மிராநின்ற சிம்மாதனம் பளபள வென்று ஒளிவீசாநின்ற பத்தரைமாற்றுத் தங்கத்தால் அமைக்கப்பட்டுக்கோஸ்

கொண்டா முதலிய பல தேசத்து முதல்தர வச்சிர வைடூரிய மாணிக்க மரகதங்களால் இழைக்கப்பட்டுப் பார்ப்போர் கண்களைப் பறிக்கும் வண்ணம் தேஜோமயமாய் விளங்கிற்று. மெய் காப்போரும் மற்றுமுள்ள தண்டத்தலைவர்களும் அணிவகுத்து நின்றது அற்புதக் காட்சியே. சிவாஜி சாந்தமும் கம்பீரமான குணத்தோடுகூடி மந்திரிகளும், பிரபுக்களும் புடைசூழச் சிங்காசனத்தில் தாராகணங்களுக்கு மத்தியில் சந்திரன்போல் விளங்கினர். ஜீஜாபாயும் சிவாஜியின் மனைவிமார்களும் சர்வாபரணத்துடன் விளங்கினர். கங்காபட்டரும் சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்து ஓமம் வளர்த்து சடங்குகள் நிறைவேற்றி, வேத மந்திரத்துடன் சிவாஜிக்கு முப்புரிநூல் தரிக்கச்செய்து, சாஸ்திர விதிப்படி சிவாஜிக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைத்தார். சிவாஜி மகாராஜா மிகவும் கம்பீரமாக வெண் கொற்றக்குடை நிழற்கீழ் அரசமுடி தரித்து விளங்கினர். மோரோ பிங்களே சுவர்ண கிண்ணத்தில் நெய்யுடன் கையிலேந்திக்கொண்டு ஆசனத்தின் கிழக்கில் முதற்படியில் நின்றிருந்தார். இவருக்கு எதிரே மேற்குப்படியில் ஹம்பீரராவ் வெள்ளிச் செம்பில் பாலுடன் நின்று கொண்டிருந்தார். இவர் பக்கலில் தயிர் பாத்திரத்தைக் கையிலேந்திய வண்ணமாக இராமசந்திர நீலகண்டர் நின்றுகொண்டிருந்தார். ஆசனத்திற்குப் பின்னால் கங்காதீர்த்தம் ஒரு கையிலும் தேன் ஒருகையிலுமாக ஏந்தியவண்ணம் ரகுநாத பண்டர் நின்றுகொண்டிருந்தார். தென் கிழக்காய் வெற்றிக்கொடை பிடித்து அண்ணாஜீதத்தர் நின்றுகொண்டிருந்தார். தென் மேற்காய் ஆலவட்டம் கையிலேந்தி ஜனார்தன பண்டிதர் நின்று கொண்டிருந்தார். வடமேற்கிலும் வடகிழக்கிலும் மயிற்பிச்சம் தாங்கி தத்தாஜீயும் பாலாஜீயும் நின்று கொண்டிருந்தனர். சிவாஜிக்கு எதிரே அவரைப் பார்த்த வண்ணம் பாலாஜீ ஆபாஜீ நின்று கொண்டிருந்தார். இவருக்கு இடது பக்கத்தில் அரசிறை கணக்கர் சிம்னாஜீ நின்று கொண்டிருந்தார். மத்தியில் பெண்டிரும் தாயும் சிவாஜியின் இருபுறத்தே நின்றிருந்தனர். மாதர்கள் ஆரதி வழங்கினர். வாத்தியங்கள் முழங்கின. வேதியர்கள் ஆசி கூறினர். கற்புடைய மங்கையர் பலர் வாழ்த்தினர். குடிகள் அரசனுக்குச் சர்வ மங்களமுண்டாகக் கடவதென்று ஆர்ப்பரித்தனர். இங்ஙனம் சிவாஜி சாலி

வாகன சகாப்தம் 1596-க்குச் சரியான கி. பி. 1674-ம் ஆண்டில் ஜேஷ்டமாதமான ஜூலை மாதம் 6-ந் தேதியன்று பட்டாபிஷேகஞ் செய்துகொண்டார். பட்டாபிஷேகத்தன்று ஒவ்வொரு கோட்டையிலும் பீரங்கிக் குண்டுகள் கோடையிடிபோல் குமரின. பிராமணர்களுக்கும் ஏழை பரதேசிகளுக்கும் மற்றுமுள்ள வேலைக்காரர்களுக்கும் சிவாஜி விசேஷ தானஞ் செய்தார். நிலங்கள் பல மானியமாக விடப்பட்டன. பட்டங்களும் பரிசுகளும் விசேஷமாக உத்தியோகஸ்தர்களுக்கு அளிக்கப்பட்டன. சிவாஜி மகாராஜாவின் பட்டாபிஷேக மகோற்சவத்தைக்கண்டு அச்சுபதினத்தில் அவரிடமிருந்து ஒப்பந்த அறிக்கைபெற ஆங்கிலேய வியாபாரிகளின் பிரதிநிதி மிஸ்டர் ஆக்ஸன்டன் துரையும் வந்திருந்தார். சிவாஜி இவ்வாங்கிலேய வியாபாரிகளுக்குப் பெரிய விருந்தளித்துத் தக்க உபசாரஞ் செய்தார். அவ்வாங்கிலேய பிரதிநிதி கிழக்கு இந்திய கம்பெனியை முன்னிட்டு இருபது வரன்களைச் சிவாஜி மகாராஜாவிடம் கேட்டார். அவைகளில் முக்கியமான சிலவற்றைக் கீழே குறிப்போம்.

1. சிவாஜி மகாராஜாவின் ஆளுகைக்குட்பட்ட ஸாம்ராஜ்யங்களில் ஆங்கிலேயர் தாராளமாய் வியாபாரஞ் செய்யவேண்டும்; இறக்குமதி சரக்குகளுக்குச் சுங்கத்தீர்வை மகாராஜா எக்காலத்தும் விதிக்காமற்படி யிருக்கவேண்டும்.

2. இராஜபூர், கல்யாண், சாவுல், டாபோல் முதலிய நகரங்களில் சாசுவதமாகவே சரக்கறைகள் (வியாபார ஸ்தலங்கள்) கட்டும்படி ஆங்கிலேயர்களுக்கு உத்திரவு அளிக்கவேண்டும்.

3. சிவாஜி மகாராஜாவின் ஆதீனத்திற்குள்ளிருக்கும் நாடுகளில் எங்கும் தாராளமாய் ஆங்கிலேயர்களின் நாணயங்கள் செலாமணி ஆகுமாறு உத்திரவு அளிக்கவேண்டும்.

4. சிவாஜி மகாராஜாவின் துறைமுகங்களில் உடைபட்ட ஆங்கிலேய கப்பல்களைத் திருப்பிக் கொடுக்க உத்திரவு அளிக்கவேண்டும்.

5. ஹுப்ளி நகரிலும் ராஜபூர் நகரிலும் மஹாராஜாவால் ஆங்கிலேயர்களுக்கு உண்டான நஷ்டங்களைக் கட்டிக்கொடுக்க உத்திரவு அளிக்கவேண்டும்.

மேற்கூறிய எல்லா வேண்டுகோளும் ஒருவாறு அளிக்கப்பட்டன. ஆனால் ஹுப்ளி நகரில் உண்டான நஷ்டத்தைமட்டும் சிவாஜி கொடுக்க முடியாதென்று கண்டிப்பாய் மறுத்துவிட்டார். ராஜபூர் நகரத்திலுண்டான நஷ்டத்திற்காக சிவாஜி மகாராஜா பதினாயிரம் வராகன் அவர்களுக்குக் கொடுத்தார். மகாராஜா வெகு தயவுடன் அளித்த வரன்களையெல்லாம் பெற்றுக்கொண்டு அவரை ஸஞ்சீராவுடன் உடன்படிக்கை செய்துகொள்ளுமாறு வேண்டினார்கள். ஆனால் சிவாஜி, மறுத்து விட்டார். இங்ஙனம் சிவாஜி மகாராஜாவிற்கும் ஆங்கிலேயர்களுக்கும் உடன்படிக்கையொன்று நடந்தது.

தஞ்சை விஜயம்.

சிவாஜி மகாராஜா பட்டாபிஷேகமான கொஞ்சநாள் கழிந்த பிறகு 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந்தன் மகனைச் சான்றோனெனக் கேட்டதாய்' என்றபடி. சிவாஜியின் பெருமையையும் அதிகாரத்தையும் பார்த்து விட்டுத்தாய் ஜீஜாபாய் உயிர் துறந்தாள்; வாழ்நாள் முழுமையும் தனக்கு மதிமந்திரியாகவும், துணையாகவும், குருவாகவும் இருந்த தாய் ஆவியிழந்ததும் சிவாஜி மகாராஜா உள்ளந்துடித்தார். ராயகடாவில் சகல தகனக்கிரியைகளும் நடந்தன. இங்ஙனம் சிவாஜி சிறிது காலம் விசனத்திலேயே மூழ்கியிருந்தார். என்றாலும் தன் இராணுவப்பயிற்சியை இவர் விட்டுவிடவில்லை. கி. பி. 1674-ம் வருடத்தில் சிவாஜி மகாராஜா உத்திரவுபடி மோரோபிங்களே பதினாயிரம் வீரர்களுடன் போர்த்துகல் ஜாதியார்களை எதிர்த்தார். இந்துக்களைப் பலவந்தமாய்க் கிறிஸ்துவ மதத்திற்குச் சேர்த்த குற்றத்திற்காக சிவாஜி மகாராஜாவிற்குப் போர்த்துகல் ஜாதியார் சவுத் (நாலிலொரு கடமை) வரிகட்டும்படி மோரோ பிங்களே வற்புறுத்தினார். போர்த்துகல் ஜாதியார் சிவாஜியின் கோபத்திற்குப் பாத்திரமாவது தகுதியல்லவெனக்கொண்டு சவுத் வரிக்குப் பதிலாகத்திரண்ட திரவியம் யுத்தத்திறையாகக் கொடுத்தனர். பிறகு சிவாஜி, தான் பிறந்த சிவநேரிக் கோட்டையைச் சுவாதீனப்

படுத்திக்கொள்ள பலமான சேனையுடன் புறப்பட்டார். சிவநேரிக் கோட்டையை அப்துல் அஜீஸ்கான் வெகு பலமாய்க் காத்துக் கொண்டிருந்தான். என்றாலும் சிவாஜியின் தாக்கலுக்கு எதிர் நிற்க முடியவில்லை. கடைசியாக சிவநேரிக்கோட்டை சிவாஜிக்குச்சொந்த மாயிற்று. சிவாஜி சிவநேரிக் கோட்டையை முற்றுகை யிட்டிருக் கையில், ஹம்பீரராவ் மொகலாயர்களின் பிராந்தியங்களிற் புகுந்து குஜராஷ்டிரம் முதல் ப்ரோச் வரை சூறையாடினார். மாரிகாலம் நீங்கினவுடன் சிவாஜி சிவநேரிக்கோட்டைக்கு அருகாமையில் மச் சேந்திரகடா, சதாசிவகடா முதலிய நான்கு கோட்டைகளைக் கட்டி னார். கொங்கணத்தில் மாறிமாறிப் போர்புரிந்து துர்க்கங்களை முற்றுகையிட்டு வந்ததினால் சிவாஜி தேக நோய் கொண்டார். ஆனாலும், இவர் படுத்த படுக்கையிலேயே சிறந்த இராணுவ சூழ்ச்சி யொன்றை எண்ணித் தீர்மானித்தார். நோயும் வரவர சொஸ்த மாயிற்று. சிவாஜி தன் தேக ஸ்திதி சரியானபடி யிருப்பதைக் கண்டு, மகாராஷ்டிர சாம்ராஜ்யத்திற்குத் தென் தேசங்கள் வழி யாக ஆபத்து நேரிடக்கூடும் என்று நினைத்து, மொகலாயர்கள் முதலிய அன்னியர்கள் இனி படை யெடுக்காவண்ணம் வெகு பல மாய்க்காக்க எத்தனித்தார். ஷஹாஜிக்குப் பூர்வம் பீஜாபூர் சுல் தான் கொடுத்த ஜமீன் ராஜ்யங்கள் பல தென் தேசத்தில் இருந் தன. அவைகளுக்குச் சிவாஜியின் சகோதரனான வெங்கோஜி தலை வனாக யிருந்துவந்தான். சிவாஜியின் சகோதரனாயிருந்தும் அவன் இராஜ்ய வியவகாரத்திற்குப் பாலனாயிருந்தான். ஆகவே சிவாஜி வெங்கோஜி யிடமிருந்து அத்தேசங்களைத் தான் சுவாதீனப்படுத் திக் கொள்ளத் தீர்மானித்துப் பெரிய படையுடன் தென் தேசத் திற்குப் பிரயாணமானார். இது இவ்வாறிருக்க, தஞ்சையில் ஷஹாஜி காலமுதல் வெகு நாளாக இருந்து வரும் ரகுநாத பண்ட் ஹனுமந்தருடன் வெங்கோஜி சண்டையிட்டான். அவர் எவ்வளவு யுக்தி கூறியும் வெங்கோஜி கேட்கவில்லை. கடைசியாக அவர் தன் மந்திரி ஸ்தானத்தை விட்டு விட்டு, ஐதராபாத் நகருக்குச் செல்ல லானார். சிவாஜி தென் தேயத்திற்குப் போகப் புறப்பட்டவர் ஐதராபாத் முதலிய பல இராஜ்யங்கள் நடந்து கடைசியாக கடப்பை நகரத்தை வந்து அடைந்தார். சிவாஜி மகாராஜா வழியிலுள்ள

க்ஷேத்திரங்களைத் தரிசித்துப் புண்ணிய நதிகளில் நீராடி பிராமணர்களுக்குத் தானம் வழங்கியும், ஏழை பரதேசிகளுக்கு மடங்களும் சத்திரங்களும் கட்டி வைத்து வரலானார். இவர் முதன் முதல் செஞ்சிக்கோட்டையைக் கைவசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றார். செஞ்சிக் கோட்டைக் காவலன் ஷெர்கான் என்பவன். இவன் ஐயாயிரம் குதிரைப்படைகளுடன் மகாராஜாவை எதிர்த்தான். முதன் முதல் திருவண்ணாமலை சிவாஜிக்குச் சொந்தமாயிற்று. ஷெர்கான் முதுகுகாட்டி ஓடினான். சிவாஜி பின்னர் கடுகியே செஞ்சிக் கோட்டையைச் சேர்ந்தார். கானின் அஷ்டபுத்திரர்கள் ஒருங்கு கூடி சிவாஜியை எதிர்த்தார்கள். சிவாஜி முன் எதிர் நிற்க முடியவில்லை. சிவாஜி கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டு அக்குமாரர்களுக்குத் தனித்தனியே ஜமீன் நிலங்கள் சில கொடுத்தார். மகாராஜா தென் திசையை நோக்கி வருங்காலையில் தன் சேனையில் ஒரு பாகத்தை இரண்டு அணிப்படைகளுடன் வேலூரைத் தாக்க அனுப்பினார். கி. பி. 1676-ம் வருடத்தில் வேலூர் சிவாஜிக்குச் சொந்தமாயிற்று. அப்பால் சேனைகள் தஞ்சைக்கு நாற்பது மைல் தூரத்திலுள்ள திருவாடியில் வந்திறங்கின. சிவாஜி தன் தம்பி வெங்கோஜிக்கு ஒரு கடிதம் அனுப்பினார். தகப்பனாருக்குச் சொந்தமாயுள்ள ஜமீன்களிற் பாதி பாகத்தையும், இதுகாறும் அதில் உண்டான வரும்படியும் அதின் கணக்குகளும் கொடுக்கும்படி சிவாஜி கேட்டனுப்பினார். வெங்கோஜி மறுத்தான். சிவாஜி எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. கடைசியாக சமாதானம் செய்து ஒழிப்பதே நல்லது என்று சில மதிமந்திரிகள் யோசித்து வெங்கோஜியைச் சிவாஜியிடம் அனுப்பினார்கள். வெங்கோஜி வருவதைக் கேள்வியுற்று உடனே தக்க மரியாதையுடன் எதிர்கொண்டழைத்துச் சகல வைபவத்துடன் ஆசனத்திலிருத்தினார். சகோதரர் இருவருக்கும் வாத முண்டாயிற்று. சமாதானம் ஒன்றும் உண்டாகவில்லை. கடைசியாக வெங்கோஜி தஞ்சைக்குத் திரும்பினான். வெங்கோஜி தஞ்சைவந்ததும் ஷஹாஜி காலத்திலிருந்த சில துருக்கர்கள் வெங்கோஜியைத் தூண்டினார்கள். சிவாஜிக்கும் வெங்கோஜிக்கும் போர் உண்டாயிற்று. சிவாஜி ஷஹாஜியின் ஜமீன்கள் பலவற்றை சுவாதீனப்படுத்திக் கொண்டார்.

வெங்கோஜியின் வீரர்கள் பலர் மாண்டனர். வீரர்கள் இனி சண்டை புரிய மாட்டோம் என்றுங் கூறினர். வெங்கோஜிக்குக் கனவருத்த முண்டாயிற்று. உடனே வெங்கோஜியின் மனைவி தீபாபாய் தன் கணவனுக்குப் புத்திமதி கூறி சிவாஜியுடன் சமாதானஞ் செய்து கொள்ள வற்புறுத்தினாள். வெங்கோஜி வேறு வழியில்லாமையைக் கண்டு, கடைசியாகத் தன் மனைவியின் வார்த்தையைக் கொண்டு சிவாஜியுடன் உடன்படிக்கை செய்துகொண்டான். தம்பி செய்த குற்றங்களை யெல்லாம் சிவாஜி மன்னித்து, அவனுக்கு அவன் காலம் வரை தஞ்சையையும் அதைச் சுற்றியுமுள்ள சில நிலங்களையுங் கொடுத்தார். வெங்கோஜிக்குச் சமய சஞ்சீவியாய் இருந்து மகாராஷ்டிர வம்சத்தில் பிரிவினையை யுண்டாக்காமற்படிக்கு ஐக்யத்தை நிலைநிறுத்தின வெங்கோஜியின் மனைவிக்கு பெங்களூரையும் அதைச் சுற்றியுள்ள சில கிராமங்களையும் கொடுத்தார். சிவாஜி தன் யாத்திரையை வெகு சீக்கிரமாக முடித்து வெற்றியுடன் திரும்பினார். பதினெட்டு மாதங்களுக்குள் தன் இராஜதானியி லிருந்து எழுநூறு மைல் விஸ்தீரண முள்ள பிராந்தியங்களைச் சிவாஜி கைப்பற்றிக் கொண்டார். சிவாஜியின் ராஜ்யம் அன்னியப் படையெழுச்சியின்றி இருக்கச் சகல ஏற்பாடுகளையுஞ் செய்து முடித்தார்.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

சிவாஜியின் இராச்சிய பாரம்.

1. தேச வகுதி.

சிவாஜி மகாராஜா தன் ஏகாதிபத்தியத்தைப் பல வகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு வகுதிக்கும் பிராந்த் (பிராந்தியம்) எனப் பெயரிட்டார். இது தற்காலம் ஜில்லாவை யொத்தது. மாவல் பிராந்தியம். இது பதினெண் கோட்டைகளினால் காக்கப்பட்டது. (2) வைய பிராந்தியம்-இது பதினைந்து கோட்டைகளினால் காக்கப்பட்டது. (3) பன்ஹாளம் பிராந்தியம் பதின்மூன்று துர்க்கங்களி

னுல் காக்கப்பட்டது. (4) தென் கொங்கண பிராந்தியம்-இது ஐம்பத் தெட்டு மலைமேற் கோட்டைகளினுலும் சமுத்திரக் கரையிலுள்ள கோட்டைகளினுலும் காக்கப்பட்டது. (5) தாணு பிராந்தியம்-இது பன்னிரெண்டு கோட்டைகளினுல் காக்கப்பட்டது. (6-7) திரு அம்பகம் பாகலன் பிராந்தியங்கள்-இவை அறுபத்திரண்டு கோட்டைகளினுல் காக்கப்பட்டவை. (8) வணகடா பிராந்தியம் இது இருபத்திரண்டு கோட்டைகளினுல் காக்கப்பட்டது. (9—10—11) பெட்னோர், கோலார், சிரங்கப்பட்டணம் பிராந்தியங்கள் இவை பதினெண் கோட்டைகளினுல் காக்கப்பட்டவை. (12) கர்னுடக பிராந்தியம்-இது பதினெண் கோட்டைகளினுல் காக்கப்பட்டது. (13) வேலூர் பிராந்தியம் இது இருபத்தைந்து கோட்டைகளினுல் காக்கப்பட்டது. (14) தஞ்சை பிராந்தியம்-இது ஆறு கோட்டைகளினுல் காக்கப்பட்டது. பிராந்தியங்களெல்லாம் மண்டல மென்றும் சூபாவென்றும் பின்னர் வழங்கப் பெற்றன. ஒவ்வொரு மண்டலமும் பல கூற்றங்களாகவும், ஒவ்வொரு கூற்றமும் பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஐவகை நிலனும் அப்பிராந்தியங்களில் அடங்கியிருந்தமையின் பட்டினமும் பாக்கமும், பாடி பள்ளி சேரிகளும் குறிச்சிகளும் மிகப் பலவாக விருந்தன. மண்டலமும் சூபாவும் தற்காலம் தாலுக்காவை யொத்தது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு லட்சம் ரூபாய் வரும்படியைக்கொண்டது. மூன்று அல்லது நான்கு மண்டலங்கள் கொண்டது ஒரு சூபா. இச் சூபாவிற்குக் குறைந்த பட்சம் ஆறு அல்லது ஏழு லட்சம் ரூபாய் வருமானம் உண்டாகும். இச்சூபாவிற்குத் தலைவர் சுபேதார் எனப்படுவர். இவர் நூறு ரூபாய்க்குச் சரியான தொகையை மாதச் சம்பளமாகப் பெறுவர். ஒவ்வொரு சுபேதாருக்கும் எண்ணிறந்த கிராம முக்கியர்கள் உண்டு. அவர்களைச் சாதாரணமாகப் படேல், குல்கரிணி, தேசமுக்கியன், தேசபாண்டி என அழைப்பது வழக்கம். மேற்கூறிய இக்கிராம முக்கியர்கள் அந்தந்த கிராமங்களிலுள்ள வருமானங்களைக் குடிகளினின்றும் வசூல் செய்வர். மூன்று அல்லது நான்கு கிராமங்களுக்கு கிராமவஸ்தார் அல்லது காரணிகர் என்பார் ஒருவர் தலைவராகயிருந்து வந்தார். நிலங்களைப் பரிசோதிப்பதும்

அளவெடுப்பதும் அவருக் குற்றமேவலே. ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒவ்வொரு சூபாவிற்கும் தனித்தனி எல்லை ஏற்பட்டிருந்தது. இவ்வெல்லைகள் அமைக்கத் தனித்தனி காரியஸ்தர்கள் இருந்தனர். நகர நிர்மாணம், கிராம நிர்மாணம் முதலிய அமைப்புக்குத் தனித்தனி உத்தியோகஸ்தர்களும் ஏற்பட்டிருந்தனர்.

2. பாதைகள்.

இவர் போக்குவரவு சாதனங்களுக்கு நிலப்பாதைகளும் நீர்ப் பாதைகளும் ஏற்படுத்தினர். நிலப்பாதைகளில் அநேக பிரிவுகள் உண்டு. (1) இராஜபாதை-இது முப்பதடி அகலமுள்ளது. இதைப் பெரும்பாலும் அரசர்களும் அரசர்களுக்குரிய மந்திரி முதலிய காரியஸ்தர்களும் உபயோகப்படுத்துவர். (2) பசுபாதை-இது எட்டடி அகலமுள்ளது. இது முக்கியமாக கால்நடைகளுக்கு உரியது. (3) சக்கரபாதை (வண்டி மார்க்கம்) இது பத்தடி அகல முள்ளது. வண்டிகள் போவதற்கே இப்பாதை முக்கியமாக உரியது. (4) பாதபாதை (கால்வழி) இது நான்கடி அகலமுள்ளது. இது பெரும்பாலும் மனிதர்களுக்கென்றே பிரத்யேகமாய் உரியது. (5) வியூகபாதை (இராணுவ வழி) இது அறுபது அடி அகல முள்ளது. படைகள் தமதம அணிவகுப்புடன் செல்வதற் குரியது இப்பாதை. (6) ஸ்மஸானபாதை (இடுகாடுவழி) இது முப்பதடி அகலமுள்ளது. பிரேதங்கள் கொளுத்தப்படும் இடுகாட்டிற்குச் செல்லும் வழிக்கு ஸ்மஸான பாதை எனப்படும். (7) கிராமபாதை (கிராமவழி) ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் செல் வதற்கு இது உரியது. இது பதினைந்தடி அகலமுள்ளது. இம் மேற்கூறிய பாதைகள் யாவும் சிவாஜிமகாராஜா தன் யுக்திக்கு ஏற்ற படி வெகு விமரிசையாய் அமைத்தார். நீர்ப்பாதைகளில், சிறிய வாய்க்கால்கள், கால்வாய்கள், நதிகள், கழிகள் முதலியனவும் அக் காலத்தில் அமைக்கப்பட்டன. பொதுப் பாதைகளை வேண்டு மென்றே இடித்தல் பள்ளமாக்குதல் முதலிய குற்றங்களுக்குத் தண்டனையுண்டு.

3. காடுகள்.

காடுகளில் தாராளமாய்க் குடிகள் தங்களுக்குவேண்டிய தழை கள், விறகுகள் முதலிய அடவிப் பொருள்களைக் கொண்டு போ

கலாம். காடுகள் அழிக்காமல் வெகு சிரத்தையுடன் காக்கப்பட்டிருந்தன. வேட்டையாடுவதற்குத் தனியே காடுகளில் சில பாகங்களை விட்டுவைப்பதும் வழக்கமாயிருந்தது. இக்காடுகளைச் சரிவர பாதுகாக்கவும் பரீட்சிக்கவும், பார்வையிடவும் தனியே ஒரு முக்கியஸ்தர் உண்டு.

4. கோட்டைகள்.

கோட்டைகள் கட்டுவதில் சிவாஜி தன் காலத்தையெல்லாம் செலுத்தினர். கணக்கற்ற பொருள்கொண்டு கோட்டைகளைக் கட்டுவதும், செப்பனிடுவதுமாகவே சதா சிவாஜி இருந்தார். கோட்டைகளே நாட்டிற்கு முக்கிய பலம் என்பதை சிவாஜி ஒருவரே அறிந்தவர். சிறந்த படைக் காப்புக்கு ஏற்றது கோட்டை. கோட்டையின் பலம் ஒன்றுமட்டும் சரியாக இருந்தால், எவ்வித படையெழுச்சிக்கும் ஒருவன் பயப்படவேண்டியதில்லை. சிவாஜி சுவாதீனப்படுத்தின கோட்டைகளின் தொகை மொத்தம் இருநூற்று எண்பது. ஒவ்வொரு கோட்டையும் மகாராஷ்டிர ஹவல்தாரிடம் இருந்துவந்தது. இவனே அத்துர்க்க காவலன். இத்துர்க்க காவலனுக்குக் கீழ் மூன்று உத்தியோகஸ்தர்கள் உண்டு. ஒருவன் இராணுவத்தைப் பார்ப்பது. மற்ருெருவன் நில வருமான முதலிய தீர்வைகளைப் பார்ப்பது. பின்னொருவன் தானியக் களஞ்சியங்கள், பண்டகசாலைகள் முதலியவைகளைப் பார்ப்பது. இம்மூவரும் துர்க்ககாவலனுடன் ஒத்து உழைக்கவேண்டும்.

5. சுகாதாரம்—வைத்தியம்.

குடிகளின் சுகாதாரத்திற்குப் பல ஏற்பாடுகள் சிவாஜிசெய்தார். பானத்திற்குத் தனியாக பல குளங்களும், ஸ்நானத்திற்குத் தனியாக பல குளங்களும் சிவாஜி வெட்டிவைத்தார். இதல்லாமல் அநேக கூபங்கள், ஏரிகள், வாய்க்கால்கள் முதலியனவும் வெட்டப்பட்டன. வைத்தியத்திற்குப் பிரத்யேகமாக சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஜெந்து வைத்தியசாலை, மனிதவைத்தியசாலை முதலியவைகளைச் சிவாஜி மகாராஜா வெகு ஏற்பாடுடன் அமைத்தார். வைத்தியர்களில் விஷபரிசோதகர், இரணவைத்தியர், சாதாரண

வைத்தியர், பிராணி வைத்தியர் முதலிய பலர் இருந்தனர். இவர்கள் அனைவரும் சிவாஜியிடம் இருந்துவந்தார். ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் இலவசமாகவே வைத்தியம் பார்ப்பதுமுண்டு.

6. சத்திரங்கள்—மடங்கள்.

சிவாஜி ஏழைகளுக்கு அநேக சத்திரங்களும் சந்யாசிகளுக்கு அநேக மடங்களும் கட்டி வைத்தார். தினம் அவர்களுக்கு உணவு படைப்பதுண்டு. விசேஷ காலங்களிலும் புண்ணிய தினங்களிலும் சிவாஜி மகாராஜா அவர்களுக்குத் திரவியமும் ஆடைகளும் வழங்குவதுண்டு. பிராமணர்களுக்குப் போசனமும் தட்சிணையும் வழங்கி வருவார். சத்திரங்களையும் மடங்களையும் பார்வையிடுவதற்குப் பிரத்யேகமான அத்யட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இவர் சத்திரங்களுக்கும் மடங்களுக்கும் தனித்தனியே யிருந்த நிலங்களையும் அந்நிலங்களினின்றும் உண்டாகும் உற்பத்திப் பொருள்களையும் தக்க கணக்கிட்டு மாதந்தோறும் இராஜாங்கத்திற்கு அனுப்பவேண்டும்.

7. கோயில்கள்.

சிவாஜி கோயில்களில் மிக்க விருப்பமுள்ளவர். இவர் கோயில்களுக்கு பல கிராமங்களை மானியமாக ஏற்படுத்தினர். பவானி தேவி கோயிலுக்கும் ராமதாஸரின் மாருதி கோயிலுக்கும் இதர பல சிறு கோயில்களுக்கும் இவர் எண்ணிறந்த திரவியங்கள் செலவழித்தார். நகர வருமானங்களில் கோயிலுக்கு ஒரு பாகம் இவர் கொடுப்பர். கோயில் பூஜைகள் காலாகாலங்களில் குறைவின்றி நடந்துவர தர்மகர்த்தாக்களை ஏற்படுத்தினர். கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்களையாகிலும் கோயில்களிலுள்ள சொத்துக்களை யாகிலும் இராஜாங்க உத்திரவு இன்றி உபயோகப்படுத்துபவர்களைத் தண்டிப்பது வழக்கம். இராஜாங்கத்திலுள்ள கோயில்களை வட்டமிட்டு மேல் பார்வையிட்டு வருகிறதற்குத் தனியே ஒரு உத்தியோகஸ்தரும் உண்டு.

8. அனாதை ஆஸ்ரமம்.

யுத்தத்தில் மாண்ட வீரர்களின் மனைவி மக்களுக்குப் பிரத்யேகமாக நிலங்கள் விடப்பட்டன. இறந்த வீரர்களின் குழந்தை

கள் வயதுசென்ற உறவினர்கள் முதலியவர்களுக்குச் சிவாஜி அநேக ஏற்பாடுகள் செய்தார். இளம்பிராயத்தில் அமங்கலத்தையடையுங் கைம்பெண்கள், திராணியற்ற மாதர்கள், அனாதை ஸ்திரீகள் முதலிய இவர்களுக்கு சிவாஜி தக்க ஏற்பாடுகள் செய்தார். ஏழை ஸ்திரீகளுக்கு இராஜாங்கம் பண உதவி பண்ணும். கிராம அதிகாரிகள் தங்கள் கிராமங்களில் உள்ள அனாதைகளையும், அங்கஈனர்களையும், ஏழைகளையும் கணக்கிட்டு இராஜாங்கத்திற்குத் தெரியப்படுத்தவேண்டும். இவ்வனாதை ஆஸ்ரமத்தைப் பார்வையிட்டு வர ஒரு காரியஸ்தர் உண்டு. இவர் மாதந்தோறும் அனாதைகளின் வரவு மரணம் இவைகளைத் தெரியப்படுத்தவேண்டும். வருடந்தோறும் அனாதை ஆஸ்ரமத்திற்கென்றே, வருமானத்தில் ஒரு பகுதியைக் கொடுப்பது வழக்கம்.

9. வித்தியா சாலைகள்.

சிவாஜி மகாராஜாவின் ஆட்சியில் வித்தியாசாலைகள் வெகு பலமாய் இருந்ததாகத்தெரியவில்லை. கிராமங்களில் ஆங்காங்கு சில பிராமண பண்டிதர்கள் புராண பாடங்களையும் சில மத கிரந்தங்களையுமே சொல்லி வந்ததாகத் தெரிய வருகிறது. சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் முதலிய கலைஞான சம்பந்தமான பாடங்கள் கற்பித்து வந்ததாகத் தெரியவில்லை. என்றாலும், கல்வியில் உள்ளபடியே அபிருசியுடையவர்களையும் கல்வியறிவு பெறுவதற்கு அவாவுடையவர்களையும் அபிமானித்து வந்தார். துக்காராம் பத்தியங்களைக் கூறுபவர்களுக்கும் பஜனை முதலிய புண்ணிய கதா பிரசங்கஞ் செய்பவர்களுக்கும் சிவாஜி கணக்கற்ற திரவியங் கொடுத்து வந்தார். சிவாஜிதான் மகுடாபிஷேக மஹோற்சவத்தில் வித்தைக்காகத் திரண்ட திரவியங் கொடுத்ததாகமட்டும் தெரியவருகிறது. சிவாஜி காலத்தில் வித்தை அதிக ஊக்கத்துடன் இல்லாமல் இருந்தது. சிவாஜியின் படிப்பில்லாமையே காரணமெனக் கூறுகிறார். சிலர் சிவாஜிக்கு எழுதப் படிக்கத் தெரியாதென்பதே சில சரித்திரக்காரர்களின் சித்தாந்தம். ஔரங்கசிப் முதலியவர்களுக்கு எழுதிய கடிதங்கள் யாவும் சிவாஜியின் அந்தரங்க காரியதரிசி எழுதினவை என்று கூறுகின்றனர். ஆனால், சில சில சரித்திரக்காரர்கள் சிவாஜிக்கு எழுதப்படிக்க நன்றாய்த் தெரியுமென்பதைச் சிலமுகாந்தரங்களினால் ருசுப்படுத்துகின்

றனர். இத்தகைய விவித அபிப்பிராயங்களிருந்தபோதிலும் சிவாஜி தினந்தோறும் ஒருவர், ஒவ்வொன்ருக நூல்களைப் படிக்கத் தான் கேட்டு வருவது வழக்கம். இவ்விதமாக எந்த நூலையும் முதலிலிருந்து முடிவுவரையில் கேட்காமல் விடுவதில்லை. தத்துவ சாஸ்திரங்களில் அவர் உணராத விஷயம் ஒன்றுமில்லை. ஞான சாஸ்திரங்களில் அவர் கேள்விப்படாத முக்யாம்சங்கள் ஒன்றுமில்லை. சிவாஜி இதுடன் சங்கீதத்தில் மிக்க பிரியமுள்ளவராயிருந்தார். அக்காலத்தில் சங்கீதம் எல்லா கலைஞானங்களைவிட தலையிட்டிருந்தது. அவருக்கு பஜனை வர்ணமெட்டுகள் அதிக இஷ்டமானவை. அந்த மெட்டுகளில் அநேக கீர்த்தனைகள் பாடியிருக்கிருர். சமஸ்தானத்தில் சங்கீத காலட்சேபம் நடவாத நாள் இல்லை.

10. மத விசாரணை.

சிவாஜி காலத்தில் முகம்மதீயர்களின் படையெடுப்பு அடிக்கடி இருந்து வந்ததினல், முகம்மதீய மதம் எங்கு பலமாய் வேரூன்றிப் போய் விடுமோ என்பதை யறிந்த அநேக மகாராஷ்டிர சாதுக்கள் இந்துமத விசாரணையை மூலைக்கு மூலை ஊர்ஜிதப்படுத்த பஜனைகள் முதலியவைகளை ஏற்படுத்தினர். முகம்மதீய மதம் மகாராஷ்டிரத்தில் தலையெடுக்காதபடி சிவாஜி செய்துவந்தார். இளமை தொடங்கியே சிவாஜி பலவிதமான மதாசாரங்களில் வெறுப்பு கொண்டவர். சுயமதத்தில் அதிக விருப்பமுள்ளவர். தெய்வ பக்தி, ஆத்ம சுத்தி முதலிய உத்தம குணங்கள் உண்டாவதற்குரிய அநேக ஏற்பாடுகளை இவர் செய்தார். யோகத்திலும் தியானத்திலும் அவருக்கு இருந்த ஆசை இவ்வளவவ்வளவல்ல. பிறமதங்களை அவர் வெறுத்தாரேயன்றி முகம்மதீய வேத புத்தகங்களை வெறுக்கவில்லை. கோரான் வேதபுத்தகத்தில் அவருக்கு மிக்க மரியாதை. முகம்மதீய சந்யாசிகளிடம் அவருக்கு அத்யந்த அன்பு. சிவாஜி தன் காலமெல்லாம் மதவிசாரணையில் செலுத்தி வந்தார். மதவிசாரம் அவர் காலத்தில் எடுப்பு கொண்டிருந்தது.

11. நிலவரி.

நிலவரி விஷயத்தில் சிவாஜி சிறுவயதிலேயே தாதோஜி கோன தேவரின் முறைகளை நன்கு அறிந்தவராதலால், அவர் அதிக

கவனம் செலுத்தி வந்தார். நில அளவு, மாஸூலின் அளவு நிர்ணயம், தீர்வை திட்டம், தீர்வை காலம் முதலிய முக்கியாம்சங்களைச் சிவாஜி தன் சுய புத்திகொண்டு அநுசரித்தார். நிலங்களை அளப்பதற்குரிய கருவிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். நிலங்கள் அதனதன் விளைவுக்கு ஏற்றபடி பிரிக்கப்பட்டன. நன்செய் நிலங்களுக்கு மாஸூலின் அளவில் ஐந்தில் இரண்டு பங்கு நிலத்தீர்வையாக ஏற்படுத்தப்பட்டது. இதைக் குடியானவர்கள் மன மொப்பவில்லை. அவர்கள் பயிரிட்ட மாஸூலை நேரில் மதிப்பிட்டுப் பார்க்கும்படி ஒரு பிடியாய் நின்று மன்றாடிக்கடைசியாக மாஸூலின் அளவில் மூன்றில் ஒரு பங்கு நிலத்தீர்வையாக மாறுமல் ஏற்படுத்தப்பட்டது. நிலங்கள் ஒரே மாஸூலைக் கொடுக்காதாகையால், சாதக பாதகங்களைக் கொண்டு பாகுபாடு அநுசரிக்கப்பட்டது. கரம்பில்லாமல் நல்ல வளப்பத்துடன் பயிரிடப்படும் நிலங்களில் விளையும் ஒவ்வொரு மாஸூலுக்கும் முழுத்தீர்வை கட்ட வேண்டும். வெள்ளத்தினுலும், மழைக்குறைவினுலும், பயிரிடாமல் இருக்கும் நிலங்களுக்குத் தீர்வை கிடையாது. கரம்பு நிலங்களில் புதிதாகப் பயிரிடும்போது மாத்ரமே தீர்வை செலுத்த வேண்டும். ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகப் பயிரிடாதிருக்கும் நிலங்களுக்கு அநுகூலமான ஏற்பாடுகளும் செய்வதுண்டு. தரிசு நிலங்களில் சாகுபடி செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தார். சாகுபடி செய்வதற்குப் போதுமான திரவியம் இல்லாத ஏழைக்குடிகளுக்கு முதல் மூன்று வருடம் தீர்வையின்றி செய்தார். இந்த ஏற்பாட்டை அநுசரிக்கலான பிறகு, தரிசு நிலங்கள் எல்லாம் நல்ல நிலங்களாக ஆயின. சிவாஜி செய்த சீர்திருத்தங்களால் அவர் ஏற்படுத்திய தீர்வை திட்டங்கள் இன்றும் அநுசரிக்கப்பட்டு வருகின்றன. கிராமாதிபதிகள் மூலமாகவே கிஸ்தி வஸூல் செய்வது வழக்கமாதலால் அதையே அநுசரிக்கப் படுவதாயிற்று. நிலங்களின் மாஸூல்களை விர்த்திசெய்ய சிவாஜி அரசிறையினின்றும் வருடவாரியில் பண உதவி செய்வதுண்டு. கோயில்களுக்கும், பிராமணர்களுக்கும், சாதுக்களுக்கும் விடப்பட்ட மானிய நிலங்களுக்குத் தீர்வை கிடையாது. ஒரு குடியானவன் ஒரு வருடத்தில் தீர்வை கட்ட சாத்தியமற்றிருந்தால், மறு வருடம் முன் வருடத்திய தீர்வையையுஞ்

சேர்த்துக் கட்டலாம். நிலங்களைப் பயிரிடும் குடிகளினின்றும் ஜமீன் தார்கள் பரிதானம் வாங்கித் துரைத்தன அரசிறைக்குக் குறைந்த தொகையைச் செலுத்துவது சிவாஜிக்கு விசிதமாயின. அத்தகைய குற்றங்கள் நடவாம லிருக்கவும், ஜமீன்தார்களால் குடிகளுக்குத் துன்பம் ஏற்படாமலிருக்கவுமாக நிலங்களின் மாஸூல்களை வசூலிக்கத் தன் சொந்த அதிகாரிகளை இவர் நியமித்தார். அவர்களுக்கு மாதந்தோறும் சம்பளமாகக் கொடுத்து வந்தாரேயன்றி நிலங்களை மானியமாக விடவில்லை. கிராமங்களில் உண்டாகும் வழக்குகளைத் தீர்க்க பஞ்சாயத்துகள் ஏற்பட்டிருந்தன. இப்பஞ்சாயத்து சபைக்கு முக்கியஸ்தர் ஸூபேதார் எனப்படுவர். மானிய வ்யவஹாரங்களைப் பார்வையிடும் அதிகாரிகள் இருவர்களுக்கு பண்ட் ஆமாத்தியர், பண்ட் சச்சிவ் எனப்பெயர். ஆமாத்தியர், நாட்டின் வருமானத் தொகைகளைப் பார்வை யிடுவர். சச்சிவ், வசூலித்த பணத்தை எண்ணித் தணிக்கை செய்வர். ஜமீன்தார்கள் நிலத்தீர்வைகளை வசூலித்த காலத்தில் சீர்கேடு அடைந்திருப்பதை யறிந்த சிவாஜி அடி முதல் நுனிவரையில் எல்லாரையும் பரிஷ்காரமாகப் பெருக்கித் துடைத்து விட்டு, அனுபவமும் நற்சிந்தையும் உள்ள அதிகாரிகளை ஏற்படுத்தினார். கண்டிதமான பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குடிகள் துன்பமின்றி வெகு இன்பமாய் வாழக்கூடிய சௌகரியங்களைச் செய்தார். மானிய வியவகாரங்கள் சிக்கறுதலாய்ச் சீர் பெற்று நடக்கலுற்றன. புன்செய் நிலங்களுக்கு அதனதன் விளைவுக்கு ஏற்றபடி தீர்வை விதிக்கப்பட்டது. தோட்டக் கால்களில் பயிராகும் தென்னை, பனை, மா, பலா முதலிய விருட்சங்களுக்கு அரை ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரையிலும் தீர்வை ஏற்பட்டது, மலை படுவர்க்கங்களுக்கும் தீர்வை யுண்டு. யுத்த நிமித்தமாகப் படையெழுச்சியில் தண்டு இறங்கும் நிலங்களுக்குச் சேதம் உண்டாகாதபடி தக்க காவலாளிகளைக் காவல் வைப்பர். ஒரு வேளை தண்டினால் நிலத்திற்கு நேரிட்ட சேதத்தைக் கணக்கிட்டு அந்நிலச் சொந்தக்காரர்களுக்குப் பரிகாரந் தேடுவார். யுத்தத்தில் பிடிக்கப்பட்ட ஊர்களைச் சுற்றிலுமுள்ள நிலங்களில் சவுத் வரி வசூலித்தார். மாஸூலில் நான்கில் ஒரு பங்கு தீர்வைக்கு சவுத் என்பார். வரி

கொடுக்காதவர்களுடைய நிலங்கள் பலவந்தமாகப் பறிமுதல் செய்யப்படும்.

12. நீர்ப்பாசனம்

நிலங்களுக்குரிய நீர்ப்பாசன முறைகள் சிவாஜி காலத்தில் நான்காகப் பிரிக்கப்பட்டன. (1) கை இறைப்பு (கைகளினால் ஜலம் இறைத்தல்) (2) குடமிறைப்பு (மட்குடங் கொண்டு ஜலமெடுத்துப் பாய்ச்சுதல்) (3) இயந்திர இறைப்பு (ஏற்றம் முதலிய சில இயந்திரங்கள் கொண்டு ஜலம் இறைத்தல்) (4) வாய்க்கால் இறைப்பு. (ஏரிகள் குளங்கள் முதலிய நீர் நிலையினின்றும் வெட்டப்பட்ட சிறிய கால்வாய்களால் பாய்ச்சுதல்) சிவாஜி வருஷ வாரியில் ஏரி மராமத்து, குளம், கிணறு வெட்டுதல், கால்வாய் தோண்டுதல் முதலியவைகளுக்கு எண்ணிறந்த திரவியங்களைக் கொடுத்து வந்தார். நீர்ப்பாசனத்தின் ஏற்பாடுகளைப் பார்க்க ஒரு உத்தியோகஸ்தரும் அவர் கீழ் பல சிப்பந்திகளும் இருந்தனர். நதிகளின் வெள்ளத்தை ஏரிகளுக்கு நிரப்புதல், மதகுகள், வாராவதிகள் முதலியவைகளைக் கட்டுதல் ஆகிய இவையாவும் தக்க ஏற்பாட்டுடன் நடந்துவந்தன. இதல்லாமல் மலையருவிகளின் ஜலங்களையும் கட்டி சேகரித்துவந்தனர்.

13. மகாராஜா நித்திய விதி.

சிவாஜி மகாராஜாவின் நித்திய கர்மங்கள் வெகு சிறப்புற்று வழங்கும், அரசிறை கணக்குகளைத் தணிக்கையிடல், நீதிபரிபாலனம்; வர்த்தக விஷயங்களை விசாரித்தல், இராணுவ விசாரணை துர்க்கங்கள், கடற்படை முதலியவைகளைச் சீர்திருத்தல், இராஜாங்க காரியஸ்தர்களை மேல் விசாரணை செய்தல், ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் உதவிபுரிதல் ஆகிய இவையாவும் சிவாஜியின் நித்திய கடமைகளாகும். காலங்குறிப்பிட்டு இராஜ்ய விதிகளைச் செய்யும் விதம் காண்க.

பகல்:—6—7-30—மணி-நாட்டின் பாதுகாப்பு விஷயமும் அரசிறை கணக்குத் தணிக்கையும்.

பகல்:—7-30—9-மணி-குடிகளின் விசாரணையும் மாகாணங்களின் விசாரணையும்.

,, 9—10-30-நித்திய கர்மா, போசனம், காலட்சேபம்.

,, 10-30—12-திறை வசூலிப்பும், இராஜாங்க உத்தியோகஸ்தர்கள் செலுத்தும் தொகையின் கணக்குப் பார்வையும்.

,, 12—1-30-ரஜா பெற்ற மந்திரிகள், அத்யட்சகர்கள் இன்னும் இதர உத்தியோகஸ்தர்களுக்குக் கடிதம் எழுதுதல்.

,, 1-30—3-வேடிக்கை விநோதங்களில் ஈடுபடுதல்.

,, 3—4-30-யானை, குதிரை, காலாள் முதலிய படைகளைப் பார்வையிடுதல்.

,, 4-30—6-சேனாதிபதியுடன் யுத்த விஷயமாக ஆலோசனை செய்தலும், மாலை ஜபம் புரிதலும்.

இரவு:—6—7-30-ஒற்றர்களுடன் ஆலோசித்தல்.

,, 7-30—9-இராப்பிரார்த்தனை, போசனம், காலட்சேபம்

,, 9—10-ஸ்திரீ சம்பாஷணை. அரண்மனை விசாரிப்பு.

,, 10—3-நித்திரை.

,, 3—4-30-மந்தண சபை, சாரணர் விடுப்பு.

,, 4-30—6-புரோகிதர், வைத்தியர், சோதிடர் முதலியவர்களை உபசரித்தல்; தானதர்மம் வழங்குதல், ஸ்நானஞ் செய்தல்.

13. நியாய ஸ்தலங்கள்.

நியாயஸ்தலங்களில் தர்மஸ்தீய கண்ட கஷோதனவென்னும் இரண்டு நியாய ஸ்தலங்களே முக்கியமானவை. விசாரணைகளிலும்

நியாயத் தீர்ப்புகளிலும் பொது ஜனங்களில் வயது சென்ற (கிராம விருத்தர்)வர்களும் கிராமத் தலைவர்களும் முக்கிய நியாயாதிபதிகளாக யிருப்பர். பத்து கிராமங்களுக்குத் தலைமையாயிருக்கும் வட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் நியாயஸ்தலங்கள் உண்டு. ஒவ்வொரு நகரத்திலும் (400-கிராமங்கள் கொண்டது) துரோணமுகம் என்னும் நியாயஸ்தலம் உண்டு. எண்ணூறு கிராமங்கள் கொண்ட ஸ்தானீயமென்னும் தலைநகரில் பெரிய நியாயஸ்தல மொன்றும் உண்டு. இதல்லாமல் இரண்டு ஸூபாவிற்கு மத்தியில் (ஜனபத ஸந்தி) மகாஸ்தலமெனக் கூறப்படும் நியாயஸ்தலமொன்றும் உண்டு. இதுகளுடன்இராஜதானியில் பெரிய நியாயஸ்தலம்சிவாஜி மகாராஜாவினால் நடத்தப்பட்டது. இச்சகல நியாயஸ்தலங்களுக்கும் தலைமையானவர் ஒருவர் உண்டு. அவருக்கு நியாயாதிஷ் என்று பெயர்.

24. மந்தண சபை.

நிலை நின்று கோல் கோடாது அரசு செழித்தோங்குதற்கு வழிகள் தேடவும், உபாயங்கள் கூறவும் மந்திர சபையாரிருந்தனர். அவர் ஐம்பெருங்குழுவிலடங்குவர். அவர் அமைச்சரும் புரோகிதரும் சேனபதியரும் தூதுவரும் சாரணருமாவர். இதன்றி இவர்க்குக்காரணத்தியலவர், கருமவிதிகள், கனகச்சுற்றர், கடைகாப்பாளர், நகரமாந்தர், தண்டத்தலைவர், யானைவீரர், இவுளிமறவர் என ஆயத்தார் எண்மருமுண்டு. இவருள் மந்தணத்திற்குரியோர் முக்கியமாக அவ்வைம் பெருங்குழவினரே. இவருடன் ஆலோசிக்காமல் சிவாஜி ஒரு காரியமுஞ் செய்யத்துணிவதில்லை. மந்தண சபை எப்போதும் மறைவாகவே நடக்கும். இரவே அதற்குரிய காலம். ஆலோசனை கூறுபவர் நடக்கும் விஷயங்களை வெளியிடார். மந்தணசபைக்கு எண்மர் உரித்தாகலின் அதற்கு அஷ்டப்பிரதானம் எனப்பெயர் உண்டு. அவர்களுக்கு அஷ்டப்பிரதானியர் என்பார்.

இவ்வஷ்டப் பிரதான் என்னும் மந்தண சபைக்குத் தலைவர் பேஷ்வா அல்லது முக்கிய மந்திரி. இவர் சிவாஜி மகாராஜாவிற்கு அடுத்தபடி. இவர் சிவாஜி சிம்மாதனத்தில் இருக்கையில் அவருக்கு அடுத்தாற்போல் வலது பக்கத்தில் இருப்பவர். இவர் இராஜ்

யத்தின் சகல நீதி முறைகளையும் இராணுவ ஏற்பாடுகளையும் அடக்கியாள்பவர். இவரே சகல இராஜ்ய நிர்வாகங்களுக்கும் பொறுப்புடையவர். இரண்டாவது சேனாதிபதி. இவர் இராணுவத்திற்கு அதிபதி. சுமந்த், அன்னிய நாட்டு மந்திரி. மகாராஷ்டிர ராஜ்யத்திற்கும் இதர அன்னிய ராஜ்யங்களுக்கும் உண்டாகும் உடன்படிக்கைகள், யுத்தங்கள் முதலிய சகல போக்கு வரவுகளுக்கும் பொறுப்பாயுள்ளவர் இம்மந்திரி. பண்டிட் ராவ், நாட்டின் சகல கோயில்கள், பஜனைக்கூடங்கள் முதலிய மத சம்பந்தமான விஷயங்களுக்குப் பொறுப்பு உள்ளவர். நியாயாதிகர், இவர் நாட்டின் நீதிபரிபாலனத்திற்குரியவர். இம்மேற்கூறிய மந்தண சபையைச் சேர்ந்த மந்திரிகளுக்கு மாத சம்பளமே தவிர மானிய நிலங்கள் கிடையாது. உத்தியோகஸ்தர்களுக்கு மானிய நிலங்கள் விடுவதினால் அவர்கள் நற்செய்கையற்றவர் களாகிறார்களென்பதே சிவாஜியின் எண்ணம். பரம்பரையாக மந்திரி ஸ்தானத்தை வம்சத்தினர்கள் அனுபவிப்பதென்பதையும் சிவாஜி ஒத்துக்கொள்ளவில்லை. எவன் ஒருவன் அந்த ஸ்தானத்திற்குத் தக்க யோக்கியதையுள்ளவனாகக் காணப்படுகின்றானோ அவனையே நியமித்துவரும் ஏற்பாட்டைச் செய்தார். பரம்பரையாக உத்தியோகஸ்தானம் வருவதால், இராஜ தந்திரமும், சாமர்த்தியமும் அற்ற அநேகர் வரக்கூடுமென்பதே முன்னதாகவே அறிந்தார் சிவாஜி.

15. இராணுவம்.

இராணுவ சீர்திருத்தம் செய்வதற்கு நெடுநாள் பிடித்தது. சிவாஜி அதிக கஷ்டம் எடுத்துக்கொண்டு, வீண் செலவுக்கிடமின்றி இராணுவ கார்யங்கள் விதரணையாக நடப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். சிவாஜி காலத்தில் பீஜாபூர் முதலிய சமஸ்தானங்களின் வழக்கங்களைப்போல் ராணுவ வீரர்களுக்கு நிலங்கள் விடுவதும், ராணுவ வீரர்கள் வரியில் இவ்வளவென்று தாங்களே தண்டிக்கொள்வதுமான வழக்கங்களைச் சிவாஜி அனுஷ்டிக்காமல் அவர்களுக்கு நிலம் விடுகிற வழக்கத்தை ஒழித்துச்சம்பள வேற்பாடு செய்தார். இராணுவ வீரர்களுக்கு ஜாகீர் விடுவதில்லை. மானிய நிலங்களும் கொடுப்பதில்லை. சேனாவீரர்களை மாதந்தோறும் அங்கக்

குறிப்புகளோடு பதிவுசெய்ய ஏற்பாடு செய்தார். இராணுவத்திற்குப் புதிதாகவந்து சேருபவர்களிடமிருந்து நன்னடக்கை ஜாமீன் பெற்றுக்கொள்ளவும் அவர்களுடைய பெயர்களைப் பதிவுசெய்துக் கொள்ளவும் ஏற்படுத்தினர். காலாட்படையில் பிரதி பத்து வீரர்களுக்குத் தலைமையிருப்பவர் நாயக். ஐம்பது போர்வீரர்களுக்குத் தலைமையாயிருப்பவர் ஹவல்தார். இரண்டு ஹவல்தார்களுக்கு முக்கியராக யிருப்பவர் ஜமேல்தார். பத்து ஜமேல்தார் உள்ள படையணிக்கு ஹஜாரி தலைமையானவர். ஓராயிரம் போர்வீரர்களுக்கு நாயகராயிருப்பவரும் இவரே. ஏழு ஹஜாரிகளுக்குத் தலைமையாயிருப்பவர் ஸர்நோபட். இவர் மாவலி காலாட்படை யொன்றுக்குச் சேனபதி. குதிரைப்படைக்கு இரண்டு அணிவகுப்பு உண்டு. ஒன்று பார்கீர்ஸ். மற்றொன்று ஸிலேகார்ஸ். இருபத்தைந்து பார்கீர்ஸ் வகுப்புக்குத் தலைவராயிருப்பவர் ஹவல்தார். ஹவல்தாருக்கு மேற்பட்டவர் ஜமேல்தார். ஜமேல்தாருக்கு உயர்ந்தவர் ஹஜாரிஹஜாரிக்குத் தலைவர் பஞ்சஹஜாரி. இவருக்குப் பெரியவர் ஸர்நோபட். இருபத்தைந்து குதிரைப்படைக்கு ஒரு ஜலந்தூக்கியும் உணவுப்பைகளும் உண்டு. மாரிகாலத்தில் குதிரைப்படைகள் பாடிவீட்டில் தங்கும். இப்படைகளுக்கு வேண்டிய ஆகாரம், வசதி முதலிய ஏற்பாடுகள் செய்யப்படும். யுத்தகாலங்களில் குதிரைப் படைகள் எதிரிகளின் ஏற்பாடுகளிலாவது வழியில் அகப்படும் பொருள்களிலாவது ஜீவிக்கும் ஹஜாரிக்குச் சம்பளம் இருநூறு ரூபாய். பஞ்ச ஹஜாரிக்குச் சம்பளம் நானூறு ரூபாய். காலாட்படையிலுள்ள ஹஜாரிக்குச் சம்பளம் நூறு ரூபாய். சாமானிய படைவீரனுக்கு ஒன்பது ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரையிலும் சம்பளம் இருந்தது. குதிரைப்படை வீரனுக்கு இருபது ரூபாய் முதல் ஆறு ரூபாய் வரையிலும் சம்பளம் இருந்தது. துப்பாக்கி வீரர்களும் வில்லாளிகளும் அவரவர் சாமர்த்தியத்திற்குத் தக்கபடி சம்பளம் பெற்று வந்தனர். யுத்த வீரர்கள் பொதுவாக நல்ல சம்பளம் பெற்று வந்தனர். யுத்தத்தில் நல்ல சாகஸங் காட்டிவரும் வீரர்களுக்குப் பட்டமும் பரிசும் அளிப்பர். சிவாஜி இவ்விதமாக இராணுவ காரியங்களைக் கொஞ்சங் கொஞ்சமாக ஒழுங்குக்குக் கொண்டுவந்தார்.

16. கப்பற்படை.

நாட்டு வியாபாரங்கள் வளம்பெறுவதற்குக் கப்பற் படைகள் இல்லாமலிருப்பின் பிரயோசனப்படாதெனக் கண்ட சிவாஜி கப்பற் படைகளை ஏற்படுத்தினர். தண்டராஜபுரியே சிறந்த கப்பற்படை ஸ்தலமாயிருந்தது. சிவாஜி தன்னிடத்தில் சற்றேறக்குறைய நானூறு கப்பல்களுக்குக் குறையாமல் வைத்திருந்தாரெனச் சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். அக் கப்பல்கள் பல வேறுமாதிரியானவை:—(1) குரோப்-இது துப்பாக்கிப் படகு. இது இரண்டு பாய்மரத்தைக் கொண்டது. இது வேகமாய்ச் செல்லாது. (2) கலிவட்-இது வேகமாய்ச் செல்லக்கூடியது. (3) ஷிபார்-இது வியாபாரத்திற் குரியது, அது பதினைந்து டன் பளுவு எடுக்கக்கூடியது. இதல்லாமல் துபாரி, பாபூர், திருக்காதி, மன்ஸுவா, முதலிய நாமங்கள்கொண்ட பல சிறு கப்பல்கள் விசேஷமாக யிருந்தன. இக் கப்பற்படை இருபாகமாக வகுக்கப்பட்டது. ஒவ்வொரு வகுப்பிற்கும் இருநூறு கப்பல். வகுப்பு ஒவ்வொன்றுக்கும் தனித்தனி தலைவர் உண்டு. ஒரு வகுப்புத் தலைவருக்கு டரியாஸரங் (கடல் தலைவன்) என்று பெயர். மற்றொரு வகுப்புத் தலைவருக்கு மைநாயக் (நீர்த்தலைவன்) என்று பெயர்; டரியாஸரங் பதவியை வகித்தவர் ஒரு பட்டாணி, அவன் சிவாஜிக்கு அத்யந்த நேசன். மைநாயக் பதவியை வகித்தவர் ஒரு மராடி. சிவாஜி தன் கப்பற்படைக்கு எண்ணிறந்த திரவியம் செலவழிப்பர். சூரத் நகரத்திலிருந்து கோகர்ணம் வரையிலுள்ள அநேக துறைமுகங்கள் சிவாஜிக்கு இராணுவ ஸ்தலமாயிருந்தன. ஆங்கிலேய வியாபாரிகள் பலர் துப்பாக்கி மருந்துகள் விலைக்குக் கொடுத்து வந்தனர். கப்பல்களின் தொகை மதிப்பு 15-லட்சம் ரூபாய் எனக் கூறுகின்றனர்.

17. வியாபாரம்.

சிவாஜி காலத்தில் அதிக விமரிசையாய் வியாபாரம் நடந்து வந்ததாகத் தெரியவில்லை. வியாபார ஸ்தலங்கள் சில அக்காலத்தில் மிக்க வளம்பொருந்தியவைகளா யிருந்தும் பலமான வர்த்தகம் நடக்கவில்லை. இறக்குமதிச் சாமான்களுக்கு 100-க்கு 2½-வீதம்

தீர்வை விதித்தார். இதனால் உள்நாட்டுச் சாமான்களிற் சில விர்த்தியடைந்தன. உள் நாட்டு வியாபாரமும் கடல் வியாபாரமும் நடந்து வந்தன. துறைமுகங்களிலிருந்து கணக்கற்ற கூலங்கள் வந்து கொண்டிருந்தன.

முடிவுரை.

மகாராஷ்டிரத்திற்குச் சுயராஜ்யம் ஸ்தாபிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் எல்லா ஜாதியாரையும் அணைத்து ஆதரித்து, சிறந்த இராஜ தந்திரத்துடன் கோல் கோணாது நீதிபுரிந்து வந்தவராகையால் பிற்காலத்தவரும் அவருடைய அபார சக்தியை அறிந்து அதிசயிக்கின்றனர். இவருடைய இராஜ்யபாரத்தில் உள்ள சூட்சமங்களில் பிரதானமானவை எட்டு. அவை:—(1) துர்க்கங்களின் பாதுகாப்பு, (2) பாரம்பர்ய உத்தியோக நிரோதனம், (3) அதிகாரிகளுக்கு ஜாகிர் நிலங்கள் கொடாமை, (4) நேரான தீர்வை நிறுதிட்டம் (5) ஜமீன்தார்கள் தீர்வை வசூலிக்க விடாமை, (6) அஷ்ட பிரதான மந்தணசபை ஏற்பாடு, (7) நகர பரிபாலனத்திற்கு இராணுவ இலாகாவைக் கீழ்ப்பட்டு இருக்கச் செய்தல், (8) ஜாதிபேதமின்றி சகல வர்ணத்தாரையும் தாராளமாக படையில் கலக்கும்படி செய்தது. சிவாஜியின் ராஜரீக முறைமைகளை அவருக்குப் பிற்பட்டவர்கள் அனுசரித்திருந்தால் மகாராஷ்டிரம் ஸ்திரமாகவே நீடித்திருக்கும். வேற்றுமை பாராட்டாமல் எப்படிப்பட்டவர்களையும் நல்ல உத்யோக பதவிகளில் வைத்து மேம்படுத்தி வந்தார். இராஜ்ய முழுதும் அமைதியாகவும் நியாயமாகவும் ஆட்சி நடந்து வந்தது.

இவர் கி. பி. 1680-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 5-ந் தேதியன்று, இம் மண்ணுலகைவிட்டு விண்ணுலகமேறினர். முழங்காலில் ஒரு பிளவு உண்டாகி, அது வர வர வீக்கமும் நோயும் அதிகரித்துச் சுரம் கண்டு கடைசியாக மாண்டார் எனக் கூறப்படுகின்றது. ஸாம்பாஜிக்குப் பட்டங்கட்ட சகல ஏற்பாடுகளையுஞ் சிவாஜி செய்து வருகிறார்' எனக் கேள்விப்பட்ட ஸோர்யாபாய் என்னும் மற்றொரு மனைவி, தன் மகன் இராஜாராமுக்குப் பட்டங்கட்ட வேண்டுமென்று சிவாஜியைச் சுவாதீனப்படுத்த மருந்திட்டதினால் அவர் மாண்டார் எனச் சிலர் கூறுகின்றனர். எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அவர் அகால மரணத்தை யடைந்தார் என்பது அங்கைக் கனியாகும்.

முற்றிற்று.

சிவாஜி மஹாராஜாவின் காலக் குறிப்புகள்.

கி. பி. 1627. சிவாஜியின் ஜனனம்.

„ 1646-1656. சிவாஜி கொங்கணத்திலுள்ள பீஜாபூர் சமஸ்தான கோட்டைகளை சுவாதீனப் படுத்துதல்.

„ 1657. மொகலாயருடன் பிரதம யுத்தமும் உடன்படிக்கையும்.

„ 1659. அப்ஸூல்கானின் வதை; ராஜபுரி சுவாதீனம்.

„ 1660. ஷெயிஸ்டிகான் சிவாஜியின் கோட்டையைப் பிடித்தல்.

„ 1663. ஷெயிஸ்டிகானை இரவில் சிவாஜி எதிர்த்தல்.

„ 1664. சூரத்நகர் கொள்ளை.

„ 1665. ஜய்ஸிங்கருடன் யுத்தம்.

„ 1666. சிவாஜி ஔரங்கசிப் பாதுஷாவை ஆக்ராவில் முதல் முதல் பேட்டி காணுதல்; சிவாஜியின் சிறையின் மீட்சியும்.

„ 1667. விசிராமம் (சும்மாயிருத்தல்).

„ 1668. மொகலாயருடன் சந்தி செய்தல்.

„ 1670. மொகலாயருடன் யுத்தம் தொடங்கல்; சூரத்நகர் இரண்டாவது கொள்ளை.

„ 1671. ஸல்ஹேர் சுவாதீனம்; டிலீர்கானுடன் யுத்தம்.

„ 1672. முல்ஹேர் சுவாதீனம்; மோரோ பண்ட் ராம் நகரைப் பிடித்தல்.

„ 1673. சிவாஜி ஸடாராவைப் பிடித்தல்.

„ 1674. பிரதாபராவின் மரணம்; சிவாஜியின் மகுடாபிஷேகம்; ஆங்கிலேயர் உடன்படிக்கை.

„ 1675. சிவாஜி கன்னடம், கார்வார், பிராந்தியங்களை சுவாதீனப் படுத்தினது; பீஜாபூர் உடன்படிக்கை.

„ 1677. கர்நாடக படையெழுச்சி.

„ 1678. சிவாஜி அதில்ஷாவுக்கு உதவி செய்தல்.

„ 1679. சிவாஜி மொகலாயர்களுக்கு உதவி புரிதல்.

„ 1680. சிவாஜியின் மரணம்.

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், சென்னை.

[illegible]

1-11-96